# புதுக் காலனி ஆதிக்கக் கொள்கை: அதன் இயல்பும் முறைகளும்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

NEW CENTURY BOOK HOUSE

கரேன் புருத்தேந்த்ஸ்

# புதுக் காலனி ஆதிக்கக் கொள்கை: அதன் இயல்பும் முறைகளும்

ES 9
5/8/23

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

NEW CENTURY BOOK HOUSE (P) LTD

மொழிபெயர்ப்பாளர்: பூ. சோமசுந்தரம்

## பொருளடக்கம்


புதுக் காலனியாதிக்க முறை — அதன் தன்மையும் அது தோன்றுவதற்கு உரிய வரலாற்று நிலைமைகளும் காரணிகளும் . . . . . . . . . . . . . . . . . . . . 5

புதுக் காலனியாதிக்க முறையின் பொருளாதார, சமுதாயப் போர்த்தந்திரம் . . . . . . . . . . . . 28

புதுக் காலனியாதிக்க முறையின் அரசியல், இராணுவ-அரசியல் ஆயுதங்களும் வடிவங்களும் . . . . . . 59

புதுக் காலனியாதிக்க முறையின் பொருளாதார ஆயுதங்களும் வடிவங்களும் . . . . . . . . . . . . . . . . 89

புதுக் காலனியாதிக்க முறையின் முக்கிய அரண் . . . 129

குறிப்புக்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . 201

## புதுக் காலனியாதிக்க முறை — அதன் தன்மையும் அது தோன்றுவதற்கு உரிய வரலாற்று நிலைமைகளும் காரணிகளும்

இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பின், காலனியாட்சி அமைப்பு விரைவாகத் தகர்ந்து சிதறியது, காலனி ஏகாதிபத்தியங்களுக்கு முடிவு கட்டப்பட்டது. ஆனால் இந்த நிகழ்முறை, காலனியாதிக்கத்தின் முடிவு என்று அர்த்தப்படாது. செய்தித்தாள்கள், பத்திரிகைகள், புத்தகங்கள் ஆகியவற்றின் பக்கங்களில் ''காலனியாதிக்கத்தின் இறுதி மீதமிச்சங்கள் ஒழிக்கப்பட்டுவருகின்றன'', ''காலனியாதிக்கம் முற்றாக ஒழிக்கப்படும் தறுவாயில் இருக்கிறது'' என்பன போன்ற சொற்றொடர்கள் நமக்குச் சில சமயங்களில் எதிர்ப்படுகின்றன என்றால், அது சொற்றொடர்கள் ஓரளவு மாற்றி உபயோகிக்கப்படுவதன் விளைவே ஆகும். இந்தச் சந்தர்ப்பங்களில் ''காலனியாதிக்க முறை'', ''காலனியாட்சி அமைப்பு'' என்ற கருதுகோள்கள் ஒரே பொருள் உள்ளவையாகக் கருதப்படுகின்றன. உண்மையிலோ, ஏகாதிபத்தியக் காலனியாட்சி அமைப்பு, காலனியாதிக்கம் என்னும் தீர்க்க முடியாத முரண்பாடுகள் கொண்ட சமூகங்களுக்கு இயல்பான, விரிந்து பரந்த, நிலைத்த, நெடுங்கால நிகழ்ச்சி ஒன்றின் வரலாற்று நோக்கில் ஸ்தூலமான, இடைக்கால வடிவமே ஆகும்.

முதன்மையாக, ஏதேனும் ஒரு விதத்தில் அரசியல் சார்புநிலை கட்டாயமாக நிலவும் உறவுகளின் குறித்த மொத்தம் என்ற வகையில் காலனியாட்சி அமைப்பு தகர்ந்து சிதறிவிட்டது என்றாலும் இந்த அமைப்பின் சில உள்ளடக்கக் கூறுகள், சார்புநிலையைச் சேர்ந்த மிக முக்கியமான சில தளைகள் இன்னும் அகற்றவே படவில்லை.

பற்பல ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் மீது தங்கள் தனியாதிக்கம் பறிபோய்விட்டதற்குத் தாங்கள்

இணங்கி விட்டதாக உலகத்துக்கும், சிறப்பாக இந்த நாடுகளின் மக்களுக்கும் நம்பிக்கை ஊட்ட ஏகாதிபத்திய வாதிகள் எல்லா வகையிலும் முயன்றாலும், உண்மையில் அவர்கள் இணங்கிவிடவில்லை. காலனி நிர்வாகம் விரட்டப் பட்டதும், ஆட்சித்தலைமை நாட்டுத் துருப்புக்கள் வெளி யேற்றப்பட்டதும் (அல்லது, வேறு வகையாக வருணிக்கப் படுவதுபோல ஏகாதிபத்திய வல்லரசுகள் தங்கள் ஆட்சிப் பிரதேசங்களிலிருந்து ''தாமே விரும்பி வெளியேறியதும்'') காலனியாதிக்க முறை நிலவுவது நின்றுவிட்டதாகக் கூறு வது மேற்கத்திய ஏகாதிபத்தியப் பிரசாரத்துக்கு உவப்பான விஷயம். வளர்ச்சியுற்று வரும் நாடுகள் தற்கால உலகில் ஆற்றும் பங்கு பற்றி ஆலோசிப்பதற்காகச் சில ஆண்டுகளுக்கு முன் நடந்த சர்வதேச மகாநாட்டில் மேற்கே புகழ்பெற்ற காலனிப் பிரச்சினை நிபுணர்களும் கம்யூனிஸ விரோதிகளு மான ஆர். எமெர்ஸன், டபிள்யூ. லாக்கேர், கே. மெனேர்ட் முதலியோர் தங்கள் உரைகளில் இந்தக் கூற்றை ஆதாரங் காட்டி நிரூபிக்க வெகுவாக முயன்றார்கள். புதுக் காலனி யாதிக்கப் பிரச்சினை ''மாஸ்கோவால் புனையப்பட்டது'' என்று அவர்கள் வலிந்துரைத்தார்கள். ''ஏகாதிபத்தியவாதம் மலை யேறிவிட்டது என்று முன்னாள் ஏகாதிபத்தியவாதிகள் உறுதி யாக நம்புகிறார்கள். எந்த நாட்டு மக்களின் வளர்ச்சியில் உதவி செய்ய அவர்கள் விரும்புகிறார்களோ, அந்த மக்க ளுடன் சம உரிமையுடனும் நட்புறவுடனும் ஒத்துழைக்கவே இப்போது அவர்கள் முயல்கிறார்கள்''[1] என்று ரூப்பெர்ட் எமெர்ஸன் அழுத்திக் கூறினார். வால்ட்டர் லாக்கேரோ, தமது உரைக்கு, ''புதுக் காலனியாதிக்க முறை — இது சோவியத் கருத்து''[2] என்றே தலைப்பு கொடுத்திருந்தார்.

நவீனக் காலனியாதிக்க முறையை மூடி மறைப்பதற் கான பிரசார இயக்கத்தில் ஏகாதிபத்திய நாடுகளின் கொள் கைவாதிகள் மாத்திரமே அல்ல, அதிகாரத் தலைவர்களும் ஊக்கத்துடன் பங்காற்றுகிறார்கள். 1964 மார்ச்சில் அப் போது பிரிட்டிஷ் முதல் அமைச்சராக இருந்த அ. டக்ளஸ்-ஹியூம் பின்வருமாறு கூறினார்: ''புதுக் காலனியாதிக்க முறைக்கு பிரிட்டனின் அரசியல் அகராதியில் இடம் இல்லை. இதன் பொருள் என்ன என்று நாம் அறியோம். இந்த அவ

தூற்றை நம் உணர்வின் இருண்ட மூலைச் சந்துகளிலிருந்து நாம் வெளியே விரட்டிவிட வேண்டும்.''[3]*

பிரிட்டனிலும் பிரான்சிலும் காலனி விவகார அமைச்சரகங்கள் ''அகற்றப்பட்டது'' போன்ற வெளிப்பகட்டான நடவடிக்கைகளும் இதே ஏகாதிபத்தியப் பிரசார இயக்கத்தின் நோக்கங்களுக்காகவே மேற்கொள்ளப்படுகின்றன. பிரிட்டனில் மேற்படி அமைச்சரகத்தின் இடத்தில் பிரிட்டிஷ் காமன்வெல்த் விவகார அமைச்சரகமும் பிரான்சில் கடல் கடந்த பிரதேசங்களின் அமைச்சரகமும் திறக்கப்பட்டன. பிரிட்டிஷ் ''காலனி அபிவிருத்திக் கார்ப்பொரேஷனும்'' இம்மாதிரி ''அழகுபடுத்தும்'' அறுவைச் சிகிச்சைக்கு உள்ளாயிற்று. 1963ம் ஆண்டு முதல் இதன் பெயர் ''காமன்வெல்த் அபிவிருத்திக் கார்ப்பொரேஷன்'' ஆகிவிட்டது.

உண்மையில், ஏகாதிபத்தியவாதிகளுக்குக் காலனியாதிக்க முறை பல கோடி மக்களைச் சுரண்டுவதற்கான உலகு பரந்த அமைப்பின் பகுதியாக, அதன் ''இயல்பான'' செயல்முறையின் முக்கிய வடிவமாக விளங்குகிறது. இன்னொரு விஷயமும் கவனிக்கத் தக்கது. முன்னாள் காலனிகளும் சார்பு நாடுகளும் கச்சாப் பொருள்கள் கிடைக்கும் முக்கிய வள நிலங்கள், முதலீடு செய்வதற்கு ஏற்ற மண்டலங்கள், விற்பனைச் சந்தைகள், பல நூறுகோடிக் கணக்கில் ஆதாயம் பெறும் வாய்ப்புக்கள், இராணுவ-யுத்ததந்திர முக்கியத்துவம் உள்ள தாக்குமுனைகள், இராணுவ தளங்களின் வலைப்பின்னல்கள் என்ற நோக்கில் ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு மிக அவசியமானவைதாம். ஆனால் பிரச்சினை இது மட்டுமே அல்ல. எதிர் எதிரான இரு சமூக அமைப்புக்கள் நிலவுவதன் காரணமாக முன்னாள் காலனிகளையும் சார்புநாடுகளையும் தங்கள் ஆதிக்கத்தில் வைத்திருப்பது ஏகாதிபத்தியவாதி

---

* நியாயத்தின் பொருட்டு ஒரு விஷயத்தை இங்கே குறிப்பிடுவது அவசியம். முதல் அமைச்சரின் சொற்பொழிவு பற்றித் தகவல் தந்த டைம்ஸ் செய்தித்தாள் நிருபர், ஹியூம் வேண்டுமென்றே காட்டிய வெகுளித்தனத்துக்கு ஒத்துப்பாடவில்லை. ஓரளவு எரிச்சலுடன்கூட அவர் எழுதினார்: ''ஸர் அலெக் புதுக் காலனியாதிக்க முறை என்றால் என்ன என்பதை அறியார் ஆகையால் அவருக்கு அதை விளக்குவது அவசியம் ஆகிறது. அரசியல், இராணுவ ஆதிக்கத்தின் இடத்தில் பொருளாதார ஆதிக்கம் நிலைபெறுவதே புதுக் காலனியாதிக்க முறை ஆகும், வேறொன்றும் இல்லை.''

களுக்குச் சிறப்பான முக்கியத்துவம் உள்ளது ஆகிவிட்டது. இந்த நாடுகளை உலக முதலாளித்துவ வரம்புக்குள் வைத்திருப்பது, முதலாளித்துவ அமைப்பைப் புதிய இழப்புக்களிலிருந்து காப்பது அதே சமயம் அவர்களுடைய கடமை ஆகிவிட்டது.

இரு உலக அமைப்புக்களின் போட்டியில் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்கப் பிரதேசங்களில் நிகழ்ச்சிகளின் போக்கு எவ்வளவு மிகப் பெருத்த முக்கியத்துவம் கொண்டிருக்கிறது என்பதை ஏகாதிபத்திய முகாமின் தலைவர்களும் கொள்கைவாதிகளும் அலுப்பு சலிப்பு இல்லாமல் வலியுறுத்தி வருகிறார்கள். எல்லா நாடுகளையும் சேர்ந்த ஏகாதிபத்தியவாதிகள் இந்த விஷயத்தில் ஒரே கருத்து கொண்டிருக்கிறார்கள். ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் வருங்கால வளர்ச்சிப் போக்கு பற்றிய பிரச்சினை உலக முதலாளித்துவத்துக்கு வாழ்வதா சாவதா என்பதை முடிவு கட்டும் பிரச்சினை என்றுகூட அவர்களில் பலர் பிரகடனம் செய்கிறார்கள். 1960, பிப்ரவரியில் தென்னாப்பிரிக்க நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய பிரசித்திபெற்ற உரையில் முன்னாள் பிரிட்டிஷ் முதல் அமைச்சர் மாக்மிலன் இந்தக் கருத்தை மற்ற எல்லோரையும்விட அதிக ''நாடகபாணியில்'' சூத்திரப்படுத்தினார் எனலாம். அவர் கூறினார்: ''கூட்டு சேராத ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் மேற்கின் பக்கம் திரும்புமா அல்லது கிழக்கின் பக்கம் திரும்பிக் கம்யூனிஸ்ட் முகாமில் இழுக்கப்படுமா?—இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் எழுந்துள்ள மிகப் பெரிய பிரச்சினை இதுவே. இப்போது பணயம் வைக்கப்பட்டிருப்பது நமது இராணுவ பலத்தையோ, நமது ராஜதந்திர, நிர்வாகக் கலையையோ விட மிகப் பெரியது. நமது வாழ்க்கை முறையே பணயம் வைக்கப்பட்டிருக்கிறது.''

மற்ற ஏகாதிபத்திய வல்லரசுகளின் தலைவர்களும் இதே கருத்தைப் பன்முறை வெளியிட்டுள்ளனர். வெளிநாட்டு அரசுகளுக்கு உதவுவது பற்றி 1963 ஏப்ரலில் காங்கிரஸுக்கு அனுப்பிய தமது செய்தியில் ஜான் கென்னடி இந்த எண்ணத்தையே வேறு சொற்களில் வெளியிட்டார். வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் ஒரு அல்லது மற்றொரு வகைப் ''பொருளாதார, சமூக அமைப்பு'' ''நிலைபெறுவதும்'', ''அரசியல் தலைமையின் தன்மையும் அரசியல் நடவடிக்கை

களின் வடிவங்களும் ஸ்தாபனங்களின் கட்டமைப்பும் வரையறுக்கப்படுவதும்'', ''நமது குழந்தைகள் வாழ்ந்து பக்குவம் பெறப் போகிற உலகின் வடிவத்தை ஒரேயடியாக மாற்றிவிடும்'' என்று அவர் கூறினர். ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசின் சான்ஸலர் கீஸிங்கர், 1968 மார்ச்சில் நாடாளுமன்றத்தில் பேசுகையில் பின்வருமாறு வலியுறுத்தினர்:''இந்தப் புதிய உலகின் சாதகமான வளர்ச்சியையே நமது சொந்த வருங்காலம் பெருமளவு பொறுத்திருக்கிறது என்பதை நாம் கூறிவிட வேண்டும்.''

காலனிப் பேரரசுகள் நொறுங்கிச் சிதறும் உண்மை நிகழ்ச்சி ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிர்ப்பட்டிருக்கிறது. எனவே, காலனியாதிக்க முறையைக் காப்பாற்றும் நோக்கத்துடன் அதைப் ''புதுமைப்படுத்துவது'' அவர்களுக்குத் தவிர்க்க முடியாத கட்டாயம் ஆகிவிட்டது. இவ்வாறே முன்னணிக்கு வருகிறது புதுக் காலனியாதிக்க முறை, அதாவது பேரரசுகள் அற்ற காலனியாதிக்கம். ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் ஏகாதிபத்தியத்தால் அடிப்படுத்தவும் சுரண்டவும் படும் முக்கிய வடிவமாக அது இன்று விளங்குகிறது.

காலனியாட்சி அமைப்பு தகர்ந்து சிதறி வருவதற்கும் உலக அரங்கில் சக்திகளின் புதிய ஒப்புநிலை மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்துக்குச் சாதகமாக உருவாகி வருவதற்கும் எதிராக ஏகாதிபத்தியவாதம் மேற்கொண்டுள்ள சாதனமே சாராம்சத்தில் புதுக் காலனியாதிக்க முறை ஆகும். மாறியுள்ள தற்காலச் சூழ்நிலையில் காலனிக் கொள்கையின் வழக்கமானவையும் புதியவையும் ஆன அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சியே இது. ''பேரரசுகள் குலைந்து போய்விட்டன என்ருலும் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் நடக்கும் நிகழ்ச்சிகளில் நமது பொருளாதார, அரசியல் அக்கறை கிட்டத்தட்ட முன்போலவே நேரடியானது''—இவ்வாறு எழுதினர் ஹேல்ஷம். இவர் பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கட்சியின் பிரபல தலைவர், பிரிட்டிஷ் கவுன்சிலின் லார்டு பிரெசிடெண்ட், சென்ற கன்சர்வேடிவ் அரசாங்கத்தில் அமைச்சராய் இருந்தவர். ''வளர்ச்சி அடைந்து வரும் உலகை முடிவில் ஐரோப்பிய நாடுகளின் கூட்டில்

உட்படுத்திக் கொள்வதே'' இந்த ''அக்கறையின்'' நோக்கம் என்று ஹேல்ஷம் பிரபு அப்பட்டமாகக் கூறுகிறார்.[4]

புதுக் காலனியாதிக்க முறை உருவானதற்கும் அவ்வாறே அதன் சிறப்பியல்புகளுக்கும் காரணம் உலகிலும் முன்னாள் அடிமை நாடுகளிலுமே தோன்றியுள்ள புதிய சூழ்நிலையும் சக்திகளின் புதிய ஒப்புநிலையுமே ஆகும். ஏகாதிபத்திய நாடுகளில் அரசு-ஏகபோகப் போக்கு ஒரேயடியாகத் தீவிரம் அடைந்திருப்பதும் ஓரளவு இவற்றின் காரணம் என்று சொல்ல வேண்டும்.

உலக சோஷலிஸ நாடுகளின் அமைப்பு நிலவுவதன் விளைவாக, ஏகாதிபத்தியம் இப்போது வரலாற்று வளர்ச்சியை இயக்கி நடத்தும் சக்தியாக இல்லை. சர்வதேச அரசியலிலும் சரி, சர்வதேசப் பொருளாதார உறவுகளிலும் சரி, ஏகாதிபத்தியவாதத்தின் தனி ஆதிக்கம் ஒழிக்கப்பட்டுவிட்டது. சோஷலிஸ அரசுகள் இளம் தேசீய அரசுகளுக்கு அரசியல், பொருளாதாரம், இராணுவம், கொள்கைவாதம் முதலிய எல்லாத் துறைகளிலும் காரியரீதியான உதவி அளித்து வருகின்றன.

அரசியல் துறையில் சோஷலிஸ அரசுகளுக்கும் விடுதலை பெற்ற நாடுகளுக்கும் இடையே நிலவும் ஒத்துழைப்பு இந்த நாடுகள் தங்கள் சுதந்திரத்தை வலுப்படுத்திக் கொள்வதற்கும் வெளிநாட்டினரின் தலையீடு இன்றித் தாமாகவே தம் வளர்ச்சிப் பாதையை வரையறுத்துக் கொள்வதற்கும் தேவையான அடிப்படைகளை நிறுவ வகை செய்கிறது. இராணுவத் துறையில், இளம் அரசுகள் தங்கள் தற்காப்புத் திறனை வலுப்படுத்திக் கொள்ளவும் போராடிப் பெற்ற சுதந்திரத்தையும் தேசீய நலன்களையும் காக்க வல்ல சைனியங்களைத் திரட்டி அமைக்கவும் சோஷலிஸ நாடுகள் உதவுகின்றன. ''மூன்றும் உலகம்'' என அழைக்கப்படும் இந்த அரசுகளின் மக்கள்மீது காலனியாதிக்கவாதிகள் இராணுவ பலாத்காரம் புரிவதற்கான வாய்ப்புக்கள் சோஷலிஸ நாடுகளின் நட்பு மண்டலம் நிலவுவதன் காரணமாக வெகுவாகக் குறுகி விட்டன.

பொருளாதாரத் துறையிலும் சோஷலிஸ அரசுகள் விடுதலை பெற்ற நாடுகளுக்கு முக்கியமான ஆதரவு அளித்து வருகின்றன. ஏகாதிபத்தியத்தைப் பொருளாதார வகையில்

சார்ந்திருப்பதை ஒழிக்க இந்த நாடுகள் நடத்திவரும போராட்டத்தில் சோஷலிஸ அரசுகள் உதவிவருகின்றன. அவை இந்த நாடுகளுக்குப் பெரும் அளவில் பொருளாதார, தொழில் நுட்ப உதவி அளிக்கின்றன, பொறி இயலார், தொழில் நுட்ப நிபுணர்கள், தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் முதலிய தேசீயப் பணியாளர்களைப் பயிற்றுவதிலும் விஞ்ஞானம், பண்பாடு, சுகாதாரப் பாதுகாப்பு முதலிய துறைகளின் வளர்ச்சியிலும் அவற்றுக்கு உதவுகின்றன. தவிர, சோஷலிஸ நாடுகளுடன் ஒத்துழைப்பு, ஏகாதிபத்திய ஏகபோகங்களின் காலனியாதிக்க முயற்சிகளுக்கு எதிராகச் செயல்படவும் குறித்த அளவுக்கு அவற்றைப் பயனற்றவை ஆக்கவுங்கூட முன்னாள் காலனிகளுக்கும் அரைக் காலனிகளுக்கும் வல்லமை அளிக்கிறது. பொருளாதார நெம்புகோல்களை விடுதலை பெற்ற நாடுகளுக்கு எதிராகப் பயன்விளைக்கும் வகையில் உபயோகிப்பது ஏகாதிபத்தியவாதிகளுக்கு இப்போது அளவிட முடியாதபடிஅதிகக் கடினம்ஆகிவிட்டது. கீழ்ப்படிய மறுக்கும் நாடுகளைப் பணியவைப்பதற்கு முன்பு நன்கு பயன்பட்ட பொருளாதார முற்றுகை போன்ற கைகண்ட சாதனம்கூட அடிக்கடி ''குறி தவறிவிடுகிறது'' என்பதை ஐக்கிய அராபியக் குடியரசு, கினி, க்யூபா ஆகிய நாடுகளின் அனுபவம் காட்டிவிட்டது.

கொள்கைவாதத் துறையில் சோஷலிஸ நாடுகளின் போராட்டம் ஏகாதிபத்தியவாதத்தின் ஆன்மிகப் பாதிப்பை எதிர்க்கத் தேசபக்தச் சக்திகளுக்கு உதவுகிறது. பணியாளர்களைப் பயிற்றி உருவாக்குவதிலும் கல்வி வளர்ச்சியிலும் சோஷலிஸ அரசுகளின் ஒத்துழைப்பு விடுதலை அடைந்த நாடுகளில் பண்பாட்டுப் புரட்சி நடத்துவதை எளிதாக்குகிறது.

சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு நிலவுவதும் இளம் தேசீய அரசுகளுடன் அதன் உறவுகளும் ''மூன்றும் உலகின்''பால் ஏகாதிபத்தியவாதம் கடைப்பிடிக்கும்அரசியல் போக்குமீது பெருத்த பாதிப்பு விளைக்கின்றன. ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கும் விடுதலை பெற்ற நாடுகளுக்கும் இடையே உறவுகளை உருவாக்குவதிலும் இவை மிகுந்த செல்வாக்கு செலுத்துகின்றன.

சோஷலிஸ நாடுகளின் நட்பு மண்டலத்துக்கும் விடுதலை

அடைந்த நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்புக்கு ஏற்ற திண்ணமான வாய்ப்புக்களைக் கவனமாகச் சீர்தூக்கிப் பார்த்து, சோஷலிஸ உலகின் ''ஈர்ப்பு ஆற்றலைக்'' கணக்கிட்டுப் பார்த்தபின்பே ஏகாதிபத்தியவாதம் முன்னாள் காலனிகள், அரைக் காலனிகள் விஷயத்தில் மேற்கொள்ள வேண்டிய தன் போக்கு முழுவதையும் வகுத்து, செயல்படுத்துகிறது. இதைக் கருத்தில் இறுத்திக் கொள்வது அவசியம். இல்லா விட்டால் முன்பு அடிமைப்பட்டிருந்த நாடுகளுக்கு ஏகாதி பத்தியவாதிகள் விட்டுக்கொடுப்பது, சில வேளைகளில் முக்கிய அம்சங்களில் விட்டுக்கொடுப்பது ஏன் என்பதைப் புரிந்து கொள்ள முடியாது. இந்த நாடுகளுடன் தங்கள் உறவுகளில் ஏகாதிபத்திய வல்லரசுகள் பல சந்தர்ப்பங்களில் நேரடி யான பொருளாதார ஆதாயங்களை மட்டுமே வழிகாட்டி யாகக் கொள்வதில்லை; இவ்வகை ஆதாயங்களை முதன்மை யாகக்கூடக் கருதுவதில்லை—இதன் காரணத்தைப் புரிந்து கொள்வதற்கும் மேற்குறித்த உண்மையை மனதில் பதித்துக் கொள்வது அவசியம்.

முன்னாள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலுமே கூடத் தீவிர மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. ஏகாதிபத்தியவாதி கள் தற்போது முக்கியமாகச் சமாளிக்க வேண்டியிருப்பது காலனியாதிக்கவாதிகளின் தான்தோன்றித்தனத்தைச் சார்ந்திருந்த அடிமை நாடுகளை அல்ல. இப்போது அவர்கள் பழக வேண்டியிருப்பது தேசீய அரசுகளுடன். இவை சர்வ தேச அரசியலில் சுதந்திரமாகச் செயல்படுகின்றன, அல்லது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக்கைக் கடைப்பிடித்தால் அவ் வாறு செயல்படவும் எதார்த்தமான சுயாதீனத்தை மேற் கொள்ளவும் தேசீய நலன்களைக் காக்கும் பொருட்டு அரசு அதிகார ஸ்தாபனங்களைப் பயன்படுத்தவும் வல்லவையாக இருக்கின்றன. உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் இருந்தவாறே இந்த நாடுகள் அதில் சிறப்பான இடத்தை வகிக்கின்றன. இவை ஏகாதிபத்திய நாடுகளின் அமைப்பைச் சேர்ந்தவை அல்ல. தவிர இவற்றின் சுதந்திரப் பொருளா தார, அரசியல் வளர்ச்சி ஏகாதிபத்தியத்தால் சுமத்தப் படும் சமத்துவம் அற்ற உறவுகளுக்கு எதிரானது. ஆகையால் ஆழ்ந்த ஏகாதிபத்தியவாத எதிர்ப்புப் போக்கு எந்தச் சந்தர்ப் பத்திலும் இதற்குப் புறநிலையில் இயல்பானது. அதே சமயம்,

சோஷலிஸ நாடுகளின் அமைப்பு அளிக்கும் ஆதரவும் உதவியும், அதேபோல, குறித்த அளவு, இளம் தேசீய அரசுகளுக்கு இடையே பரஸ்பர ஒத்துழைப்பின் வளர்ச்சியும் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் விதிகளுக்கு முழுமையாகக் கீழ்ப்பட்டு நடப்பதிலிருந்து விடுதலை பெறவும் ஏகபோகங்களின் நிர்ப்பந்தக் கட்டளைகளை ஓரளவு வெற்றிகரமாக எதிர்க்கவும் இந்த அரசுகளுக்கு வாய்ப்பு தருகின்றன.

ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிரே இப்போது நிற்பவர்கள் வரலாற்றுச் செயல்முறையில் ஊக்கத்துடன் பங்காற்ற முடியாதவாறு ஒதுக்கப்பட்டுவிட்ட, வாயற்ற காலனி அடிமைகள் அல்ல, விழிப்புற்று வலு அடைந்த தேசீயத் தன்னுணர்வு கொண்ட மக்கள். தேசீய விடுதலைப் போராட்டத்தின் போது கணிசமான அரசியல் அனுபவம் பெற்றுவிட்டவர்கள் இம்மக்கள். காலனியாட்சிக் காலத்தில் ஏகாதிபத்தியவாதிகள் இவர்களைப் பலாத்காரத்துக்கும் அவமதிப்புக்கும் உள்ளாக்கினுர்கள். காலனியாட்சி அரசாங்கங்களையும் காலனியாதிக்கத்தையும் காக்கப் பிடிவாதமாக முயன்றுர்கள். ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு எதிராக ஆக்கிரமிப்புச் செயல்களை மேற்கொண்டார்கள். இந்த எல்லா நடவடிக்கைகளின் விளைவாகவும் பெருந்திரளான பொதுமக்களுக்குள் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற வெடிமருந்து பேரளவில் கெட்டிக்கப்பட்டிருக்கிறது. பாட்டாளிகளுக்கு இடையிலும், குடியானவர்கள், தேசீய அறிவுஜீவிகள், நகரக் குட்டி பூர்ஷ்வாக்கள் ஆகியோரில் கணிசமான தொகையினர் இடையிலும் முதலாளித்துவ எதிர்ப்பு மனப்பான்மை, அடிக்கடி வர்க்க உணர்வு அற்றது எனினும், விரிவாகப் பரவியிருக்கிறது. சோஷலிஸ கோஷங்களை ஆதரிக்க இவர்கள் ஆயத்தமாய் இருக்கிருர்கள்.

விடுதலை பெற்ற நாடுகளின் தேசீய அரசாங்கங்களோ, பொதுஜனப் பிரதிநிதிகளோ வெறும் அரசியல் சுதந்திரம் அடைந்ததுடன் திருப்தி அடைந்துவிடத் தயாராயில்லை. ஏகாதிபத்தியத்தைப் பொருளாதாரத் துறையில் சார்ந்திருப்பதை ஒழிக்க வேண்டும், சமூக-பொருளாதாரத் துறையிலும் பொருளாதார நிர்வாகத் துறையிலும் பின்தங்கிய நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், வெளிநாட்டு ஏகபோகங்களின் நிலைகளைத் தாக்க வேண்டும் என்பவையே

உண்மையில் இந்த நாடுகளில் எல்லோராலும் கிளப்பப் படும் கோரிக்கைகள் ஆகும். முன்னுள் காலனிகள், அரைக் காலனிகளின் சமூக வளர்ச்சியின் எதார்த்தத் தேவைகளை இவை பிரதிபலிக்கின்றன. தேசீய விடுதலைப் போராட்டம் நடத்தப்பட்டதே இவற்றின் பொருட்டாகத்தான். இந்தக் கோரிக்கைகளை முதன்மையாக ஆதரிப்பவர்கள் திரளான பொது மக்களே. தேசீய விடுதலை இயக்கத்தின் வெற்றிகளின் விளைவாகத் தங்கள் வாழ்க்கை நிலைமைகள் மேம்பட வேண் டும், சுரண்டலிலும் ஏழ்மையிலும் உரிமையின்மையிலும் இருந்து தங்களுக்கு விமோசனம் கிடைக்க வேண்டும் என்று இவர்கள் பாடுபடுகிருர்கள்.

ஏகாதிபத்தியத்திலிருந்து பொருளாதார விடுதலை பெறு வது, பழசாகிவிட்ட சமூக உறவுகளை ஒழித்துக் கட்டுவது, தேசீயப் பொருளாதார முன்னேற்றம் பெறுவது ஆகியவை தங்கள் நாடுகளின் முழுமையான தேசீய, சமூக விடுதலைக் காகவும் பாட்டாளிகளுடையவும் எல்லா உழைப்பாளி மக்களுடையவும் சமூக அந்தஸ்தை உயர்த்துவதற்காகவும் அவர்களது பொருளாதார நிலைமையை மாற்றுவதற்காக வும் நடக்கும் போராட்டத்தின் முக்கியக் கட்டம் என்று வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளின் தொழிலாளி வர்க்கம்—அதன் வர்க்க உணர்வு பெற்ற பகுதி—கருதுகிறது. நிலப் பிரபுத்துவக் கால உறவுகள், அதற்கு முந்திய கால உறவு கள் ஆகியவற்றின் பிணிப்பிலிருந்தும், நிலம் இன்மை, நிலம் பற்றுமை ஆகியவற்றின் கஷ்டத்திலிருந்தும், இடைத் தரகர் கள், கடும்வட்டி வாங்குவோர் ஆகியோரின் நெரிப்பிலிருந் தும், வர்த்தக நிலவரங்களின் நிலைகுலைக்கும் ஊசலாட்டங் களிலிருந்தும் விடு பெறுவதற்குப் பெரும்பாலான குடியான வர்கள் ஆவல் கொண்டு துடிக்கிருர்கள்.

தேசீய அறிவுஜீவிகள் விடுதலை பெற்ற நாடுகளின் பொரு ளாதார, பண்பாட்டுத் தரத்தை உயர்த்துவதிலும் அவற் றின் சுதந்திரத்தை வலுப்படுத்துவதிலும் ஆழ்ந்த அக்கறை கொண்டிருக்கிருர்கள். தங்கள் ஆற்றல்களை விரிவாகப் பயன் படுத்தவும் சமூக வாழ்க்கையில் முன்னிலும் அதிக முக்கியப் பங்கு ஆற்றவும் இதனுல் வாய்ப்பு கிடைக்கும் என்று அவர் கள் நம்புகிருர்கள். தவிர தேசபக்த அறிவுஜீவிகள் தேசீய கௌரவத்தையும் மதிப்பையும் காக்கும் விஷயத்திலும்

தேசீயப் பண்பாட்டு வளர்ச்சியிலும் விசேஷ நுண்ணுணர்வு படைத்தவர்கள். நகரக் குட்டி பூர்ஷ்வா வட்டாரங்களுக்குத் தொழில், வர்த்தகத் துறைகளில் வலிமைமிக்க போட்டியாளிகளாக விளங்குபவை வெளிநாட்டுக் கம்பெனிகள். எனவே இந்தக் கம்பெனிகள் நாட்டின் பொருளாதார வாழ்க்கையிலிருந்து களைந்து அகற்றப்படுவதும், தரகர்கள், கடும் வட்டிக்காரர்கள் ஆகியோரின் அதிகாரம் ஒழிக்கப்படுவதும் நகரக் குட்டி பூர்ஷ்வா வட்டாரங்களின் விருப்பத்துக்கு உகந்ததாகவே இருக்கும். தங்கள் மனப்பான்மை காரணமாக இந்த வட்டாரங்கள் தேசீய, இன்னும் சரியாகச் சொன்ஞல் தேசீயவாதக் கோஷங்களை எளிதில் ஆதரிக்கின்றன.

விடுதலை பெற்ற நாடுகளின் பூர்ஷ்வா வர்க்கமும் உண்மையான தேசீய அரசுரிமையிலும் பொருளாதார முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டிருக்கிறது. தேசீயச் சந்தையை விரிவாக்குவதற்கும் அதை முழுமையாகக் கைப்பற்றுவதற்கும் உள்நாட்டு பூர்ஷ்வா வர்க்கம் முயலுகிறது. பொது மக்கள் திரளை அது எவ்வளவுதான் அஞ்சினுலும், அதன் குறித்த வட்டாரங்கள் ஏகாதிபத்தியவாதத்துடன் சமரசம் செய்துகொள்ள எவ்வளவுதான் தயாராய் இருந்தாலும், அரசியல் சுதந்திரத்தைக் கைவிட்டுவிட தேசீய பூர்ஷ்வா வர்க்கம் ஒருப்படாது. ஏகாதிபத்திய வல்லரசுகளுடன் தங்கள் நாடுகளின் சமத்துவம் அற்ற தற்போதையப் பொருளாதார உறவுகளை நிலையாக வைத்திருக்கவும் அது இணங்காது.

பொருளாதார வளர்ச்சி விரைவாக ஏற்பட வேண்டும், சொந்த இயந்திரத் தொழில்கள் துரிதமாக நிறுவப்பட வேண்டும், வெளிநாட்டு—அதிலும் தனியார்—மூலதனத்தின் செயல் குறுக்கப்பட வேண்டும், பொருளாதார வாழ்வில் அரசு ஊக்கத்துடன் தலையிட வேண்டும், விறல்மிக்க அரசினர் தொழில் துறை அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் இத்தகைய நிலைமைகளிலும் இத்தகைய மனநிலைகளிலுமே இளம் அரசுகளில் விரிவான ஆதரவு பெற்று வருகின்றன. அரசினர் துறை சோஷலிஸ அடிப்படையின் செயல் வடிவம் என்றும் தேசீயப் பொருளாதார வளர்ச்சியை இயக்கிச் செல்லும் சக்தி என்றும் திரளான பொது மக்கள் எண்ணுகிருர்கள். பெரும்பாலான பூர்ஷ்வா அரசாங்கங்களும்

அரசினர் துறைக்கு ஆதரவு அளிக்கின்றன. ஒரு மொத்த மாக இணைந்த தேசிய முதலாளியின் பங்கை அது ஆற்றும் என்று இவை கருதுகின்றன. உள்நாட்டு மூலதனம் இன்னும் வளர்ந்து வலுப்பெறாதிருக்கும் தற்போதைய ஆரம்பக் காலகட்டத்தில் தேசீய பூர்ஷ்வா வளர்ச்சிக்கு உரிய பயன் விளைக்கும் நெம்புகோலாக அரசினர் துறையைக் கையாள இவை முயல்கின்றன.

விடுதலை அடைந்த நாடுகளில் வர்க்க முரண்பாடுகள் வளர்ந்து வருகின்றன. இதன் புறநிலை அடிப்படை சமூக ஏற்றத்தாழ்வுகள் மேலும் மேலும் அதிகரித்து வருவதே ஆகும். திரளான பொது மக்களின் நலன்களிலிருந்து பூர்ஷ்வா வர்க்கத்தினதும் விசேஷச் சலுகைகள் பெற்ற பல்வேறு குழுக்களினதும் விழைவு வேறுபடுவது விடுதலைப் போராட்டத்தின் முந்திய கட்டத்தில் மங்கலாகத் தெரிந்து வந்தது. இப்போது அது வர வர அதிகத் தெளிவாகப் புலப்படுகிறது. சமூகத்தின் சுரண்டும் வட்டாரங்கள் வெட்கமின்றி மளமளவென்று பணம் திரட்டிச் சேர்க்கின்றன. தேசீய விடுதலைக்காக யாவரிலும் அதிகத் தியாகங்கள் புரிந்த பொது மக்களோ சுரண்டலிலும் வறுமையிலும் இருந்து விடுபடவில்லை. விடுதலை பெற்ற நாடுகள் வருங்கால வளர்ச்சிக்கு எந்தப் பாதையைப் பின்பற்றுவது — முதலாளித்துவத்துக்கு இட்டுச் செல்லும் பாதையையா அல்லது சோஷலிஸத்துக்கு இட்டுச் செல்லும் பாதையையா—என்ற பிரச்சினை பற்றி நேர் எதிர் எதிரான அரசியல் நிலைகள் தலைதூக்குகின்றன. இதற்கு ஏற்ப, பொது மக்கள்பால் பூர்ஷ்வாக்களின் அச்சம் அதிகரித்து வருகிறது. பூர்ஷ்வா வர்க்கத்தின் சில வட்டாரங்களில் முன்னேற்ற எதிர்ப்புப் போக்குகள் வலு அடைந்துவருகின்றன.

புதுக் காலனியாதிக்க முறை தோன்றியதன் காரணங்களையும் அதன் சிறப்பு இயல்புகளையும் பற்றிப் பேசும் பொழுது, தனது முன்னாள் ஆட்சிப் பிரதேசங்கள் விஷயத்தில் ஏகாதிபத்தியத்தின் நிலைமைக்கு உரிய குறிப்பான தனித்தன்மையை விசேஷமாக வலியுறுத்துவது அவசியம். ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் மீது நேரடியான அரசியல் மேலாதிக்கத்தை ஏகாதிபத்தியம் இழந்துவிட்டது, எனினும் அங்கே சக்திமிக்க நிலைகளை இன்னும் தன் வசம் வைத்திருக்கிறது.

விடுதலை பெற்றுவிட்ட நாடுகள்மீது அரசியல், இராணுவ-அரசியல், கொள்கைவாதத் துறைகளில் செல்வாக்கு செலுத்துவதற்கான முக்கிய நெம்புகோல்களை ஏகாதிபத்திய வாதிகள் வைத்திருக்கிறார்கள். காலனியாட்சிக் காலத்திலோ, சுதந்திரப் பிரகடனத்துக்கு முன்போ சுமத்தப்பட்ட சமத்துவம் அற்ற ஒப்பந்தங்களே இந்த நெம்புகோல்கள். ''மூன்றாம் உலகின்'' பிரதேசங்களில் நிறுவப்பட்டிருக்கும் தரைப்படை, கடற்படை, விமானப்படைத் தளங்களின் விரிவான வலைப்பின்னலும் இவ்வாறானதே. அரசாங்க நிர்வாக நிறுவனங்களிலும் இராணுவத்திலும் தேசீயப் பொருளாதாரத்திலும் கல்வி நிலையங்களிலும் பல பிரிவுகளில் ஆழப் புகுந்திருக்கும் வெளிநாட்டு ஆலோசகர்களும் நிபுணர்களும் ஆசிரியர்களும் கொண்ட பெருஞ் சேனையும் இவ்வகையானதே. விடுதலை அடைந்த நாடுகளில் உள்ள, அரசியல் நோக்கில் தங்களுக்கு நெருங்கிய நபர்களுடனும், அரசாங்கத் துறைகளில் அதிகாரிகளுக்கிடையே இருக்கும் தங்கள் நேரடியான ஏஜெண்டுகளுடனுமேகூட ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையான இணைப்புக்களும், குறித்த சமுதாய, அரசியல் குழுக்களுடன் நிலவும் நெருக்கமான தொடர்புகளும் இந்த ரகத்தைச் சேர்ந்தவையே. முடிவில், பல ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டு நீண்ட காலமாகச் சோதிக்கப்பட்டுள்ள பிரசாரச் சாதனங்களும் இத்தகைய நெம்புகோல்களே ஆம்.

முன்னாள் காலனிகளும் அரைக் காலனிகளும் சமூக, பொருளாதாரத் துறைகளில் பெரிதும் பின்தங்கி இருப்பது, பொருளாதாரத் துறையில் அவை ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருப்பது, காலனியாதிக்கவாதிகளின் பெரிய துருப்புச் சீட்டாக விளங்குகிறது. இந்த நாடுகளின் சமூக அமைப்பிலும் உற்பத்தி உறவுகளிலும் நிலப்பிரபுத்துவக் கால, நிலப்பிரபுத்துவத்துக்கு முந்திய கால வடிவங்கள் இன்னமும் வலுவாக இருக்கின்றன. சில நாடுகளிலோ இவையே ஆதிக்கம் வகிக்கின்றன. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் மிக மிக உறுதியும் விடாப்பிடியும் கொண்ட சக்தி ஆன தொழிலாளி வர்க்கம் பல நாடுகளில் ஒப்புநோக்கில் வலிமை குன்றியதாக இருக்கிறது.

அண்மைக் காலம் வரையில் இந்த நாடுகளில் நிலவி வந்த காலனி ஆட்சி உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைத்

தடைப்படுத்தும் முட்டுக்கட்டையாகச் செயல்பட்டது. சமூக, பொருளாதார நோக்கிலும் விஞ்ஞான, தொழில் நுட்ப நோக்கிலும் இந்நாடுகளின் பின்தங்கிய நிலையை மேலும் வெகுவாக அதிகரிக்கவே செய்தது காலனி ஆட்சி. இப்போதும் இந்நாடுகளின் பொருளாதாரத்தின்மேல் அண்மைக் காலக் காலனி ஆட்சியின் கடினமான சுவடு பதிந்திருக்கிறது. எடுத்துக் காட்டாக, பிரெஞ்சு அறிஞர்கள் ஆர். த்யூமோன், பி. ரொஸியே இருவரும் தந்துள்ள புள்ளிவிவரங்களைக் குறிப்பிடலாம். அவற்றின்படி 18ம் நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந்தில் ஒவ்வொரு பிரஜையினதும் சராசரி ஆண்டு வருமானம் இந்தியாவில் இருந்ததைவிட எட்டு மடங்கு அதிகமாய் இருந்தது. 150 ஆண்டுகளுக்குப் பின், 1948—1949 ஆண்டுகளில் இந்த அதிகரிப்பு 14.5 மடங்கை எட்டிவிட்டது.[5]

முன்னாள் காலனிகளிலும் சார்பு நாடுகளிலும் சோஷலிஸ்ட் அல்லாத உலகின் 70 சதவிகிதம் மக்கள் தற்போது வசிக்கிறார்கள். ஆயினும் உலகின் மொத்த இயந்திரத் தொழில் உற்பத்தியில் சுமார் ஒன்பதில் ஒரு பங்கு மட்டுமே இந்நாடுகளில் நிகழ்கிறது. தயாரிப்புத் தொழிற்சாலைப் பொருள்கள் சுமார் பதினொன்றில் ஒரு பங்கும், கனரகத் தொழில் துறையின் முக்கியக் கிளைகளில் தயாரிக்கப்படும் பொருள்கள் பதினான்கில் ஒரு பங்குமே இங்கே உற்பத்தி ஆகின்றன. உலகின் மொத்தச் சரக்குப் பரிமாற்றத்தின் மதிப்பில் நான்கில் ஒரு பங்கே இந்த நாடுகளைச் சார்கிறது. நபர்வாரிக் கணக்கீட்டில் மொத்தத் தேசிய உற்பத்தியும், வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளைக் காட்டிலும் இந்நாடுகளில் பல மடங்கு குறைவு.

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் சராசரி நபர்வாரிக் கணக்கில் கனரக இயந்திரத் தொழில் பொருள்கள் அறுபதுக்களின் மத்தியில் ஏகாதிபத்திய அரசுகளுடன் ஒப்பிட்டபோது 30 மடங்குக்கும் குறைவாகவும் உலோகத் தயாரிப்புத் தொழில் பொருள்கள் 50 மடங்கு குறைவாகவுமே உற்பத்தி செய்யப்பட்டன.

1965ம் ஆண்டில் ஆப்பிரிக்காவின் வயது வந்த மக்களில் 82.9 சதவிகிதத்தினர் எழுத்தறிவு அற்றவர்களாக இருந்தார்கள். ஆசியாவில் இவர்கள் 60.4 சதவிகிதமும்

லத்தீன் அமெரிக்காவில் 29 சதவிகிதமும் இருந்தார்கள்.[6]

காலனியாட்சியின் அழிவு விளைக்கும் செல்வாக்கு இன்னொரு வகையிலும் செயல்பட்டது. ஒருச்சாய்ந்த பொருளாதாரத் தனித் தேர்ச்சி முன்னாள் அடிமை நாடுகளுக்கு இயல்பாய் இருந்தது. இயந்திரத் தொழில் அல்லது விவசாயக் கச்சாப்பொருள்களில் எவையேனும் ஓரிரு வகைகள், உணவுப் பண்டங்கள், இவற்றை மட்டுமே அவை உற்பத்தி செய்தன. சில நாடுகளிலோ ஒரே ஒரு வகைப் பொருளை உற்பத்தி செய்வதிலேயே தனித்த ஈடுபாடு காணப்பட்டது. 1964ல் பொலீவியாவின் ஏற்றுமதியில் 73 சதவிகிதம் வெள்ளீயமாக இருந்தது. வெனிஸுவேலாவின் ஏற்றுமதியில் 93.5 சதவிகிதம் பெட்ரோலியம். பிரேஸிலின் ஏற்றுமதியில் 53.1 சதவிகிதம் காப்பி. லைபீரியாவின் ஏற்றுமதியில் 86 சதவிகிதம் ரப்பரும் இரும்புக் கனியமும். கானாவின் ஏற்றுமதியில் 60 சதவிகிதம் கோக்கோ. கொலம்பியாவின் ஏற்றுமதியில் 71.9 சதவிகிதம் காப்பி. காம்பியாவின் ஏற்றுமதியில் 90 சதவிகிதத்துக்கும் மேல் நிலக்கடலையும் நிலக்கடலைப் பண்டங்களும் (1966). இலங்கையின் ஏற்றுமதியில் 61 சதவிகிதம் (1967) தேயிலை. செனெகால், நைஜர், இவற்றின் ஏற்றுமதியில் 80 சதவிகிதம் (1968) நிலக்கடலை. இவ்வாறு இன்னும் எத்தனையோ புள்ளி விவரங்கள் தர முடியும். பொருளாதார வளர்ச்சி குன்றிய மொத்தம் சுமார் 80 நாடுகளில் 30க்கு மேல் ஏதேனும் ஒரு விளைபொருளையோ அல்லது கச்சாப் பொருளையோ ஏற்றுமதி செய்வதன் மூலமே தங்கள் அன்னியச் செலாவணியில் பாதிக்கு மேல் பெறுகின்றன. பெரும்பாலான மற்ற நாடுகள் இரண்டே வகை விளைபொருள்களின் ஏற்றுமதியையே சார்ந்திருக்கின்றன.

விடுதலை பெற்ற நாடுகளின் பொருளாதார உறவுகள், அடிக்கடி மிக முக்கியமான உறவுகள், வழக்கமாக ஏகாதிபத்திய வல்லரசுகளுடனேயே வைத்துக்கொள்ளப்படுகின்றன. முன்னாள் காலனிகள், அரைக் காலனிகளின் மொத்த இறக்குமதி, ஏற்றுமதியில் 70 சதவிகிதத்துக்கும் மேல் மேற்கு ஐரோப்பிய, வட அமெரிக்க அரசுகளுடனும் ஜப்பானுடனுமே நடந்து வருகின்றது. முன்னாள் காலனிகள், அரைக் காலனிகளுக்குக் கிடைத்த மொத்த அரசாங்கக் கடன்களில் 90 சதவிகிதம் இந்த அரசுகளிடமிருந்தே பெறப்பட்டன.

விடுதலை பெற்ற பின்பு வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு இடையே பரஸ்பர வர்த்தகம் குறிப்பிடத்தக்க அளவு விரிவு அடைந்திருக்கிறது. ஆனால் இப்போதும்கூட இது அவற்றின் வெளி வர்த்தகத்தின் மொத்த அளவில் சுமார் ஐந்தில் ஒரு பங்கு மட்டுமே இருக்கும். ஆப்பிரிக்க நாடுகளின் பரஸ்பர வர்த்தகத்தின் நிலையோ இன்னும் மோசம். இது இந்நாடுகளின் மொத்தச் சரக்குப் பரிமாற்றத்தில் 8 சதவிகிதத்துக்கும் குறைவு ஆகும்.

''பொருளாதார, நிதி உறவுகளின் நோக்கில் பார்க்கும் போது ஆப்பிரிக்க நாடுகள் மேற்கு ஐரோப்பாவின் கரைகளை அடுத்த தீவுகளின் தொடரை அதிகமாக ஒத்திருக்கின்றனவே தவிர ஒரே கண்டத்தின் உட்பகுதிகளை அல்ல.''—இவ்வாறு எழுதுகிறார் ''சர்வதேசப் புனர்நிர்மாண, அபிவிருத்தி பாங்கின்'' (சர்வதேச பாங்கு) பொருளாதாரப் பிரிவின் இயக்குநர் ஏ. கமார்க்.[7]

விடுதலை பெற்ற சில நாடுகளில் அன்னிய மூலதனத்தை ஓரளவுக்கு நெருக்கி அகற்றுவதன் மூலம் தேசீய அரசுத் தொழில் முயற்சிகளும் தனியார் தொழில் முயற்சிகளும் தொடங்கும் போக்கு தீவிரம் அடைந்து வருகிறது என்றாலும் இவற்றில் பல நாடுகளின் பொருளாதாரத்தில் ஏகாதிபத்திய ஏகபோக நிறுவனங்கள் பலத்த நிலைகளை, சிலவற்றில் ஆதிக்க நிலைகளைக்கூட, முன்போலவே வகித்து வருகின்றன. பெட்ரோலியம், இரும்புக் கனியம், குருமம், காரீயம், நிக்கல், செம்பு, யுரேனியம், வேறு பல உபயோகமான கனிப் பொருள்கள் ஆகியவற்றை எடுப்பதில் பெரிய பங்கும் பதன் பாட்டுத் தொழில்துறை, பாங்குகள், முனிசிபல் தொழில் நிலையங்கள், தோட்டப்பண்ணைகள் ஆகியவற்றின் பெரும் பகுதியும் இந்த ஏகபோக நிறுவனங்களின் கைகளில் இருக்கின்றன. உதாரணமாக வெனிஸுவேலாவில் கனியத் தொழிலில் 80 சதவிகிதம், பெட்ரோலியத் தொழிலில் 70 சதவிகிதம், கட்டிட நிர்மாணத் தொழிலில் 70 சதவிகிதம், உள்நாட்டு வர்த்தகத்தில் 35 சதவிகிதம் அன்னிய ஏகபோக நிறுவனங்களின் ஆதிக்கத்தில் இருக்கின்றன. மலேசியாவில் வெள்ளீயம் வெட்டி எடுக்கும் தொழிலின் 60 சதவிகிதம் வெளி நாட்டு வர்த்தகர்கள் வசம் குவிந்திருக்கிறது. செனெகாலில்

1964ம் ஆண்டில் 98 சதவிகிதம் தொழில் நிலையங்கள் அன்னியருக்குச் சொந்தமாய் இருந்தன.[8]

லத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்க ஐக்கிய நாட்டு ஏகபோகங்களின் முதலீடு ஆயிரங்கோடி டாலருக்கும் அதிகமான தொகையை எட்டிவிட்டது. அவற்றுக்குச் சொந்தமான தொழில் நிலையங்களில் 15 லட்சம் லத்தீன் அமெரிக்கர்கள் வேலை செய்கிறார்கள். லத்தீன் அமெரிக்காவின் மொத்த உற்பத்திச் சரக்குகளில் 10 சதவிகிதமும் ஏற்றுமதிச் சரக்குகளில் மூன்றில் ஒரு பங்கும் இந்தத் தொழில் நிலையங்கள் உற்பத்தி செய்கின்றன.

பெரும்பாலான முன்னாள் அடிமை நாடுகளில் போராடி விடுதலை பெற்றதைத் தொடர்ந்து ஏகாதிபத்திய மூலதனத்தின் நுழைவு வழிகள் ''அடைக்கப்படவில்லை''. எடுத்துக்காட்டாக, இந்திய வெளிநாட்டு வர்த்தகக் கல்லூரிப் பேராசிரியரும் பிரபல பொருளாதார விற்பன்னருமான கே. குரியன் தந்துள்ள புள்ளிவிவரங்களின்படி, 1948 முதல் 1960 வரை இந்தியாவில் அன்னிய மூலதன முதலீடுகள் 255 கோடி 80 லட்சம் ரூபாயிலிருந்து 566 கோடி 40 லட்சம் ரூபாயாக, அதாவது இரண்டு மடங்குக்கும் மேல் அதிகரித்தன.[9]

முன்னாள் காலனிகளும் அரைக் காலனிகளும் ஏகாதிபத்திய வல்லரசுகளைச் சார்ந்திருப்பதற்கு உரிய இன்னொரு போக்கு அண்மை ஆண்டுகளில் மேலும் மேலும் துலக்கமாக வெளிப்பட்டு வருகிறது. இயந்திரத் தொழில் துறையில் தங்கள் பின்தங்கிய நிலையை இந்நாடுகள் இன்னும் போக்கிக் கொள்ளவில்லை. மறு புறம் விஞ்ஞான - தொழில்நுட்பப் புரட்சி, செயற்கைப் பொருள்களின் தயாரிப்பு விரிவடைவது, விவசாயத்தில் அதிகரித்து வரும் இடர்ப்பாடுகள் ஆகியவற்றின் காரணமாக, முன்போலப் பெரும் அளவில் கச்சாப் பொருள் சப்ளை செய்யும் நாடுகளாகப் பங்காற்ற இவற்றால் இப்போது முடியவில்லை. இது மட்டும் அல்ல. வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களைப் பெருத்த அளவில் இவையே தருவிக்கத் தொடங்கிவிட்டன. ஐக்கிய நாடுகள் சங்க ''உணவு, விவசாய நிறுவனத்தால்'' 1967, அக்டோபர் 11ந் தேதியிட்ட ''உலக உணவுப் பொருள் நிலவரமும் விவசாயத்தின் நிலையும்'' என்ற அறிக்கையில்

கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்களின்படி, வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் 1966ம் ஆண்டு சுமார் 450 கோடி டாலர் மதிப்புள்ள உணவுப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தன. 1965ம்ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 4 சதவிகிதம் அதிகம். இவை இறக்குமதி செய்த மொத்த விவசாய விளைபொருள்களின் மதிப்பு 560 கோடி டாலர் ஆகும்.

விடுதலை பெற்ற நாடுகள் மொத்தத்தில் பொருளாதாரத் துறையில் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருப்பது, நடப்புக் காலத்துக்கு ஒவ்வாத சமூக உறவுகள் பரவியிருப்பது, அவற்றின் பொருளாதாரம் பின்தங்கியதாகவும் நிலையுறுதி அற்றதாகவும் உருச் சிதைந்ததாகவும் இருப்பது, போதாக்குறைக்கு ஏகாதிபத்திய வல்லரசுகளின் தேவைகளுக்கு ஏற்ப அது அமைந்திருப்பது, உலக முதலாளித்துவச் சந்தை நிலவரங்களின் ஊசலாட்டங்களால் அது மட்டுமீறிப் பாதிக்கப்படுவது—இந்தக் காரணங்கள் இந்நாடுகள் ஏகாதிபத்திய ஏகபோக நிறுவனங்களின் நிர்ப்பந்தத்துக்கு எவ்வளவு தூரம் கீழ்ப்பட வேண்டியிருக்கிறது என்பதை நிர்ணயிக்கின்றன. விடுதலை பெற்ற நாடுகள்மீது அரசியல் நிர்ப்பந்தம் செலுத்தவும் அவற்றுக்குக் கட்டளைகள்கூட இடவும் அவற்றை அரசியல் துறையில் அடிப்படுத்த முயற்சிகள் செய்யவும் குறித்த அளவு வாய்ப்புக்கள், சில வேளைகளில் கணிசமான வாய்ப்புக்கள், இதனால் ஏகாதிபத்தியத்துக்குக் கிடைக்கின்றன.

அதே சமயம் அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சி காரணமாக மறைமுக ஆதிக்கத்திற்கு உரிய முன்னிலும் வலிய நெம்புகோல்களைச் செலுத்துவதும் பொருளாதார விஸ்தரிப்புத் துறையிலும் அரசின் சக்தி அனைத்தையும் தன் தொண்டில் நேரடியாக ஈடுபடுத்துவதும் ஏகபோக நிறுவனங்களுக்குச் சாத்தியம் ஆகிறது. இதற்கு உதாரணமாக ''உதவி'' எனப்படுவதை எடுத்துக் காட்டலாம்.

அரசு-ஏகபோகப் போக்குகள் தனித்தனி முதலாளித்துவ அரசுகளின் வரம்புகளுக்கு வெளியே சென்றுவிட்டது (''பொதுச் சந்தை'' முதலியன), ஏகாதிபத்திய வல்லரசுகளுக்குத் தேசிய விடுதலை இயக்கத்தை எதிர்த்து ஒருமிக்கச் செயல்பட உதவுகிறது. தவிர, இந்த வல்லரசுகளில் எந்த ஒன்றும், அவற்றில் யாவற்றிலும சக்தி மிக்க வல்லரசுகூட,

காலனி ஆதிக்க முறையைத் தன்னந்தனியே பாதுகாக்கத் தற்கால நிலைமைகளில் வல்லதாய் இல்லை. இந்தக் காரண மும் அவற்றை ஒன்றுபடத் தூண்டுகிறது.

மறு புறம், ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு இடையே முரண்பாடுகள் தீவிரம் அடைந்து கொண்டு போகின்றன. விடுதலை பெற்ற நாடுகளின் விரிவாகி வரும் சந்தைகளால் வெகுவாக ஈர்க்கப்படும் ஏகபோக நிறுவனங்களின் பரஸ் பர விரோதமும் போட்டிப் போராட்டமும் வளர்ந்து கொண்டு போகின்றன. மேலும், தேசீய விடுதலைச் சக்திகள் இந்த முரண்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ள முன்னைவிட ஒப்பிட முடியாத அளவு அதிக வாய்ப்பை இப்போது பெற்றிருக்கின்றன. ஏனெனில், காலனியாட்சிக் காலத் தடை வேலிகள் அகற்றப்பட்டுவிட்டன. இளம் அரசுகள் உதயம் ஆகியுள்ளன. முன்னாள் ஆட்சித்தலைமை நாடுகளின் இடையீடு இன்றி மற்ற நாடுகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ள இவை வல்லவை.

இவ்வாறாக, புதுக் காலனியாதிக்க முறை பின்வரும் வரலாற்றுச் சூழ்நிலைகளில் தோன்றியிருக்கிறது. ஏகாதி பத்தியம் கணிசமான அளவு வலி குன்றிவிட்டது. முன்னாள் காலனிகள், அரைக் காலனிகளின் மக்களிடமிருந்து அவர்கள் போராடிப் பெற்ற தேசீய அரசுரிமையைப் பறிக்கவும் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் மீது முன்போலத் தன் சித்தத்தைச் சுமத்தவும் இப்போது அதற்கு இயலாது. ஆயினும், முதன்மையாக இந்த நாடுகளின் பொருளாதாரச் சார்புநிலையையும் பின்தங்கிய நிலையையும் பயன்படுத்தி இவற்றை மறைமுகமாகத் தன் ஆதிக்கத்தில் வைத்திருக்க வும் இவை தங்கள் அரசியல் சுதந்திரத்தை வலுப்படுத்திக் கொள்ளவும் பொருளாதாரச் சுயாதீனம் பெறவும் விடாத வாறு தடை செய்யவும் தேவையான வலிமை ஏகாதி பத்தியத்திடம் இன்னும் இருக்கிறது.

தற்போது தேசீய அரசுரிமையும் சடங்கு நோக்கில் சுயாதீன மும் பெற்றுள்ளவையும் பொருளாதாரத் துறையில் பின்தங்கிய வையும் முன்னாள் காலனிகளும் அரைக் காலனிகளும் ஆன ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள்மீது மறைமுக ஆதிக்கத் தையும் சுரண்டலையும் செயல்படுத்துவதற்குரிய முறையே புதுக் காலனியாதிக்க முறை ஆகும். மறைமுக ஆதிக்கம் என்பது

ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க நடைமுறையில் ஒன்றும் புதியது அல்ல. அரை நூற்றாண்டுக்கும் முன்பே வி. இ. லெனின் பின்வருமாறு எழுதினார்: ''... நிதிமூலதனமும் உலகைப் பொருளாதார நோக்கிலும் அரசியல் நோக்கிலும் பங்கு போட்டுக் கொள்வதற்காகப் பெரு வல்லரசுகளுக்குள் போராட்டம் நடக்கப் புரியும் அதற்கேற்ற சர்வதேசக் கொள்கையும் அரசுச் சார்புநிலையின் இடைக்கால வடிவங்களது முழுத் தொகுதியை உருவாக்குகின்றன. இந்தக் காலகட்டத்துக்கு எடுத்துக்காட்டானவை காலனிகளை ஆள்பவை, காலனிகள் என்னும் இருவகை நாடுகளின் முக்கியக் குழுக்கள் மட்டுமே அல்ல, சார்பு நாடுகளின் பல்வித வடிவங்களும் ஆகும். இந்தச் சார்பு நாடுகள் அரசியல், சடங்கு நோக்கில் சுதந்திரம் உள்ளவை, எதார்த்தத்திலோ, நிதியாதார, ராஜதந்திரச் சார்பு வலைகளில் சிக்குண்டிருப்பவை.''[10]

மறைமுக ஆதிக்கம் வழக்கமான காலனியாதிக்க முறைக்கு இயல்பானதே எனினும் அதன் முதன்மையான வடிவமாக இருந்ததே இல்லை. இப்போதோ அதுவே விதி ஆகிவிட்டது. தவிரவும், இத்தகைய ஆதிக்கத்தின் நோக்கங்களும் அதன் பொருளாதார, அரசியல், கொள்கைவாத அடிப்படைகளும் சாராம்சத்தில் மாறியுள்ளன.

பொருளாதாரத் துறையில் மறைமுக ஆதிக்கம் முன்னாள் காலனிகள், அரைக் காலனிகளுடைய பொருளாதாரப் பின்தங்கிய நிலையையும், அவை ஏகாதிபத்திய ஏகபோகங்களைச் சார்ந்திருப்பதையும், சர்வதேச முதலாளித்துவ உழைப்புப் பிரிவினையில் அவற்றின் சமத்துவமற்ற, அடிப்பட்ட, ஓரத்தில் ஒதுங்கிய நிலையையும் ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. இந்த நாடுகள் குறித்த வடிவங்களில், வரையறுத்த வரம்புகளுக்குள் முதலாளித்துவ வளர்ச்சி பெறச் செய்வதன் மூலமும், ''தேசீயத்துக்குஅப்பாற்பட்ட'' அரசு-ஏகபோகக் கூட்டுக்களிலும் பிறவற்றிலும் இவற்றைச் சேர்த்துக் கொள்வதன் வாயிலாகவும் இவற்றின் ஒதுங்கிய நிலையை ஸ்திரப்படுத்தப் புதுக் காலனியாதிக்க முறை முயல்கிறது.

அரசியல், இராணுவத் துறைகளில், ''கம்யூனிஸ எதிர்ப்பு'' என்ற கொடியின் கீழ் இராணுவ, இராணுவ-அரசியல் கூட்டுக்களை அமைப்பதன் வாயிலாக மறைமுக ஆதிக்கம் செயல்படுத்தப்படுகிறது. ஏகாதிபத்திய அரசுகள் பங்கு

கொள்ளும் அல்லது பங்கு கொள்ளாமலே கூட இருக்கும் இந் நாடுகளின் பல வகை ஐக்கியங்கள், ''சங்கங்கள்'' மூலமும், ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கும் முன்னுள் காலனிகள், அரைக் காலனிகளுக்கும் இடையே செய்து கொள்ளப்படும் இரு தரப்பு இராணுவ-அரசியல் ஒப்பந்தங்கள் மூலமும் விடுதலை பெற்ற நாடுகள் இத்தகைய கூட்டுக்களில் சேருமாறு ஈர்க்கப் படுகின்றன. இந்தக் கூட்டுக்கள் சோஷலிஸ நாடுகளின் நட்பு மண்டலத்துக்கு எதிராக நிறுத்தப்படுகின்றன.

சமுதாயத் துறையில் புதுக் காலனியாதிக்க முறை தேசீய, அதிகாரவர்க்க பூர்ஷ்வாக்களின் குறித்த பகுதியின ருடன் ஒப்பந்தமும் கூட்டும் செய்துகொள்வதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது. குறுகிய வர்க்க, தன்னல நோக்கங் களுக்காகவும் பொது மக்களின் அரசியல் விழிப்பினுல் அச்சம் கொண்டும் இந்தப் பகுதியினர் ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்துகொள்ள இசைகிருர்கள்.

கொள்கைவாதத் துறையில் புதுக் காலனியாதிக்க முறை கம்யூனிஸ எதிர்ப்புடனும் தேசீயவாதப் பிரச்சினையை வைத்துக் குதர்க்கம் செய்வதுடனும் பிரிக்கமுடியாதபடி தொடர்பு கொண்டிருக்கிறது. முதலாளித்துவ வாழ்க்கை முறையையும்''மேற்கத்திய ஜனநாயகத்தையும்'' ஆதரித்துப் பிரசாரம் செய்வது, விடுதலை அடைந்த நாடுகள் ஏகாதி பத்திய வல்லரசுகளுடன் ஒத்துழைப்பதில் உள்ள ''அனு கூலத்தைப்'' புகழ்ந்து பாராட்டுவது, இந்த நாடுகளின்''ஆகச் சிறந்த'' சமுதாய - பொருளாதார வளர்ச்சி குறித்து பூர்ஷ்வாப் பிரசாரகர்களாலும் விஞ்ஞானிகளாலும் புனையப் பட்ட ''மாதிரித் திட்டங்களையும்'' ''சித்தாந்தங்களையும்'' இவற்றின்மேல் சுமத்துவது முதலியவற்றைப் புதுக் காலனி யாதிக்க முறை கருவிகளாகக் கொள்கிறது.

ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கும் பொருளாதாரத் துறையில் பின்தங்கிய ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் இடையே சமத்துவமற்ற உறவுகளை நிலையாக வைத்திருப்பதும் இந்த நாடுகளை ஏகாதிபத்திய வல்லரசு கள் தொடர்ந்து சுரண்டுவதற்கு வகை செய்வதுமே காலனி யாதிக்க முறையின் முதன்மையான, அடிப்படையான சாராம்சம் ஆகும். இதே சமயத்தில் இந்த நாடுகளை அடிப் படுத்துவதற்கு உரிய வடிவங்களிலும் வழிகளிலும் பெருத்த

மாறுதல்கள் செய்வது புதுக் காலனியாதிக்க முறைக்குத் தவிர்க்க முடியாத கட்டாயம் ஆகியிருக்கிறது. இவற்றை அதிகச் சிக்கலும் வளைவு நெளிவும் உள்ளவை ஆக்கி, இவற்றின் எதார்த்தத் தன்மையை மறைப்பது அவசியம் ஆகியிருக்கிறது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சிச் செயல் திட்டத்தில் அழுத்திக் கூறப்பட்டிருப்பது போல, ''மக்களைக் காலனியாதிக்க முறையில் சுரண்டுவதைப் புதிய வழிகளிலும் புதிய வடிவங்களிலும் நிலையாக வைத்திருக்க ஏகாதிபத்தியவாதிகள் முயல்கிறார்கள்.''[11]

பழைய காலனியாதிக்க முறையின் எஞ்சியுள்ள அரசியல், பொருளாதாரப் பண்புகள் எல்லாவற்றுக்கும் இயல்பான வாரிசாகவே புதுக் காலனியாதிக்க முறை செயல்படுகிறது. ஆனால் இந்தப் பண்புகளைத் தன் தேவைகளுக்கு ஏற்ப அது மாற்றி அமைத்துக் கொள்கிறது. வழக்கமான காலனியாதிக்க முறைக்கு மிகவும் உவப்பான வழி ஆகிய இராணுவ பலாத்கார முறையையும் அது முழுமையாகக் கைவிட்டு விடவில்லை. வியத்நாமில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆக்கிரமிப்பு, அமெரிக்கக் கடற்படைத் துருப்புக்கள் டொமினிக்கன் குடியரசில் இறக்கப்பட்டது, எகிப்தின்மீது ஆங்கில, பிரெஞ்சு, இஸ்ரேல் படையெடுப்பு, காங்கோ(கின்ஷாஸா)வில் ஆங்கில, அமெரிக்க, பெல்ஜியத் தலையீடு ஆகியவற்றையும் இன்னும் பற்பல நிகழ்ச்சி விவரங்களையும் நினைவுபடுத்திக் கொண்டாலே போதும், இந்த விஷயத்தில் சிறிதளவும் சந்தேகம் எஞ்சி இராது. ஆயினும் இராணுவக் குண்டாந்தடி இப்போது காலனியாதிக்க முறையின் பிரதான ஆயுதமாகப் பயன்படுவது இல்லை. அதைப் பிரயோகிப்பதற்கான களமும் மிக மிகக் குறுகிவிட்டது.

இன்னொரு விஷயமும் இவ்வளவே முக்கியமானது. ஸாலாஜாரின் போர்ச்சுகலையும் தென்னாப்பிரிக்க, தென் ரொடீசிய இனக் காழ்ப்பாளர்களையும் விட்டு விட்டால் இராணுவ பலாத்காரம் இப்போது கையாளப்படுவது நேரடியான அரசியல் ஆதிக்கத்தை நிலைநிறுத்தவோ சுமத்தவோ அல்ல, புதுக்காலனியாதிக்க முடிவுகளுக்கு ஏற்ற நிலைமைகளை உருவாக்கவும் நிலைப்படுத்தவுமே— அதுவும் இந்த நோக்கத்தை வேறு வழிகளில் நிறைவேற்றிக் கொள்வது முற்றிலும் கைகூடாததாகவும் அசாத்தியமாகவும் இருக்கும் சந்தர்ப்பங்களில் மட்டுமே. காலனியாட்சி

அரசாங்கங்கள் நிலவிய காலத்தில் நடந்த பல போர்கள் கூட, உதாரணமாக கென்யா, மலேயா மக்களுக்கு எதிராக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நடத்திய போர்கள், ஏடன், அராபிய தீபகற்பம் இவற்றின் தேசபக்தர்களுக்கு எதிராக நடத்தப் பட்டு அண்மையில் அபகீர்த்தியுடன் முடிந்த இராணுவ நடவடிக்கைகள் ஆகியவைகூட, போதிய அவகாசம் பெறு வதையும் சம்பந்தப்பட்ட நாடுகளில் சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டபின், முன்னாள் காலனியாட்சியாளர்களுக்குச் சாதகமான திசையில் அவற்றின் வளர்ச்சியை ஓரளவு உத்தரவாதப்படுத்தும் அரசியல் அமைப்பை நிறுவுவதற்கு வாய்ப்பான முதனிலைகளை ஏற்படுத்துவதையுமே பெருமளவு தங்கள் நோக்கமாகக் கொண்டிருந்தன.

## புதுக் காலனியாதிக்க முறையின் பொருளாதார, சமுதாயப் போர்த்தந்திரம்

பொருளாதாரச் செயற்களம் புதுக் காலனியாதிக்க முறைக்குத் தனிப்பட்ட முக்கியத்துவம் கொண்டது. நேரடியான அரசியல் அடிப்படுத்தல் முறைக்கு எதார்த்தத்தில் முடிவு கட்டப்பட்டுவிட்டது. அதோடு கூடவே பொருளாதாரத் தொடர்பற்ற எல்லாவித, அல்லது அனேகமாக எல்லாவித நிர்ப்பந்தங்களும் மொத்தத்தில் ஒழிந்துவிட்டன. ஆயினும் காலனியாதிக்க முறையின் பொருளாதார அமைப்பு கணிசமான அளவு அப்படியே எஞ்சியிருக்கிறது. ஏகாதிபத்தியவாதிகள் முன்னுள் காலனிகளையும் அரைக் காலனிகளையும் சுரண்டுவதற்கு ஏற்ற முக்கிய அடிப்படை இது. அதே சமயம் இது ஒரு நெம்புகோலும் ஆகும். இதன் உதவியால் ஏகாதிபத்தியவாதிகள் விடுதலை பெற்ற நாடுகளின் பொருளாதார வாழ்க்கைமீது தங்கள் ஆதிக்கத்தையும் தங்கள் அரசியல் நிலைகளையும் ஸ்திரமாக வைத்திருக்க முயல்கிறார்கள். குறித்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சியையும் அரசியல் வளர்ச்சியையும் இயக்கி நடத்த அவர்கள் விரும்புகிறார்கள். பொருளாதாரம் இன்னொரு வகையிலும் புதுக் காலனியாதிக்கவாதிகளுக்கு முக்கியத்துவம் உள்ளது: தேசீய விடுதலைப் புரட்சியின் தற்போதையக் கட்டத்தில் எங்கே மிக முக்கியமான போர்கள் நடந்து கொண்டிருக்கின்றனவோ அந்த முனைமுகத்தில் இந்தப் புரட்சிக்குத் தோல்வி விளைக்க அவர்கள் பெரு முயற்சி செய்கிறார்கள்.

புதுக் காலனியாதிக்க முறைக்குப் பொருளாதாரம் எவ்வளவு பெருத்த முக்கியத்துவம் கொண்டிருக்கிறது என்பது பின்வரும் நிகழ்ச்சியிலிருந்தே தெரிகிறது: போருக்குப் பிந்தைய ஆண்டுகளில், காலனிப் பேரரசுகள் தகர்ந்து

சிதறிய காலகட்டத்தில், அனேகமாக எல்லா ஏகாதிபத்திய வல்லரசுகளும் முன்னுள் காலனிகள், அரைக் காலனிகளுடன் பொருளாதார உறவுகளில் தனிக் கவனம் செலுத்தும் விசேஷ அரசாங்க நிலையங்களையும் முழுவதும் அல்லது அம்சரீதியில் அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிறுவனங்களை யும் ஸ்தாபித்தன. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ''சர்வதேச அபிவிருத்தி நிர்வாக நிலையம்'', பிரிட்டனின் கடல்கடந்த பிரதேச அபிவிருத்தி அமைச்சரகமும் (இது 1968, அக்டோபர் வரை காமன்வெல்த் விவகார அமைச்சரகத்துடன் நிலவி வந்தது. பின்பு காமன்வெல்த் விவகார அமைச்சரகம் வெளி நாட்டு விவகார அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது) ''காமன்வெல்த் அபிவிருத்திக் கார்ப்பொரேஷனும்'', மேற்கு ஜெர்மனியின் பொருளாதார ஒத்துழைப்பு அமைச்சரகம், ஜப்பானின் ''பொருளாதார ஒத்துழைப்பு நிதி'' முதலியவை இவ்வகையானவையே.

அறுபதுக்களில் கூட்டுப் பொருளாதாரக் காலனி யாதிக்க முறையின் அரசுக் கருவிகள் சில அமைக்கப்பட்டன. அவற்றையும் மேற்குறித்த நிலையங்களுடன் சேர்த்துக்கொள் வது அவசியம். இவற்றில் ஒன்று ''பொருளாதார ஒத் துழைப்பு, அபிவிருத்தி நிறுவனம்''. அமெரிக்க ஐக்கிய நாடு கள், ஐரோப்பாவின் 17 முதலாளித்துவ நாடுகள், கானடா, துருக்கி, ஜப்பான் ஆகியவை தற்போது இதன் உறுப்பினர் கள். ''சர்வதேசப் புனர்நிர்மாண, அபிவிருத்தி பாங்கு'', ''சர்வதேச நிதிக் கார்ப்பொரேஷன்'', ''சர்வதேச அபி விருத்திச் சங்கம்'', வளர்ச்சி அடைந்துவரும் தனித்தனி நாடு களுக்கு ''உதவுவதற்கான'' பல்வேறு ''உதவிக் கழகங்கள்'' ஆகியவையும் இத்தகைய கருவிகளே.

பழைய காலனியாட்சி முறையுடன் ஒப்பிடும்போது புதுக் காலனியாதிக்க முறையின் பொருளாதாரப் போர்த் தந்திரத்திற்குக் குறித்த சில முக்கியமான புதிய அம்சங்களும் இயல்பானவை. முன்பு ஏகாதிபத்தியவாதிகள் ஆசிய, ஆப் பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் பொருளாதார அபி விருத்தியையும் தேசிய முதலாளித்துவத்தின் வளர்ச்சியையும் முழு பலத்துடன் தடைப்படுத்தி வந்தார்கள். காலனிகளது பொருளாதாரத்தின் மிகப் பின்தங்கிய நிலையையும், அவற்றில் முதலாளித்துவத்துக்கு முந்திய கால வடிவங்களின் ஆதிக்

கத்தையும் நிலையாக வைத்திருக்க அவர்கள் முயன்று வந்தார்கள். ஸ்தலத் தொழிலதிபர்கள் வெளிநாட்டு ஏகபோக நிறுவனங்களின் நாசகரமான போட்டிக்கு ஈடு கொடுப்பதுடன் காலனியாட்சி நிர்வாகத்தின் தடை நடவடிக்கைகளையும் எதிர்ப்பட வேண்டி இருந்தது.

தற்கால நிலைமைகளில் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளைத் தனது பொருளாதாரத் துணைப் பகுதிகளாக வைத்திருக்க இந்த அடிப்படையில் முயல்வது ஏகாதிபத்தியத்திற்கு இயலாது.

முதலாவதாக, விடுதலை பெற்ற நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தை வளரவிடாமல் நிறுத்திவைப்பது ஏகாதிபத்தியவாதிகளால் முடியாது. இந்த நாடுகளில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி புறநிலையாக இன்றியமையாதது. பின்தங்கிய நிலையை ஒழிக்க வேண்டும், பொருளாதார முன்னேற்றம் பெற வேண்டும் என்ற பேரார்வத்தின் ஆழ்ந்த அடிப்படையிலேயே விடுதலை பெற்ற பல நாடுகளின் தலைமையில் இப்போது இருக்கும் தேசீய பூர்ஷ்வாக்கள் உட்பட விரிவான சமூகச் சக்திகள் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தில் ஒன்றிணைந்தன. ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் அரசியல் வெற்றி இந்தத் திசையில் சாராம்சமான முற்போக்குக்கு வகை செய்யாமல் இருக்க முடியாது என்பது புரியக் கூடியதே. இந்த எதார்த்த நிலையைக் கணக்கில் எடுத்துக் கொள்வது ஏகாதிபத்தியவாதிகளுக்குத் தவிர்க்க இயலாதது ஆகிவிட்டது. ஏனெனில் காலனியாட்சி அரசுகளின் வீழ்ச்சி, தேசீய அரசுகளின் உதயம், இவற்றின் விளைவாக இந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை நேரடியாக, நிர்வாக நடவடிக்கைகள் வாயிலாகத் தடை செய்யும் வாய்ப்பு காலனியாதிக்கவாதிகளுக்கு இல்லாது போய்விட்டது.

புதுக் காலனியாதிக்கக் கொள்கையின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஏகாதிபத்தியவாதிகள் ஸ்தல பூர்ஷ்வாக்களுடன் நெருக்கமாக உறவு கொள்வதற்குப் பெருத்த முக்கியத்துவம்அளிக்கிறார்கள். விடுதலை பெற்ற நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தைக் கைவிடும்படி நிபந்தனை விதித்தால் ஸ்தல பூர்ஷ்வாக்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வது நடக்காது. இந்த நிபந்தனைகளுக்கு இணங்கத் தயாராய் இருக்கும் ஓரளவு செல்வாக்கு உள்ள வட்டாரங்

களை பூர்ஷ்வாக்களுக்கு இடையே தேடிப்பிடிப்பது ஏகாதிபத்தியவாதிகளுக்கு முடியவில்லை.

தவிரவும் குறித்த வரம்புகளுக்குள் முன்னாள் காலனிகள், அரைக் காலனிகளின் பொருளாதார வளர்ச்சியில் ஏகாதிபத்தியவாதிகள் குறித்த அர்த்தத்தில் அக்கறை கொண்டிருக்கிறார்கள். இந்த நாடுகளை உலக முதலாளித்துவ ஆதிக்க வரம்புக்குள் வைத்திருக்கவும் முழுமையான தேசீய விடுதலைக்கும் இறுதியில் சோஷலிஸத்துக்கும் இட்டுச் செல்லும் முற்போக்கு வளர்ச்சிப் பாதையை அவை மேற்கொள்ளாதவாறு தடுக்கவும் அவர்கள் பெரு முயற்சி செய்கிறார்கள். எனவே, இந்த நாடுகளின் பொருளாதாரத்திலும் நாட்டு மக்களின் வாழ்க்கையிலும் முதலாளித்துவ உறவுகளே அடிப்படையாக அமையும்படி செய்ய ஏகாதிபத்தியவாதிகள் இப்போது முயல்கிறார்கள். இதன் விளைவாக, குறித்த அளவு பொருளாதார முன்னேற்றம் அவசியமாக ஏற்படுகிறது. முடிவில், விடுதலை பெற்ற நாடுகளின் உள்நாட்டுச் சந்தைகள் பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ந்து இயல்பாகவே விரிவடைவதன் விளைவாகப் பெருத்த லாபங்கள் கிடைக்கும் என்று ஏகாதிபத்திய ஏகபோக நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன. இந்தச் சந்தைகளில் ஆதிக்க நிலையை, அல்லது குறைந்த பட்சம் மேல்நிலையைத் தம்வசம் வைத்திருக்கலாம் என்று ஏகபோக நிறுவனங்கள் நம்புகின்றன.

இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு, விடுதலை பெற்ற நாடுகளில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவது தவிர்க்க இயலாதது என்று புதுக் காலனியாதிக்கவாதிகள் உண்மையில் எண்ணுகிறார்கள். ஆனால் இந்த முன்னேற்றத்தை ஓரிடத்தில் நிலைப்படுத்த, வரம்புக்குள் குறுக்கி வைக்க ஏகாதிபத்தியவாதிகள் முயல்கிறார்கள். இதைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும், இன்னும் முக்கியமாக, அதற்கு முதலாளித்துவ வடிவங்களைத் தரவும் அவர்கள் முயற்சி செய்கிறார்கள். விடுதலை பெற்ற நாடுகள் முதலாளித்துவப் பாதையை மேற்கொள்ளுமாறு கட்டாயப்படுத்தும் போக்கு புதுக் காலனியாதிக்க முறையின் எல்லாத் திட்டங்களுக்கும், சிறப்பாகப் பொருளாதாரத் திட்டங்களுக்கு அடிப்படை ஆகும்.

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு முதலாளித்துவத்தை ''ஊசிபோடுவது'' என்பது ''மூன்றாவது உலகில்''

ஏகாதிபத்தியத்தின் போர்த்தந்திர நோக்கம் என்ற வகையில் ஏகாதிபத்திய ஆளும் வட்டாரங்களின் அதிகாரபூர்வமும் அரை அதிகாரபூர்வமும் ஆன பல தஸ்தாவேஜுகளில் போதியஅளவு தெளிவாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. எடுத்துக் காட்டாக, குடியரசுத் தலைவர் கென்னடியின் கட்டளைப்படி நிறுவப்பட்ட கிளே கமிஷனின் அறிக்கையிலும் இவ்விஷயம் இவ்வாறே குறிக்கப்பட்டிருக்கிறது. ''மூன்றாவது உலகில்'' அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கொள்கை அனைத்திற்கும், அமெரிக்க ''உதவிக்கும்'' இந்த நோக்கமே அடிப்படை என்று அதில் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது[1]. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுடன் ஒத்துழைப்பு பற்றிய பிரெஞ்சு சர்க்காரின் அதிகாரபூர்வமான தஸ்தாவேஜிலும் இதே அணுகுமுறையை நாம் எதிர்ப்படுகிறோம். இந்த நாடுகளில் ''அட்லாண்டிக் பொருளாதாரத்தின் கூட்டு வளர்ச்சி நிகழ் முறையை'' அமல்படுத்தும் நோக்கத்துடன் இவற்றில் ''பொருளாதார (அதாவது முதலாளித்துவ—க.பு.) ஒழுங்கை ஏற்படுத்தும்'' குறிக்கோள்மீது கவனத்தை மையப்படுத்துவதன் இன்றியமையாமை அதில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது[2].

முன்னாள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளுக்கு ஊக்கம் அளிப்பது இந்த நாடுகளை உலக முதலாளித்துவ அமைப்புக்குள் வைத்திருக்கும் நோக்கத்திற்குத் துணை புரிவதோடு காலனியாதிக்க முறையைக் காக்கும் ஒரு வடிவமாகவும் தொண்டாற்றுகிறது. ஆனால் காலனியாட்சி நுகத்திலிருந்து விடுபட்டுவிட்ட அநேக நாடுகளின் அனுபவம் காட்டுவதுபோல, இந்த நாடுகளை ஏகாதிபத்திய வல்லரசுகளிலிருந்து வேறுபடுத்தும் பொருளாதார வளர்ச்சித் தரத்தில் உள்ள பெருத்த ஏற்றத்தாழ்வை வரலாற்று நோக்கில் குறுகிய கால அளவில் அகற்றுவதற்கான வாய்ப்பை முதலாளித்துவப் பாதை அளிப்பதில்லை. உண்மையிலோ, முன்னாள் காலனிகள், அரைக் காலனிகளின் பொருளாதாரப் பின்தங்கிய நிலைதான் இந்த நாடுகளின் சமத்துவம் அற்ற நிலைமைக்கும் இவை ஏகாதிபத்தியத்தால் சுரண்டப்படுவதற்கும் அடிப்படைக் காரணமாக விளங்குகிறது.

தவிரவும், விதிவிலக்கான வழக்குகளை (பூகோள நிலை,

இயற்கை வளங்கள், வேறு உள் நிலைமைகள் ஆகிய அனுகூலங்களின் சிறப்பான சேர்க்கை, முதலாளித்துவத்தின் ''காட்சி மேடையாக'' விளங்கும் நிலை முதலியன) விட்டுவிட்டுப் பார்த்தால், மேற்கு நாடுகள் பின்பற்றிய முதலாளித்துவப் பாதையின் எல்லைகளுக்குள் இந்த வாய்ப்பு மொத்தத்தில் மேலும் மேலும் பெற முடியாதது ஆகிக்கொண்டு போகிறது. முதலாளித்துவ உறவுகள் நடப்பில் இருக்கும் இளம் அரசுகள், ஒரு சில பொருளாதார முன்னேற்றங்கள் அடைந்திருப்பினுங்கூட, முதலாளித்துவ உலகின் முன்னணி நாடுகளிலிருந்து மேலும் மேலும் பின்தங்கும் எந்தப் போக்கு காலனியாட்சி, அரைக் காலனியாட்சிக் காலப்பகுதியில் ஆதிக்கம் வகித்ததோ அந்தப் போக்கை நிறுத்த வல்லமை அற்றவையாக இருக்கின்றன. இந்தியாவில் நபர்வாரிச் சராசரி ஆண்டு வருமானம் 1948-1949ல் பிரிட்டனைக் காட்டிலும் 14 மடங்கு குறைவாய் இருந்தது. 1959-1960ல், இந்தப் பத்து ஆண்டுகளில் இந்தியாவின் தேசிய வருமானம் 18 சதவிகிதம் அதிகரித்தது எனினும் அதன் நபர்வாரிச் சராசரி ஆண்டு வருமானம் பிரிட்டனைக் காட்டிலும் 15.5 மடங்கு குறைந்துவிட்டது. இவ்வளவிற்கும் பிரிட்டன் ஒப்புநோக்கில் மிக விரைந்த பொருளாதார வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில் ஒன்று அல்ல. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் நபர்வாரி வருமானத்தில் ஆண்டுதோறும் அதிகரிப்பு 2 டாலர் ஆகும். ஏகாதிபத்திய வல்லரசுகளிலோ, இது 60 டாலர் ஆகும்.

பொருளாதாரத்தின் உலக முதலாளித்துவ அமைப்பு முன்னாள் காலனிகள், அரைக் காலனிகளின் பொருளாதாரச் சார்பு நிலையை மறுபடி ஏற்படுத்துகிறது, பல நூறு கோடிக் கப்பத்தை அவற்றிலிருந்து வெவ்வேறு வழிகளில் கசக்கிப் பிழிந்து எடுத்துச் செல்கிறது, உள்நாட்டு பூர்ஷ்வாக்களுக்கு மூலதனச் சேர்க்கைக்கான, ஏற்கனவே வளங்குன்றிய ஊற்றுக் கண்களையும் தூர்த்துவிடுகிறது. அதே சமயம் மரபுப்படி முதலாளித்துவத்துக்குத் தொடக்க மூலதனக் குவிவுக்கு உரிய போர்களும் நஷ்ட ஈடுகளும் காலனிச் சூறையாடல்களும் போன்ற வெளி வாய்க்கால்கள் விடுதலை அடைந்த நாடுகளுக்கு அடைபட்டுள்ளன. முதலாளித்துவ நிலைமைகளில் பல நோக்குகளில் சிக்கல் ஏற்படுத்தும் காரணியாக விளங்குவது விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சி ஆகும்.

முன்னணி முதலாளித்துவ அரசுகளுக்கே இந்தப் புரட்சியின் பலன்கள் முதன்மையாகக் கிடைக்கின்றன.

முன்பு அடிமைப்பட்டிருந்த நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சி இன்னொரு காரணத்தாலும் ஆழ்ந்த இடர்களை எதிர்ப்படுகிறது. முதலாளித்துவம் செயல்படுத்தப்படுகையில் ஏற்படும் வழக்கமான சிக்கல்களும் முரண்பாடுகளும், அதன் உள்ளார்ந்த கேடுகளும் இந்த நாடுகளின் நிலைமைகளில் காலனித் தன்மை கொண்ட சமுதாய-பொருளாதார அடிநிலத்தின் விளைவாக மேலும் தீவிரம் அடைகின்றன. இந்த நிலத்தில் முதலாளித்துவத்தின் பெரும்பகுதி பின்தங்கிய வடிவங்களே தளிர்க்கின்றன. அடிக்கடி இவை நிலப்பிரபுத்துவக் கால, நிலப்பிரபுத்துவத்துக்கு முந்திய கால உறவுகள் முதலியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றன. உள்நாட்டு மூலதனம் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்த்தவாறு வர்த்தகம், வர்த்தகச் சூதாட்டம், வட்டிக்குக் கடன் கொடுக்கும் தொழில் ஆகியவற்றின் கட்டத்தில் வெகுகாலம் ''சிக்கிக் கிடக்கும்'' வெளிப்படையான போக்கைக் காட்டுகிறது. வெளி நாட்டு ஏகபோகங்களின்பால் பலவீனத்தையும், சில வேளைகளில் அவற்றுக்கு ஏவல் செய்யும் தன்மையையும்கூட அது வெளிக்காட்டுகிறது. எல்லாத் தேசீய வளங்களும் ஒன்று சேர்க்கப்படுவதும் திட்டப்படி பயன்படுத்தப்படுவதும், மக்கள் அனைவரது சமுதாய ஆற்றலும் ஒருங்கு திரட்டப்படுவதும் விரைந்த பொருளாதார அபிவிருத்திக்கும் புனர் நிர்மாணத்துக்கும் முற்றிலும் இன்றியமையாதவை. முன்னாள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் இதற்கு வகை செய்வது தற்கால முதலாளித்துவத்தினால் ஆகக் கூடியது அல்ல.

விடுதலை அடைந்த நாடுகளின் பொருளாதார வாழ்வில் வளர்ச்சிபெற்ற முதலாளித்துவத்தின் அம்சங்களை ''ஏற்றுமதி'' செய்வதன் வாயிலாகவும் (இவை அன்னிய ஏகபோக நிறுவனங்களால் நேரே கொண்டுவரப்படுகின்றன) உள்நாட்டில் தனியுடைமைப் போக்குகளையும் முதலாளித்துவப் போக்குகளையும் தூண்டி ஊக்குவதன் வாயிலாகவும் இவற்றின் முதலாளித்துவ வளர்ச்சியை ஏகாதிபத்தியவாதிகள் முடுக்கி விடுகிறார்கள். எடுத்துக்காட்டாக, 1957 முதல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அரசாங்கப் ''பொருளாதார அபிவிருத்தி

நிதி'' நிலவி வருகிறது. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் உள்ள தனித் தொழிலதிபர்களுக்குச் சாதகமான நிபந்தனை களின் பேரில் இது கடன்கள் வழங்குகிறது. வேறு சில ஏகாதி பத்திய வல்லரசுகளும் இத்தகைய நிதிகளை ஏற்படுத்தி யுள்ளன. ''சர்வதேசப் புனர்நிர்மாண, அபிவிருத்தி பாங்கும்'' 1956ல் நிறுவப்பட்ட அதன் இணைப்பான ''சர்வதேச நிதிக் கார்ப்பொரேஷனும்'' விடுதலை பெற்ற நாடுகளில் தனியார் துறைக்கு நிதியுதவி அளிக்கின்றன. ''வளர்ச்சி குன்றிய நாடு களில் உற்பத்திகரமான தனியார் திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பதில் தனிக் கவனம் செலுத்துவதற்காக'' இந்தக் கார்ப் பொரேஷன் நிறுவப்பட்டது என்று ''சர்வதேச பாங்கின்'' முன்னாள் டைரெக்டர் ஜே. வூட்ஸ் கூறினார். ''சர்வதேச நிதிக் கார்ப்பொரேஷனின்'' அறிக்கை 1967 செப்டெம்பரில் வெளியிடப்பட்டது. 1966—1967ல் கார்ப்பொரேஷனின் செயல்கள் பற்றிய பார்வையீடு இதில் தரப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் இவை முன் எப்பொழுதையும்விட அதிகத் தொகையை எட்டிவிட்டதாக அதில் குறிக்கப் பட்டிருக்கிறது. ''வளர்ச்சி அடையும் பொருளாதாரத்தின் தனியார் துறையை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட 'சர்வதேச நிதிக் கார்ப்பொரேஷனின்' செயல் களது பிரதானக் களங்களாக'' லத்தீன் அமெரிக்காவும் ஆசியாவும் மத்திய கிழக்கும் ஆப்பிரிக்காவும் ''தொடர்ந்து நிலவி வருகின்றன'' என்று அந்த அறிக்கை கூறுகிறது.

விடுதலை அடைந்த நாடுகளின் தவிர்க்க முடியாத பொரு ளாதார வளர்ச்சி முதலாளித்துவ வடிவங்களிலேயே நிகழ வேண்டும், அதே சமயம், முதலாளித்துவ அடிப்படை யிலேயே கூட ஏகாதிபத்திய ஏகபோக நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள வரம்புகளைக் கடந்துவிடக் கூடாது என்பதற்காக அனேக நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

முதலாவதாக, விடுதலை பெற்ற நாடுகள் தனியார் துறையைச் சேர்ந்த ''சுதந்திரத்'' தொழில் முயற்சிப் பாதை யிலேயே செல்லுமாறு செய்வதற்கு ஏகாதிபத்திய வாதிகள் தீவிரமாக முயல்கிறார்கள். இது புரியக்கூடியதே. ஏனெனில் இந்தப் பாதையில் (உள்நாட்டுத் தனியுடைமை மூலதனக் குவிவுக்கான ஊற்றுக்கண்கள் மிகமிகக் குறுகியவை

யாக இருப்பதன் காரணத்தினுல்தான் என்றுலும்) வெளி நாட்டு ஏகபோகங்கள் நேரடியாக, விரிவான பங்கு எடுத்துக் கொள்ள வாய்ப்புக்கள் இருக்கின்றன. விடுதலை பெற்ற நாடு களில் தேசிய மூலதனம் வழக்கமாகப் பலவீனமானது. விசேஷ ஆதரவு இன்றி வெளிநாட்டு டிரஸ்டுகளுடன் போதிய அளவு வெற்றிகரமாகப் போட்டியிடும் நிலைமையில் அது இல்லை. வெளிநாட்டு டிரஸ்டுகளோ விரிவான சர்வதேசத் தொடர்பு கள் கொண்டவை. வெகு காலமாகவே உருவாகியுள்ள உலக முதலாளித்துவ உழைப்புப் பிரிவினையைச் சார்ந்திருப்பவை. தவிர இந்த நாடுகளில் வலிமை மிக்க பொருளாதார நிலைகளை அவை பெற்றுள்ளன. விளைவாக விடுதலை அடைந்த நாடுகளின் பொருளாதார வருங்காலம் ஏகாதிபத்திய ஏகபோக நிறுவனங்களின் ஆதிக்கத்தில் மாட்டிக்கொள்ளக் கூடும்.

முன்னுள் காலனிகளிலும் சார்பு நாடுகளிலும் உள்ள தனியார் மூலதனத்திற்கு ஆதரவாக மேற்கு வல்லரசுகளின் அதிகாரிகள் ''ஆக உயர்ந்த மட்டத்தில்'' செய்யும் பகிரங்க அறிக்கைகளில் இந்த நிலை சில வேளைகளில் வெளியிடப்படு கிறது. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜான்ஸனும் ஜெர் மன் கூட்டுக் குடியரசு சான்ஸலர் எர்ஹார்டும் 1964 ஜூனில் சந்தித்தது பற்றிய கூட்டறிக்கையில் பின்வருமாறு கூறப் பட்டது: ''இந்த நிகழ்முறையில் (வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதார உயர்வு— க.பு.) வளர்ச்சி அடைந்து வரும் பொருளாதாரத்தின் தனியார் துறையை வலுப்படுத் துவது முக்கியப் பங்கு ஆற்றக் கூடும் என்ற கருத்தைக் குடியரசுத் தலைவரும் சான்ஸலரும் கொண்டிருக்கிறுர்கள். இந்தக் குறிக்கோளை அடைவதற்கு அரசினர் உதவியும் வெளி நாட்டுத் தனியார் முதலீடும் இன்றியமையாதவை என அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.'' இதற்குச் சில மாதங் களுக்குப் பிறகு ஜான்ஸன் இன்னும் திட்டவட்டமாகக் கருத்து வெளியிட்டார். ''தனியார் மூலதனம் (உள்நாட்டு மூலதனமும் அன்னிய மூலதனமும் — க.பு.) வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளுக்கு வேலையின் மிகப் பெரிய பங்கை நிறைவேற்ற வேண்டும்'' என்று அவர் கூறினுர்.[3]

கட்டற்ற பொருளாதார வளர்ச்சிக்கும் அன்னிய ஏக போக நிறுவனங்களுக்கு எதிரான போராட்டத்திற்கும் மிகப்

பயன்பாடுள்ள கருவியான அரசினர் துறை கோட்பாட்டை வில் ஏகாதிபத்திய வட்டாரங்களின் கண்டனத்தையும் சில வேளைகளில் நேரடியான பகைமையையும் எதிர்ப்படுகிறது. பொக்காரோவில் பெரிய அரசினர் உலோகத் தொழிற்சாலை நிறுவுவதற்கு இந்தியாவுக்கு உதவி அளிக்க அமெரிக்க ஐக்கிய நாடுகள் மறுத்தது இந்தக் கொள்கையின் வெளிப்பாடு களில் ஒன்ருகும். இந்தியாவின் பொருளாதாரத்தினது தன்மையை மாற்றும் நோக்கத்துடன் மேற்கு நாடுகள் இந்தியா மீது ''அரசியல் நிர்ப்பந்தம்'' செலுத்துகின்றன என்று இதன் தொடர்பாகக் குறிப்பிட்டது இந்தியச் செய்தித்தாள் பேட்ரியாட். பிரான்சு கணிசமான அளவு தனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட ''ஆப்பிரிக்க-மலாகாசியப் பொது நிறுவனத்தின்'' வாயிலாக, பொருளாதார வாழ்வில் அரசின் ''மட்டுமீறிய'' தலையீட்டுக்கு எதிரான போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. தனியார் மூலதனம் இல்லாமை காரணமாக ஒரு காலத்தில் அரசு மூலதனம் முதலீடு செய்யப்பட்ட துறைகளில் தனியார் தொழில் முதலீடுகள் படிப்படியாக அதன் இடத்தில் புகுத்தப்பட வேண்டும் என்று அது வற்புறுத்துகிறது.

விடுதலை பெற்ற நாடுகளின் பொருளாதார வாழ்வில் அரசினர் முன்முயற்சிகளுக்கு ஏகாதிபத்தியவாதிகள் ஆதரவு அளிப்பதும் அரசினர் துறைத் தொழில் நிலையங்களுக்குக் கடன்கள் வழங்குவதும் அண்மை ஆண்டுகளில் அடிக்கடி நிகழ்கின்றன. விடுதலை பெற்ற நாடுகளில் அரசினர் துறையின் வளர்ச்சி ''தவிர்க்க முடியாதது'' என்று சில ஏகாதிபத்திய அரசியல்வாதிகள் கூறி வருகிருர்கள். ஆயினும் இவை எல்லாம் நிலையில் கோட்பாட்டு ரீதியான மாறுதல்கள் எவற்றையும் சிறிதும் குறிக்கவில்லை. மாருக, ஒரு வகையில் இவை இந்த நிலையை உறுதிப்படுத்தவே செய்கின்றன. ஏகாதிபத்தியப் போர்த்தந்திர நிபுணர்களின் கருத்துப்படி, தனியுடைமை முதலீட்டாளர்கள் தக்க மாற்ருக முன்வராத சந்தர்ப்பங்களில், அல்லது தனியார் மூலதனத்துக்குப் பெரும்பாலும் குறைந்த லாபமே தருபவையும் ஆனல் அதன் செயல்பாட்டிற்கு முக்கியமானவையும் ஆகிய போக்குவரத்து, தகவல் தொடர்பு, சமுதாய சேவைகள் முதலிய துறைகளில் முதலீடு செய்வது மிக அவசியமாய் இருக்கும் சந்தர்ப்பங்களில், முதலாளித்துவ உறவுகளுக்கு ஒரு வகையில் பிரசவத்

தாதியாக அரசு பணியாற்ற வேண்டும். வேறு விதத்தில் சொன்னுல், பொருளாதார நிர்மாணத்தின் ஆரம்பக் கட்டத்தில், தனியார் மூலதனம் இன்னும் வலிமைபெற்று உறுதிப்படாத நிலையில் நிகழும் அரசு-முதலாளித்துவ வடிவத்தின் தாற்காலிக வளர்ச்சியே—இந்த நிகழ்முறைக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்ட வளர்ச்சியே—இங்கு குறிக்கப்படுகிறது. இதோடு இன்னென்றையும் மறந்துவிடக் கூடாது: புதுக் காலனியாதிக்க முறையின் மிக முக்கிய நோக்கம், அதாவது, முதலாளித்துவ உறவுகளைத் தூண்டி ஊக்குவது இந்தச் சந்தர்ப்பத்திலும்''மறந்துவிடப்படுவதில்லை''. மாருக அது — தற்போதைக்கு அரசு முதலாளித்துவத்தின் வடிவில் தான் என்ருலும்—நிறைவேற்றிக் கொள்ளப்படுகிறது. மேலும், முன்னுள் காலனிகள், அரைக் காலனிகளின் பொருளாதார வாழ்வில் அரசின் இவ்வகையான தலையீடும் அரசின் பொருளாதார முன்முயற்சியும் இந்நாடுகளின் சமூகப் பிரச்சினைகளின் தீர்வுக்கு பூர்ஷ்வாச் சீர்திருத்தவாத அணுகுமுறையை மேற்கொள்ளத் தேவையான பொருளாதார அடித்தளம் நிறுவுவதற்கு முக்கியமான, சில சந்தர்ப்பங்களில் இன்றியமையாத அம்சங்கள் ஆகிவிட்டன.

சிலி நாட்டின் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். சிலி அரசாங்கம் நாடு அனைத்துக்கும் முக்கியத்துவம் உள்ள தொழில் நிலையங்களைச் ''சிலிமயமாக்கும்'' (அதாவது பாதி அல்லது அதற்கும் மேற்பட்ட பங்குகளை அரசு வாங்கிக் கொள்ளும்) கொள்கையைச் செயல்படுத்தி வருகிறது. இது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கம்பெனிகளையும் பாதிக்கிறது. ஆயினும், ''தனியார் தொழில் முயற்சித் துறையில் அரசின் தலையீடு நிகழ்வதை அவ்வளவு சந்தேகக் கண்ணுடன் பார்க்கும்'' அமெரிக்க ஐக்கிய நாடுகள் சிலி அரசாங்கத்தின் கொள்கையைப் பெரிதும் ஆமோதிக்கும் வகையில் நடந்துகொள்கிறது என்று மேற்கு நாடுகளின் அவதானிக்கையாளர்கள் பல முறை குறிப்பிட்டுள்ளார்கள். அவதானிக்கையாளர்களின் ஒன்றித்த கருத்துப்படி அமெரிக்கத் தலைவர்கள் இத்தகைய போக்கைக் கடைப்பிடித்ததற்குக் காரணம் சிலி நாட்டின் ப்ரேய் அரசாங்கம் நாட்டை பூர்ஷ்வாச் சீர்திருத்த முறையில் மாற்றி அமைக்கவும் இவ்வாறு புரட்சி அதிர்ச்சி

கள் ஏற்படாதவாறு தடுக்கவும் உரிய வழியைக் கடைப்பிடித்ததுதான்.

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் அரசினர் துறையின்பால் புதுக் காலனியாதிக்கவாதிகளின் போக்கு அனேகச் சந்தர்ப்பங்களில் மாறியிருப்பது புதுக் காலனியாதிக்கக் கொள்கையின் குறித்த அளவு வளைந்துகொடுக்கும் தன்மையின் வெளிப்பாடும் ஆகும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தக் கொள்கையின் பிரதான உள்ளடக்கத்துக்கும் நோக்கங்களுக்கும் கேடின்றி அனுமதிக்கக்கூடிய எல்லைகளுக்குள் இது விடுதலை பெற்ற நாடுகளில் வெகுவாகப் பரவியுள்ள மனப்போக்குக்கு இசைய வளைந்துகொடுக்கிறது.

இரண்டாவதாக, காலனியாதிக்கவாதிகள், விடுதலை அடைந்த நாடுகளில் ஏகபோக நிறுவனங்களின் தனியார் மூலதனம் புகுவதற்கான வழிகளைப் பாதுகாக்கவும் விரிவுபடுத்தவும் அரசு நெம்புகோல்களின் வலிமை முழுவதையும் பிரயோகித்து முயன்று வருகிறார்கள். தனியார் மூலதனத்துக்குச் செயல் சுதந்திரத்தைப் பெற அவர்கள் தீவிர முயற்சி செய்கிறார்கள். இந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சியினது பொதுப் போக்கின்மீதும் முக்கிய அம்சங்கள்மீதும் வெளிநாட்டு டிரஸ்டுகள் ஆதிக்கம் செலுத்த வகை செய்வதே இதன் நோக்கம்.

''உதவி'' என்ற வழியில் முன்னாள் காலனிகளுக்கும் அரைக் காலனிகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும் அரசு மூலதனத்தின் முன் ஏகாதிபத்திய நாடுகளின் தனியார் முதலீடுகளின் பெருக்கு இப்போது கணிசமாக விட்டுக்கொடுத்து வருகிறது என்பது காட்டப்படும். எனினும் தனியார் ஏகாதிபத்திய மூலதனம் புதுக் காலனியாதிக்க முறையின் நோக்கில் தனிப்பட்ட முக்கியத்துவமும் தனிப்பட்ட அனுகூல நிலையும் கொண்டிருக்கிறது. ஏகபோக நிறுவனங்களின் பொருளாயத ஆதாயங்களைப்பற்றியோ கூறவே வேண்டியதில்லை. விடுதலை அடைந்த நாடுகளின் பொருளாதார, அரசியல் வாழ்வில் ஆழமாகப் புகவும், புதுக் காலனியாதிக்கவாதிகளுக்கு முக்கியமான சமூக வட்டாரங்களுடன் மிகுந்த நேரடியான தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளவும், பொருத்தமான கொள்கைவாதச் செல்வாக்கு செலுத்தவும் தனியார் ஏகாதிபத்திய மூலதனம் வல்லது. பிரெஞ்சு அரசாங்கத்தின்

அதிகாரபூர்வமான தஸ்தாவேஜில் கூறப்பட்டிருப்பது போல, வளர்ச்சி குன்றிய ஒரு நாட்டில் வெளிநாட்டுத் தொழில் நிலையம் ''சமுதாய வாழ்வின் மையம், எங்கும் நிறைந்தது, எல்லாம் வல்லது'' ஆகிவிடுகிறது.[4]

முன்னாள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் வெளிநாட்டு முதலீடுகளுக்குச் ''சாதகமான சூழ்நிலையை'' ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஏகாதிபத்திய அரசாங்கங்களும் ஏகபோக நிறுவனங்களும் எல்லா வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுகின்றன. உதவி பெறும் இளம் தேசீய அரசுகள்மீது வெளிநாட்டுக் கம்பெனிகளின் நடவடிக்கைகளுக்கு ''உத்தரவாதங்கள்'' அளிக்குமாறும் அவற்றின் முதலீடுகளைப் ''பாதுகாக்குமாறும்'' நிபந்தனைகள் கொண்ட தனி ஒப்பந்தங்கள் வலுக்கட்டாயமாகச் சுமத்தப்படுகின்றன.

தனியார் முதலீடுகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் ஒப்பந்தங்களை அமெரிக்க ஐக்கிய நாடுகள் அண்மை ஆண்டுகளில் வளர்ச்சி அடைந்து வரும் 63 நாடுகள்மீது சுமத்தியிருக்கிறது. இந்த நாடுகளில் இவ்வாறு உத்தரவாதம் செய்யப்பட்டுள்ள முதலீடுகளின் மொத்தத் தொகை 1966ல் 200 கோடி டாலர்களை எட்டிவிட்டது. பிரான்சின் நிர்ப்பந்தம் காரணமாக ''ஆப்பிரிக்க-மலாகாசியப் பொது நிறுவனத்தைச்'' சேர்ந்த 18 நாடுகளில் முதலீடுகள் பற்றிய சட்டத் தொகுப்புகள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. வெளிநாட்டு (எதார்த்தத்தில் பிரதானமாக பிரெஞ்சு) கம்பெனிகளுக்கு அதிகப்படியான சட்ட, வரிச் சலுகைகளும் உத்தரவாதங்களும் இவற்றில் அடங்கியுள்ளன. அதோடு கூட இந்தப் பொது நிறுவனத்தின் உறுப்பினரவான அரசுகள் தனியார் முதலீடுகளுக்குப் பொருளாதார, அரசியல் ''ஆபத்து'' நேராதவாறு ''கூட்டு'' உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்ற முடிவு நிறுவனத்தின் அதிகார வரம்புகளுக்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

தேசீய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி, தேசீய உடைமை ஆக்கப்படும் அபாயம் முதலியவற்றால் தொழிலதிபர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சம் காரணமாக முன்னாள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் தனியார் மூலதனத்தின் பெருக்கு தீவிரமாகத் தடைப்பட்டிருக்கிறது. இத்தகைய முதலீடுகளை விஸ்தரிக்க ஊக்கம் அளிக்கும் நோக்கத்

துடன் ஏகாதிபத்திய அரசுகள் தாமே தனிப்பட்ட சலுகைகளையும் உத்தரவாதங்களையும் வழங்குகின்றன. ஜெர்மன் கூட்டுக் குடியரசின் அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் முதலீடு செய்வோருக்கு உத்தரவாதங்களின் வடிவில் ஆண்டு தோறும் பல நூறு கோடி மார்க்குகள் ஒதுக்கப்படுகின்றன. அமெரிக்க அரசாங்கமும் பொருளாதாரத் துறையில் பின் தங்கிய நாடுகளில் தொழில் நடத்தும் கார்ப்பொரேஷன்களுக்கு விசேஷச் சலுகைகள் ஏற்படுத்தியிருக்கிறது. அவற்றின் முதலீடுகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் தனி நிதியையும் அது அமைத்துள்ளது. ''அமெரிக்க அரசாங்கமும் 'சர்வ தேச அபிவிருத்தி நிர்வாக நிலையமும்' புதிய அரசுகளின் பொருளாதார வளர்ச்சியில் தனியார் தொழிலகங்கள் பங்கு ஆற்றுவதற்கு ஊக்கம் அளிக்கின்றன'' என்று நிர்வாக நிலையம் வெளியிட்டுள்ள அதிகாரபூர்வமான தஸ்தாவேஜில் அழுத்திக் கூறப்பட்டிருக்கிறது.[5]

ஏகாதிபத்திய நாடுகளின் அரசு மூலதனம் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் தொழில் நிலையங்கள் நிறுவுவதில் ஏகபோக நிறுவனங்களின் கூட்டாளியாக அடிக்கடி பங்காற்றுகிறது. ஆப்பிரிக்க நாடுகள் குறித்த சில உதாரணங்கள் மட்டும் இங்கே தரப்படுகின்றன.

காபோனில் மங்கனீஸ் சுரங்கங்களும் அதைத் தோண்டி எடுப்பதும் ''கோமிலோக்'' என்னும் தொழிலகத்தின் மேற்பார்வையில் உள்ளன. இதன் பங்குதாரர்கள் ஆவர்: பிரான்சின் கனிய புவியியல் தேட்டங்களுக்கான அரசாங்க இலாக்கா (22% பங்குகள்), பிரெஞ்சுத் தனியார் கம்பெனிகள்—''கம்பனீ எல் ஹதீத் தியூ மோக்தா'' (14%), ''ஸொஸைட்டே எக்ஸில்யேர்'' (15%), அமெரிக்காவின் ''யுனைட்டெட் ஸ்டேட்ஸ் ஸ்டீல் கார்ப்பொரேஷன்'' (49%). ஏகாதிபத்திய அரசாங்க மூலதனமும் தனியார் மூலதனமும் இதே நாட்டில் இரும்புக் கனியமும் (''ஸொஸைட்டே த மீன் த மெக்காம்போ'') யுரேனியமும் (''கம்பனீ த மீன் த யுரேனியம் த பிரான்ஸ்வீல்''), தான்ஜனியாவில் தங்கமும் (''தான்கோல்ட் மைனிங்'') மாரிட்டானியாவில் இரும்பும் (''மீபெர்மா'') இவ்வாறே வேறு பலவும் வெட்டி எடுப்பதில் கூட்டாகப் பங்காற்றுகின்றன.

அல்ஜீரியாவில் செயலாற்றிய பிரெஞ்சுப் பெட்ரோலிய

டிரஸ்டுகளின் சொத்துக்களில் 1964ம் ஆண்டில் இருந்த நிலவரப்படி பிரெஞ்சு அரசாங்கக் கம்பெனியான பெட்ரோலியத் தேட்ட இலாக்காவுக்குச் சொந்தமாய் இருந்தவை காரேப் கம்பெனியில் 14.4%, ''கம்பனீ எக்ஸ்ப்ளோரேஸியோன் பெட்ரோலேரில்'' 51.5%,''கம்பனீ த பெட்ரோல் பிரான்ஸ்-ஆப்ரிக்கில்'' 59.3%, ''பெட்ரோப்பார்'' கம்பெனியில் 70%, ''ப்ரேப்பா'' கம்பெனியில் 57.9%, ஸாப்ரேப் கம்பெனியில் 64.2%, ''ஸொஸைட்டே நாஸியொனுல் பெட்ரோலேர் த அக்விட்டேன்'' கம்பெனியில் 50.7%, ''எஸ். பி. ரெப்பால்'' கம்பெனியில் 40.5%, ''ஸொஸைட்டே பெட்ரோலேர் த வாலேன்ஸ்'' கம்பெனியில் 15% முதலியனவாம்.[6]

மூன்றுவதாக, வெளிநாட்டு ஏகபோக நிறுவனங்கள் உள்நாட்டு மூலதனத்துடன் முடிந்தவரை நெருக்கமாகத் தொடர்பு கொள்ளவும் கூட்டாளி உறவு வலைகளில் அதைச் சிக்கவைக்கவும் எல்லா வகை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுகின்றன. இந்த விதமாக உள்நாட்டு மூலதனத்தின் செயல் சுதந்திரத்தைப் பறிக்கவும்,அதை அடிப்பட்ட நிலையில் வைத்திருக்கவும், குறைந்த பட்சம் உள்நாட்டு பூர்ஷ்வாக்களில் ஒரு பகுதியினரின் நலன்களை வெளிநாட்டு மூலதனத்தின் விருப்பங்களுடன் உறுதியாகப் பிணைக்கவும் அவை முயல்கின்றன. அதோடு, முன்னுள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் தங்கள் ஆதிக்க விஸ்தரிப்பை இந்த வழியில் எளிதாக்கவும் ''கூட்டாளி நிலை'' என்ற திரையால் மூடி மறைக்கவும் அவை பிரயத்தனம் செய்கின்றன.

வெளிநாட்டு மூலதனம் உள்நாட்டு மூலதனத்துடன் ''கூட்டு சேர்வது'' (அதோடு ''கூட்டு சேர்வதன்'' உதவியால் உள்நாட்டு மூலதனத்தின் மேல் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதும்) ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் முதலாளித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கும் இந்த நாடுகளில் அன்னிய ஏகபோக நிறுவனங்களின் நிலையைப் பாதுகாத்து விரிவுபடுத்துவதற்கும் முதன்மையான, நம்பகமான, பெரு வாய்ப்புக்கள் உள்ள வழி என்று செல்வாக்குள்ள ஏகாதிபத்திய வட்டாரங்களில் கருதப்படுகிறது. அமெரிக்காவின் பிரபல ஆப்பிரிக்க நிபுணரும் அரசியலாளருமான வி. மாக்கே எழுதுகிறுர்: ''அன்னியத் தொழில் நிலையங்கள் எந்த அளவுக்கு ஆப்பிரிக்கமயமாக்கப்படுமோ, அவை தேசீய

உடைமை ஆக்கப்படும் சாத்தியப்பாடு அந்த அளவுக்குக் குறைவாகும். இத்தகைய தொழில்முறை முன்முயற்சி அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பொதுத் தேசீய நலன்களுக்கும் சம்பந்தப்பட்ட கம்பெனிகளின் தனிப்பட்ட நலன்களுக்கும் உகந்தவை....''[7]

ஏகாதிபத்திய அரசாங்கங்கள் இந்த நோக்கத்திற்காகத் தனிவகைக் கடன்கள் வழங்குகின்றன, ஊக்கமூட்டுகின்றன, செயல்முறை உதவி தருகின்றன. எனவே ஏகபோக நிறுவனங்கள் விடுதலை பெற்ற நாடுகளில் உள்நாட்டு மூலதனத்தை, முதன்மையாகத் தனியார் மூலதனத்தைக் கூட்டாளியாகச் சேர்த்துக்கொண்டு கலப்புத் தொழில் நிறுவனங்களும் கம்பெனிகளும் நிறுவுவதை மேலும் மேலும் விரிவாகக் கையாளுகின்றன. ஏற்கனவே நிலவும் அன்னிய நிலையங்களில் அது பங்கு கொள்ளும்படி அவை செய்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தனியார் முதலீடுகள் சம்பந்தமான தனிப்பட்ட இலாக்கா செயல் ஆற்றி வருகிறது. ''அரசியல் நோக்கில் நிலையற்ற பிரதேசங்களில்'' உள்நாட்டு மூலதனத்துடன் அமெரிக்க மூலதனத்தின் ''கலப்புக்கு'' உதவி செய்வதை நோக்கமாகக் கொண்டது இது. செல்வாக்குள்ள பிரிட்டிஷ் காலனித் தொழில் நிறுவனம் ஆகிய ''தாங்கனீக்கா கன்ஸெஷன்ஸும்'', ''இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ்'', ''பிரிட்டிஷ் மோட்டார் கார்ப்பொரேஷன்'', ''பிரிட்டிஷ் பெட்ரோலியம்'' போன்ற மிகப் பெரிய டிரஸ்டுக்களும் கிழக்கு, தெற்கு, மத்திய ஆப்பிரிக்க நாடுகளில் அனேகக் கலப்புக் கம்பெனிகளை நிறுவியுள்ளன. மேற்கு ஆப்பிரிக்காவில், ''வெஸ்ட் ஆப்ரிக்கன் போர்ட்லண்டு சிமெண்டு கம்பெனி'', ''நைஜீரியன் பிளாஸ்டிக்ஸ் கம்பெனி'', ''நைஜீரியன் பிரிஸ்ட்ரெஸ்ட் கான்க்ரீட்'' முதலிய கலப்பு நிறுவனங்களை பிரிட்டிஷ் ''யுனைட்டெட் ஆப்ரிக்கா கம்பெனி'' நிறுவியுள்ளது.

ஐவரி கோஸ்ட் குடியரசில் கலப்புக் கம்பெனிகள் மேற்கு ஜெர்மன் மூலதனத்தால் நிறுவப்பட்டுள்ளன. ஸிபுவா (இந்தக் கம்பெனியின் 70% பங்குகள் மேற்கு ஜெர்மன் மூலதனத்துக்குச் சொந்தம்), ஸிப்கி கம்பெனிகள் மரச்சாமான்கள் தயாரிக்கும் தொழிலிலும், ஸிம்பா கம்பெனி மோட்டார்த் தொழிலிலும், ஸொகாஸி கம்பெனி பனை எண்ணெய்த்

தயாரிப்பிலும் ஈடுபட்டுள்ளன. இவை தவிர உள்நாட்டு மூலதனத்தின் பங்குடன் சில கலப்புத் தொழில் நிறுவனங்கள் பிரெஞ்சு, மேற்கு ஜெர்மன் டிரஸ்டுகளால் கூட்டாகவும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

1966ம் ஆண்டில் அமெரிக்கத் தொழிலதிபர்களால் மலேசியாவில் 70க்கும் மேற்பட்ட கம்பெனிகள் நிறுவப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை கலப்புக் கம்பெனிகள்.

இந்தியாவில் கலப்புக் கம்பெனிகளின் அமைப்பு தீவிரமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. இதன் அடிப்படையில் உள்நாட்டு, வெளிநாட்டு மூலதனங்களின் இணைப்பு உறுதிப்பட்டு வருகிறது. 1956ல் வெளிநாட்டு மூலதனத்தால் இந்தியாவில் நிறுவப்பட்ட பெருத்த எண்ணிக்கை கொண்ட கம்பெனிகளில் 17 மட்டுமே கலப்புக் கம்பெனிகளாகப் பதிவு செய்யப்பட்டன. ஆனல் அறுபதுக்களின் தொடக்கத்திலோ, கலப்புக் கம்பெனிகளின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் அதிகம் ஆகிவிட்டது. 1957 ஜனவரி முதல் 1965 டிசம்பர் வரை மட்டுமே அன்னியக் கூட்டாளிகளுடன் சேர்ந்து தொழிலகங்கள் நிறுவுவதற்கான 2,358 ஒப்பந்தங்கள் இந்தியக் கம்பெனிகளால் செய்து கொள்ளப்பட்டன. இவற்றில் 408 கம்பெனிகள் அமெரிக்கர்களுடனும் 663 பிரிட்டிஷ்காரர்களுடனும் 348 மேற்கு ஜெர்மானியருடனும் கூட்டு சேர்ந்து நிறுவப்பட்டன.[8]

''உதவிச்'' செயல் திட்டப்படி ஏற்றுமதி செய்யப்படும் அரசு மூலதனத்தையும் கலப்புத் தொழில் நிலையங்கள் நிறுவுவதற்கு ஏகாதிபத்தியவாதிகள் பயன்படுத்துகிருர்கள். இவ்வாறு பல விதக் ''கலப்புகள்'' ஏற்படுகின்றன. கலப்பு உள்நாட்டு அரசு மூலதனத்துடனே அல்லது தனியார் மூலதனத்துடனே அல்லது இரண்டினுடனுமேயோ நிகழ்கிறது. எடுத்துக்காட்டாக, காமெரூனில் பாக்ஸைட் கனியத்திலிருந்து அலுமினியம் தயாரிப்பதற்கான அல்யூக்காம் என்ற கம்பெனி நிறுவப்பட்டுள்ளது. காமெரூன் அரசாங்கமும் ''பிரான்சின் பொருளாதார ஒத்துழைப்பு மைய நிதியும்'' இதன் பங்குதாரர்கள். இவற்றைத் தவிர, பிரபல பிரெஞ்சு ஏகபோக நிறுவனங்களான ''பேஷினே'', ''யூழின்'' என்பவையும் அல்யூக்காமின் பங்குதாரர்கள். பெட்ரோலியம் எடுத்துச் சுத்தம் செய்யும் துறையில் பணியாற்றும் எனி என்ற

இத்தாலிய அரசாங்கக் கம்பெனியின் நடவடிக்கைகள் இதற்கு இன்னொரு உதாரணம் ஆகும். மொராக்கோ அரசாங்கத்துடன் சரி பாதிப் பங்கு பெற்று இந்தக் கம்பெனி அங்கே பெட்ரோலியத் தேட்டத்திற்கான ஸோமிர் என்ற கம்பெனியை நிறுவியது. இதன் கிளைக் கம்பெனிகள் ட்யூனீஷியாவிலும் (அனிக்) கானாவிலும் (கிராஇப்) இதே நிபந்தனைகளில் தொழில் நடத்துகின்றன.

காமன்வெல்த் நாடுகளின் அபிவிருத்திக்கான பிரிட்டிஷ் கார்ப்பொரேஷனின் (''காமன்வெல்த் டெவலெப்மெண்ட் கார்ப்பொரேஷன்'') செயல்களும் இந்த விஷயத்தில் எடுத்துக் காட்டானவை. இதன் பயன்படும் மூலதனத்தின் பெரும் பங்கு பிரிட்டிஷ் அரசாங்க நிதியமைச்சரகத்தால் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது. முன்னாள் பிரிட்டிஷ் காலனிகளில் இது ''அபிவிருத்திக் கார்ப்பொரேஷன்கள்'' நிறுவுகிறது. உள்நாட்டுத் தனி முதலீட்டாளர்களும் அரசு முதலீட்டாளர்களும் இவற்றில் பங்கு கொள்ள அழைக்கப்படுகிறார்கள். அதே போல ஆங்கில அரசு முதலீடுகளும் முதன்மையாகத் தனியார் முதலீடுகளும் இந்தக் கார்ப்பொரேஷன்களில் செய்யப்படுகின்றன. இவற்றின் மீது மொத்த ஆதிக்கம் ஆங்கிலேயர் வசமே இருக்கிறது என்பதைக் கூறவே தேவை இல்லை. 1960-1965 ஆண்டுகளில் இத்தகைய கார்ப்பொரேஷன்கள் நைஜீரியா, தான்ஜனியா, கென்யா, உகாந்தா, சிறு அன்டைல் தீவுக்கூட்டம் ஆகியவற்றில் நிறுவப்பட்டன. ''காமன்வெல்த் அபிவிருத்திக் கார்ப்பொரேஷன்'' மூலமாக 1965ம் ஆண்டில் இந்நாடுகளின் ஸ்தல ''அபிவிருத்திக் கார்ப்பொரேஷன்களில்'' 13 கோடி 26 லட்சம் பவுண்டு மூலதனம், அதாவது 1960 உடன் ஒப்பிடும் போது 4.5 மடங்கு அதிக மூலதனம் முதலீடு செய்யப்பட்டது.[9]

நான்காவதாக, விடுதலை பெற்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சி அவற்றின் பொருளாதார அமைப்பை அடிப்படையான வகையில் மாற்றிவிடாதிருப்பதற்குத் தங்களால் இயன்றவற்றை எல்லாம் ஏகாதிபத்தியவாதிகள் செய்கிறார்கள். சர்வதேச முதலாளித்துவப் பொருளாதாரத்துக்கு ''உலகக் கிராமமாக''—கச்சாப் பொருள் விளை நிலமாகவும் விற்பனைச் சந்தையாகவும் ஏகாதிபத்திய நிதி மூலதனத்தை

மூதலீடு செய்வதற்கு ஏற்ற பிரதேசமாகவும்—பணியாற்றும் இவற்றின் தனிப்பட்ட நிலை தகர்ந்துவிடாமல் இருக்க ஏகாதிபத்தியவாதிகள் அரும்பாடு படுகிறார்கள். இந்த நாடுகளில் இலேசுரகத் தொழில் நிலையங்கள் சிலவற்றை நிறுவுதல், கனியம் வெட்டி எடுக்கும் தொழிலை மேற்கொண்டு அபிவிருத்தி செய்தல், ஏற்றுமதிப் பயிர்விளைச்சலை அதிகரிக்கும் நோக்கத்துடன் விவசாயத்தில் முற்போக்கு முறைகளைப் புகுத்தல், உண்மையான இயந்திரத் தொழில் பெருக்கம் நடைபெற விடாது தடுத்தல் — இதுவே விடுதலை பெற்ற நாடுகள் மீது ஏகாதிபத்தியம் சுமத்தியுள்ள கொள்கைப் போக்கு ஆகும்.

எனினும், முன்னாள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் தொழில் வளர்ச்சிப் பிரச்சினைபற்றி, அதிகாரபூர்வமான கொள்கைப் போக்கில் இல்லாவிடினும் ஏகபோக நிறுவனங்களின் எதார்த்த நிலைகளில் அண்மை ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் இயந்திரங்கள், இயந்திரத் தொழில்துறைச் சாதனங்கள் ஆகியவற்றில் கால் பகுதிக்கு மேல் இப்போது இயந்திரத் தொழில் முன்னேற்றம் பெற்ற முதலாளித்துவ நாடுகளிலிருந்து செல்கின்றன.

இதற்குக் காரணம் முதன்மையாக ஏகபோக நிறுவனங்களின் லாப வேட்டையும் போட்டிப் போராட்டத்தின் தர்க்கமுமே ஆகும். விடுதலை அடைந்த நாடுகளின் விரிவாகி வரும் சந்தைகளைப் போட்டியாளர்களுக்கு முன் கைப்பற்றிக் கொள்ள ஏகபோக நிறுவனங்கள் தீவிர முயற்சி செய்கின்றன. இதோடுகூட, ஏகாதிபத்திய ஏகபோக நிறுவனங்களின் செயல்தந்திரத்தில் ஏற்பட்டுள்ள குறிப்பிட்ட மாறுதலும் இங்கு செயல்படுகிறது. மாறும் சூழ்நிலைக்கு ஏற்பத் தங்கள் முறைகளை அவை மாற்றிக் கொண்டிருக்கின்றன. முன்னாள் காலனிகள், அரைக் காலனிகளின் விரிவடைந்து வரும் பொருளாதாரத்தில்—தயாரிப்புத் தொழிலின் முக்கியத் துறைகளில்—**புதிய, வேறு வகையான** ஆதிக்க நிலைகளைக் கைப்பற்றிக் கொள்ள அவை மேலும் மேலும் அதிகமாக முயன்று வருகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தை நினைவுபடுத்துவது பொருத்தமாய் இருக்கும். பின்தங்கிய நிலை என்பது

ஸ்தூல வரலாற்றுத் தொடர்பு கொண்ட கருதுகோள். 50 ஆண்டுகளுக்கு முன் முற்போக்கு உள்ளதாகக் கருதப்பட்ட வளர்ச்சித் தரம் இன்று மிக மிக பின்தங்கிய நிலையாகத் தோற்றம் அளிக்கலாம். ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் பின்தங்கிய நிலையின் தரம் பற்றிய பிரச்சினைக்கும், அவற்றுக்கும் முதலாளித்துவத்தின் இயந்திரத் தொழில் மையங்களுக்கும் இடையே உள்ள வேற்றுமைக்கும்கூட இந்த இயக்கப்போக்கு இயல்பாகவே பொருந்தும்.

இந்தப் பின்தங்கிய நிலை, இந்த வேற்றுமை, இரண்டின் தன்மையும் மாறாமல் நிலைத்திருக்கிறது அல்லது நிலைத்திருக்கும் என்று எண்ணுவது சரியாகாது. மாறாக இந்த நூற்றாண்டின் நாற்பதுக்களுடன் ஒப்பிடும்போது இப்பொழுது, இருபதாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் இவ்விரண்டுமே ஓரளவு வேறாகத் தோற்றம் அளிக்கின்றன. நாளடைவில் புதுக் காலனியாதிக்க முறை முன்னாள் காலனிகள், அரைக் காலனிகளின் ''சார்பற்ற'' பின்தங்கிய நிலையை மட்டும் இன்றிச் சிறப்பாக ''ஒப்புநோக்கான'' பின்தங்கிய நிலையையும் மேலும் மேலும் அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கும் என்று எண்ணலாம். முன்னாள் காலனிகள், அரைக் காலனிகள் தொழில்நுட்பத் துறையில் பின்தங்கி இருப்பது, விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியின் பிரதான அனுகூலங்களை முதலாளித்துவ உலகில் ஏகாதிபத்திய அரசுகள் கைப்பற்றிக் கொண்டுவிட்டதன் காரணமாக இயந்திரத் தொழிலின் மிக முன்னணியில் உள்ள முக்கியத் துறைகள் ஏகாதிபத்திய நாடுகளில் குவிந்திருப்பது ஆகியவற்றைப் புதுக் காலனியாதிக்க முறை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும். பெரு நாட்டில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகபோக நிறுவனங்களது நடவடிக்கைகளை ஆராய்ந்த பிரெஞ்சுச் செய்தித்தாள் ஃபிகரோவின் நிருபர் ஜார்ஜ் தியூப்புவா என்பவர் இந்த ஏகபோக நிறுவனங்களின் போக்கு பற்றி வெளியிட்டுள்ள கருத்துக்கள் இங்கு கவனிக்கத் தக்கவை. அவர் எழுதுகிறார்: ''கச்சாப் பொருள்களை ஏற்றுமதி செய்வது, தயாரிப்புப் பொருள்களை இறுக்குமதி செய்வது என்ற பழைய முதலாளித்துவத் திட்டம் இனி ஏற்றதாகாது என்று அண்மை ஆண்டுகளில் அமெரிக்கர்கள் கருதுகிறார்கள். பணக்காரப் பெருவாசிகளுக்குத் தங்கள் நாட்டில் தயாரிப்புத்

தொழில்துறையை நிறுவுவது இன்றியமையாதது. இது அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் போட்டியே போடாமல் தொழில்நுட்ப நோக்கில் மிகு வளர்ச்சி பெற்ற தொழில் துறைகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஈடுபட அனுமதிக்கும்.''[10]

இந்தக் கூற்றுகள் ''பழைய முதலாளித்துவத் திட்டத்தைக்'' கைவிட அமெரிக்க ஏகபோக நிறுவனங்கள் ஆயத்தமாய் இருப்பதை மிகைப்படுத்துகின்றன என்றாலும் புதுக் காலனியாதிக்க முறையின் பொருளாதாரப் போர்த்தந்திரத்துக்கு உரிய மிக விரிவான, வருங்கால அம்சங்களின் நோக்கில் பார்க்கும்போது இவை ஓரளவு அக்கறைக்கு உரியன என்றே எண்ண வேண்டும்.

இவ்வாறாக, புதுக் காலனியாதிக்க முறையின் பொருளாதாரப் போர்த்தந்திரம் அதன் முக்கியப் பொருளாதார நோக்கங்களுக்குப் பொருந்தக்கூடிய வகையில் விடுதலை பெற்ற நாடுகளுக்குக் குறிப்பிட்ட அளவு விட்டுக்கொடுக்க இடம் அளிக்கிறது. முன்னாள் காலனி, அரைக் காலனி நாடுகளைச் சுரண்டுவது, இந்த நாடுகள் பொருளாதாரச் சுதந்திரம் பெறுவதற்கு, சமுதாய முன்னேற்றப் பாதையில் அவை அடிவைப்பதற்கு எதிராகச் செயல் புரிவது—இவையே அந்தப் பொருளாதார நோக்கங்கள். வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் வருங் காலத்தில் ''பின் தங்கிய முதலாளித்துவப்'' பிரதேசங்களாக, அதாவது ஏகாதிபத்திய வல்லரசுகளைச் சார்ந்தவையும் பொருளாதார வளர்ச்சியில் அவற்றுக்குப் பெரிதும் பிற்பட்டவையுமான பிரதேசங்களாக விளங்க வேண்டும் என்பதே புதுக் காலனியாதிக்க முறையின் படைப்பாளர்களது திட்டம்.

விடுதலை அடைந்த நாடுகளில் தங்கள் ஆதரவை விரிவாக்கி வலுப்படுத்திக் கொள்ளப் புதுக் காலனியாதிக்கவாதிகள் மிகுந்த ஊக்கத்துடன் முயல்கிறார்கள். காலனியாதிக்கவாதிகளின் கையாட்கள் மட்டுமே அல்ல இந்த ஆதரவு. முக்கியமானது சமுதாய ஆதரவு ஆகும். எவற்றின் சமுதாய, அரசியல் இயல்பும் வர்க்க நலன்களும் அவற்றுடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்ள ஏகாதிபத்தியவாதிகளுக்கு ஓரளவு வாய்ப்பு அளிக்கின்றனவோ அந்தச் சமுதாய வட்டாரங்களும் குழுக்களுமே முக்கியமானவை.

நிலப்பிரபுத்துவ, குல இனத் தலைமைக் குழுக்களும் உள் நாட்டு வர்த்தகத் தரகர் வட்டாரங்களுமே வழக்கமாகக் காலனியாட்சி அரசாங்கங்களின் சமுதாய ஆதரவாக விளங்கி வந்தன. நேரடி அரசியல் ஆதிக்க அமைப்புக்கும், காலனி களின் பொருளாதார முன்னேற்றத்தை ஓரளவு முழுமை யாக ஸ்தம்பிக்கச் செய்து, முதலாளித்துவத்துக்கு முந்திய உறவுகளை அவற்றில் நிலையாக வைத்திருப்பது என்ற கொள் கப் போக்குக்கும் இது ஒத்திருந்தது. இந்தச் சமுதாயக் குழுக்களுடன் தொடர்புகளை முழுமையாகத் துணித்துக் கொள்ளவும், நிலப்பிரபுத்துவ, நிலப்பிரபுத்துவத்துக்கு முந் திய கால மீதமிச்சங்களுக்கு ஆதரவு அளிப்பதை நிறுத்திவிட வும் காலனியாதிக்கவாதிகள் இப்போதுங்கூடத் தயாராய் இல்லை. எனினும் நிலப்பிரபுத்துவ, வர்த்தகத் தரகர் குழுக் களுடையவும் குல இன உயர்குடியினருடையவும் செல்வாக்கு குன்றி வருகிறது. இந்தச் செல்வாக்கு தகர்ந்து வருவதற்குப் பொருளாதார வளர்ச்சி ஒரு காரணம். மற்றொரு காரணம் தேசீயத் தன்னுணர்வு மிகுந்து வருவதும் விடுதலைப் போராட் டத்தின் பரப்பு வீச்சு அதிகரிப்பதும் ஆகும். இந்தக் குழுக் களின் விகாரமான, தேசவிரோதச் செயல்கள் விடுதலைப் போராட்டத்தின் போது மிக அடிக்கடி அம்பலப்படுத்தப் படுகின்றன. எனவேதான் ஏகாதிபத்தியவாதிகள் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் தங்கள் கொள்கைக்குப் புதிய, இன்னும் விரிவான சமுதாய அடித்தளத்தைத் தேடுகிறார் கள். உள்நாட்டு பூர்ஷ்வாக்களின் குறிப்பிட்ட வட்டாரங்களுடனும் பூர்ஷ்வாச் சார்புள்ள குழுக்களுடனும் ஒப்பந்தம் செய்து கொள்ளவும் கூட்டுச் சேரவும்கூட அவர்கள் முன்வருகிறார்கள்.

முன்னாள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் நிலை மை மாறி வருகிறது. பொது மக்கள் திரள் விழிப்பு அடைந்து வருகிறது. பொதுஜனப் பிரதிநிதிகள் ஆற்றும் பங்கு அதி கரித்து வருகிறது. தேசீயவாத மனநிலை விரிவாகப் பரவிவரு கிறது. இந்தச் சூழ்நிலை காரணமாக ஏகாதிபத்தியவாதிகள் நிலப்பிரபுக்களையும் வர்த்தகத் தரகர்களையும் போல மக் களிடமிருந்து அவ்வளவு விலகியிராததும் குறிப்பிட்ட அளவு மக்கள்மேல் செல்வாக்கு செலுத்த வல்லதுமான சமுதாயச் சக்தியைத் தங்களுக்கு ஆதரவாக நாடுகிறார்கள். பூர்ஷ்வாக் களை ஆதரவாக நாடுவது முதலாளித்துவ உறவுகளுக்கு

ஊக்கம் அளிக்கும் புதுக் காலனியாதிக்க முறையின் முதன்மைக் கொள்கைப் போக்குக்கும் இசைகிறது.

பெரும்பாலான முன்னுள் காலனிகளில் தேசீய அரசுகள் நிறுவப்பட்டதை அடுத்து உள்நாட்டு பூர்ஷ்வாக்களின் பொருளாதார, அரசியல் நிலைகள் மேலும் வலுவடைந்து வருகின்றன. இந்தியாவின் பொருளாதாரத்தில் மொத்த முதலீடுகளில் இந்திய ஐக்கிய மூலதனக் கம்பெனிகள், தனித் தொழிலதிபர்கள் ஆகியோரின் பங்கு 1948ல் 44 சதவிகிதமாக இருந்தது. அறுபதுக்களின் மத்தி வாக்கிலோ இது 83 சதவிகிதமாக அதிகரித்துவிட்டது. பிலிப்பைனில் 1949 முதல் 1964 வரை புதிதாக நிறுவப்பட்ட கம்பெனிகளில் செய்யப்பட்ட முதலீடுகளின் மதிப்பு 283 கோடி 70 லட்சம் பெஸோக்கள். இந்தத் தொகையில் 3 சதவிகிதம் மட்டுமே வெளிநாட்டு முதலீடுகள்.

ஆப்பிரிக்க நாடான ஐவரி கோஸ்டில் குறைந்தது 10 ஹெக்டேர் நிலமும் 5 பண்ணையாட்களும் கொண்டிருந்த ஆப்பிரிக்கத் தோட்ட உடைமையாளர்களின் எண்ணிக்கை 1965ம் ஆண்டில் சுமார் 10 ஆயிரமாக இருந்தது. நில உடைமையாளர்களின் மொத்த எண்ணிக்கையில் இவர்கள் 9 சதவிகிதமே இருந்தாலும் சுமார் 30 சதவிகிதம் விவசாய நிலத்தை இவர்கள் தங்கள் வசம் வைத்திருந்தார்கள்.[11]

விடுதலை அடைந்த நாடுகள் முதலாளித்துவ முறையில் வளர்ச்சி பெற வேண்டும், முதலாளித்துவ நாடுகளின் அமைப்பிலிருந்து அவை பிரிந்து சமுதாய முன்னேற்றப் பாதையில் அடிவைக்க விடக்கூடாது என்பது புதுக் காலனியாதிக்கவாதிகளின் கொள்கைப் போக்கு. இந்தப் போக்கு செல்வாக்குள்ள தேசீய பூர்ஷ்வா வட்டாரங்களுக்கு ஓரளவு கவர்ச்சி உடையதாக இல்லாமல் இருக்க முடியாது என்ற அடிப்படையில் ஏகாதிபத்திய அரசியல்வாதிகள் செயல்படுகிறுர்கள் சாராம்சத்தில் தேசீய பூர்ஷ்வாக்களின் வர்க்க ஒருமைப்பாட்டின் மீது ஏகாதிபத்தியவாதிகள் குறித்த அர்த்தத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறுர்கள்.

அதிகாரவர்க்கஅல்லது நிர்வாக பூர்ஷ்வாக் குழு எனப்படுவதன் மீதும் உள்நாட்டு அறிவுஜீவிகள் மீதும் அண்மை ஆண்டுகளில் காலனியாதிக்கவாதிகள் கூர்ந்த கவனம் செலுத்தி வருகிறுர்கள். அதிகாரவர்க்க அல்லது நிர்வாக பூர்ஷ்வாக்

குழு விடுதலை அடைந்த நாடுகளில் அனேகமாக எல்லா வற்றிலும் அதிகரித்து வருகிறது. அவற்றில் சில நாடு களிலோ, பூர்ஷ்வாத்தன்மை அல்லது பூர்ஷ்வாச் சார்பு கொண்ட முதன்மையான, அனேகமாக ஒரே சமுதாயப் ''பிரதிநிதிச்'' சக்தியாக இந்த வகுப்பு விளங்குகிறது. உதா ரணமாக, ''ஆப்பிரிக்காவில் 'பூர்ஷ்வா வர்க்கம்' என்ற சொல் அதிகாரவர்க்கம் என்றே அனேகமாக அர்த்தப்படு கிறது'' என்று எழுதியது பிரெஞ்சுச் செய்தித்தாள் மோந்த்.

முன்னாள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் அதி காரவர்க்க பூர்ஷ்வாக் குழு என்று வழக்கமாகக் குறிப்பிடப் படுவது அதிகாரிகளிடையிலும் அரசு நிர்வாகத்திலும் உயர் மட்ட அரசாங்க வட்டாரங்களிலும் உள்ள குறித்த வகை யான நபர்களின் குழுவே ஆகும். இந்த நபர்கள் பொது மக்க ளிடமிருந்து தனித்து விலகியவர்கள், அவர்கள்பால் பகை மைகூடக் கொண்டவர்கள். தங்கள் செல்வத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக, எல்லா வகையான நேர்மையற்ற சூழ்ச்சி களுக்காகவும் தங்கள் பதவியைப் பயன்படுத்திக் கொள்கிறார் கள். விரிவாகப் பார்க்கையில் இந்தக் குழுவின் தோற்றம் உள்நாட்டு பூர்ஷ்வா வர்க்கம் உருவாவதற்கு உரிய வழிகளில் ஒன்று எனவும் இதன் ''உயிர்ச் செயல்'' தொடக்க மூலதனக் குவிவுக்கு உரிய தனிப்பட்ட வழியும் வடிவமும் எனவும் கருதலாம். மத்திய ஆப்பிரிக்கக் குடியரசில் உள்ள நிலைமை யை விவரித்து மோந்த் செய்தித்தாள் அந்நாட்டின் அதிகார வர்க்க நபர்களை ''உபாங்காவின் மந்தாரீன்கள்'' என்று குறிப்பிட்டது. அவர்களிடையே ஊழல் ''அளவுமீறிப் பெருகி விட்டபடியால், நஷ்டம் 2 லட்சத்து 50 ஆயிரம் மேற்கு ஆப்பிரிக்க பிராங்குகளுக்கு மேல் போகும்வரை நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை என்ற எழுதா விதியை நிர்வாக விவகாரங்களைப் பரிசீலனை செய்யும் இன்ஸ்பெக் டர்கள் ஏற்படுத்தியுள்ளனர்'' என்று அந்தச் செய்தித்தாள் தெரிவிக்கிறது.[12]

**இந்தியாவில் அரசியல் ஊழல்** என்னும் நூலில் அதன் ஆசிரியர்களான எஸ். த்விவேதியும் ஜ. பார்கவாவும் இதே வகையான துலக்கமான மெய் விவரங்களை எடுத்துக் காட்டி யுள்ளனர். மைய வரிவிதிப்பு அலுவலகம் தரும் தகவல் களின்படி அரசாங்க ஊழியர்களின் பல்வித்தச் சூழ்ச்சிகளின்

உதவியால் 230 கோடி ரூபாய்வரை வருமானம் ஒவ்வோர் ஆண்டும் வரி விதிப்புக்கு உட்படாமல் மறைக்கப்பட்டு வருவதாக அவர்கள் தெரிவிக்கிறார்கள். இரண்டாவது ஐந் தாண்டுத் திட்டக் காலத்தில் நிர்மாணத்துக்கு ஒதுக்கப்பட்ட எல்லாத் தொகைகளிலும் கிட்டத்தட்ட 5 சதவிகிதம், அதாவது சுமார் 140 கோடி ரூபாய் கையாடப்பட்டது என அவர்கள் மதிப்பிடுகிறார்கள்.[13]

தனது நிலைமை, பணம் பெருக்கும் வழிகள் ஆகியவற் றின் தனித்தன்மை காரணமாக அதிகாரவர்க்க பூர்ஷ்வாக் குழு அரசியல் துறையில் மிக மிக எளிதில் கைக்கூலிக்குத் தன்னை விற்கும் தன்மையும் அடிவருடித்தனமும் கொண் டிருக்கிறது. நாட்டுக்கும் மக்களுக்கும் எதிரான கடைக்கோடி நிலைகளை மேற்கொள்ள அது வல்லது.

ஓரளவு பயிற்சி பெற்ற மனிதர்கள் மிகமிகக் குறை வாய் உள்ள நாடுகளில் கல்வித் தேர்ச்சி மிகப் பெரிய சமூக, அரசியல் அனுகூலமாக விளங்குகிறது. இந்த நாடுகளில் அறிவுஜீவிகளின் சமுதாய முக்கியத்துவமும் செல்வாக்கும் சிறப்பாக மிக அதிகம். அறிவுஜீவிகளைப் பொறுத்த வரையில் இந்த விஷயத்தை ஏகாதிபத்தியவாதிகள் கவனத்தில் வைத்துக் கொள்கிறார்கள். முடிந்த வரையில் மிக விரிவான அறிவுஜீவிகள் வட்டாரத்தின்மீது செல்வாக்கு செலுத்த ஏகாதிபத்தியவாதிகள் முயல்கிறார்கள். அதே சமயம், பூர்ஷ் வாக்களுக்கு ஆதரவும் ஜனநாயக எதிர்ப்பும் போலிப் பகட்டும் நிறைந்த போக்கும் ''மேற்கத்திய வாழ்க்கை முறையின்'' பால் கவர்ச்சியும் உள்ள அறிவுஜீவிக் குழுக் களைத் தம் வசப்படுத்த ஏகாதிபத்தியவாதிகள் தீவிர முனைப் புடன் பாடுபடுகிறார்கள். குட்டிபூர்ஷ்வாக்களையும் புதுக் காலனியாதிக்கவாதிகள் மறந்துவிடுவதில்லை. மிக விரிவான அளவில் அரசியல் ஊசலாட்டத்துக்கு உள்ளாகும் இயல்பு காரணமாக இந்தச் சமுதாயக் குழுவின் குறிப்பிட்ட பகுதிகள் பிற்போக்குச் சக்திகளின் கைக்கருவிகளாகச் செயல் படக் கூடும். இந்த இயல்பைப் புதுக் காலனியாதிக்கவாதிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

குறிப்பிட்ட பூர்ஷ்வாக்களுடனும் பூர்ஷ்வா ஆதரவாளர் களுடனும் ஒப்பந்தங்கள் செய்து கொள்வதற்காகப் பொரு ளாதார, அரசியல், கொள்கைவாதச் சாதனங்கள் அனைத் தையும் ஏகாதிபத்தியவாதிகள் பயன்படுத்துகிறார்கள்.

பூர்ஷ்வாக்களுடன் ஒப்பந்தம் செய்துகொள்வதற்குப் பொருளாதார அடிப்படையாக ஏகாதிபத்தியவாதிகள் புதுக் காலனியாதிக்க முறையின் பொருளாதார நோக்கங்களை முன்வைக்கிறார்கள். இந்த பூர்ஷ்வாக்கள் குழு ஓரளவு வளர்வதும் செல்வவளம் பெறுவதும் இந்த நோக்கங்களுக்கு இசைந்தவையே. அது மட்டும் அல்ல. இவ்வாறு நிகழ வேண்டும் என்று இந்த நோக்கங்களிலேயே அனுமானிக்கப் படுகிறது. உண்மையில், புதுக் காலனியாதிக்கக் கொள்கையில் வகை செய்யப்பட்டிருக்கும் வரையறுத்த அளவுக்கு ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் பொருளாதார வளர்ச்சி நிகழ்வதுகூட, காலனியாட்சி நிலவிய பழைய காலத்துடன் ஒப்பிடும்போது உள்நாட்டு பூர்ஷ்வாக்களின் செயற்பாட்டுக்கு, பூர்ஷ்வா வர்க்கம் உருவாகிச் செல்வ வளம் பெறுவதற்கு, கணிசமாக விரிந்த வாய்ப்புக்களை அளிக்கும். ஏகாதிபத்திய ஏகபோக நிறுவனங்கள் விடுதலை பெற்ற நாடுகளின் சந்தைகளைத் தங்களுடன் பங்கிட்டுக் கொள்ளும் யோசனையை உள்நாட்டு பூர்ஷ்வாக்களுக்கு முன் வைக்கின்றன. ஏகாதிபத்தியவாதிகள் சம உரிமையுள்ள உறவுகள் கொள்ள எண்ணவில்லை என்பதில் சந்தேகமே கிடையாது. இந்த நாடுகளின் செல்வ வளங்களைச் சுரண்டுவதில் இரண்டாம் படிப் பங்காளிகளாகவே தேசீய பூர்ஷ்வாக்களை ஈடுபடுத்த அவர்கள் முயல்கிறார்கள்.

உள்நாட்டு பூர்ஷ்வாக்கள் தேசீய அரசுகளின் நிலைமைகளில் செயலாற்றுகிறார்கள். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசுகளின் ஆதரவையும் அவர்கள் பெற முடிகிறது. எனவே சமத்துவம் அற்ற ஒத்துழைப்பை இப்போது அவர்களிடம் கோருவது வெறும் பகற்கனவே என்று தோன்றக் கூடும். ஆயினும், விடுதலை அடைந்த நாடுகளில் சமுதாய வரையறுப்புக்கள் நிகழும் போக்கையும் தேசீய பூர்ஷ்வாக்களின் இரண்டக இயல்பையும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என ஏகாதிபத்தியவாதிகள் நம்புகிறார்கள். மாறிவிட்ட சூழ்நிலையில், சமுதாய முரண்பாடுகள் தீவிரமடைவதும் வெகுஜனங்களிடையே அதிருப்தியும் முற்போக்குச் சக்திகள், ஸ்தாபனங்களின் செயலூக்கமும் அதிகரிப்பதுமான நிலைமைகளில், தேசீய பூர்ஷ்வாக்களின் ஒரு பகுதியினரிடையே பிற்போக்கு மனப்

பான்மை வளர்ந்து ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்தி குன்றி வருகிறது. முதலாளித்துவ வளர்ச்சி, தேசீயச் சந்தை மீது தங்கள் பொருளாதார ஆதிக்கத்தையும் ''சொந்த'' மக்கள் மீது தங்கள் அரசியல் ஆட்சியையும் நிலைநாட்டுவது என்னும் தங்கள் வர்க்க நோக்கங்கள் பொதுமக்களின் விழைவுகளுக்கு முரண்படுவதை பூர்ஷ்வாக்கள் உணர்கிறார்கள். எனவே, மக்களுக்கு எதிரான போராட்டத்தில் தங்களுக்கு உரிய துணைவர்களை அவர்கள் தேடுகிறார்கள்.

ஆகையால்தான் தேசீய பூர்ஷ்வாக்களுடன் உடன்பாடு செய்து கொள்வதற்குக் கொள்கைவாத-அரசியல் அடிப்படை என்ற வகையில் கம்யூனிஸ எதிர்ப்பைப் புதுக் காலனியாதிக்கவாதிகள் முன்வைக்கிறார்கள். தேசீய பூர்ஷ்வாக்கள் மீது செல்வாக்கு செலுத்துவதற்கான முக்கியக் கருவியாக இது அவர்களுக்குப் பயன்படுகிறது. தேசீய பூர்ஷ்வாக்களில் ஜனநாயக எதிர்ப்பு உள்ள பகுதியினருடன் உடன்பாடு செய்து கொள்ள இப்பூர்ஷ்வாக்களின் தன்னலமும் குறுகிய வர்க்கத் தன்மையும் கொண்ட போக்குக்களை முக்கிய முதனிலையாக ஏகாதிபத்தியவாதிகள் கருதுகிறார்கள்.

தவிரவும் தேசீய பூர்ஷ்வா வர்க்கம் உருவான காலனியாட்சி நிலைமைகள் காரணமாக அதற்கு ஏற்பட்டுள்ள சில தனிப்பட்ட தன்மைகளை மறந்துவிடக் கூடாது. இவை ஏகாதிபத்தியத்தின்பால் தேசீய பூர்ஷ்வாக்களின் போக்குமீது பெருத்த செல்வாக்கு செலுத்துகின்றன. பூர்ஷ்வாக்களின் பலவீனம், அரசியல் கோழைத்தனம், ஏகாதிபத்தியத்தின் சக்திக்கு முன் இன்னும் முற்றிலும் அகலாத ''நடுக்கம்'', அன்னிய ஏகபோக நிறுவனங்களுடன் அவர்களுடைய பழைய தொடர்புகள், இந்தத் தொடர்புகளிலிருந்து குறித்த லாபங்களைப் பெறுவதற்கு அவர்கள் கொண்டுள்ள ஆர்வம் ஆகியவையே இந்தத் தனித்தன்மைகள்.

விடுதலை அடைந்த நாடுகளில் நடுத்தர வர்க்கம் எனப்படுவது வளர்வதற்கு உதவும் பொருட்டு ஏகாதிபத்தியவாதிகள் பல்விதச் சாதனங்களைக் கையாள்கிறார்கள். தொழிலதிபர்கள், வர்த்தகர்கள், முதலாளித்துவ வகைப் பண்ணையார்கள் முதலிய பூர்ஷ்வா நபர்களும் அவர்களுடன் தொடர்பு கொண்ட அறிவுஜீவிகள், அதிகாரிகள் ஆகியோரும் அடங்கியது இந்த ''நடுத்தர வர்க்கம்''. பொருளாதாரத்

தூண்டுதல்களின் பல்வேறு வடிவங்களையும் நேரடியாகக் கைக்கூலி கொடுத்து வசப்படுத்துவதையும் தவிர, அரசியல், கொள்கைவாதத் தன்மை கொண்ட வேறு முறைகளையும் புதுக் காலனியாதிக்கவாதிகள் மேற்கொள்கிறார்கள். விடுதலை அடைந்த நாடுகளில் கல்வித் தேர்ச்சி பெற்ற இளைஞர்கள் ஆற்றும் மிகப் பெரும் பங்கைக் கருத்தில் கொண்டு இந்த நாடுகளுக்குத் தேர்ச்சி பெற்ற ஊழியர்களைத் தயார் செய்வதற்குரிய விரிவான நடவடிக்கைகளை அவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். மாணவர்களை ''மேற்கத்திய வாழ்க்கை முறையின்'' ஆதரவாளர்களாகப் பயிற்றுவதையும் தனியார் தொழில் முயற்சி மனப்பான்மையால் ஆட்கொள்ளப்பட்டவர்களும் அதைப் பரப்பத் தயாராக இருப்பவர்களுமான மனிதர்களின் எண்ணிக்கையை இந்த நாடுகளில் அதிகரிப்பதையும் புதுக் காலனியாதிக்கவாதிகள் தங்கள் கடமையாகக் கொள்கிறார்கள்.

முதலாளித்துவ உறவுகளைத் தூண்டி ஊக்குவதும் ''நடுத்தர வர்க்கத்தை'' வளர்ப்பதும் பூர்ஷ்வா அரசியல், அரசு அமைப்புக்களை ஏற்படுத்துவதுமே ஏகாதிபத்தியவாதிகளால் சிறப்பாக அண்மை ஆண்டுகளில் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் பிரசாரம் செய்யப்பட்டு வரும் ''சீர்திருத்தங்களின்'' நோக்கமும் ஆகும். எடுத்துக்காட்டாக, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு ''உதவி'' வழங்கும் திட்டமான ''முன்னேற்றத்திற்கான ஐக்கியத்தின்'' முக்கிய நோக்கங்களில் ஒன்று இம்மாதிரிச் ''சீர்திருத்தங்களே'' என அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்கம் பிரகடனம் செய்திருக்கிறது. பூர்ஷ்வாத் தன்மை கொண்ட சமுதாயச் சீர்திருத்தங்களைத் தூண்டி ஊக்குவதன் வாயிலாக லத்தீன் அமெரிக்காவில் புரட்சி நிகழ்முறைக்கு எதிராகச் செயல்படுவதே இந்த ''ஐக்கியத்தின்'' மையக் கருத்து என்று அமெரிக்க, ஏன், மேற்கு நாட்டுப் பத்திரிகைகள் அனைத்துமே ஒப்புக்கொள்கின்றன.

தேசீய பூர்ஷ்வா அரசாங்கங்கள் உள்ள நாடுகளில் இந்த அரசாங்கங்களின் சமுதாய அடிப்படையை வலுப்படுத்தும் நோக்கத்துடன் தனி உடைமையாளர்களையும் முதலாளித்துவ நபர்களையும் எண்ணிக்கையில் அதிகப்படுத்த ஏகாதிபத்தியவாதிகள் உதவுகிறார்கள். புரட்சிகர ஜனநாயகப்

பிரதிநிதிகள் ஆட்சியில் இருக்கும் நாடுகளில் அவர்களது சமுதாய முன்னேற்றப் போக்குக்கு எதிராகப் போராடும் சக்திகளை வலுப்படுத்தும் பொருட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஏகாதிபத்தியக் கைப்பாவை அரசாங்கங்கள் நிலவும் நாடுகளில் அவற்றைப் பலப்படுத்தவும் அவை குறித்த அளவு தேசீய வளர்ச்சி பெறக் கூட வகை செய்யவும் இந்தக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாய் ஒரு விஷயத்தைக் குறிப்பிடுவது பொருத்தமாய் இருக்கும். வெளிப்படையாகத் தங்கள் கைப்பாவை அரசாங்கங்கள் நிலவுவதில் ஏகாதிபத்திய வாதிகளுக்கு இப்போது அவ்வளவாக அக்கறை இல்லை. காலனியாதிக்கவாதிகளின் ஆதிக்கத்துக்குத் தற்போதைய நிலைமைகளில் அதிகப்பட்ச வாய்ப்புக்களுக்கு இம்மாதிரி அரசாங்கங்கள் நிச்சயமாக "வகை செய்கின்றன". எனவே முன்பு வழக்கமாக இவையே அதிகமாக விரும்பப்பட்டது இயற்கையே. ஆயினும், போருக்குப் பிந்தைய அனுபவம் முழுவதும் ஏகாதிபத்தியவாதிகளுக்குக் கற்பித்திருப்பது என்ன என்ருல், தேசீய விடுதலைப் போராட்டம் உலகு எங்கும் எழுச்சி அடைந்திருக்கும் சூழ்நிலையில் கைப்பாவை அரசாங்கங்கள் முற்றிலும் நிலையற்றவை என்பதே. ஏனெனில், அவற்றுக்கு விரோதமாக நாடு பரவிய பிரமாண்டமான எதிர்ப்புச் சக்திகள் ஒன்று திரள்கின்றன. வெகுஜனங்கள் அரசியல் அனுபவம் பெறவும் தீவிரவாதிகள் ஆகவும் இவை தம் வசமின்றியே வாய்ப்பு அளிக்கின்றன. தேசீய பூர்ஷ்வாக்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிவிடுவார்களோ என்ற அச்சத்தில் அவர்களது வளர்ச்சிக்கு இவ்வரசாங்கங்கள் அடிக்கடி பெருத்த தடைகள் ஏற்படுத்துகின்றன. விளைவாக, தேசீய பூர்ஷ்வாக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு மனப்பான்மையை இவை தீவிரப்படுத்துகின்றன. ஈராக்கில் நூரி சயீது—பெய்ஸல் இவர்களது அரசாங்கம், க்யூபாவில் பாட்டிஸ்டா அரசாங்கம், காங்கோ (பிராஸவீல்)வில் யூலூ அரசாங்கம், டொமினிக்கன் குடியரசில் த்ருஹீலியோ அரசாங்கம், ஹைட்டியில் தியூவால்யே அரசாங்கம், முடிவாகத் தெற்கு வியத்நாமில் ங்கோ தின் தியம் அரசாங்கம், சைகோன் அரசாங்கத்தின் தற்போதையத் தலைமைக் குழு ஆகியவற்றை இதற்கு உதாரணங்களாகக் காட்டலாம்.

வேறு வார்த்தைகளில் சொல்வதானல், தேசீய விடுதலை இயக்கங்களைச் சீர்திருத்த-சமரசவாத முறைகளால் மூச்சை நெரிக்கும் திட்டங்களுக்குக் கைப்பாவை அரசாங்கங்கள் அடிக்கடி இடையூருய் இருக்கின்றன. எனவேதான் உள் நாட்டு பூர்ஷ்வாக்களின் சமரசப் போக்குள்ள பகுதியினர் தலைமையில் அமைந்த அரசாங்கங்களை ஏகாதிபத்தியவாதி கள் தற்போதைய நிலைமைகளில் அதிக ஏற்புடையவையாக மதிக்கிருர்கள். புதுக் காலனியாதிக்கக் கொள்கையின் பிர தான நோக்கங்களுக்கு இவ்வரசாங்கங்கள் ஆபத்து விளைக்க மாட்டா, மாருக அவை நிறைவேற உதவும் என் அவர் கள் நம்புவதே இதன் காரணம்.

ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா மூன்று கண் டங்களிலும் ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவினுல் மட்டுமே ஆட்சியில் நிலைத்திருக்கும் கைப்பாவை, சர்வாதிகார, மக் கள் விரோத அரசாங்கங்கள் நிலவுவது மேற்கூறியதற்கு முரண்படவில்லையா? எம் கருத்துப்படி, முரண்படவில்லை. சில ஆப்பிரிக்க நாடுகளில் நேற்றையக் காலனி ஆட்சியாளர் கள் தங்கள்ஆதிக்கத்துக்கு இப்போதைக்கு எவ்விதஅபாயமும் இல்லை என்ற எண்ணத்தால் ''புதுப்புனைவுகளைத்'' தாமே தவிர்க்கிருர்கள். இந்த நாடுகளை விட்டுவிட்டால், மற்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஏகாதிபத்தியவாதிகள் வெளிப் படையான கைப்பாவை அரசாங்கங்களைப் பதற்றத்துடன் பற்றிக்கொண்டிருப்பது ''தாமே விரும்பி'' அல்ல. ஓரளவு ''நம்பகமான'', தாங்கள் ஏற்கக்கூடிய மாற்று எதுவும் இல் லாமையாலோ அல்லது இடைக்கால''இடர்களையும்'' ''திடீர் நிகழ்ச்சிகளையும்'' அஞ்சுவதாலோ தான் அவர்கள் இவற்றைப் பற்றிக் கொண்டிருக்கிருர்கள்.

வெளிப்படையான கைப்பாவை அரசாங்கங்களின் இடத்தில் வேறு அரசாங்கங்கள் நிலைபெறும்போது இடது சாரி தேசபக்தச் சக்திகள் முன்முயற்சி எடுத்து ஆதிக்க நிலை களைக் கைப்பற்றிக் கொண்டுவிடுமோ என்று ஏகாதிபத்திய வாதிகள் குலை பதறுகிருர்கள். புதுக் காலனியாதிக்கவாதி கள் பூர்ஷ்வாக்களதும் இன்னும் அடிக்கடி குட்டிபூர்ஷ்வாக் களதும் சீர்திருத்த-சமரசவாதிக் கட்சிகள், குழுக்களுடன் தொடர்பு கொள்ள விரும்புகிருர்கள். ஆனுல் இந்தக் கட்சி கள், குழுக்கள் அரசியல் நோக்கில் ஒரே வகையானவர்கள் உள்ளவையாக இருப்பதில்லை. ''அதிகாரபூர்வமான'' கொள்

கைக்குக் கணிசமாக இடதுசாரியில் இருக்கும் போக்கைக் கடைப்பிடிக்கும் ஓரளவு செல்வாக்குள்ள சக்திகள் அனேக மாக எப்போதுமே இத்தகைய கட்சிகள், குழுக்களில் அங்கம் வகிக்கின்றன. இதனால் புதுக் காலனியாதிக்கவாதிகளின் அச்சம் மேலும் உறுதிப்படுகிறது.

இவை எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டே புதுக் காலனியாதிக்கவாதிகளுக்கு முன் நிற்கும் பிரச்சினையை, அல்லது அமெரிக்கப் பத்திரிகை எழுத்தாளர் வால்டர் லிப்மன் கூறுவதுபோல ''இரண்டக நிலையைத்'' தெளிவாகக் காண முடியும். அமெரிக்க ஐக்கிய நாடுகள் இந்த இரண்டக நிலையை ''இடைவிடாது எதிர்ப்படுகின்றன'' என்கிறார் வால்டர் லிப்மன். மட்டுமீறி இழுக்கு உண்டாக் கும் குழுக்களை அகற்றும் ஆபத்தை மேற்கொள்வதா அல்லது அவற்றை ஆதரிப்பதா என்பதே இது. இவற்றில் முதல் முடிவு செய்வதற்கு ''எவ்வளவோ அதிக மதிநுட்பமும் அரசியல் துணிவும் தேவை'' என்று கூறிவிட்டு வால்டர் லிப் மன் மேலே எழுதுகிறார்: ''ஆனாலும், கம்யூனிஸம் பரவுவ தைத் தடுப்பதே கடமை என்றால் வலிமையுள்ள, வாழ்வுறுதி கொண்ட அரசாங்கங்களை ஆதரிப்பது தவிர வேறு வழி இல்லை.''[14]

ஆயினும் நாம் மேலே குறிப்பிட்டவை உட்படப் பல் வேறு சூழ்நிலைகளின் நிர்ப்பந்தம் காரணமாக ஏகாதிபத்திய அரசாங்கங்கள் லிப்மன் யோசனை கூறுவதற்கு மாறாகவே எதார்த்தத்தில் அடிக்கடி செயல்படுகின்றன. தவிரவும் இன்னும் ஒரு விஷயத்திலும் புதுக் காலனியாதிக்கவாதிகளுக் குத் தம் விருப்பப்படி செயல் புரிய முழுச் சுதந்திரம் இல்லை என்பதையும் கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது. ''கடைக்கோடிக்'' கைப்பாவைகளான சில அரசாங்கங்கள் தவிர்த்து, முன்னாள் காலனிகள், அரைக் காலனிகளில் உள்ள ஏகாதிபத்திய ஆதரவாளிகளும் கைக்கூலிக்கு ஆட்படுபவை யுமான பிற அரசாங்கங்கள், கொஞ்சங் கொஞ்சமாக ஓரளவு ஒப்புநிலைச் சுதந்திரம் பெற்று விடுகின்றன. தாங்கள் நிலவு வதைக் காப்பாற்றிக் கொள்ள அவை எதுவும் செய்யத் தயாராய் இருக்கின்றன. தீராத நிலைமைகளில் தங்கள் ஏகா திபத்திய அரவணைப்பாளர்களையும் இதற்காக எதிர்க்கவும் அவர்களுக்கு ''அதிகப்படித்'' தொல்லைகளும் சங்கடங்களும் விளைவிக்கவும்கூட அவை தயங்குவதில்லை.

## புதுக் காலனியாதிக்க முறையின் அரசியல், இராணுவ-அரசியல் ஆயுதங்களும் வடிவங்களும்

புதுக் காலனியாதிக்க முறையின் பல அரசியல், இராணுவ-அரசியல் ஆயுதங்களும் வடிவங்களும் (பொருளாதார ஆயுதங்கள், வடிவங்கள் போன்றே) காலனியாட்சிக் காலத்திலேயே ஆட்சித் தலைமை நாடுகளால் ''தயாரிக்கவும்'' ''உருவாக்கவும்'' பட்டன என்று சொல்ல வேண்டும். போருக்குப் பிந்தைய தொடக்க ஆண்டுகளில் காலனியாட்சியாளர்கள் குறித்த அர்த்தத்தில் எதிர்பாராத திடீர் நிகழ்ச்சிகளால் சூழப்பட்டுப் பல தடவைகளில் ஒரே குழப்பத்துடன் பின்வாங்கினார்கள். அப்போது புதுக் காலனியாதிக்க முறையின் ''முன்னேற்பாடு'' பெரும்பகுதி ஆட்சித் தலைமை நாட்டின் உணர்வு பூர்வமான கொள்கை என்ற தன்மையைக் கொண்டிருக்கவில்லை. கணிசமான அளவுக்கு அது தானாக நடந்த நிகழ்முறையின் விளைவாகவே இருந்தது. காலனியாட்சி மரபுச் சொத்தாக விட்டுச் சென்ற நிலைமைகளின் எதார்த்த விளைவுகளே இதற்கு முதனிலைகளாக முக்கியமாக அமைந்தன. இவற்றுக்குச் சட்டபூர்வமான வாரிசாகப் புதுக் காலனியாதிக்க முறையும் காலனியாட்சி நிர்வாகத்தின் ''மீதமிச்சங்களும்'' செயலாற்றின.

ஆனால் அடுத்துவந்த காலத்தில் காலனியாட்சி அரசாங்கங்கள் நிலவும்போதே ஏகாதிபத்திய வல்லரசுகள் உணர்வு பூர்வமான, குறிக்கோள் முனைப்புள்ள கொள்கையைக் கடைப்பிடித்தன. புதுக் காலனியாதிக்க முறையில் பிரச்சினைகளுக்கு முடிவு கட்ட ஆயத்தமும் வசதியும் செய்வதே இந்தக் கொள்கையின் நோக்கம். இதற்குப் பொருத்தமான அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது. ஏகாதிபத்தியவாதிகளுக்கு வேண்டிய குழுக்களும் நபர்களும் ஆட்சிக்கு வந்தார்கள்.

சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்ட அதே சமயத்திலோ அதற்கு முன்பேயோ ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப் பட்டன. வருங்காலச் ‘‘சுதந்திர’’ நாட்டுக்கும் ஆட்சித் தலைமை நாட்டுக்கும் இடையே சமமற்ற உறவுகளை இவை சட்டபூர்வமாக உறுதிப்படுத்தின. ஆட்சித் தலைமை நாட்டுக்கு விசேஷச் சலுகைகள் இவற்றின் மூலம் அளிக்கப் பட்டன.

விடுதலை அடைந்துவந்த நாடுகளின் அரசியல் சட்டமும் உள் அமைப்பும், மானிட இன வகைக் குழுக்களின் நிலை, உரிமைகள், பரஸ்பர உறவுகள், எல்லைப் பிரச்சினைகள் ஆகியவை எல்லாம் ஆட்சித் தலைமை நாடுகளின் காலனியாதிக்க நலன்களைக் கருத்தில் கொண்டே வரையறுக்கப்பட்டன. இளம் அரசுகளின் உள் வாழ்க்கையில் முடிந்த வரை நிறையச் சுரங்கக் கண்ணிகளை வைக்கவும் அவற்றுக்கிடையே உறவுகளில் மோதல்களும் சச்சரவுகளும் விளைவதற்கு ஏற்ற ஊற்றுக்கண்களை ஏற்படுத்தவும் இவ்வாறு வகை செய்யப் பட்டது. முன்னாள் காலனியாட்சி வல்லரசுக்கு நடுவர் என்ற முறையில் செயல்பட வாய்ப்பு கிடைப்பது இவற்றால் உறு திப்பட்டது. பிரிட்டிஷ் இந்தியாவை 1947ல் பாக்கிஸ்தான், இந்தியா என்று இரண்டாகப் பிரித்தபோதும், பாலஸ்தீனத் தை நிர்வகிக்கும் தனது அதிகாரத்தை 1948ல் ‘‘மறுத்த’’ போதும் பிரிட்டன் கொண்டிருந்த நோக்கம் இதுவே. ஆங்கிலக் காலனியாட்சியாளர்கள் நைஜீரியாமீது கூட்டாட்சி அமைப்பை வலுக்கட்டாயமாகச் சுமத்தினார்கள். நாட்டின் முக்கிய இனங்களை ஒன்றுக்கு ஒன்று எதிர்நிறுத்துவதையும் வடபகுதிப் பிற்போக்கு அமீர்களை ஆதிக்க நிலையில் வைப்ப தையும் அடிப்படையாகக் கொண்டது இந்தக் கூட்டாட்சி. சுதந்திர நைஜீரியா தோன்றிய நாள் முதலே இந்த அமைப்பு பெருத்த குழப்பங்களுக்குக் காரணம் ஆயிற்று. இதனால் நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுவது ஆங்கிலக் காலனியாதிக்கவாதிகளுக்கு எளிதாகிவிட்டது. ஏகாதிபத்திய வாதிகளின் சூழ்ச்சிகள் காரணமாக இந்தக் குழப்பங்களும் மோதல்களும் நைஜீரியாவைக் கடுமையான ஆயுதப் போர்க் களமாக மாற்றிவிட்டன.

கென்யா மீதும் கிட்டத்தட்ட இதே வகையான அரசு அமைப்பைச் சுமத்த பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகள்

முயன்றார்கள். கென்யா மக்களின் தேசீய விடுதலைப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்திய ''கென்யா ஆப்பிரிக்கத் தேசீய ஐக்கியத்துக்கு'' எதிர்நிறையாகக் ''கென்யா ஆப்பிரிக்க ஜனநாயக ஐக்கியம்'' என்ற அரசியல் கட்சி இந்த நோக்கத்துடன் காலனியாதிக்கவாதிகளின் அரவணைப்பில் நிறுவப்பட்டது. சில இனங்களுக்குச் சுயாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோஷத்துடன் இந்தக் கட்சி செயல்பட்டது. ஆனால் தேசபக்தச் சக்திகளின் எதிர்ப்பின் விளைவாக இந்தச் சூழ்ச்சிகள் தகர்க்கப்பட்டன.

மத்திய ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் 1953லேயே, அதாவது சம்பந்தப்பட்ட நாடுகளின் சுதந்திரப் பிரகடனத்துக்குப் பத்து ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் முன்னதாகவே ரொடீசியாவையும் நியாஸாலாந்தையும் கூட்டரசாக இணைத்தார்கள். காலனியாட்சி அரசாங்கங்கள் கலைக்கப்பட்ட பின்னரும் தெற்கு ரொடீசியாவின் ஆளும் வெள்ளைச் சிறுபான்மையினரின் உதவியால் தங்களது ஆதிக்கச் செல்வாக்கை இதன்மூலம் நிலைநிறுத்தி வைத்துக் கொள்ளலாம் என்று அவர்கள் எண்ணினார்கள். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்திலும் பிரிட்டிஷ் காலனி அமைச்சரகத்தின் சூழ்ச்சிகள் விடுதலை இயக்கத்தால் குலைக்கப்பட்டுவிட்டன. செயற்கைக் கூட்டரசை விடுதலை இயக்கம் தகர்த்துவிட்டது. பிரிட்டிஷ் காலனிச் சிற்பிகள் அமைத்த மலேசியக் கூட்டரசும் இவ்வாறே நிலை குலைந்தது. தேசீய இனக் குழுக்களான மலாயர்களுக்கும் சீனர்களுக்கும் இடையே உள்ள முரண்பாடுகளையும் எதிர் நிலைகளையும் கருத்தில் கொண்டு அமைக்கப்பட்டது இக்கூட்டரசு. 1965ல் சிங்கப்பூர் இந்தக் கூட்டரசிலிருந்து வெளியேறிவிட்டது.

அரேபியத் தீபகற்பத்து மக்கள்மீது தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வைத்துக் கொள்ளும் நோக்கத்துடன் பிரிட்டன் 1959ல் தெற்கு அரேபியச் சிற்றரசு நாடுகளின் கூட்டரசை நிறுவிற்று (1962, மே மாதம் முதல் இது தெற்கு அரேபியக் கூட்டரசு என வழங்குகிறது). இந்தக் கூட்டரசின் தலைமையில் தங்களுக்குப் பணியும் நிலப்பிரபுத்துவ ஆட்சியாளர்களான சுல்தான்களை அமர்த்தி, அரசாங்க இயந்திரத்தையும் சைனியத்தையும் அவர்களுக்காக ஏற்படுத்தியதன் மூலம் தேசபக்தச் சக்திகளின் வழியை அடைத்துவிடலாம்

என்று பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகள் நினைத்தார்கள். ஆயினும் இந்தக் கூட்டரசு தகர்ந்து சிதறுவதைச் சுல்தான் களாலோ அவர்களைப் பாதுகாத்த பிரிட்டிஷ் படைகளாலோ தடுக்க முடியவில்லை. இதன் இடிபாடுகளிலிருந்தே தெற்கு யெமன் மக்கள் குடியரசு 1967ன் முடிவில் எழுந்தது.

பாரசீக வளைகுடாப் பிரதேசத்தில் அரேபிய அமீர் ஆட்சிப் பகுதிகளையும் பிரிட்டிஷ் காப்பு ஆட்சி இடங்களை யும் ஒன்று இணைத்து இங்கே இன்னொரு கூட்டரசு நிறுவும் கருத்து பிரிட்டிஷ் வெளிநாட்டு விவகார அலுவலகத்தில் அண்மையில் உதயம் ஆயிற்று.

தனது பல காலனிகளையும் காப்பு ஆட்சி இடங்களையும் சுதந்திர நாடுகளாகப் பிரகடனம் செய்யுமுன் அதற்கு முன் நிபந்தனையாக இராணுவ, வெளிநாட்டுக் கொள்கை சம்பந் தமான ஒத்துழைப்பு ஒப்பந்தங்களை பிரிட்டன் அவற்றின் மேல் சுமத்தியது. சைப்ரஸ், மலேயா, ஜோர்டன், கென்யா, தாங்கனீக்கா, கானு, நைஜீரியா ஆகியவற்றுடனும் வேறு சில முன்னுள் காலனிகளுடனும் இத்தகைய ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.

விளைவாக ஆங்கில அதிகாரிகள் இந்நாடுகளின் இராணு வங்களில் தலைமைப் பதவிகளை முன்போன்றே வகித்தார்கள். பல நாடுகளின் பிரதேசங்களில் பிரிட்டிஷ் காவற்படை முகாம் கள் நிலைத்திருந்தன. கென்யாவிலும் தாங்கனீக்காவிலும் படைப்பிரிவுகளில் ஏற்பட்ட கிளர்ச்சிகளை ஒடுக்க ஆங்கிலத் துருப்புக்கள் ஏவப்பட்டது தெரிந்ததே. ஜாம்பியா, உகாந்தா, இரு நாடுகளின் சைனியங்களிலும் பிரிட்டிஷ் அதிகாரிகள் இன்னமும் பதவிகளில் அமர்ந்திருக்கிருர்கள். முன்பு பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த வேறு பல நாடுகளின் இராணுவங்களில் ஆங்கிலேயர்கள் பயிற்சி அளிக்கும் பணி புரிந்து வருகிருர்கள்.

மலேயா, சைப்ரஸ், சிங்கப்பூர், மால்டா, மாலத்தீவுகள் ஆகியவற்றின் பிரதேசங்களில் தன் இராணுவ தளங்களையும் காவற்படை முகாம்களையும் பிரிட்டன் தொடர்ந்து வைத் திருக்கிறது. கென்யாவின் விமான நிலையங்களையும் துறை முகங்களையும் பயன்படுத்தவும் தனது படைவீரர்களைப் ''பயிற்சிக்காக'' ஆண்டுக்கு இரு முறை அந்நாட்டுக்கு அனுப் பவும் அது உரிமை கோரிப் பெற்றுள்ளது. 1966ல் பிரிட்ட

னுக்கு வெளியே இருந்த 1 லட்சத்து 70 ஆயிரம் பிரிட்டிஷ் படைவீரர்கள், அதிகாரிகளில் மூன்றில் இரு பங்கிற்கு மேல் ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளின் பிரதேசங்களில் இருந்தார்கள். ஏடனிலும் பாரசீக வளைகுடாப் பிரதேசத்தில் அனேக அரேபியச் சிற்றரசு நாடுகளிலும் இந்திய மாகடல் தீவுகளிலும் தங்கள் இராணுவ தளங்களை நீண்ட காலத்துக்கு நிலைநிறுத்தி வைத்துக்கொள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் திட்டமிட்டிருந்தார்கள்.

தவிரவும் சில இளம் அரசுகள் நிதித்துறையில் பிரிட்டனை நேராகச் சார்ந்திருக்கும் நிலையில் வைக்கப்பட்டன. இந்த அரசுகளின் வரவு செலவுத் திட்டத்தைச் சரிக்கட்டுவதற்கு, குறைந்தபட்சம் தொடக்க ஆண்டுகளில், பிரிட்டன் சுமத்திய ஒப்பந்தங்களின்படி வழங்கிய உதவி நிதிகள் பயன்பட்டன. பிரான்சும் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் சுதந்திரப் பிரகடனம் செய்துவிட்ட தன் முன்னாள் காலனிகள் விஷயத்தில் இன்றளவும் இதே சூழ்ச்சியை விரிவாகக் கையாண்டு வருகிறது.

பிரிட்டனின் மிகப் ''பரந்த அளவான'' புதுக் காலனியாதிக்க நடவடிக்கையாக விளங்கியது பிரிட்டிஷ் காமன்வெல்த் ஆகும் (அண்மைக் காலனியாட்சி உறவுகளின் ''வாடை'' வீசும் ''பிரிட்டிஷ்'' என்ற சொல் பிற்காலத்தில் நாணத்துடன் விட்டுவிடப்பட்டது). பிரிட்டிஷ் காலனிப் பேரரசின் பகுதிகளாக இருந்த பெரும்பாலான நாடுகளும் பிரதேசங்களும் காமன்வெல்த்தில் சேர்ந்தன. போதிய அளவு நெருக்கமான அரசியல், பொருளாதார ஒன்றிணைப்பாகக் காமன்வெல்த் திட்டமிடப்பட்டது. பல்லாண்டுக் காலனியாதிக்கத்தின் விளைவாக பிரிட்டன் தன் ஆட்சி நாடுகளுக்கு அரசியல் மையம் மட்டுமின்றி நிதி, பொருளாதாரக் கேந்திரமும் ஆகிவிட்டது. சுதந்திரப் பிரகடனம் இந்த நிலைமையை உடனேயோ விரைவிலோகூட மாற்ற முடியவில்லை. முன்னாள் காலனிகளையும் அரைக் காலனிகளையும் காமன்வெல்த் உறுப்பினர்கள் ஆக்குவதற்கு இந்த நிலைமையை பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகள் பயன்படுத்திக் கொண்டார்கள். காமன்வெல்த்தின் உதவியால் இந்த நாடுகள்மீது தங்கள் செல்வாக்கைக் கணிசமான அளவு நிலையாக வைத்திருக்கலாம் என்று அவர்கள் எண்ணினார்கள்.

பிரான்சின் ஆளும் வட்டாரத்தினரும் இதே போன்ற ஒன்றிணைப்பை ஏற்படுத்த முயன்றூர்கள். 1958ல் ''பிரெஞ்சு-ஆப்பிரிக்கச் சங்கம்'' நிறுவப்பட்டது. மேற்கு, பூமத்திய ரேகை ஆப்பிரிக்காவைச் சேர்ந்த தன் காலனிகளை பிரான்ஸ் இதன் உறுப்பினர்கள் ஆக்கிற்று. இந்தச் சங்கம் வாழ்திறன் அற்றது எனத் தெரிந்ததும் 1960லேயே அது ''புதுக்கப் பட்டது''. பிரான்சுடன் விசேஷ ஒப்பந்தங்கள் செய்து கொண்டால் சங்கத்தின் உறுப்பு நாடுகள் ''சங்கத்தின்'' விடுதலை அடைந்த அரசுகள் ஆகும் உரிமை பெற்றன. இந்த ஒப்பந்தங்களோ, இந்நாடுகளின் அரசுரிமையைப் பெரிதும் குறுக்கிவிட்டன. இந்தச் ''சங்கம்'' செத்துப்பிறந்தது என்ருலும் அது சம்பந்தமாக அதன் உறுப்பினர்கள் பிரான்சுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் இந்த நாடுகள்மீது பாதிப்பு விளைப்பதற்குரிய வலிய சாதனங்களாக பிரான்சுக்குப் பயன்பட்டன.

''இரு தரப்பாரும்'' வெளிநாட்டுக் கொள்கை பற்றிய முக்கியமான பிரச்சினைகள் குறித்துப் பரஸ்பரம் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் கலந்தாலோசிக்கவும், இவை பற்றித் தங்களது நிலைகளையும் நடவடிக்கைகளையும் பரஸ்பரம் இசைவித்துக் கொள்ளவும் வேண்டும் என்று மேற்குறித்த ஒப்பந்தங்களின் ஒரு பகுதியில் கட்டாய நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது. ''இரு தரப்பாருக்கும்'' கட்டாய நிபந்தனை என்ற, வெளிக்குச் சமத்துவம் உள்ளது போன்ற சூத்திரம் எதார்த்தத்தில் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் ஒரு தரப்பு ஆதிக்கத்தையே குறிக்கிறது என்பது புரியக் கூடியதே.

தவிர, எந்த நாடுகளிலும் சர்வதேச ஸ்தாபனங்களிலும் ''சங்கத்தின்'' உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் இல்லையோ அவற்றில் இந்நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் இவற்றின் நலன்களையும் இவற்றினுடைய பிரஜைகளின் நலன்களையும் பாதுகாப்பதற்கும் பிரான்சு பொறுப்பு ஏற்றிருக்கிறது. குறித்த நாடுகளின் அரசாங்கங்கள் பிரெஞ்சு அரசதந்திர, கான்ஸல் பிரதிநிதிகளுக்குச் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் தங்கள் உத்தரவுகளை, அதுவும் பிரெஞ்சு அரசாங்கத்தின் வாயிலாக மட்டுமே, அனுப்ப ''உரிமை'' பெற்றுவிட்டதால் நிலைமை என்னவோ மாறிவிடுவதில்லை.

''சங்கத்தின்'' உறுப்பினர்கள் ஆகாத அயனமண்டல

ஆப்பிரிக்க முன்னுள் காலனி நாடுகள்மீதும் பிரான்சு இவையே போன்ற உடன்படிக்கைகளைச் சுமத்தியிருக்கிறது. போதாக் குறைக்கு, ஆப்பிரிக்காவில் உள்ள (கினி, மாலி, அப்பர் வோல்ட்டா மூன்றும் நீங்கலாக) தன் முன்னுள் காலனிகள் எல்லாவற்றுடனும் பிரான்சு ''பரஸ்பரத் தற்காப்பு'' ஒப்பந் தங்களும் செய்து கொண்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத் தில் ''பரஸ்பர'' என்ற உபசாரச் சொல் முன்னுள் ஆட்சித் தலைமை நாடாகிய பிரான்சின் ஒரு தரப்பு அனுகூலங்களையும் சலுகைகளையும் திரையிட்டு மறைக்கிறது என்று கூறவே வேண்டியதில்லை.

பிரான்சுக்கும் ஆப்பிரிக்காவில் உள்ள அதன் முன்னுள் காலனிகளுக்கும் இடையே இராணுவ ஒத்துழைப்பு குறித்து ஏற்பட்ட ஒப்பந்தங்கள் ''பிரான்சு வெளியேறுவதற்கு அறி குறி'' என மதிக்கப்பட்டாலும் ''தேசீயவாதத்தின் காரண மாக விளைந்த புதிய அரசியல் நிலைமைக்கு ஏற்ப பிரான்சு கறுப்பு ஆப்பிரிக்காவில் நிலவுவதற்கான தகவமைப்பு எனவே அதைக் கருத வேண்டும்'' என்கிறுர் சட்ட இயல் டாக்டர் பட்டம் பெற்ற மோரீஸ் லீகோ.[1] பிரான்சின் குடியரசுத் தலைவர் ஆணைப்படி அவர் மேற்கண்ட மதிப்பீட்டைச் செய் தார்.

உதாரணமாக பிரான்சுக்கும் ஸெனெகாலுக்கும் ஏற் பட்டுள்ள உடன்படிக்கைப்படி ஒப்பந்தம் செய்து கொண் டுள்ள இரு தரப்பாரது சைனியங்களுக்கும்—நடப்பிலோ, பிரெஞ்சுச் சைனியத்துக்கு மட்டுமே — உடன்படிக்கை செய்து கொண்டுள்ள அரசுகளின் நிலப் பிரதேசத்திலும் வானவெளியிலும் கடல் பிரதேசத்திலும் கட்டின்றி எந்த இடத்திற்கும் செல்லவும், அவற்றின் துறைமுக, இருப்புப் பாதை, மோட்டார்ச்சாலை, விமான நிலைய வசதிகளையும், தபால் போக்குவரத்தையும் வானெலி நிலையங்களையும் உப யோகிக்கவும் இந்தச் சாதனங்களைத் தங்கள் உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளும் உரிமையைச் செயல்படுத்துமாறு அரசு களிடம் கோரவும் உரிமை உண்டு.

நைஜர், சாத், மாரிட்டானியா, காபோன், ஸெனெ கால், மலாகாசியக் குடியரசு, காமெரூன் ஆகியவற்றின் பிரதேசங்களில் பிரெஞ்சுக் காவல் படை முகாம்கள் இன்றள வும் இருந்து வருகின்றன. இவற்றின் வேலை என்ன என்பது

1964ல் காபோனில் நடந்த நிகழ்ச்சிகளில் வெளியாயிற்று. அப்போது பிரெஞ்சுப் பாரஷூட் படையினர் பாரிஸுக்கு இணக்கமான குடியரசுத் தலைவர் லெஓன் ம்பா சர்க்காரைத் தங்கள் பாதுகாப்பில் எடுத்துக் கொண்டனர். 1960ல் காங்கோவில் (பிராஸவீல்) பாதிரி யூலூவின் சர்க்கார் தரப்பிலும், 1960லும் 1961லும் காமெரூனிலும், 1963ல் நைஜரிலும், 1960ல் மாரிட்டானியாவிலும் அதே காபோனிலும் பிரெஞ்சுப் படைகள் இவ்வாறே தலையிட்டன.

பிலிப்பைன் நாட்டின் விடுதலைப் பிரகடனத்தை ஒட்டிச் சமத்துவம் அற்ற இராணுவ, பொருளாதார ஒப்பந்தங்கள் அந்நாட்டின்மீது அமெரிக்க ஐக்கிய நாடுகளால் சுமத்தப்பட்டன. இந்நாட்டில் தன் இராணுவ தளங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 23 பிரதேசங்களை 99 ஆண்டுகள் உபயோகிக்கும் உரிமையை அமெரிக்க ஐக்கிய நாடுகள் தனக்கு வைத்துக் கொண்டிருக்கிறது. பிலிப்பைனில் அது அனேக இராணுவ தளங்களை அமைத்துள்ளது. கிளார்க் பீல்டு என்னும் இடத்தில் உள்ள மிகப் பெரிய விமான தளம் இவற்றில் ஒன்று. அடிமைப்படுத்தும் இந்த ஒப்பந்தங்களை மறு பரிசீலனை செய்வது குறித்து 1959லிருந்து நடந்து வரும் பேச்சுவார்த்தைகள் அமெரிக்க அரசாங்கம் மேற்கொண்டுள்ள நிலை காரணமாக இதுவரை முடிவான பயன் எதுவும் விளைக்கவில்லை.

பிலிப்பைன்மீது சுமத்தப்பட்டுள்ள பொருளாதார, வர்த்தகப் பொறுப்புக்களின் அடிமைப்படுத்தும் தன்மையை டில்லியில் (1968, பிப்ரவரி-மார்ச்சில்) நடந்த ஐ. நா. வர்த்தக, அபிவிருத்தி மாநாட்டின் இரண்டாவது கூட்டத்தில் பிலிப்பைன் பிரதிநிதி ஆற்றிய உரையிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அமெரிக்க ஐக்கிய நாடுகள்பால் எந்த அரசாங்கத்தின் விசுவாசத்தைச் சந்தேகிப்பதே கடினமோ அதன் பிரதிநிதி ஆற்றிய உரை என்பதால் இது இன்னும் அதிகப் பிரமாணபூர்வம் உள்ளது ஆகிறது. பிலிப்பைன் பிரதிநிதியின் சொற்படி, சலுகை வசதிகள் பற்றிய அமெரிக்க-பிலிப்பைன் ஒப்பந்தம் அவரது நாட்டுச் சந்தையில் விருப்பம் போலச் செயல் புரியும் வரையறை அற்ற சுதந்திரத்தை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகபோக நிறுவனங்களுக்கு அளித்துள்ளது. அமெரிக்கச் சரக்குகள் உள் புகுவதற்குச் சாதகமான நிலைமைகளை அது ஏற்படுத்தியிருக்கிறது. இந்த ஒப்பந்

தம் மறைமுக ஆபத்து நிறைந்தது என்று பிலிப்பைன் பிரதிநிதி அழுத்திக் கூறினர். ஏற்றுமதி வாய்ப்புள்ள தொழில் துறைகளை பிலிப்பைனில் நிறுவ உதவாதது மட்டும் இன்றி உள்நாட்டுச் சந்தைக்குத் தேவையான சாமான்கள் தயாரிக்கும் தொழில் துறைகளில்கூட மந்தம் ஏற்படவே அது வகை செய்தது என்ருர் அவர்.

புதுக் காலனியாதிக்க முறையின் இராணுவ-அரசியல், அரசியல் வடிவங்களில் ஒருவேளை இன்னும் அதிக முக்கியத்துவம் உள்ள மற்ருெரு பகுதி காலனியாட்சி ஆண்டுகளின் உறவுகளது நேரடித் தொடர்ச்சியோ விளைவோ அல்ல. இந்த வடிவங்களும் வழிகளும் ''காலனியாட்சிக்குப் பிந்திய காலப் பகுதியில்'' தோன்றின. சடங்கு வகையில் சுதந்திரமான முன்னுள் அடிமை நாடுகளை உள்ளூற இலக்காகக் கொண்டவை இவை. குறித்த வகையான ''புதுமையும்'' தனித்தன்மையும் இவற்றின் சிறப்பு. மரபு வழி வந்த காலனியாட்சி முறையின் சுவடுகள் இவற்றின்மீது ஒப்புநோக்கில் குறைவாகவே காணப்படுகின்றன. இங்கு முதன்முதலில் குறிப்பிட வேண்டியவை கூட்டுப் புதுக் காலனியாதிக்க முறை என்பதன் கருவிகளே. முன்புங்கூட, காலனியாட்சி முறை எவையேனும் வல்லரசுகளின் காலனியாட்சி ஏகபோக உரிமைகளின் வடிவிலேயே செயல்பட்டது எனினும் தனித்தனி ''தேசீயக்'' காலனியாட்சி முறைகளின் வெறும் கூட்டுத் தொகையாக அது இருந்ததே இல்லை. புதுக் காலனியாதிக்க முறை தோன்றியதும் காலனியாட்சி முறையின் இந்தச் ''சர்வதேசத்'' தன்மை மேலும் வலுப்பட்டு வருகிறது. **காலனியாதிக்க ஏகபோக உரிமைக்கான பெரு முயற்சி முன் போலவே எஞ்சியுள்ளது, மிகுந்த வலிமையுடன் வெளிப்படுகிறது என்ருலும், ஒன்றுசேரவும் தேசீய விடுதலை இயக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் தங்கள் பிரயாசைகளை ஒருங்கு இணைக்கவும் காலனியாதிக்கவாதிகள் கொண்டுள்ள போக்கு துலக்கமாகப் புலப்படுகிறது.**

இத்தகைய போக்குக்குக் காரணம் என்ன? முதல் காரணம் என்னவென்ருல் ''மூன்ருவது உலகின்'' வரலாற்று விதி ஏகாதிபத்தியம் முழுமைக்கும் முதன்மை முக்கியத்துவம் பெற்றுவிட்டது. இந்த நிலப்பரப்பில் முதலாளித்துவ உறவுகளை விதைப்பது உலக முதலாளித்துவம் அனைத்தினதும்

கடமை ஆகிவிட்டது. மேலும், சோஷலிஸ அமைப்பு நாடுகளின் ஆதரவு பெற்ற விறல் மிக்க தேசீய விடுதலை இயக்கத்தைத் தனித்து நின்று எதிர்ப்பது காலனியாட்சி வல்லரசுகளுக்கு அசாத்தியம் ஆகிவிட்டது. காலனியாதிக்க வாதிகளின் ''ஒன்று சேரும்'' போக்குக்கு இதுவும் ஒரு காரணம் ஆகும்.

காலனியாதிக்கத்தின் (சிறப்பாக, ''உதவி'' எனப்படுவதன் வடிவில் பொருளாதார ஆதிக்கத்தின்) விஸ்தரிப்பை அனேக ஆண்டுகள் கணிசமான அளவு தன்னந்தனியே நடத்த முயன்று வந்த அமெரிக்க ஐக்கிய நாடுகள், அண்மை ஆண்டுகளில் பிற ஏகாதிபத்திய அரசுகளின் ஒத்துழைப்பைப் பெறுவது கட்டாயம் ஆகிவிட்டது என்பது கவனிக்கத்தக்கது. ஜார்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்கள் முன் 1965, ஜூன் மாதம் பேசுகையில் அமெரிக்க அயல்விவகார அமைச்சர் டீன் ரஸ்க் பின்வருமாறு கூறினர்: ''வர வர இந்தப் பிரச்சினை தனித்தனி தேசீய அரசுகளினுல், நம்முடையது போன்று அவ்வளவு விறல்மிக்க அரசினுல் கூட, வெற்றிகரமாகச் சமாளிக்கக்கூடிய எல்லைகளுக்கு வெளியே போய்க் கொண்டிருக்கிறது. வெற்றிகரமாகச் செயல் புரிவதற்கு இன்னும் பெரிய குழு அமைப்புக்கள் தேவை.''

க்யூபாப் புரட்சிக்கு எதிரான போராட்டத்தில் தன் நாட்டோ கூட்டாளிகளின் ''ஒருமைப்பாட்டை'' அமெரிக்க ஐக்கிய நாடுகள் பகிரங்கமாக வேண்டியது. அதாவது வெகு நீண்ட காலமாக எதைத் தனக்கு மட்டுமே உரிய பரம்பரைச் சொத்தாகக் கருதி வந்ததோ அந்தப் பிரதேசத்தில் தன் கூட்டாளிகளின் தலையீடு அவசியம் என்று ஒப்புக்கொண்டது. ''முன்னேற்றத்திற்கான ஐக்கியம்'' என்னும் ஸ்தாபனத்தில் சர்வதேச நிதி நிறுவனங்களோடு கூடவே ஐரோப்பிய வல்லரசுகளும் ஜப்பானும் பங்கு கொள்ள வகை செய்யப் பட்டிருக்கிறது. வியத்நாமியப் போர் விஷயத்தில் மற்ற ஏகாதிபத்திய வல்லரசுகள் ''ஒருமைப்பாட்டைக்'' காட்டுமாறு அமெரிக்க ஆளும் வட்டாரங்கள் பல முறை வருந்தி அழைத்தன. அவற்றை இந்தப் போரில் இழுத்துவிட அமெரிக்க ஆளும் வட்டாரங்கள் விடாப்பிடியாக முயன்றன. ''உதவியை'' ''சர்வதேசீயம் ஆக்கவும்'' ''முன்ருவது உலகின்''

விஷயத்தில் ஏகாதிபத்திய வல்லரசுகளின் பொருளாதார நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும் அறுபதுக்களின் தொடக்கத்திலிருந்தே அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒரே முனைப்புடன் பாடுபட்டு வருகிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் விஷயமே இது என்றால் குறைந்த விறல் உள்ள முதலாளித்துவ அரசுகளைப்பற்றிச் சொல்லவே வேண்டாம். ஒரு காலத்தில் தங்கள் ஏகபோக உரிமையாக இருந்த சொந்தச் செல்வாக்கு மண்டலத்தில் மற்ற வல்லரசுகளை ஈர்க்க அவை சில சமயங்களில் வெளிப்படையாகவே முயல்கின்றன. தனது காலனிக் கொள்கையில் அவை ''அக்கறை கொள்ளுமாறு'' செய்யவும், தேசீய விடுதலை இயக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் அவற்றின் ஆதரவைப் பெறவும் இந்த வல்லரசுகள் பாடுபடுகின்றன. எடுத்துக்காட்டாக, பிரான்சு ஆப்பிரிக்காவில் தன் நிலைகளை வலுப்படுத்திக் கொள்வதற்கு மற்ற ஐரோப்பிய அரசுகளின் வளங்களைப் பயன்படுத்தப் ''பொதுச் சந்தையின்'' வரம்புகளுக்குள் பெரு முயற்சி செய்கிறது.

காலனியாதிக்க முறையில் ''ஒன்று இணையும்'' போக்கு, உலக முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில், ஏன், ஏகாதிபத்திய அமைப்பு முழுவதிலுமே விரிவாகத் தொடங்கியுள்ள ஆழ்ந்த பொருளாதார, அரசியல் நிகழ்முறைகளாலும் ஊட்டம் பெறுகிறது. இந்த நிகழ்முறைகள் தொடங்கியிருப்பதன் காரணம் அரசு-ஏகபோக முதலாளித்துவம் மேலும் மேலும் அடிக்கடி தேசீய எல்லைகளைக் கடந்து செல்வதும் ''தேசீயத்துக்கு மேற்பட்ட'' கூட்டுக்களை (இதனால் ஏகாதிபத்தியங்களுக்குள் முரண்பாடுகள் தீவிரம் அடைகின்றன என்றாலும்) ஏற்படுத்துவதுந்தான்.

எகிப்தின்மீது ஆங்கில-பிரெஞ்சு-இஸ்ரேல் ஆக்கிரமிப்பு, பிரான்சினதும் போர்த்துகலினதும் காலனிப் போர்களுக்கு நிதியுதவியும் இராணுவ-தொழில்நுட்ப ஆதரவும், 1958ல் மேற்கு ஆசிய நாடுகளில் அமெரிக்க-பிரிட்டிஷ் தலையீடு, 1960ல் லுமும்பாவின் தேசபக்த அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது, 1964ல் ஸ்டான்லிவீல் பகுதியில் படைகளை இறக்குவதற்கு பிரிட்டிஷ்-அமெரிக்க-பெல்ஜியக் கூட்டு நடவடிக்கை, வியத்நாமில் அமெரிக்க ஆக்கிரமிப்பில் ஆஸ்திரேலியா, நியூஜீலாந்து, ஜப்பான், வேறு நாடுகள்

ஆகியவற்றின் ஒருமைப்பாடும் பங்கு பற்றுதலுங்கூட, கானாவில் க்வாமே ந்க்ருமா அரசாங்கத்துக்கு எதிராகவும் அந்நாட்டில் இராணுவச் சதிகாரர்கள் நடத்திய பலவந்த அரசாங்க மாற்றத்துக்கு ஆதரவாகவும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பிரிட்டனும் எடுத்துக் கொண்ட கூட்டு நடவடிக்கைகள், கென்யாவில் இடதுசாரிச் சக்திகளுக்கு எதிராக இதே அரசுகள் மேற்கொண்ட ஒருங்கிணைந்த செயல்கள், 1965 செப்டெம்பரில் இராணுவப் பலாத்கார மாற்றத்தின் விளைவாக இந்தோனேசியாவில் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்துக்கு உதவும் பொருட்டு ஏகாதிபத்திய வல்லரசுகள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள்—இவை எல்லாம் கடந்த 10—15 ஆண்டுகளாகக் ''கூட்டுக்'' காலனியாதிக்க முறை மேற்கொண்ட இராணுவ-அரசியல் நடவடிக்கைகளுக்குச் சில எடுத்துக்காட்டுகள் ஆகும்.

ஏகாதிபத்தியவாதிகளை வேறுபடுத்தும் ஆழ்ந்த முரண்பாடுகள் இருந்த போதிலும் அவர்கள் முந்தையக் காலனி நிலப்பரப்புக்குரிய முழு முழுப் பிரதேசங்களின் எல்லைகளுக்குள், சில வேளைகளில் இந்த நிலப்பரப்பு முழுவதின் வட்டத்துக்குள்ளும்கூட, நீடித்த ஒருங்கிணைவுடன் செயலாற்ற முயல்கிறார்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, ஜப்பான், பிற நாடுகள் ஆகியவற்றின் தலைவர்களுக்கு இடையே இந்த விஷயம் பற்றிப் பல முறை பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன.

நாட்டோ போன்ற ''பொதுவான'' ஏகாதிபத்திய ஐக்கியங்களின் எல்லைகளுக்கு உள்ளும், ஆசியா, ஆப்பிரிக்கா, இவற்றின் எவையேனும் பிரதேசங்களைச் செயற்களமாகக் கொண்ட இராணுவ-அரசியல், அரசியல்-பொருளாதாரக் கூட்டுகள் ஸ்தாபனங்களின் வரம்புகளுக்கு உள்ளும் இத்தகைய ஒருங்கிணைவு செயல்படுத்தப்படுகிறது. இரண்டாவது வகை ஸ்தாபனங்கள் பெரும்பாலானவற்றில் ஏகாதிபத்திய வல்லரசுகளோடு கூடவே சில கிழக்கத்திய நாடுகளும் பங்கெடுத்துக் கொள்கின்றன.

''கூட்டுக்'' காலனியாதிக்க முறையின் மிக முக்கியக் கருவி நாட்டோ ஆகும். இந்த அட்லாண்டிக் கூட்டு ஸ்தாபனம் நிலவும் ஆண்டுகளில் இதன் செயல்கள் வலுவும் விரிவும் பெற்றுள்ளன. நாட்டோவின் மையக் கூட்டங்களில் அண்மை

ஆண்டுகளின் முக்கியக் காலனியாதிக்கப் பிரச்சினைகள் எல்லாம் அல்லது அனேகமாக எல்லாம் விவாதிக்கப்பட்டன. தேசீய விடுதலைப் போராட்டம் நிகழும் பிரதேசங்களில் ஏகாதிபத்திய வல்லரசுகளின் கூட்டுச் செயல்கள் அடிக்கடி ஒருங்கிணைக்கப்பட்டன. நாட்டோ கவுன்சிலில் க்யூபாவுக்கு எதிரான நடவடிக்கைகள் யோசித்து முடிவு செய்யப்பட்டன. வியத்நாம் பிரச்சினை குறித்தும், மேற்கு ஆசிய, ஆப்பிரிக்க நிலைமை பற்றியும் அடிக்கடி விவாதிக்கப்பட்டது. 1958ம் ஆண்டு முதல் நாட்டோவில் ஆப்பிரிக்கப் பிரச்சினைகளை ஆராய்வதற்குத் தனிக் கமிட்டி ஒன்று நிலவி வருகிறது. ஆப்பிரிக்கக் கண்டத்தில் ஏகாதிபத்தியவாதிகளின் அரசியல் போக்கை ஆலோசித்து வகுப்பது இதன் வேலை. அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மன் கூட்டுக் குடியரசு, போர்த்துகல், இத்தாலி, பெல்ஜியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்தக் கமிட்டியின் உறுப்பினர்கள்.

நாட்டோவின் நேர்முக, மறைமுக உதவியுடன், அமெரிக்க ஆயுதங்களையும் பெரும் அளவு அமெரிக்கப் பணத்தையும் கொண்டு அல்ஜீரியா மக்களுக்கு எதிராகப் போர் நடத்தப்பட்டது. அட்லாண்டிக் இராணுவத் தலைமைக் குழுவின் இசைவுடன் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் அனேகமாகத் தங்கள் சைனியம் முழுவதையும் (இது நாட்டோ படைகளின் பகுதியாக இருந்தது, அதன் ஆயுதங்களால் சன்னத்தம் ஆகியிருந்தது) அல்ஜீரியாவுக்கு அனுப்பிவிட்டார்கள். பிரான்சில் அதன் பொறுப்புக்களை நாட்டோ படையினர் ஏற்றுக் கொண்டார்கள்.

பலவீனமான, பின்தங்கிய நாடான போர்த்துகலுக்கு நாட்டோ கூட்டாளிகளின் ஆதரவு கிடைத்திராவிட்டால், அதன் ஆயுதக் கிடங்குகள் அமெரிக்க ஆயுத தளவாடங்களால் மேலும் மேலும் நிறைக்கப்படாவிட்டால், பல லட்சம் ஆப்பிரிக்க மக்களைத் தன் ஆட்சியின் கீழ் வைத்திருப்பதும், அங்கோலா, கினி (பிஸாவூ), மொஸாம்பிக் ஆகியவற்றின் தேசபக்தர்களைக் கொடுமையாகச் சித்திரவதை செய்வதும் அதற்கு முடிந்திராது என்பதில் சந்தேகத்திற்கே இடம் இல்லை. ''நாட்டோ நாடுகளிடமிருந்து உதவி பெறுவதன் காரணமாகவே போர்த்துகல் தாக்குபிடிக்க முடிகிறது''[2]

என்று கூறினர் ''மொஸாம்பிக் விடுதலைக் கூட்டணித்'' தலைவர் எதுவார்தோ மொந்த்லானே.

போர்த்துகலது காலனியாட்சியின் விதியை நிர்ணயிப்பதில் மட்டுமே அல்ல, ஆப்பிரிக்காவின் தென் பகுதியில் இனவெறியும் காலனியாட்சியும் பரவியுள்ள இடப்பரப்பு அனைத்தும் நிலவுவதிலும் நாட்டோவின் நிலை முக்கியப் பங்கு ஆற்றுகிறது. உலகப் பொதுஜன அபிப்பிராயத்துக்கு மேலும் மேலும் அதிகத் துடுக்குடன் சவால் விட்டு வரும் இனவெறியர்களது நிலைக்குப் பின்பலமாக இருக்கிறது இந்த ஆக்கிரமிப்பு ஸ்தாபனம். போர்த்துகீசிய விமானங்கள் ஜாம்பியக் கிராமங்கள் மீது குண்டுத் தாக்கு நடத்தியதை ஒட்டி 1968 ஏப்ரலில் லுஸாக்காவில் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தின்போது பேசுகையில் ஜாம்பியாவின் குடியரசுத் தலைவர் கென்னத் கவுண்டா பின்வருமாறு கூறினர்: ''இன்று ஜாம்பியாவுக்கு எதிராகப் போர் தொடுத்த நிலையில் இருப்பவை போர்த்துகலும் தென்னுப்பிரிக்காவும் கலகக்கார ரொடீசியாவும் மட்டுமே அல்ல, நாட்டோ முழுவதுமே அந்த நிலையில் இருக்கிறது. நாட்டோ நியாயத்துக்கு எதிராகப் போர் நடத்துகிறது. நாட்டோ விடுதலைக்கும் சுயாதீனத்துக்கும் எதிராகப் போர் நடத்துகிறது. உலகின் இந்தப் பகுதியில் தன் அருவருப்பூட்டும் தலையைத் தூக்கும் நாஜிஸத்துக்கு ஆதரவாக நாட்டோ போர் நடத்துகிறது.''[3]

நாட்டோ கமிட்டிகள் காலனியாதிக்க முறையின் இராணுவ-அரசியல் அம்சங்களை மட்டும் அல்ல, பொருளாதார அம்சங்களையும் ஆராய்கின்றன. உதாரணமாக ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏகாதிபத்திய அரசுகளின் தனியார் முதலீடுகளைத் தூண்டி ஊக்குவது பற்றி நாட்டோவில் ஆலோசிக்கப்பட்டது. மூலதன ஏற்றுமதியை இரு மடங்கு ஆக்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

புதுக் காலனியாதிக்கத்தின் மேலும் மேலும் அதிகமாகக் கையாளப்பட்டு வரும் மிகக் குயுக்தியான செயல் தந்திரம் நாட்டோ அலுவலகத்திலும் கமிட்டிகளிலுமே உதயம் ஆயிற்று. ஏகாதிபத்திய எதிர்ப்பு மனப்பான்மை சிறப்பாக வலுவாயிருக்கும் பிரதேசங்களில் காலனியாட்சியால் கறைப்படாத அரசுகளைப் புதுக் காலனியாதிக்க நுழைவின் ''துரப்பணச் சக்தி''யாகக் கையாள்வதையே இங்கே குறிப்பிடுகிறோம். இவ்

வாறு நுழையும் அரசுகள் தங்களது சொந்த ''தேசீய'' ஏகாதிபத்திய நோக்கங்களையே ஈடேற்ற முதன்மையாகப் பாடுபடுகின்றன என்றாலும் அவற்றின் விஸ்தரிப்பு ஏகாதிபத்தியம் அனைத்தின் தாக்குதலாகவும் எதார்த்தத்தில் விளங்குகிறது. இதுதான் இந்தச் செயல்தந்திரத்தின் தனிச் சிறப்பு.

புதுக் காலனியாதிக்க விஸ்தரிப்பின் இவ்விதப் பரப்புவோராகவும் முன்னணிப் ''படையாகவும்'' ஜெர்மன் கூட்டுக் குடியரசும் ஜப்பானும் இத்தாலியும் ஆப்பிரிக்காவில் இவற்றோடு இஸ்ரேலுமே முன்பு பங்காற்றின. வெகு காலமாகவே காலனிகளைப் பறிகொடுத்துவிட்ட மேற்கு ஜெர்மனி போலிக் காலனியாதிக்க எதிர்ப்பு என்ற தடித்த சொல்லாடம்பர மறைப்பினால் தன்னை மூடிக் கொள்கிறது. ஜப்பானிய ஏகபோக நிறுவனங்கள் ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சூறையாடியதால் ஒப்புநோக்கில் கறைபடாதவை. இத்தாலிய ஏகாதிபத்தியத்தின் ஒப்புநிலைப் பலவீனம் காரணமாகச் சில விடுதலை பெற்ற நாடுகளின் தேசீயவாத வட்டாரங்கள் இத்தாலிய மூலதனத்தைக் ''குறைவான கேடு'' என மதிக்கின்றன. இஸ்ரேல் சிறு நாடு என்பதும் சில ஆப்பிரிக்க நாடுகளின் அரேபிய விரோத மனப்பான்மையும் இஸ்ரேலின் துருப்புச் சீட்டுகளாகப் பயன்படுகின்றன. இஸ்ரேலின் தூதுவர்கள் இந்தச் சீட்டுக்களைத் திறமையாக ஆடுகிறார்கள்.

அண்மைக் காலத்தில் சிறப்பு அம்சமாக விளங்குவது என்னவென்றால் நாட்டோவில் சேர்ந்த சிறு நாடுகளான நார்வே, டென்மார்க், கானடா ஆகியவைகூட இம்மாதிரி நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கிவிட்டன என்பதே. வளர்ச்சி அடைந்து வரும், முதன்மையாக ஆப்பிரிக்க நாடுகளில் இவற்றின் முயற்சிகள் பொருளாதார, பண்பாட்டு ஒத்துழைப்பில் விரிவடைந்து வருகின்றன. கானடாவின் தனிச் சிறப்பு இராணுவத் துறையிலும் அது ஒத்துழைப்பதுதான். ஜப்பானிய, மேற்கு ஜெர்மானிய மூலதனத்தின்பால் எச்சரிக்கையும் அவநம்பிக்கையும் வளர்ந்து வருவது இதற்கு முக்கியக் காரணங்களில் ஒன்று.

''கூட்டுப்'' புதுக் காலனியாதிக்கவாதியின் காரியத்தை, குறிப்பிட்ட பிரதேச வரம்புகளுக்குள்தான் என்றாலும், நிறைவேற்றி வருகிறது அனேக ஏகாதிபத்திய நாடுகளின்

வேருெரு ஆக்கிரமிப்பு ஐக்கிய நிறுவனமான ''பசிபிக் மா கடல் பாதுகாப்பு உடன்படிக்கை ஸ்தாபனம்'' (ஆநிஸ்யூஸ்)*. வியத்நாமிய மக்களுக்கு எதிரான ஆக்கிரமிப்புப் போரில் இதன் எல்லா உறுப்பு நாடுகளும் ஊக்கத்துடன் பங்கு கொள் வதே இதன் காலனியாதிக்கக் கொள்கைப் போக்கை ஐயத் துக்கு இடமின்றிக் காட்டும் சான்று ஆக விளங்குகிறது.

''கூட்டுக்'' காலனியாதிக்க முறையின் இன்னெரு முக் கிய இராணுவ-அரசியல் வகை ஸீஏட்டோ** (தென்கிழக் காசிய உடன்படிக்கை ஸ்தாபனம்) ஸென்டோ*** (மத்திய உடன்படிக்கை ஸ்தாபனம்) போன்ற கூட்டணிகள் ஆகும். ஏகாதிபத்திய வல்லரசுகளோடு கூடவே சில விடுதலை பெற்ற நாடுகளும் இவற்றில் அங்கம் வகிக்கின்றன. முன்னர் ஏகாதி பத்தியவாதிகள் கிழக்கு நாடுகள்மேல் சுமத்திய சமத்துவம் அற்ற ஒப்பந்தங்கள் வழக்கமாக இருதரப்பினவாக இருந் தன. காலனியாதிக்க முறையின் இந்த வடிவம் இப்போதும் தன் முக்கியத்துவத்தை இழந்துவிடவில்லை. தங்கள் முன்னுள் ஆட்சிப் பிரதேசங்களுடன் பிரிட்டனும் பிரான்சும் செய்து கொண்டிருக்கும் உடன்படிக்கைகள் மட்டும் இன்றி, பாக் கிஸ்தான், துருக்கி, ஈரான், டியூனீஷியா, லைபீரியா ஆகிய நாடுகளுடன் அமெரிக்க ஐக்கிய நாடுகள் செய்து கொண்டி ருக்கும் இராணுவ ஒப்பந்தங்களும் இதற்குச் சான்று பகர் கின்றன. லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள இருதரப்பு இராணுவ ஒப்பந்தங்களைப் பற்றியோ கூறவே வேண்டாம். ஏனெனில் லத்தீன் அமெரிக்காவில், க்யூபாவையும் மெக்ஸிக் கோவையும் தவிர்த்து மற்ற எல்லா இடங்களிலும், வட அமெரிக்க இராணுவ மிஷன்கள் செயலாற்றி வருகின்றன.

ஆயினும் தற்போதைய நிலைமைகளில் இவற்றைவிட முக்கியத்துவத்தில் குறையாத, ஒருவேளை அதிக முக்கியத்து

---

* இதன் உறுப்பு நாடுகளாவன: அமெரிக்க ஐக்கிய நாடுகள், நியூஜீலாந்து, ஆஸ்திரேலியா.

** ஸீஏட்டோவின் உறுப்பு நாடுகளாவன: பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடுகள், பாக்கிஸ்தான், தாய் லாந்து, பிலிப்பைன், ஆஸ்திரேலியா, நியூஜீலாந்து.

*** ஸென்டோவின் உறுப்பு நாடுகளாவன: பிரிட்டன், ஈரான், பாக்கிஸ்தான், துருக்கி.

வம் உள்ள, எந்த நிலையிலும் புதுக் காலனியாதிக்க முறைக்கு அதிகம் சிறப்பாக உரிய இராணுவ-அரசியல் வடிவமாக விளங்குபவை, விடுதலை பெற்ற நாடுகளை ஒருசில ஏகாதிபத்திய அரசுகளுடன் இணைக்கும் கூட்டணிகளே ஆகும்.* ஆனால் இந்தக் கூட்டணிகள் எல்லாவற்றிலும்கூட மேலாணை செலுத்துபவர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளே. ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளுடன் அமெரிக்க ஐக்கிய நாடுகள் செய்து கொண்டிருக்கும் மேற்குறித்த இருதரப்பு ஒப்பந்தங்களில் ஒரு பகுதி, சாராம்சத்தில் ஸென்டோ அல்லது ஸீஏட்டோவுக்கு நிறை செய்வதாகப் பயன்படுகிறது என்பதை இங்கே சொல்லிவிடுவது பொருத்தமாய் இருக்கும்.

காலனியாதிக்கவாத, இராணுவ-அரசியல் கூட்டணிகள் ''கம்யூனிஸ அபாயத்துடன்'' போராடுதல் என்ற கோஷத்தின்கீழ் அமைக்கப்படுகின்றன. ஆனால் இது இந்தக் கூட்டணிகளின் அமைப்பாளர்களுடைய உண்மை நோக்கங்களை மறைப்பதற்கான மூடுதிரை தவிர வேறு இல்லை. இந்த நோக்கங்கள் யாவை? முதலாவதாக, கூட்டணிகளின் உறுப்பு நாடுகளது நிலப்பரப்பைத் தங்கள் இராணுவ-போர்த்தந்திரத் தாக்குமுனைகளாக மாற்றுவதும், இவற்றில் தங்கள் இராணுவ தளங்களை நிறுவுவதும் அல்லது நிலையாக வைத்திருப்பதும். இரண்டாவதாக—இது முக்கியமானது—இந்தக் கூட்டணிகளின் உறுப்பினரான முன்னாள் காலனிகள், சார்பு நாடுகள் மீதே இராணுவ-அரசியல் கட்டுப்பாட்டைச் செயல்படுத்தும் கருவிகளாக இந்தக் கூட்டணிகளை ஏகாதிபத்தியவாதிகள் பயன்படுத்துகிறார்கள். அதே போல, தேசீய விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான கருவியாகவும் இவற்றை அவர்கள் கையாள்கிறார்கள். தவிரவும், ஏகாதிபத்தியவாதிகளின் சூழ்ச்சிகளின்படி காலனியாதிக்கச் செயல்களில் ஆசிய நாடுகள் பங்காற்றுவது இந்தச் செயல்களை உண்மையில் தூண்டுபவர்களை உருமறைப்பதற்கும் ''ஆசியருக்கு எதிராக

---

* ''அமெரிக்க அரசுகளின் ஸ்தாபனத்தின்'' கீழ் ''அனைத்து அமெரிக்க'' இராணுவத்தை நிறுவ அமெரிக்க ஐக்கிய நாடுகள் செய்து வரும் விடாப்பிடியான முயற்சியில், லத்தீன் அமெரிக்க அரசியலில் இராணுவ-காலனியாதிக்கச் செயல்களைக் ''கூட்டு'' அடிப்படையில் நடத்த வாஷிங்டன் கொண்டுள்ள போக்கு வெளிப்படுகிறது.

ஆசியரின்'' போராட்டம் என்ற தோற்றத்தை இவற்றுக்கு அளிப்பதற்கும் உதவுகிறது.

ஒப்புநோக்கில் பலவீனமான அரசுகள் பெருத்த ஏகாதிபத்திய வல்லரசுகளுடன் ''ஒரே முகட்டின் கீழ்'' ஒன்றுபட்டிருப்பதே அவற்றுக்கு இடையே நிலவும் உறவுகளின் சமமின்மையைத் தீர்மானித்துவிடுகிறது. இந்த அரசுகளை அது ஏகாதிபத்தியவாதிகள்மீது சார்ந்திருக்கப் புரிகிறது.

கூட்டணிகள், அவற்றின் இயக்கு விசைகள் ஆகியவற்றின் உதவியால் ஏகாதிபத்தியவாதிகள் மக்கள் விரோத அரசாங்கங்களுக்கு ஆதரவு அளிக்கிறார்கள். ஆக்கிரமிப்பு ஐக்கியங்களில் இழுத்துப் பிணைக்கப்பட்ட நாடுகளின் உள், வெளி விவகாரக் கொள்கைப்போக்கின்மீது அவர்கள் பெரும் செல்வாக்கு செலுத்துகிறார்கள். இராணுவங்கள் சிறப்பாக முக்கியப் பங்கு ஆற்றும் இளம் அரசுகளின் படைகள்மீதும் தங்கள் செல்வாக்கைப் பரப்புகிறார்கள். கூட்டணிகளில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஆயுதப் போட்டியில் வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்படுகின்றன. இந்தப் போட்டி இந்நாடுகளுக்குப் பாதகமான அரசியல், பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தக் காரணம் ஆகிறது. இராணுவக் குழுக்கள் காளான்கள் போலப் பல்குகின்றன. அயல்நாட்டு இராணுவ ஆலோசகர்கள் இவற்றில் கடைக்கோடிப் பிற்போக்குக் கருத்துக்களைப் புகுத்தவும் எந்த முற்போக்கு நடவடிக்கைக்கும் தடைக்கல்லாக இவற்றை மாற்றவும் முயல்கிறார்கள். கிழக்கு நாடுகள் காலனியாதிக்க ஐக்கியங்களில் பங்கெடுத்துக் கொள்வதும் அவற்றின் பிரதேசங்களில் ஏகாதிபத்தியவாதிகளின் இராணுவத் தளங்கள் நிலவுவதும் இந்த நாடுகளில் அன்னிய ஏகபோக நிறுவனங்களின் முதலீடுகளுக்கும் ஓரளவு ''உத்தரவாதங்களாகப்'' பயன்படுகின்றன. முடிவாக, இராணுவக் கூட்டணிகள் அவற்றின் உறுப்பு நாடுகளை சோஷலிஸ அரசுகளுக்கு எதிர் நிறுத்தவும், வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளை இணையவிடாமல் பிரிக்கவும் சாதனங்களாகப் பணியாற்றுகின்றன.

ஸென்டோவும் ஸீஏட்டோவும் ஆற்றும் காலனியாதிக்க, ஏகாதிபத்திய ஆதரவுத் தன்மையுள்ள பங்கைப் புலப்படுத்தும் அவற்றின் சில செயல்கள் பின்வருமாறு: 1956-1957ல் சிரியாவுக்கு எதிராகவும் 1958ல் ஈராக் குடியரசுக்கு எதிராக

வும் தலையீட்டுக்கு ஆயத்தம்; 1958ல் மேற்கு ஆசியாவில் ஆங்கிலோ-அமெரிக்கத் தலையீட்டுக்கு எதார்த்த ஆதரவு; தெற்கு வியத்நாமில் ங்கோ தின் தியமின் கைப்பாவை அரசாங்கத்துக்கு ஆதரவு; சோவியத் யூனியனுக்கு எதிரான வேவு நடவடிக்கைகளின் பொருட்டு கூட்டணி உறுப்பு நாடு களின் பிரதேசங்கள் அமெரிக்க இராணுவக் குழுக்களால் பயன்படுத்தப்பட்டது; லாஓஸின் நடுநிலைமை மீறப்பட்டு அந்த நாட்டின்மீது வலதுசாரி தேசீயவிரோத அரசாங்கம் சுமத்தப்பட்டது; இந்தோனேசியாவில் சுகர்ணோ அரசாங்கத் துக்கு எதிராகக் குழிபறிக்கும் நடவடிக்கைகள்; கம்போடியா வுக்கும் பிற நடுநிலைமை ஆசிய நாடுகளுக்கும் எதிராக ஆத்திரமூட்டும் செயல்கள்.

புதுக் காலனியாதிக்க முறையின் வடிவங்கள் என்ற வகையில் இந்தக் ''கலப்புக்'' கூட்டணிகளின் உண்மைச் சாராம்சம் ஸீஏட்டோவின் உதாரணத்தில் வியத்நாம் போரினால் சிறிதும் சந்தேகத்துக்கு இடமின்றி அம்பலப்படுத்தப் பட்டுவிட்டது. அவதானிக்கையாளர்களின் கருத்துப்படி இந்தப் போர் ஸீஏட்டோவின் நடவடிக்கைகளுக்குத் துலக்க மாக உயிரோட்டம் ஊட்டிவிட்டது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பல ஐரோப்பியக் கூட் டாளிகள் அதன் வியத்நாமிய துர்ச்சாகசச் செயலில் சம்பந் தப்படாமல் ஒதுங்கிக் கொள்ள முயன்ற (அவ்வளவு அரு வருக்கத் தக்கது இந்த ''ஆபாசப் போர்'') அதே சமயத்தில், ஸீஏட்டோவின் உறுப்பு நாடுகள், அதுவும் ஆஸ்திரேலியா வும் நியூஜீலாந்தும் மட்டுமே அல்ல, அதன் மூன்று ஆசிய உறுப்பு நாடுகளில் இரண்டு (தாய்லாந்தும் பிலிப்பைனும்) தங்கள் படைப் பிரிவுகளை வியத்நாமுக்கு அனுப்பின. தாய் லாந்தோ, அநேகமாகத் தன் பிரதேசம் முழுவதையும் வியத் நாமிய மக்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு உரிய தளமாக உபயோகிக்கக் கொடுத்தது. சர்வதேச அரங் கில் அமெரிக்க ஏகாதிபத்தியம் மேலும் மேலும் தனித்து ஒதுக்கப்பட்டு வந்த நிலைமையில் அதற்கு மிகவும் அவசிய மாய் இருந்த தார்மிக ஆதரவை ஸீஏட்டோ நாடுகள் இவ் வாறு அளித்தன. அதோடு, வியத்நாமியப் போரில் ஆசிய நாடுகளும் ''பங்கு'' கொள்கின்றன என்ற மூடுதிரைக்குள் மறைந்து கொள்ள அதற்கு வாய்ப்பு தந்தன.

இங்கே ஒரு விஷயத்தை அழுத்திக் கூறிவிட வேண்டும். ஏகாதிபத்தியவாதிகள் எவ்வளவோ முயன்றுங்கூட, விடுதலை பெற்ற நாடுகளை இராணுவக் கூட்டுக்களில் சேர்க்கும் அவர்களுடைய திட்டங்கள் அடிப்படையில் தோல்வியே அடைந்தன. இந்தத் திட்டங்களுக்கு எதிரான போராட்டம் தேசீய விடுதலையைக் காப்பதற்குத் தேசபக்தர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளின் பிரதான வடிவங்களில் ஒன்று ஆகி விட்டது. ''பாக்தாது உடன்படிக்கை''யிலிருந்து ஈராக் 1958ல் விலகியபின் ஏகாதிபத்திய இராணுவக் குழுக்களின் உறுப்பினர்களாக ஐந்து ஆசிய நாடுகள் மட்டுமே எஞ்சியிருந்தன. உதாரணமாக, ஸீஏட்டோவின் எட்டு உறுப்பு நாடுகளில் தாய்லாந்து, பிலிப்பைன், பாக்கிஸ்தான், மூன்றுமே ஆசிய அரசுகள். இளம் ஆசிய தேசீய அரசுகளில் மிகப் பெரியவை நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடித்தன. ஆப்பிரிக்க நாடுகளை உறுப்பினராகக் கொண்ட கூட்டணிகள் நிறுவுவது புதுக் காலனியாதிக்கவாதிகளால் முடியவே இல்லை. மொராக்கோ, டியூனீஷியா, அல்ஜீரியா ஆகியவை பங்கு கொள்ளும் ''மத்தியதரைக் கடல் உடன்படிக்கை'' ஏற்படுத்தப் புதுக் காலனியாதிக்கவாதிகள் பரிந்து தயாரித்த திட்டங்கள் இன்னும் எழுத்தளவிலேயே உள்ளன.

ஆக்கிரமிப்புக் கூட்டணிகளில் சேர்ந்துள்ள நாடுகளில் கூட, தேசீயச் சக்திகள் வலுப்பெறுவதும் சர்வதேச இறுக்கம் தளர்வதும் ''கம்யூனிஸ அபாயம்'' பற்றிய பொய் அம்பலமாவதும் அதிகரிக்கும் அளவுக்கு இந்தக் கூட்டணிகளில் கலந்துகொள்வதற்கு எதிரான இயக்கம் வளர்ந்து வருகிறது. இந்த இயக்கத்தில் பொது மக்கள் திரள் மட்டுமே கலந்து கொள்வதில்லை. உள்நாட்டு பூர்ஷ்வா வட்டாரங்களும் சலுகை பெற்ற சில குழுக்களும்கூட இதில் அடிக்கடி பங்கெடுத்துக் கொள்கின்றன. அரசியல் மனநிலையின் வளர்ச்சியில், சிறப்பாக ஸெண்டோ உறுப்பு நாடுகளில், பெரும் பங்கு ஆற்றுகிறது வியத்நாமியப் போர். ஆக்கிரமிப்புக் கூட்டணிகளின் காலனியாதிக்கப் பணியை இந்தப் போர் இன்னொரு முறை கண்கூடாகக் காட்டிவிட்டது. அதோடு கூடவே, இந்தக் கூட்டணிகளில் அங்கம் வகிப்பதால் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு துர்ச்சாகசச் செயல்களில் இழுக்கப்படும் அபாயம் இருப்பதையும் இந்த நாடுகள் உணருமாறு செய்துவிட்டது.

உள் வேற்றுமைகளும் இந்தக் கூட்டணிகளை அரித்து வருகின்றன. இவை கூட்டணிகளில் அங்கம் வகிக்கும் ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு இடையே உள்ள முரண்பாடுகளும், ஏகாதிபத்திய நாடுகளுக்கும் ஆசிய நாடுகளுக்கும் இடையே நிலவும் முரண்பாடுகளும் ஆகும். இந்த நிகழ்முறைகள் எல்லாம் ஸென்டோவை ஏற்கனவே கணிசமாகச் செயலற்றது ஆக்கிவிட்டன. அதன் ஆசிய உறுப்பு நாடுகள் கூட்டணியின் வரம்புகளுக்குள் தங்கள் இராணுவச் செயலூக்கத்தை வெகுவாகக் குறுக்கிவிட்டன. வியத்நாமில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலையீட்டை ஆதரிப்பதாகக் கூற அவை மறுத்துவிட்டன. அரேபிய நாடுகள்மீது இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை அவை கண்டனம் செய்தன. சோவியத் யூனியனுடனும் பிற சோஷலிஸ நாடுகளுடனும் உறவுகளை மேம்படுத்திக் கொள்ள அவை முற்பட்டுள்ளன. இந்த இராணுவக் கூட்டணியின் முறையான கூட்டங்களைக் கூட்டுவதில்கூட இடர்ப்பாடுகள் நேரும் அளவுக்கு நிலைமை சீர்கெட்டுவிட்டது. 1968 ஏப்ரலில் நடந்த கடைசிக் கூட்டம் இரு முறை ஒத்திப்போடப்பட்டது. இந்தக் கூட்டம் ''ஸென்டோவின் இறுதியாக முடியலாம்'' என்றுகூட எழுதியது ஆங்கிலச் செய்தித்தாள் ஈவினிங் ஸ்டாண்டர்டு.

ஸீஏட்டோவிலும் ஆழ்ந்த கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. இந்தக் கூட்டணியின் செயற்களத்தைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் இதற்கு மிகக் கடும் பிரச்சினையான வியத்நாமியப் பிரச்சினை விஷயத்தில் சிறப்பாக ஆழ்ந்த கருத்து வேற்றுமைகள் காணப்படுகின்றன. இந்தக் கூட்டணியின் மூன்று உறுப்பு நாடுகள்—பிரிட்டனும் பாக்கிஸ்தானும் பிரான்சும்—தங்கள் படைகளை வியத்நாமுக்குஅனுப்ப மறுத்துவிட்டன. இந்தப் பிரச்சினையில் அமெரிக்கக் கொள்கைக்குப் பாக்கிஸ்தான் இணங்கவில்லை. பிரெஞ்சு அரசாங்கமோ இந்தக் கொள்கையைத் தீவிரமாக எதிர்த்தது. ஸீஏட்டோவின் அண்மைக் கூட்டங்களில் பாக்கிஸ்தான் பார்வையாளியாக மட்டுமே பங்கு கொண்டது. பிரான்சின் இடமோ வெறுமையாகவே இருந்தது.

ஆயினும் நிலவும் ஆக்கிரமிப்புக் கூட்டணிகளை வலுப்படுத்தி விரிவாக்கவும் புதிய இராணுவக் கூட்டணிகளை நிறுவவும் ஏகாதிபத்தியவாதிகள் இடைவிடாது முயன்று

வருகிறார்கள். நீஏட்டோ—''வடகிழக்காசிய நாடுகளின் உடன் படிக்கை ஸ்தாபனம்''—என்பதையும் ''மத்தியதரைக் கடல் உடன்படிக்கை'' ஸ்தாபனத்தையும் எப்படியேனும் நிறுவும் முயற்சிகளை அவர்கள் கைவிடவில்லை. இஸ்லாம் உடன் படிக்கை எனப்படுவதை நிறுவும் திட்டங்கள் குறித்துத் திரை மறைவில் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

''ஆசிய-பசிபிக் கவுன்சில்'' எனப்படுவது 1966, ஜூன் மாதத்தில் அமைக்கப்பட்டது. ஜப்பான், நியூஜீலாந்து, ஆஸ் திரேலியா, பிலிப்பைன், தென் கொரியா, சியாங் காய்-ஷேக் கும்பல், தெற்கு வியத்நாம், தாய்லாந்து, மலேசியா ஆகியவை இதன் உறுப்பினர்கள். இந்தக் ''கவுன்சிலின்'' நோக்கங்கள் இராணுவ வகைப்பட்டவை அல்ல, அரசியல், பொருளாதார, சமுதாய ஒத்துழைப்பு மட்டுமே என்று அதன் அமைப்பாளர்கள் அறிக்கை விடுத்தார்கள். மேற்கத்தியச் செய்தித்தாள்கள் எழுதியது போல, இதன்மூலம் அவர்கள் ''நடுநிலைமை நாடுகளுக்குக் கதவைத் திறந்து வைத்திருந்தார் கள்''. ஆயினும் இது எவரையும் மயக்கவில்லை. உண்மையில் இந்தக் ''கவுன்சிலின்'' ஒன்பது உறுப்பு நாடுகளில் நான்கு ஸீஏட்டோ உறுப்பினர்கள், மூன்று அமெரிக்கருக்கு ஆதர வான கைப்பாவைகள், ஒன்று பெரிய ஏகாதிபத்திய வல்லரசு.

''ஆசிய-பசிபிக் கவுன்சிலின்'' நோக்கம் உலகின் இந்தப் பகுதியில் ஏகாதிபத்தியக் கூட்டணிச் சங்கிலியின் கணுவாக வும், ஸீஏட்டோ, ''பசிபிக் மாகடல் பாதுகாப்பு உடன்படிக்கை ஸ்தாபனம்'' (ஆநிஸ்யூஸ்) ஆகிய கூட்டணிகளுக்கு ஒரு வகையில் கவைக் கோலாகவும் அதே சமயம் அவற்றை இணைக்கும் பாலமாக வும் பயன்படுவதுதான். ''அமெரிக்க ஐக்கிய நாடுகளாலும் ஸீஏட்டோவாலும் உறுதிப்படுத்தப்பட்டு நிலவும் பாதுகாப்பு அரணுக்கு விலைமிக்க ஆதரவு என்ற வகையில் புதிய பிரதேச ஸ்தாபனங்களை மேற்கத்திய அரசாங்கத் தலை வர்கள் வரவேற்கிறார்கள்'' என்று ஆஸ்பாக் நிறுவப்பட்டதை ஒட்டி நியூயார்க் டைம்ஸ் செய்தித்தாள் எழுதியது சும்மா அல்ல. ''ஆசிய-பசிபிக் கவுன்சிலின்'' உண்மைச் சொரூபம் 1968ம் ஆண்டுக் கோடையில் கான்பெர்ராவில் நடந்த அதன் மூன்றா வது, கடைசிக் கூட்ட அறிக்கையில் வெளிப்படுகிறது. ''ஆசிய, பசிபிக் நாடுகளின் பாதுகாப்பை உத்தரவாதம் செய்வதன்

அவசியத்தை'' இந்த அறிக்கையில் கவுன்சிலின் உறுப்பினர்கள் வலியுறுத்தி இருந்தார்கள். சைகோன் கும்பலுடனும் தென் கொரியாவில் பாக் சுஜோன் ஹீயின் கைப்பாவை அரசாங்கத்துடனும் அவர்கள் ஒருமைப்பாடு தெரிவித்திருந்தார்கள்.

ஆஸ்பாக்கின் அமைப்பாளர்களும் உறுப்பினர்களும் ஆசிய நாடுகளைச் சேர்ப்பதன் மூலம் அதை விரிவுபடுத்த முயல்கிறார்கள். இந்தோனேசியாவை இதில் சேர்க்கக் கடும் பிரயாசை மேற்கொள்ளப்படுகிறது. ஜப்பான் இத்தகைய யோசனையை முன்வைத்ததாக இந்தோனேசியப் பத்திரிகைகள் தகவல் வெளியிட்டுள்ளன.

''அமெரிக்க அரசுகளின் ஸ்தாபனத்தையும்'' புதுக் காலனியாதிக்க முறையின் வடிவமாகவே கருத வேண்டும். அமெரிக்க ஐக்கிய நாடுகளும் லத்தீன் அமெரிக்க அரசுகளும் (க்யூபா தவிர. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வற்புறுத்தல் காரணமாக அது 1962ல் இந்த ஸ்தாபனத்திலிருந்து விலக்கப்பட்டது) அதன் உறுப்பினர்கள். இந்த லத்தீன் அமெரிக்க அரசுகளில் பெரும்பாலானவை வட அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அனேகமாக முழுதும் சார்ந்தவை. இந்த ஸ்தாபனத்தின் செலவில் மூன்றில் இரண்டு பங்கை அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசாங்கம் தருகிறது. அதன் நிர்வாக அலுவலகத்தில் முதன்மையாக அமெரிக்க அதிகாரிகளே பணியாற்றுகிறார்கள்.

ஏகாதிபத்திய மலைப்பாம்பையும் அதன் இரைகளையும் ஒரே ''கூண்டில்'' சேர்த்து வைத்திருக்கும் இந்த ஸ்தாபனத்தின் ''கட்டமைப்பே'' இதன் தன்மையை வரையறுக்கிறது. எதார்த்தத்தில் இது லத்தீன் அமெரிக்க நாடுகளின் வெளி, உள் விவகாரக் கொள்கைமீது ஒருங்கு திரண்ட நிர்ப்பந்தம் விளைப்பதற்கும், தென் அமெரிக்கக் கண்டத்தில் விடுதலை இயக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கும், அமெரிக்க ஏகபோக நிறுவனங்களின் விஸ்தரிப்பை மறைப்பதற்கும் ஏற்ற கருவியாகவே பயன்படுகிறது. ஆசியாவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொள்ளைக்கார நடவடிக்கைகளுக்கு ஓரளவில் ஆசிய முகப்புப் பலகையாக ஸீஏட்டோ உதவுகிறது என்றால் ''அமெரிக்க அரசுகளின் ஸ்தாபனம்'' மேற்கு அரைக்

கோளத்தில் போலீஸ் நடவடிக்கைகளின் அம்மணத்தை மறைக்கும் ''அத்தி இலையாகப்'' பயன்படுகிறது.

உதாரணமாக, பானமா கால்வாய்ப் பிரதேசத்தின்மீது தங்கள் நாட்டின் அரசுரிமை மீண்டும் நிலைநாட்டப்பட வேண்டும் என்று கோரி அமைதியாக ஆர்ப்பாட்டம் செய்த பானமா மக்கள்மீது 1964 ஜனவரியில் அமெரிக்கத் துருப்புக் களின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ''அமெரிக்க அரசுகளின் ஸ்தாபனம்'' தன் பாதுகாப்பை அளித்தது. இவ்வளவோடு நில்லாமல், டொமினிக்கன் குடியரசில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆயுதந்தாங்கிய தலையீட்டை இந்த ஸ்தாபனம் தன் கொடியால் ''புனிதப்படுத்தியது''. டொமினிக்கன் தேசபக்தர்களை வதைப்பதில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கடற் காலாட்படையினருடன் இந்த ஸ்தாபனத்தின் வேறு மூன்று உறுப்பு நாடுகளின் படையினர் அனைத்து அமெரிக்க இராணுவம் எனப்படுவதன் பெயரால் பங்கெடுத்துக் கொண்டனர்.

ஸாந்தோ-தொமிங்கோவில் தலையீட்டுக்குப் பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ''அமெரிக்க அரசுகளின் ஸ்தாபனத்தின்'' நடவடிக்கைகளுடைய இராணுவ அம்சங் களைத் தீவிரப்படுத்தி விரிவாக்க மிக விடாப்பிடியாகப் பாடு பட்டு வருகிறார்கள். ''அனைத்து அமெரிக்க இராணுவத்தின்'' வடிவில் நிலையான போலீஸ் படையை நிறுவ அவர்கள் முயல்கிறார்கள். இந்தப் படை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நலன்களுக்காக, ஆனால் லத்தீன் அமெரிக்க நாடுகளின் பெய ராலேயே செயல் புரியும். இதனால் அமெரிக்க ஐக்கிய நாடு கள் லத்தீன் அமெரிக்காவில் மக்களுக்குப் பிடிக்காத போலீஸ் ''வேலைச்'' சுமையிலிருந்து ஓரளவுக்குத்தான் என்றாலும் விடுபடும். இவ்வாறே லத்தீன் அமெரிக்க நாடுகளின் மீதும் அவற்றின் சைனியங்கள் மீதும் கட்டுப்பாட்டை வலுப்படுத்து வது, லத்தீன் அமெரிக்க அரசுகளின் இராணுவ வளங்களை மேற்கு கோளார்த்தத்திலும் வருங்காலத்தில் அதன் எல்லை களுக்கு வெளியேயுங்கூடப் புரட்சிச் சக்திகளுக்கு எதிராக நேரே பயன்படுத்துவது என்ற நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்ள அமெரிக்க ஐக்கிய நாடுகள் முயன்று வருகிறது.

சம்பந்தப்பட்ட பூகோளப் பகுதியைச் சேர்ந்த விடுதலை பெற்ற நாடுகளை உறுப்பினவாகக் கொண்ட அநேக அரசியல்,

அரசியல்-பொருளாதார ஐக்கியங்களின் உதயம்(''ஆப்பிரிக்க-மலாகாசியப் பொது நிறுவனம்'', ''அரபு லீக்,'' ''தென் கிழக்கு ஆசிய அரசுகளின் சங்கம்'' முதலியன) புதுக் காலனி யாதிக்கக் கொள்கையோடு நெருங்கிய தொடர்பு கொண் டது. வழக்கமாக இவற்றில் ஏகாதிபத்திய வல்லரசுகள் உறுப்பினவாக இருப்பதில்லை என்றாலும் இத்தகைய கூட்டு ஸ்தாபனங்கள் பலவற்றைத் தூண்டி ஊக்குபவையும் நேரடி யாக அமைப்பவையும்கூட இந்த வல்லரசுகளே.

இருந்தாலும், மேற்குறித்த கூட்டு அமைப்புக்களையும் சங்கங்களையும்—வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் வேறு சில பிரதேச ஸ்தாபனங்களைப் பற்றியோ கூறவே வேண்டாம் —வெறுமே புதுக் காலனியாதிக்க முறையின் வடிவங்களாக மட்டுமே எண்ணுவது தவறு ஆகும். புதுக் காலனியாதிக்க முறை இந்தச் சங்கங்களைத் தன் நோக்கத்திற்குப் பயன்படுத் திக் கொள்ள முயல்கிறது என்றும், இதில் வெற்றி பெற்று விட்டால் இவற்றை அதே நிலையில் வைத்திருப்பது தன் கடமை எனக் கருதுகிறது என்றும் சொல்வதே இன்னும் சரியாய் இருக்கும். முன்னாள் காலனிகள், அரைக் காலனிகளின் சில எதார்த்தத் தேவைகளைத் தங்கள் நலன்களுக்குச் சாதக மாகப் பயன்படுத்திக் கொண்டு ஏகாதிபத்தியவாதிகள் இந்த ஸ்தாபனங்களை நிறுவினார்கள், அல்லது ஸ்தல முன்முயற்சி யாளர்களை இயக்கி நடத்தினார்கள். பரஸ்பர அரசியல், பொருளாதார, பண்பாட்டுத் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்வதிலும் பிரதேச ஒத்துழைப்பை வளர்ப்பதிலும் இந்த நாடுகள் கொண்டிருந்த அக்கறையைத் தூண்டிவிட்டுத் தங் கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள அவர்கள் முயன் றார்கள்.

இங்கே குறிப்பிடப்படும் பல ஸ்தாபனங்களின் தனிச் சிறப்பு என்ன என்றால் அவை காலனியாதிக்க நலன்கள், எதார்த் தத்தில் காலனியாதிக்க எதிர்ப்பு நலன்கள் ஆகியவற்றின் முரண்பாடுள்ள அடிப்படையில் நிறுவப்பட்டிருப்பதே. ஆனால் காலனியாதிக்க எதிர்ப்பு நலன்கள், குறைந்த பட்சம் தொடக்கத்தில் அடிக்கடி மறைந்திருக்கின்றன, அனேக மாகத் தம்மைக் காட்டிக் கொள்வதில்லை. இத்தகைய நிலைமை காரணமாக இந்த ஸ்தாபனங்கள் ஏகாதிபத்தியச் சக்தி களுக்கும் தேசீயவாதச் சக்திகளுக்கும் இடையே போராட்

டம் நிகழும் அரங்குகள் ஆக முடியும், சில வேளைகளில் அவ்வாறு ஆகவும் செய்கின்றன.

விடுதலை அடைந்த நாடுகளின் வெவ்வேறு பிரதேச ஸ்தாபனங்கள் விஷயத்தில் இந்த உண்மை வெவ்வேறு அளவுகளில் பொருந்துகிறது என்பது கூறாமலே விளங்கும். உதாரணமாக ''ஆப்பிரிக்க-மலாகாசியப் பொது நிறுவனத்தை'' எடுத்துக் கொள்வோம். முன்னாள் ஆட்சித் தலைமை நாட்டின்மீது எதார்த்தத்தில் அனேகமாகப் பாதிக்கப்படாத சார்பு உறவுகளின் அடிப்படையில் இந்த நிறுவனம் அமைக்கப்பட்டது. முற்றிலும் காலனியாதிக்க ஆதரவாளிகளின் ஐக்கியமாக இது உருவாயிற்று. இந்த நிறுவனம் அமைக்கப்பட்டதுமே இதன் உறுப்பு நாடுகளில் தனது மேலாதிக்க நிலையை அவற்றின்மீது ''மையப்படுத்தப்பட்ட'' கட்டுப்பாட்டின் வாயிலாக பிரான்சு இட்டு நிரப்பிக் கொண்டது. ஆப்பிரிக்காவில் முன்பு பிரெஞ்சு ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாடுகளில் தனக்கு வேண்டிய மாதிரிச் சமுதாய அமைப்புக்களை ஆதரிப்பதற்கு ஏற்ற, ஆப்பிரிக்கத் தோற்றம் உள்ள கூட்டுக் கருவியை அது நிறுவிற்று. இளம் அரசுகள் பிரதேச அளவில் நெருங்கிய பொருளாதார உறவுகள் கொள்வது; ஒரே வகையான சட்ட, சுங்க, நிதி நிர்வாக அமைப்புக்கள் ஏற்படுத்துவது; பரஸ்பர வர்த்தக, பொருளாதாரத் தொடர்புகளுக்கு உள்ள மற்றத் தடைகளை நீக்குவது என்ற, புறநிலையில் வழக்கமாக முற்போக்கான நிகழ்முறை, புதுக் காலனியாதிக்கவாதிகளின் நிர்ப்பந்தத்தின் நிலைமைகளில் நடத்தப் பெறும்போது எவ்வாறு ஏகாதிபத்திய ஏகபோக நிறுவனங்களுக்கே முதன்மையாகச் சாதகமாகிறது என்பதை ''ஆப்பிரிக்க-மலாகாசியப் பொது நிறுவனத்தின்'' உதாரணம் காட்டுகிறது.

ஆனால் அரபு லீகில் வேறு வகை நிலைமை உருவாயிற்று. ஏகாதிபத்தியவாதிகள் எவ்வளவோ சூழ்ச்சிகளும் முயற்சிகளும் செய்துங்கூட, தேசபக்தச் சக்திகள் படிப்படியாக முன்னேறிக் கணிசமாக நிலையான இடங்களைக் கைப்பற்றிக் கொண்டன. லீகைத் தங்கள் நலன்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும், அது முடியாவிட்டால் குறைந்த பட்சம் அதைச் செயலற்றது ஆக்கிவிடவும் முயல்வதைப் புதுக்காலனியாதிக்கவாதிகள் நிறுத்திவிடவில்லைதான். ஆனால்

முற்போக்கு உள்ள அரேபிய நாடுகள் ஏகாதிபத்தியவாதிகளின் இத்தகைய சூழ்ச்சிகளைத் தீவிரமாக எதிர்த்துச் செயலாற்றி வருகின்றன.

தங்கள் செல்வாக்குக்கு உட்பட்ட பிரதேச அரசியல், அரசியல்-பொருளாதாரக் கூட்டு ஸ்தாபனங்கள் நிறுவுவதைப் புதுக் காலனியாதிக்கவாதிகள் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக, சிறப்பாக ஆசியாவில், வெகுவாகத் தூண்டி ஊக்கி வருகிறார்கள்.

1961, ஜூலையில் தென்கிழக்கு ''ஆசிய நாடுகளின் சங்கம்'' என்ற ஸ்தாபனம் மலேயா, தாய்லாந்து, பிலிப்பைன் ஆகியவற்றை உறுப்பினவாகக் கொண்டு அமைக்கப்பட்டது. 1967, ஆகஸ்டில் அது கலைக்கப்பட்டு அதன் இடத்தில் ''தென் கிழக்கு ஆசிய அரசுகளின் சங்கம்'' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. முந்திய மூன்று நாடுகளும் சிங்கப்பூரும் இதன் உறுப்பினவாக இருந்தன. பிற்பாடு இந்தோனேசியா இதில் சேர்க்கப்பட்டது. இலங்கையையும் கம்போடியாவையும்கூட இதில் சேர்க்க முயற்சி செய்யப்பட்டது.

''தென்கிழக்கு ஆசிய அரசுகளின் சங்கம்'' பொருளாதார, பண்பாட்டு நோக்கங்கள் கொண்ட ஸ்தாபனம் எனத் தன்னை அறிவித்துக் கொண்டது என்றாலும் கூட்டுச்சேரா நாடுகளைப் பிடிக்கும் கண்ணிக் கயிறாக அதைப் பயன்படுத்த ஏகாதிபத்தியவாதிகள் வெளிப்படையாக முயல்கிறார்கள். இதன் உதவியால் இந்தோனேசியாவையும், ஒருவேளை தென் கிழக்கு ஆசியாவின் மற்ற நடுநிலைமை நாடுகளையும் ''ஆசிய-பசிபிக் கவுன்சிலின்'' அரசியல் போர்த்தந்திரத்தை ஏற்கச் செய்யவும், இவ்வாறு ஆக்கிரமிப்புக் கூட்டணிகளில் சேர்க்கவும் முடியலாம் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு பார்க்கும்போது, இந்த ஸ்தாபனத்தின் உறுப்பினர்கள் தமக்குள்ளும் ''ஆசிய-பசிபிக் கவுன்சிலின்'' உறுப்பு நாடுகளுடனும் இராணுவக் கூட்டுறவு ஏற்படுத்திக் கொள்ளுமாறு அண்மை வருங்காலத்தில் நிர்ப்பந்திக்கப்படலாம் என்று தெரிகிறது.

உதாரணமாக, மலேசியப் பிரதமர் துங்கு அப்துர் ரஹ்மான் 1968 மார்ச்சில் ஜகார்த்தாவில் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் விடுத்த அறிக்கை குறிபொருள் பொதிந்தது. அவர் கூறியதாவது: '' 'தென்கிழக்கு ஆசிய அரசுகளின் சங்

கம்' இராணுவ நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படலாம். ஆனால் முதலில் அது தன் பொருளாதார, பண்பாட்டுச் செயல்திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். இதன் பிறகு அது இன்னும் விரிவான பொறுப்புக்களை மேற்கொள்ளக் கூடும்.'' மலேசியப் பிரதமரின் அறிக்கையில் கூறுது விடப் பட்ட பகுதிகளை ஏற்கனவே கூறியிருந்தது அமெரிக்கச் செய்தித்தாள் **கிறிஸ்டியன் ஸயன்ஸ் மானிட்டர்**. 1968, பிப்ரவரி 27ந் தேதி, அதன் நிருபர் வில்லிஸ் பின்வருமாறு எழுதியிருந் தார்: ''அதிகார பூர்வமான வட்டாரங்களின் கூற்றுப்படி, பொருளாதார, சமுதாய, அரசியல் துறைகளில் பிரதேச ரீதியான ஒத்துழைப்பு குறித்த தற்போதையப் போக்கு, வாஷிங்டன் நம்புவதுபோல, மேற்கொண்டும் தொடர்ந்து நிகழுமானல், ஜப்பானிலும் கொரியாவிலும் இருந்து இந்தோனேசியா வழியாக ஆஸ்திரேலியாவுக்கும் நியூஜீலாந் துக்கும் செல்லும் பிரமாண்டமான வளையரண் கம்யூனிஸ நுழைவைத் தடுக்கும் விறல்மிக்க காப்பு மதிலாகத் தொண் டாற்றும்.''

பிரதேச ஸ்தாபனங்கள் விஷயத்தில் ஏகாதிபத்தியவாதி களின் அக்கறை உயிரோட்டம் பெற்றதற்கு அநேக நிலை மைகள் காரணமாக விளங்குகின்றன. முதன்மையாக, நாம் சற்றுமுன் கூறியதுபோல, ஸெண்டோ, ஸீஏட்டோ போன்ற கூட்டணிகளின் நிலையின்மையும் நெருக்கடியும்கூட வெளிப் படையாகத் தென்பட்டன. இளம் அரசுகளை இந்தக் கூட் டணிகளில் அதிகப்படி உறுப்பினவாகச் சேர்ப்பதோ, ஏகாதி பத்திய வல்லரசுகள் பங்கு கொள்ளும் புதிய இராணுவக் கூட்டணிகள் நிறுவுவதோ அவ்வளவு சாத்தியம் அல்ல என்பது முழுமையாகத் துலங்கிவிட்டது. வியத்நாமில் படையெடுப்பு நடத்தியது தென்கிழக்குஆசியாவில் ஏகாதிபத்தியவாதிகளின் நிலைகளுக்கும் கொள்கைகளுக்கும் மொத்தத்தில் பெருத்த இடர்ப்பாடுகளை உண்டாக்கியது. ஏகாதிபத்தியத்தின், சிறப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வளங்களுக்கு அது இந்தப் பிரதேசத்தில் பெருத்த வீண்செலவு ஏற்படுத்தியது. இங்கே எல்லா இடங்களிலும் பரவிய போலீஸ் படையாகச் செயல்படும் அதன் திறனைக் குறுக்கியது. ஆனால் அதே சமயம் வியத்நாமியப் போர் ''கம்யூனிஸ அபாயம்'' என்ற பூச் சாண்டிக்கு மீண்டும் உயிரூட்ட ஓரளவு வாய்ப்பு அளித்தது.

இந்தோனேசியாவில் நிகழ்ந்த அரசாங்க மாற்றமும் கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான தாக்குதலும் தென்கிழக்கு ஆசியாவில் நிலைமை குறித்த அளவு மாற உதவின. விளைவாக, கம்யூனிஸ எதிர்ப்புக் கோஷத்தைக் கிளப்புவதற்கு அதிகப்படி வாய்ப்பு கிட்டியது. இதே அர்த்தத்தில் பெரிய துருப்புச் சீட்டுகள் மா சே துங்கின் பெருவல்லரசுவாதப் போக்கின் விளைவாக ஏகாதிபத்தியவாதிகளுக்குக் கிடைத்தன.

மறு புறம், வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் பொருளாதாரக் கட்டுமானம் விரிவாக நிகழ்ந்ததும், பொருளாதார, வர்த்தக இடர்ப்பாடுகள் அவற்றுக்கு எதிர்ப்பட்டதும் பிரதேச ஒத்துழைப்பின் உடனடித் தேவையையும் அதில் இந்த நாடுகளின் அக்கறையையும் தீவிரப்படுத்தின.

இந்த நிலைமைகளை எல்லாம் பயன்படுத்திக் கொண்டு புதுக் காலனியாதிக்கவாதிகள் தங்கள் செல்வாக்குக்கு உட்பட்டவையும் வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ கம்யூனிஸ எதிர்ப்பு முத்திரை தாங்கியவையுமான பிரதேசக் குழுக்களின் அமைப்பாளர்களாகச் செயல்பட முயல்கிறார்கள். இத்தகைய கூட்டுக்களின் பொருளாதார, பண்பாட்டு நோக்கங்களை உலகம் எங்கும் அவர்கள் பறைசாற்றுகிறார்கள். அதோடு குறித்த துறைகளில் அவற்றின் செயல்களை உண்மையாகவே ஓரளவு தூண்டி ஊக்குகிறார்கள். அதே சமயம் சம்பந்தப்பட்ட கூட்டு ஸ்தாபனங்கள், சங்கங்களின் உறுப்பினர்களிடையே அரசியல் ஒத்துழைப்பும் முடிவில் இராணுவ ஒத்துழைப்பும் ஒருங்கிணைவும் வளரச் செய்வதிலேயே புதுக் காலனியாதிக்கவாதிகள் தங்கள் முயற்சிகளை ஈடுபடுத்துகிறார்கள். இந்தக் கூட்டு ஸ்தாபனங்களிலும் சங்கங்களிலுமோ கூட்டுசேராக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் நாடுகள் ஆக்கிரமிப்பு உடன்படிக்கைகளில் பங்கு கொண்டிருக்கும் அரசுகளுடன் ஒன்றுசேர்ந்திருக்கின்றன. இந்தச் சங்கங்களின் வாயிலாக, தங்களுக்குக் கீழ்ப்படியும் அரசாங்கங்களின் தொண்டுகளைப் பயன்படுத்திக் கொண்டு பிரதேசக் கூட்டு ஸ்தாபனங்களின் உறுப்பு நாடுகளுடைய பொருளாதாரக் கொள்கைமீது ஆழ்ந்த செல்வாக்கு செலுத்தவும் புதுக் காலனியாதிக்கவாதிகள் விரும்புகிறார்கள்.

ஆசியாவில் பிரதேச ஒத்துழைப்பில் ஜப்பான் வர வர அதிகரிக்கும் பங்கு ஆற்றத் தொடங்கியிருக்கிறது. அமெரிக்க

ஐக்கிய நாடுகளின் ஆளும் வட்டாரங்கள் இந்த விஷயத்தில் அதற்குத் திட்டமிட்டுத் தயாரித்துள்ள பணி, ஜப்பானிய ஏகபோக நிறுவனங்களின் ஒரு பகுதியின் விழைவுகளுக்கா வது முரண்படவில்லை என்று தெரிகிறது. இந்தப் பணியைப் புரிந்து கொள்வதற்கு யூ. எஸ். நியூஸ் அண்டு வர்ல்டு ரிப் போர்ட் என்ற அமெரிக்கச் சஞ்சிகையின் கூற்று ஓரளவு அக்கறைக்கு உரியது. ''ஆசியாவில் ஜப்பானின் பாத்திரம் மாறுகிறது'' என்னும் தலைப்பில் அது வெளியிட்டுள்ள கட்டுரையில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது: ''புதிய ஜப் பான் பொருளாதார, இராணுவ விறலைச் சார்ந்திருக்கும் வலிமை வாய்ந்த தலைமை நாடு. ஆசியாவில் வருங்காலப் பாதுகாப்பு அமைப்பின் மூலைக்கல்லாக அது விளங்கும் என் றும் தற்போது இந்தப் பிரதேசத்தில் அமெரிக்காவால் நிறைவேற்றப்பட்டு வரும் பொறுப்புக்களில் ஒரு பகுதியைத் தான் ஏற்றுக் கொள்ளும் என்றும் பல அமெரிக்கர்கள் நம்பு கிறார்கள்.''[4]

இங்கே ஒரு விஷயத்தைச் சொல்லிவிட வேண்டும். சில பிரதேசச் சங்கங்களுடனும் கூட்டு அமைப்புக்களுடனும் தொடர்பு கொண்ட ஏகாதிபத்தியச் சூழ்ச்சிகளை மக்கள் புரிந்து கொள்ளாமல் இல்லை. இவை தீவிர எதிர்ப்புக்கு உள்ளாகி வருகின்றன. உதாரணமாக, மலேசிய உதவிப் பிரதமர் அப்துல் ரஜாக் ''தென்கிழக்கு ஆசிய அரசுகளின் சங்கத்தில்'' சேரும்படி விடுத்த அழைப்பைக் கம்போடியா கடுமையாக நிராகரித்துவிட்டது. இவ்விஷயம் குறித்து 1968, மார்ச் 21ந் தேதி வெளியான கம்போடிய அரசாங்க அறிக்கை கூறியதாவது: ''இத்தகைய சங்கங்கள் பற்றி கம் போடியா தனது கருத்தையும் நிலையையும் தெளிவாக வெளி யிட்டது. ஆசிய நாடுகளின் ஒத்துழைப்புக்கு உதவுவதாக இது உரிமை கொண்டாடுகிறது. ஆனால், உண்மையில், இந்தச் சங்கம் மேற்கத்திய, சிறப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளின் புதுக் காலனியாதிக்கச் சக்திகளது நலன்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.''

## புதுக் காலனியாதிக்க முறையின் பொருளாதார ஆயுதங்களும் வடிவங்களும்

பொருளாதாரச் செயற்களம் புதுக் காலனியாதிக்க முறைக்கு மொத்தத்தில் மிக முக்கியமானது. எனவே பொருளாதாரச் சாதனங்கள் அதன் விசைக் கருவிகளின் தொகுப்பில் சிறப்பான இடம் பெற்றுள்ளன. புதுக் காலனியாதிக்க முறையின் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றுவதில் மட்டுமே அல்ல, அரசியல் குறிக்கோள்களை அடைவதிலும் அவை முக்கியப் பங்கு ஆற்றுகின்றன. இந்தக் குறிக்கோள்களில் சில வெகு தூர வீச்சுள்ள வருங்காலக் குறிக்கோள்கள். பெரும்பாலானவையோ, திண்ணமான பகுதிக் குறிக்கோள்கள்.

புதுக் காலனியாதிக்க முறையின் பிரதானப் பொருளாதாரக் கருவி, வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு உதவி எனப்படுவது ஆகும். அதே சமயத்தில், விடுதலை அடைந்த நாடுகள் இன்னும் பொருளாதாரத் துறையில் சார்புநிலையில் இருப்பதாலும் இடர்ப்பாடுகளை எதிர்ப்படுவதாலும் இந்த ''உதவி'' புதுக் காலனியாதிக்க முறையின் ஆயுதங்கள் எல்லாவற்றிலும் மிக ஒருமுனைப்பாடும் செயல்திறனும் உள்ளது. புதுக் காலனியாதிக்க முறையின் மிக அபாயகரமான இந்த விசைக் கருவிக்கு மதிப்புள்ள வெளித்தோற்றம் அளிக்கும் பொருட்டு ஏகாதிபத்தியப் பிரசாரம் மிகமிகத் தந்திரமாக இதைப் பற்றித் தம்பட்டம் அடிக்கிறது. விவசாய விளைபொருள்களில் ''உபரிகளை'' வெளிநாடுகளுக்கு அனுப்பும் அமெரிக்கச் செயல் திட்டத்தின்படி உணவுப் பொருள்கள் சப்ளை செய்யப்படுவதும் ஏகாதிபத்திய வல்லரசுகளால் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு ரொக்கக் கடன்களும் நிதியுதவிகளும் சரக்கு வகையிலும் பிற வகை

களிலும் பற்றுக் கடன்களும் தொழில்நுட்ப ஒத்துழைப்பும் அளிக்கப்படுவதும் ''உதவி'' என்ற பெயரால் ஒருங்கு இணைக் கப்படுகின்றன.

ஏகபோக நிறுவனங்களின் பொருளாதார விஸ்தரிப் புக்கு இயல்பான கருவியாக விளங்கும் அதே சமயத்தில் ''உதவி'' எனப்படுவது புதுக் காலனியாதிக்க முறையின் வேறு எந்தச் சாதனத்தையும்விட அதிக அளவில் காலனி யாதிக்கக் கொள்கையின் பொதுநோக்கங்களுக்குத் தொண்டு ஆற்றுகிறது. காலனியாதிக்க முறையின் மற்ற வடிவங்கள், வழிகள் செயல்படுவதற்கும் பயன் விளைப்பதற்கும் இது பெரும் அளவு வகை செய்கிறது.

''அபிவிருத்தி உதவிக் கமிட்டி'', ''பொருளாதார ஒத் துழைப்பு, அபிவிருத்தி ஸ்தாபனம்'' ஆகியவற்றின் உறுப்பின வான முதலாளித்துவ அரசுகள் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு 1960 முதல் 1965 வரை 4,665 கோடி 90 லட்சம் டாலர் மூலதனத்தை ஏற்றுமதி செய்தன. இதில் மூன்றில் இரண்டு பங்கு தொகை, அதாவது 3,500 கோடி டாலருக் கும் மேல் ''உதவி'' என்ற வகையில் கொண்டுவரப்பட் டன.[1]

''உதவியின்'' சில அம்சங்களும் வகைகளும், உதாரண மாக, கடன்களும் உதவி நிதிகளும் முன்பும் தெரிந்திருந்தன, காலனிக் கொள்கையால் கையாளப்பட்டன. தொழில்நுட்ப உதவிக்கும் வரலாற்று முன்னோடிகள் இருந்தன. கிழக்கு நாடுகளுடன் சமத்துவம் அற்ற உறவுகளின் விவரங்களில் இவை காணப்படுகின்றன. ஆயினும் தற்போதைய வடிவத் தில் ''உதவி'' என்பது சந்தேகமின்றிப் புதியது, தனிவகைப் பட்டது. புதுக் காலனியாதிக்க முறையின் தன்மையும் முரண் பாடுகளும் அதில் குறித்த அர்த்தத்தில் அனேகமாக முழுமை யாகப் பிரதிபலிக்கின்றன. வழக்கமான காலனியாட்சி முறை யுடன் உறவும் அதன் சில இயல்புகளை மரபுரிமையாகப் பெற் றிருப்பதும், அதே சமயம் கட்டுப்பாடு, சார்பு, இவற்றின் மறைமுகமான அதிகச்''சுதந்திரமான''வடிவங்களும்; ஏகாதி பத்தியத்தின் போர்த்தந்திர நலன்களையே முதன்மை இலக் காகக் கொண்டிருப்பதும் அதே சமயம் திண்ணமான லாபங்கள் பெறும் இடைவிடாத வேட்கையும்; ''மூன்றாவது உலகில்'' ஏகாதிபத்தியக் கொள்கையின் பிரதான நோக்கங்

கள் ஈடேற வகைசெய்வதற்கு உரிய மாறுதல் அற்ற போக்கு, அதே சமயம் இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான ஸ்தூல வடிவங்களிலும் வழிகளிலும் பெரிதும் வளைந்து கொடுக்கும் தன்மையும் நெளிவு சுளுவும்; முன்னாள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் ஏகாதிபத்திய ஏகபோக நிறுவனங்களின் நிலைகளை அதிகபட்ச அளவில் வைத்திருப்பதிலும் வலுப்படுத்துவதிலும் அசைவற்ற கொள்கையுறுதி, அதே சமயம் இந்த நாடுகளின் தவிர்க்க முடியாத பொருளாதார வளர்ச்சிக்குப் பொருத்தமான திசைத் திருப்பம்—இவையே இந்தத் தன்மைகளும் முரண்பாடுகளும்.

அரசாங்கக் கடன்கள் போன்ற வழக்கமான நிகழ்ச்சிகள்கூட ''உதவியின்'' வரம்புகளுக்குள் புதுமை முத்திரை பெற்றுள்ளன. இவற்றின் அடிப்படைச் சமுதாய, பொருளாதார இயல்பு, இவற்றின் ஏகாதிபத்தியத் தன்மை, முன்போலவே இருந்து வருகிறது என்று கூறவே வேண்டாம். தனிவகையான மூலதன ஏற்றுமதியே இந்த இயல்பு. பொருளாதார நோக்கங்களால் மட்டும் இன்றி, முதன்மையாக அரசியல் நோக்கங்களாலும் உலக வர்க்கப் போராட்டத்தின் நலன்களாலும் மேலும் ஓரளவு ஏகாதிபத்தியங்களுக்குள் நிலவும் முரண்பாடுகளாலும் இது தூண்டவும் இயக்கவும் முறைப்படுத்தவும் படுகிறது என்பதே பெரும் அளவுக்கு இதன் தனித் தன்மை ஆகும். உதாரணமாக 1962ல் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், பிரான்சு, ஜெர்மன் கூட்டுக் குடியரசு, இத்தாலி, ஜப்பான் ஆகிய வல்லரசுகள் வளர்ந்து வரும் நாடுகளுக்கு அளித்த அரசாங்கக் கடன்களில் 39 சதவிகிதம்—இது பல நூறு கோடி டாலர்களாகும்—வட்டி இல்லாமலும் ஆண்டுக்கு 1 சதவிகித வட்டியின் பேரிலும் வழங்கப்பட்டன. அதாவது தனியார் பாங்கு மூலதனத்தின் வழக்கமான ''வர்த்தகக்'' கடன்களுடன் ஒப்பிடும் போது 5.5 முதல் 7.5 மடங்கு வரை குறைந்த வட்டியின் பேரில் வழங்கப்பட்டன.

நேரடியான பாதிப்பு விளைக்கும் விசைக் கருவிகளாகப் பயன்படுபவையும் இன்னும் அதிக அரசியல் தன்மை கொண்டவையுமாக விளங்குகின்றன உதவி நிதிகளும் ''நன்கொடைகளும்'' ''இலவச உதவிகள்'' எனப்படுபவையும் 480ம் நம்பர் சட்டத்தின்படி செய்யப்படும் அமெரிக்க உணவுப்

பொருள் சப்ளைகளும். இந்த உணவுப் பொருள்களின் விற்பனை யால் மீட்கப்படும் கிட்டத்தட்ட 60 சதவிகிதம் பணத் தொகை அரசாங்கங்களுக்கும் தனி முதலாளிகளுக்கும் கடன் கொடுப்பதற்காகச் செலவிடப்படுகிறது. இந்தச் சப்ளைகள், சிறப்பாக இந்த 60 சதவிகிதத் தொகை, ஒரு சில குறிப்பிட்ட காரணங்களுடன் மூலதன ஏற்றுமதி வடிவங்களுக்கு மாற்றப் படலாம். இந்த வடிவங்கள் இன்னும் அதிகத் தனித்தன்மை கொண்டவை என்பது கூறாமலே விளங்கும்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளை விட்டுவிட்டால் ''உதவி யின்'' மொத்தத் தொகையில் உதவி நிதிகளின் ஆக உயர்ந்த சதவிகிதம் ''பழைய'' காலனியாட்சி வல்லரசுகளிடமே வழக்கமாகக் காணப்படுகிறது. உதவி நிதிகளின் அரசியல் தன்மையை இது பின்னும் ஒரு முறை துலக்கிக் காட்டுகிறது. இவற்றின் தலையூற்றுக்கள் அண்மையில் நிலவிய காலனியாட் சிக் காலத்துக்கு நேரே இட்டுச் செல்கின்றன. ஏகாதிபத்திய வாதிகளுக்குப் பணியும் அரசாங்கங்களுக்கும் அவர்களது கைப்பாவை அரசாங்கங்களுக்கும் ஆதரவு அளிக்க இந்த உதவி நிதிகள் பயன்படுகின்றன. ''உபரி'' விவசாய விளை பொருள்களின் சப்ளைகளைப் பொறுத்தவரை, பேராசிரியர் வி. ரிமாலவ் கொடுத்துள்ள புள்ளிவிவரங்களின்படி, அறுபதுக் களின் மத்தியில் இவை ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு ஏகாதிபத்திய நாடுகளால் அளிக்கப்பட்ட ''உதவியில்'' நான்கில் ஒரு பங்காகவும் அமெரிக்க ஐக்கிய நாடுகளினால் தரப்பட்ட ''உதவியில்'' மூன்றில் ஒரு பங்காக வும் இருந்தன.

''தொழில்நுட்ப உதவி'' எனப்படுவதும் இவ்வளவே அரசியல் மறைபொருள் கொண்டது. வளர்ச்சி பெற்று வரும் நாடுகளுக்கு நிபுணர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை அனுப்பு வதும், இந்த நாடுகளுக்குத் தேவையான ஊழியர்களை அவற் றிலேயே பயிற்சி அளித்துத் தயார் செய்வதும், ஏகாதிபத் திய நாடுகளின் கல்வி நிலையங்களில் இந்நாட்டு மாணவர் களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துப் பயிற்சி அளிப்பதும், தொழில்நுட்ப தஸ்தாவேஜுகளை வழங்குவதும், இவை போன்ற பிறவும் இந்த ''உதவியில்'' அடங்கும்.

1962 முதல் 1966 வரை ''தொழில்நுட்ப உதவி'' பற் றிய அரசாங்கத் திட்டங்களின்கீழ் வளர்ச்சி அடைந்து வரும்

நாடுகளுக்கு முதலாளித்துவ அரசுகளிலிருந்து நிபுணர்கள் அனுப்பப்பட்டது குறித்தும், இந்த நாடுகளின் ஊழியர்கள் பயிற்றுவிக்கப்பட்டது குறித்தும் உள்ள விவரங்கள் வருமாறு:[2]

| | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 |
|---|---|---|---|---|---|
| வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளைச் சேர்ந்த மாணவர்களும் தொழிற் பயிற்சி பெறுவோரும் . . . . . . . | 40,137 | 43,827 | 57,339 | 62,771 | 69,505 |
| வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ அரசுகளிலிருந்து அனுப்பப்பட்ட நிபுணர்கள் . . . . . . | 79,298 | 82,016 | 86,681 | 91,594 | 104,396 |

இளம் தேசிய அரசுகளின் பல்வேறு வாழ்க்கைத் துறைகளிலும் உட்புகுவதற்கும், இளைஞர்களைக் கொள்கைவாத நோக்கில் தயார்படுத்துவதற்கும் உள்நாட்டு அறிவுஜீவிகளுடன் தொடர்புகளை விரிவாக்கிக் கொள்வதற்கும் ''தொழில் நுட்ப உதவி'' பெருத்த வாய்ப்புக்கள் தருகிறது, சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப மாறக்கூடிய வடிவங்களுக்கு வசதி ஏற்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, லைபீரியாவில் ''உதவித்'' திட்டத்தின்படி பணியாற்றும் அமெரிக்க ஊழியர்களின் கட்டுப்பாட்டின்கீழ் அங்குள்ள 12 இலாகாக்களில் (அமைச்சரகங்களில்) ஆறு இயங்குகின்றன. 1968, ஏப்ரலில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் லைபீரியாவுக்கும் புதிய உடன்படிக்கை ஏற்பட்டது. இதன்படி அந்த நாட்டில் பணியாற்றும் அமெரிக்க நிர்வாக ஊழியர்கள் இன்னும் இரண்டு ஆண்டுகள் அங்கே பதவிகளில் இருக்க வகை செய்யப்பட்டது.

தங்கள் நிபுணர்களை ''மூன்றாவது உலகைச்'' சேர்ந்த நாடுகளின் இராணுவங்களில், அவற்றின் படை அதிகாரிகளைப் பயிற்றும் அமைப்பில் நுழைப்பதற்குப் புதுக் காலனி

யாதிக்கவாதிகள் தனிப்பட்ட முக்கியத்துவம் அளிக்கிறார்கள். இந்தியானா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜான் லொவேல், மேற்கு மிச்சிகன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிம் என்னும் அமெரிக்கப் பேராசிரியர்கள் தந்துள்ள விவரங்களின்படி, 90க்கும் மேற்பட்ட நாடுகள் தங்கள் படையினரைப் பயிற்சி பெறும்பொருட்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு அனுப்புகின்றன. ஏகாதிபத்திய வட்டாரங்களின் இது போன்ற நடவடிக்கைகளது கொள்கைவாத, அரசியல் உட்பொருளைப் பேராசிரியர்கள் லொவேலும் கிமும் மிக அப்பட்டமாகவே வெளியிடுகிறார்கள். அவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்கள்: ''பிற தொழில்முறைக் குழுக்கள் போலவே, படையினருக்கும் பொதுவான 'பாஷை' இயல்பாகவே அமைந்துள்ளது... இது மற்ற அரசுகளைச் சேர்ந்த அதே தொழிலின் குறிப்பிட்ட பிரதிநிதிகளுடன் அவர்களை ஒன்றுபடுத்துகிறது. இத்தகைய பிற குழுக்களைக் காட்டிலும் அதிக அளவில் அனேக ஆசிய நாடுகளின் (பேராசிரியர்கள் முதன்மையாக ஆசியப் பிரச்சினைகளைப் பரிசீலனை செய்வதனால் ஆசிய நாடுகளை மட்டுமே குறிப்பிடுகிறார்கள்.—க. பு.) இராணுவத்தினர் இந்தத் தொழில்முறை 'பாஷையை' வழங்கும் தங்கள் திறனைக் கட்டாயமாக வளர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.... பல்வேறு அமெரிக்க நிலையங்களில் பயிற்சி பெறும் நோக்கத்துடன் மிகப் பெருந்தொகையான ஆசிய இராணுவத்தினர் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு வருகிறார்கள். அமெரிக்க நிலைமைகளுடனும் அமெரிக்கக் கருத்துக்களுடனும் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் இத்தகைய இராணுவத்தினரின் எண்ணிக்கை அண்மைக் காலத்தில் ஆண்டுதோறும் எண்ணாயிரம் ஆக இருந்தது.... இதோடு கூடவே, அவர்களுடைய சொந்த நாடுகளில் மிக ஏராளமான உள்நாட்டு இராணுவத்தினர் அமெரிக்கப் படையினருடன் தோளோடு தோள் சேர்த்து வேலை செய்து வருகிறார்கள்.''[3]

சிறப்பாகச் சில ஏகாதிபத்திய வல்லரசுகளின் மொத்த ''உதவித்'' திட்ட அமைப்பில் ''தொழில்நுட்ப உதவி'' முக்கிய இடம் பெற்றிருக்கிறது. 1964ல் பிரான்சின் மொத்த ''உதவித்'' தொகையில் 39.7 சதவிகிதமும் பிரிட்டனின் ''உதவித்'' தொகையில் 16.8 சதவிகிதமும் இதற்காக ஒதுக்கப்பட்டன.

''உதவியின்'' தன்மை, செல்திசை, இவற்றின் காரண மாகவும், பொருளாதார நோக்கங்களைவிட அதிகமாக அரசியல் நோக்கங்களுக்காகவே அது ஏற்படுத்தவும் முறைப் படுத்தவும் பட்டிருப்பதன் காரணமாகவும் தோன்றுகிறது அதன் மற்றொரு தனிச் சிறப்பு, அதாவது அரசு உதவி என்ற அதன் இயல்பு.

''உதவியின்'' வர்க்கரீதியான முக்கியப் பணிகள் இரு உலக அமைப்புக்களின் போராட்டத்துடனும் விடுதலை அடைந்த நாடுகளின் வளர்ச்சிப் பாதையை நிர்ணயிப்பதுட னும் தொடர்பு கொண்டவை. தனியார் மூலதனம் எவ்வளவு தான் அதிகமாக ஓரிடத்தில் குவிந்து மையப்படுத்தப்பட் டிருந்தாலும் ''உதவியின்'' இந்தப் பணிகளை நிறைவேற்றப் போதுமான ஆற்றலோ, அவசியமான விசைக் கருவிகளோ அதனிடம் கிடையாது. முதலாளித்துவம் அனைத்தின் ஆக உயர்ந்த, நீண்டகாலப் போர்த்தந்திர நலன்களைக் கவனத் தில் கொள்வதற்கு, ''ஒரே முதலாளி'' என்ற வகையில் செயல்படுவதற்குக்கூட அது போதிய அளவு திறன் அற்றது.

மிக நீண்ட, அதுவும் திட்டமாகத் தெரியாத காலம் கழிந்த பிறகே தூய பொருளாதார லாபங்கள் தரக் கூடிய தும், முதன்மையாக அரசியல் நோக்கங்கள் கொண்டது மான போக்கைக் கடைப்பிடிப்பது தனியார் மூலதனத்தால் முடியாது. தவிரவும் குறித்த அளவு பொருளாதாரக் ''கைப் பொறுப்பையோ'' லாபமின்மையையோ அல்லது ''தொலை இலக்கைக்'' கைப்பற்றும் கொள்கையின் பெயரால் நஷ்டத் தையோ ஏற்றுக்கொள்வது அதன் இயல்புக்கே புறம்பானது. தொழில் நிலையங்கள் தேசீய உடைமை ஆக்கப்படும் உண்மை யான அபாயம் நிலவும் பிரதேசங்களில் தனியார் மூலதனம் பெரு வெள்ளமாகப் பெருகி வராது. அது மட்டும் அல்ல, ''மூன்றுவது உலகின்'' அனேக நாடுகளிலிருந்து, உதாரண மாக, கினி, அல்ஜீரியா, கானு முதலியவற்றிலிருந்து அன்னியத் தனியார் மூலதனம் வெளியேறியது, இப்போதும் அடிக்கடி வெளியேறுகிறது என்பதை அனுபவம் காட்டுகிறது.

மாருக, அரசு-ஏகபோக மூலதனமோ இவை எல்லாவற் றையும் தாங்க வல்லது, தாங்கவும் செய்கிறது.

விடுதலை பெற்ற பல நாடுகளில் அரசு மூலதனம் தனியார் ஏகபோக முதலீடுகளைக் காட்டிலும் குறைவான

எச்சரிக்கையுடனும் பகைமையுடனும் ஏற்கப்படுகிறது. புதுக் காலனியாதிக்கவாதிகள் தாங்கள் உட்புகுவதற்கும்,. ஏகபோகங்களின் ஏகாதிபத்திய நிலைகளை மொத்தத்தில் வலுப்படுத்திக் கொள்வதற்கும், ஐக்கிய அரேபியக் குடியரசு போன்ற நாடுகளில் வெளிநாட்டுத் தனியார் தொழில் நிலையங்கள் தேசீய உடைமை ஆக்கப்பட்டபின் ஏற்பட்டுள்ள ''வெற்றிடத்தை'' ஓரளவாவது நிரப்புவதற்கும் இதைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். மூலதன ஏற்றுமதியின் தனிவகைப்பட்ட அரசு வடிவம் என்ற முறையிலும் அண்மை ஆண்டுகளில் நிலையான தன்மை பெற்றுவிட்ட, ஏகாதிபத்திய அரசுகளின் குறித்த ''பணி'' என்ற முறையிலும் ''உதவி'' என்பது தலைமைக் காலனியாதிக்க வல்லரசுகளில் அரசு ஏகபோக மூலதனத்தின் பாத்திரம் வலுப்படுவதன் அடிப்படையிலேயே தோன்றியிருக்க முடியும்.

புதுக் காலனியாதிக்கக் கொள்கையின் எந்தச் சில அடிப்படை நோக்கங்களையும் போக்குக்களையும் செயல்படுத்துவதற்கு ''உதவி'' கையாளப்படுகிறதே, அவற்றைத் தனிப்பிரித்துக் காண முடியும்.

முதன்மையாக இந்த நோக்கம், ''மூன்றாவது உலகில்'' முதலாளித்துவ உறவுகள் பரவுவதற்கும் நிலைபெறுவதற்கும் உதவுவதும், சமமின்மை, சார்ந்திருக்கும் தன்மை ஆகியவை கொண்ட உறவுகளின் புது வடிவங்களது அடிப்படையில், ஏகாதிபத்திய அரசியல் அமைப்பில் இளம் தேசீய அரசுகளை வைத்திருப்பது அல்லது திரும்பவும் சேரச் செய்வது என்பதன் அடிப்படையில், இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த நாடுகளை முதலாளித்துவ உலகுடன் அதிக உறுதியாக இணைப்பதுமே. உதாரணமாக ''முன்னேற்றத்திற்கான ஐக்கியம்'' என்பதன் முக்கிய நோக்கம் இதுவே என ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இந்த ''முன்னேற்றத்திற்கான ஐக்கியம்'' ஏகாதிபத்திய ''உதவி'' பற்றிய மிகமிக விரிந்து பரந்த, குறிக்கோள் முனைப்புள்ள, விரிவாக விளம்பரப்படுத்தப்பட்ட திட்டங்களில் ஒன்று ஆகும்.

இன்டர்நஸியோனலஸ் ஆப்பிரிக்கா-போரம் என்னும் மேற்கு ஜெர்மானியச் சஞ்சிகை, தனது 1967, ஆகஸ்டு இதழில், ஆப்பிரிக்காவுக்கு அமெரிக்காவின் ''உதவியை'' மதிப்பிட்டிருக்கிறது. கம்யூனிஸ எதிர்ப்புச் சொற்றொடர்களையே அது பயன்படுத்தியுள்ளது என்பது கூறாமலே விளங்கும். அது

எழுதியிருப்பதாவது: ''ஆப்பிரிக்காவின் மிக முக்கியமான நாடுகளில் சமுதாய, பொருளாதார நிலைமைகளை ஸ்திரப் படுத்துவதன் மூலம், கம்யூனிஸ ஆட்சி அங்கு பரவாதபடியும் கம்யூனிஸ மறைமுக நாச வேலைகள் நிகழாதபடியும் தடுக்க முயல்வது என்பதே எல்லாவற்றிலும் காணப்படும் தெளிவான கருத்தோட்டம் ஆகும்''.

செனேட் வெளிவிவகாரக் கமிட்டித் தலைவர் ஜான் புல்பிரைட் போன்ற நிதானப் போக்குள்ள அமெரிக்க அரசியல் தலைவர்கள்கூட அமெரிக்க ஐக்கிய நாடுகளது ''உதவி'' செய்யும் ''தொண்டை'' ஒப்புக் கொள்கிறார்கள், இயல்பானது என்று கருதுகிறார்கள். ''வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு நமது பொருள் உதவியின் மனிதாபிமானக் காரணமும் பயன்பாடும் எத்தகையவையாக இருந்தாலும் சரியே, மேற்கு நாடுகள் தங்கள் பாதுகாப்பை நிலைநிறுத்தவும் நமது வகையான சமூகமும் அதன் முக்கிய மதிப்புக்களும் நிலவவும் தழைக்கவும் வாய்ப்பளிக்கும் உலகச் சூழலை நமக்கு உத்தரவாதப்படுத்திக் கொள்ளவும் எவற்றின் உதவியால் முயல்கின்றனவோ அந்தக் கருவிகளில் இது ஒன்று'' என்று வலியுறுத்துகிறார் புல்பிரைட்.[4]

பிரெஞ்சு ராஜதந்திரிகளும் முற்றிலும் திட்டவட்டமாகத் தங்கள் கருத்தை வெளியிடுகிறார்கள். பிரெஞ்சு ''உதவியின்'' ஆழ்ந்த பொருள் கம்யூனிஸத்தின் சாத்தியமான ஈர்ப்புச் சக்திக்கு எதிர்நிறையை உத்தரவாதப்படுத்துவதுதான் என்று அல்ஜீரிய விவகார அமைச்சர் த புரொலீ 1963 நவம்பரில் கூறினார்.[5]

விரும்பும் விளைவை, அதாவது வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் முதலாளித்துவ வடிவங்களைத் தூண்டி ஊக்குவதை, ஏகாதிபத்திய வல்லரசுகளுடன் இந்நாடுகளின் பொருளாதார உறவுகளின்மீது தான்தோன்றித்தனமான பாதிப்புகள் நிகழ்த்துவதன் மூலம் ''உதவி'' ஏற்படுத்தி வருகிறது. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கும் ஏகாதிபத்திய அரசுகளுக்கும் இடையே பொருளாதார, வர்த்தகத் தொடர்புகளை அது தீவிரப்படுத்துகிறது. பரம்பரையாக உருவாகியுள்ள உறவுகளையும் சந்தைப் போக்கையும் நிலைநிறுத்தி வலுப்படுத்துகிறது. இயந்திர சாதனங்கள் சப்ளை செய்பவையும் கச்சாப்பொருள்களை வாங்குபவையுமான நாடுகளுடன்

முன்னுள் காலனிகள், அரைக் காலனிகளின் பிணைப்பை அது கெட்டிப்படுத்துகிறது. ''உதவி'' என்ற பெயரால் கிடைக்கும் பணத்தின் 70 முதல் 90 சதவிகிதம் வரை ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் சரக்குகளுக்கு விலை செலுத்துவதற்கே போய்விடுகிறது என்னும் உண்மையை எடுத்துக் காட்டுவதே போதுமானது.

ஆனால் எல்லாவற்றிலும் முக்கியமானது என்னவென்றால் ''உதவி'' என்பது நேரடியான, தீவிர அரசியல் பாதிப்பு ஏற்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதே. இன்னும் சரியாகச் சொன்னால் இளம் தேசீய அரசுகளின் உள், வெளி விவகாரக் கொள்கைப் போக்கின்மீது நிர்ப்பந்தம் விளைவிக்கப்படுகிறது. சிறிதும் பொருளாதாரத் தன்மை அற்ற காரணங்களுக்காக ''உதவி'' வழங்கப்படுகிறது. கைப்பாவை அரசாங்கங்களுக்கும் ஆக்கிரமிப்புக் கூட்டணிகளின் உறுப்பு நாடுகளான கூட்டாளிகளுக்கும் ஏகாதிபத்தியக் கொள்கையைப் பின்பற்ற ஆயத்தமாய் இருக்கும் அரசாங்கங்களுக்கும் இந்த வகையில் ஆதரவு அளிக்கப்படுகிறது. விடுதலை அடைந்த நாடுகளில் ஆளும் வட்டாரங்களின் சில பகுதியினருக்கும் குறித்த சமுதாயக் குழுக்களுக்கும் கைக்கூலி கொடுக்கவும் ''உதவித்'' தொகை செலவிடப்படுகிறது.

ஏகாதிபத்திய ''உதவி'' பகிர்ந்தளிக்கப்படும் விதமே அதன் தன்மையைக் காட்டிவிடுகிறது. 1951 முதல் 1965 வரை அமெரிக்க ஐக்கிய நாடுகள் சியாங் காய்-ஷேக் கும்பலுக்கு அளித்த பொருளாதார ''உதவி'' மட்டுமே 160 கோடி டாலர், அதாவது தைவானின் மக்கள்தொகைக்கு நபர்வாரியாக 150 டாலர் ஆகும்.[6] தெற்கு வியத்நாமுக்கும் தென் கொரியாவுக்கும் வழங்கப்பட்டுள்ள ''உதவி'' பற்றிய புள்ளிவிவரங்கள் இதற்கு ஒப்பானவையே. ''தெற்கு வியத்நாமுக்கு அளிக்கப்பட்ட பொருளாதார, தொழில்நுட்ப உதவி அயல் நாடுகளுக்கான அமெரிக்க உதவித் திட்டத்தின் மிகப் பெரிய நடவடிக்கை ஆகும்'' என்று கரண்ட் ஹிஸ்டரி என்ற சஞ்சிகையின் 1968, ஜனவரி இதழில் குறிப்பிடப்பட்டது. 1968-69ம் நிதி ஆண்டில் ''உதவி'' அளிப்பதற்காக அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசாங்கம் கோரிப் பெற்ற தொகையின் பெரும் பகுதி தெற்கு வியத்நாமுக்காக

ஒதுக்கப்பட்டது என்கிறூர் ''சர்வதேச அபிவிருத்தி நிர்வாக நிலேயத்தின்'' டைரெக்டர் டபிள்யூ. கோட்.

எடுத்துக்காட்டான இன்னும் ஒரு புள்ளிவிவரம். 1957 ஜனவரி முதல் 1967 ஜனவரி வரை உள்ள பத்து ஆண்டுகளில் இஸ்ரேலுக்கு அமெரிக்க ஐக்கிய நாடுகள் அளித்த மொத்த ''உதவி'' சுமார் 50 கோடி டாலர், அதாவது, ஜனத்தொகை யில் நபர்வாரி கிட்டத்தட்ட 180 முதல் 200 டாலர் வரை ஆகும்.[7]

1964-65ம் நிதி ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் வழங்கிய இராணுவ ''உதவியின்'' சுமார் 70 சதவிகிதம் ஆசியாவில் உள்ள அதன் கைப்பாவை அரசாங்கங்களுக்கும் இராணுவக் கூட்டணிகளிலும் ஒப்பந்தங்களிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கூட்டாளிகளுக்கும் கிடைத்தது. இவையாவன: தெற்கு வியத்நாம், தென் கொரியா, தைவான், பிலிப்பைன், தாய்லாந்து, துருக்கி, பாக்கிஸ்தான், ஈரான் ஆகியவை.

மறுபுறம் ''உதவிக்குப்'' பாத்திரமாக ஆசியாவில் இந் தியாவும் ஆப்பிரிக்காவில் நைஜீரியாவும் போன்ற நாடுகள் விளங்குகின்றன. இவை ஆக்கிரமிப்புக் கூட்டணிகளின் உறுப் பின அல்ல. இவற்றை ஆள்பவை ஏகாதிபத்தியக் கைப்பாவை அரசாங்கங்களும் அல்ல. ஆனுல் உலகின் சம்பந்தப்பட்ட பிர தேசங்களில் முதலாளித்துவத்தின் நிலேகளுக்கு அதி முக்கிய மானவையாக இவை கருதப்படுகின்றன. 1968-69ம் நிதி யாண்டில் அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசாங்கம் ''உதவிக் காகக்'' கோரிப் பெற்ற தொகையில் 90 சதவிகிதம் 15 நாடுகளிடையே வினியோகிக்கப்பட்டது. மற்ற 40 நாடுகளின் பங்குக்குக் கிடைத்ததோ 10 சதவிகிதத்திற்கும் குறைவான பகுதியே. இதிலும் மிகப் பெருத்த தொகைகள் தெற்கு வியத்நாமுக்கும் இந்தியாவுக்கும் ஒதுக்கப்பட்டன.

''உதவி'' என்பது இளம் தேசீய அரசுகளே நிர்ப் பந்திக்கும் கருவியாகக் கையாளப்படுவதற்குக் கணக்கற்ற உதாரணங்கள் உள்ளன.

1956ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடையவும் பிரிட்ட னுடையவும் அரசியல் கோரிக்கைகளே எதிர்த்து நிராகரித்து விட்டதுமே, அஸ்வான் அணே கட்ட நிதி உதவி செய்வதாக முன்னர் அளித்திருந்த வாக்குறுதியை இவ்விரு வல்

லரசுகளும் நிறைவேற்ற மறுத்துவிட்டன. பிறகோ, எகிப்திய மக்களுக்கு எதிராக அவை உண்மையான பொருளாதாரப் போர் தொடுத்துவிட்டன. 1958ல் கினி பிரெஞ்சுச் ''சங்கத்தில்'' சேர மறுத்து விடுதலை கோரியதுமே பிரெஞ்சு அரசாங்கம் அதற்கு ''உதவி'' அளிப்பதை நிறுத்திவிட்டது. சேதி ஜகனின் முற்போக்கு அரசாங்கத்தின் தலைமையில் இயங்கிய ''பிரிட்டிஷ்'' கயானாவுக்கு அமெரிக்க ''உதவி'' மறுக்கப்பட்டது. ஆனால் இந்த அரசாங்கம் பதவியிலிருந்து அகற்றப்பட்டதுமே அமெரிக்க ஐக்கிய நாடுகள் தனது நிலையை மாற்றிக் கொண்டது. கானா விஷயத்திலும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் இவ்வாறே நடந்து கொண்டது. இந்த நாட்டில் முற்போக்கு அரசாங்கத்தைக் கவிழ்த்து இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதும் பற்றாததுமாக அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பிரிட்டனும் ஜெர்மன் கூட்டுக் குடியரசும் அதற்கு ''ஆபத்துக் கால'' நிதியுதவியும் உணவுப் பொருள் உதவியும் விரைந்து அளித்தன. முன்னர் ந்க்ருமா அரசாங்கத்துக்கு மறுக்கப்பட்ட இந்த ''உதவி'' பல அரசியல் நிபந்தனைகளைச் சுமத்திய பின்பே அளிக்கப்பட்டது என்பது கூறாமலே விளங்கும். 1963ல் தான்ஜனியா அரசாங்கம் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் கான்ஸல் அலுவலகம் தாருஸ் ஸலாம் நகரில் திறக்க அனுமதி வழங்கிய பின்னர், ஜெர்மன் கூட்டுக் குடியரசு அரசாங்கம் தொழில்நுட்பப் பணியாளர்களைப் பயிற்றுவதாகவும் ''உதவி'' அளிப்பதாகவும் தான்ஜனியாவுடன் ஏற்கனவே செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்தைத் தன் தரப்பில் ரத்து செய்துவிட்டது.

இராணுவக் கூட்டணிகளில் உள்ள தங்கள் கூட்டாளிகள் விஷயத்திலும்கூட, அமெரிக்க ஐக்கிய நாடுகளினதும் பிற ஏகாதிபத்திய வல்லரசுகளுடையவும் அரசாங்கங்கள் ''உதவியை'' அரசியல் நிபந்தனைகளை வலுக்கட்டாயமாகச் சுமத்துவதற்கு உரிய கருவியாகப் பலமுறை பயன்படுத்தியுள்ளன. எடுத்துக்காட்டாக, பாக்கிஸ்தான் அமெரிக்க நிர்ப்பந்த அச்சுறுத்தல் முறைகளுக்கு ஆளாயிற்று. பாக்கிஸ்தானுக்கு ''உதவி'' அளிப்பது குறித்த சர்வதேசப் பாங்குகள் குழுவின் கூட்டத்தை ஒத்திவைப்பதாக அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜான்ஸன் 1965 ஜூலையில் அறிவித்து, இவ்வாறு ஏற்படும் இடைக்காலத்தை ''மற்றப் பிரச்சினைகள்

பற்றி விவாதிப்பதற்குப்'' பயன்படுத்தலாம் என்று யோசனை சொன்னார். பாக்கிஸ்தானின் வெளிநாட்டுக் கொள்கைப் போக்கில் ஏற்பட்ட மாறுதல்கள்பால் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அதிருப்தியை வெளிக்காட்டும் நோக்கத்துடனும், பாக்கிஸ்தானை மீண்டும் அமெரிக்காவின் ''விசுவாசமுள்ள'' கூட்டாளி ஆக்கும் பொருட்டுமே அவர் இவ்வாறு செய்தார் என்று அப்போது உலகப் பொதுஜன அபிப்பிராயம் ஒரு முகமாக இருந்தது. இந்த ''ஒத்திவைப்பின்'' மறைமுக நோக்கத்தை அமெரிக்க ஐக்கிய நாடுகளே மூடிவைத்திருக்க வில்லை. ஜான்ஸனின் இந்த அறிவிப்புக்குச் சிறிது காலம் முன்பு, அமெரிக்க ஐக்கிய நாடுகள் சர்வதேச அரசியல் துறை யில் பாக்கிஸ்தான் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளால் ''ஆழ்ந்த கவலை'' அடைந்திருப்பதாகவும் இதனால் ''உதவி'' குறித்த அமெரிக்கத் திட்டம் மாற்றப்படலாம் என்றும் அப்போதைய அமெரிக்க வெளிவிவகார உதவி அமைச்சர் டால்போட் கூறியிருந்தார்.

ஏகாதிபத்திய வல்லரசுகளின் தனியார் மூலதனத்திற்கு எதிராக அனேக இளம் தேசீய அரசுகள் இப்போது பலத்த தடைகள் விதித்து வருகின்றன. இந்தத் தடைகளைப் பிளந்து ஏகாதிபத்திய வல்லரசுகளின் தனியார் மூலதனத்துக்குப் புகு வழி ஏற்படுத்துவதற்கும் ''உதவி'' கருவியாகப் பயன்படுகிறது. ''உதவி'' பெறும் நாடுகள் அன்னிய மூலதனம் உள்ளே பெருகி வரச் ''சாதகமான சூழ்நிலை'' ஏற்படுத்த வேண்டும் என்றும் இந்த மூலதனம் தேசீய உடைமை ஆக்கப்படாது என உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்றும் இன்னும் பலவாறாகவும் நிபந்தனைகள் ''உதவி'' பற்றிய ஒப்பந்தங் களிலேயே அடிக்கடி நேரடியாக விதிக்கப்படுகின்றன. ''முன்னேற்றத்திற்கான ஐக்கியத்தின்'' செயல்திட்டத்தில், வாக்களிக்கப்பட்டுள்ள நூறு கோடிக் கணக்கான தொகை யின் கணிசமான பகுதி நேரடியான தனியார் முதலீடுகளின் வடிவிலேயே வரும் என்று வகை செய்யப்பட்டிருக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் லத்தீன் அமெரிக்க நாடு களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள அனேக ஒப்பந்தங்களில் இந்த விதி ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளது.

ஏகாதிபத்திய ஏகபோக நிறுவனங்களின் நலன்களைப் பாதிக்கத் ''துணியும்'' நாடுகளைத் தண்டிப்பதற்குரிய ஆயுத

மாகவும் ''உதவி'' பயன்படுத்தப்படுகிறது. 1963ல் இலங்கையில் அமெரிக்கப் பெட்ரோலியக் கம்பெனிகள் தேசீய உடைமை ஆக்கப்பட்டன. அவை கோரிய அளவுமீறிய ஈட்டுத் தொகைகளைத் தர அரசாங்கம் இசையவில்லை. உடனேயே அமெரிக்க ஐக்கிய நாடுகள் இலங்கைக்கு ''உதவியை'' நிறுத்திவிட்டது. முற்போக்குள்ள பண்டாரநாயகா அரசாங்கத்தின் இடத்தில் ஆட்சிக்கு வந்த இலங்கைத் தலைவர்கள் தேசீய உடைமை ஆக்கப்பட்ட சொத்துக்களுக்கு உரிய ஈட்டுத்தொகை பற்றி ''எஸ்ஸோ ஸ்டாண்டர்டு ஈஸ்டர்ன்'', ''கால்டெக்ஸ் ஸிலோன் லிமிட்டெட்'' என்னும் அமெரிக்கக் கம்பெனிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டபின், 1965ம் ஆண்டுக் கோடையில் ''உதவி'' மீண்டும் அளிக்கப்படலாயிற்று.

மொராக்கோவும் டியூனிஷியாவும் எடுத்துக்கொண்ட தேசீய உடைமை ஆக்கும் நடவடிக்கைகள் பிரெஞ்சுக் குடியேற்றப் பிரஜைகளையும் தொழிலதிபர்களையும் பாதிக்கவே, பதில் நடவடிக்கையாக பிரான்சு இந்நாடுகளுக்கான தனது ''உதவித்'' திட்டங்களை நிறுத்திவிட்டது.

இந்தோனேசியா தொழில் நிலையங்களை மீண்டும் தனியார் உடைமை ஆக்க வேண்டும் என்றும் தேசீய உடைமையாக்கப்பட்ட அவர்களது தொழில் நிலையங்களை அன்னிய ஏகபோக நிறுவனங்களுக்குத் திருப்பித் தர வேண்டும் என்றும் ஏகாதிபத்திய வல்லரசுகள் அந்நாட்டுக்கு மீண்டும் ''உதவி'' அளிப்பதற்கு நிபந்தனைகள் விதித்தன. இந்தோனேசிய அரசாங்கம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அமெரிக்க ''குட்இயர்'' கம்பெனியின் ரப்பர் தோட்டங்கள், பிரிட்டிஷ்-டச்சுக் கம்பெனி ''யூனிலெவரின்'' தொழில் நிலையங்கள் போன்ற அனேகத் தொழில் நிறுவனங்கள் முந்திய சொந்தக்காரர்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுவிட்டன, அல்லது ஒப்படைக்கப்படுகின்றன. அன்னிய முதலீடுகள் பற்றிய விசேஷச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான், பிரிட்டன், ஹாலந்து, பிற அரசுகள் ஆகியவற்றின் ஏகபோக நிறுவனங்களுக்கு இந்தோனேசியப் பொருளாதாரத்தில் புக வசதி அளிக்கிறது இந்தச் சட்டம். இந்தோனேசியாவில் முதலீடு செய்ய இந்தோனேசிய அரசாங்கத்தின்

இசைவைப் பெற்றுவிட்ட ஏகபோக நிறுவனங்களில் ''பாங்க் ஆப் அமெரிக்கா'', ''சேஸ் மன்ஹாட்டன் பாங்க்'', ''பர்ஸ்ட் நேஷனல் ஸிட்டி பாங்க்'' என்னும் மிகப் பெரிய அமெரிக்க பாங்கிகளும் உள்ளன. இவை ஏற்கனவே அங்கே தங்கள் கிளைகளைத் திறந்துவிட்டன.

''உதவியால்'' ஏற்படும் பொருளாதார விளைவுகளும் தனியார் மூலதனத்தின் விஸ்தரிப்புக்கு உதவுகின்றன. இங்கு குறிப்பிடப்படுவது ''உதவியின்'' பொதுவான பொருளாதார விளைவு அல்ல. அது முன்பே சுட்டிக் காட்டப்பட்டுவிட்டது. விடுதலை பெற்ற நாடுகளுக்கு உள்ளேயே நிகழும் ஸ்தூலமான மாறுதல்களே இங்கு குறிப்பிடப்படுகின்றன. ''உதவிக்கான'' இலக்குகளின் தேர்வு, சம்பந்தப்பட்ட துறைகளுக்கும் கிளைகளுக்கும் ''உதவி'' வினியோகிக்கப்படுதல் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டவை இவை. இந்த வினியோகத்தின் தெளிவான நோக்கம் அன்னிய மூலதனத்தின் செயல்பாட்டுக்கும் இரண்டாம் படியாக உள்நாட்டுத் தொழில் அதிபர்களின் நடவடிக்கைகளுக்கும் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்துவதும், இத்தகைய நடவடிக்கைகளுக்கு முற்றிலும் இன்றியமையாத, ஆனால் தனியார் மூலதனத்தின் நோக்கில் ''குறைந்த லாபம் தரும்'' முதனிலைகளை (அடிநிலை அமைப்பு, தேர்ந்த தொழிலாளர்களைப் பயிற்றல் முதலியன) தோற்றுவிப்பதுமே.

அடிநிலை அமைப்பை — சாலைகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், தகவல் தொடர்புச் சாதனங்கள், தண்ணீர் சப்ளை அமைப்பு ஆகியவற்றை—அபிவிருத்தி செய்வதற்கும், கனிய, விவசாயக் கச்சாப்பொருள்களின் உற்பத்தியை விரிவுபடுத்துவதற்கும், காலனியாட்சிக் காலத்தில் அஸ்திவாரம் போடப்பட்ட பொருளாதார அமைப்பைக் கணிசமான அளவுக்கு நிலையாக வைத்திருப்பதற்குமே ''உதவியின்'' மிகப் பெரும் பகுதி செலவிடப்படுகிறது. ''பொதுச் சந்தையின்'' ''ஐரோப்பிய அபிவிருத்தி நிதியின்'' ''உதவி'' இந்தச் சந்தையுடன் இணைந்த ஆப்பிரிக்க நாடுகளுக்கும் சில சார்புநிலை, காலனிப் பிரதேசங்களுக்கும் வினியோகிக்கப்படும் முறை, இந்த நாடுகளின் அளவுகடந்த பின்தங்கிய நிலையும் அதற்கு ஓரளவு காரணம் என்ருலும் இந்த விஷயத்தில் எடுத்துக்காட்டானது. ''ஐரோப்பியப் பொருளா

தாரக் கழகக்'' கமிஷன் தந்துள்ள புள்ளிவிவரங்களின்படி 1967, டிசெம்பர் 31ந் தேதி மேற்படி நிதியால் வழங்கப் பட்ட பொருளாதார ''உதவி'' பின்வருமாறு வினியோகிக்கப் பட்டது:[8]

| | |
|---|---|
| விவசாயத்தைப் ''புதுக்கி அமைத்தல்'' . | 48.8% |
| அடிநிலை அமைப்பு . . . . . . . . . . . | 34.1% |
| கல்வி, தொழில் பயிற்சி . . . . . . . | 9.8% |
| சுகாதாரப் பாதுகாப்பு . . . . . . . . | 5.8% |
| இயந்திரத் தொழில் பெருக்கம் . . . . | 1.3% |
| பல்வேறு நோக்கங்களுக்காக . . . . . | 0.2% |

முடிவாக, ''உதவி'' ஏகாதிபத்திய ஏகபோக நிறுவனங் களின் தனியார் மூலதனத்துக்கு நேரடியான ஆதரவு அளிப் பதற்காக, வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் குறித்த திட்டங்களுக்கும் தொழில் நிலையங்களுக்கும் நிதியுதவி இந்த மூலதனத்துடன் சேர்ந்து அளிப்பதன் வடிவிலும் தரப்படு கிறது. ஏற்கனவே எடுத்துக்காட்டப்பட்டுள்ள விவரங்கள் தவிர, தனியார், அரசு ஏகாதிபத்திய மூலதனத்தின் இத்தகைய ஒத்திசைந்த செயலுக்குத் தக்க உதாரணமாக கானாவில் ''வோல்டா திட்டம்'' செயல்படுத்தப்பட்ட ஸ்தூல நிலைமைகள் பயன்படக் கூடும்.

இதுபற்றி 1961ம் ஆண்டின் கடைசியில் ஏற்பட்ட உடன்படிக்கையில் பின்வருமாறு வகை செய்யப்பட்டது: இத்திட்டத்திற்காக நிறுவப்பட்ட கூட்டுக் கம்பெனி ''வால்கோ'' (''வோல்டா அலுமினியம் கம்பெனி''), அலுமி னியத் தொழிற்சாலையை நிறுவும்; அமெரிக்கக் கம்பெனி ''கெய்ஸர் அலுமினியம்அண்டுகெமிக்கல் கார்ப்பொரேஷன்'' (90 சதவிகிதம் பங்குகள்), கானடா நாட்டுக் கம்பெனி ''ரெய்னால்ட்ஸ் மெட்டல் கம்பெனி'' (10 சதவிகிதம் பங்கு கள்) இரண்டும் இந்தக் கூட்டுக் கம்பெனியில் சேர்ந்திருக்கும்; தொழிற்சாலை இந்தக் கம்பெனிகளின் உடைமை ஆகிவிடும். தொழிற்சாலைக்கு மின்னாற்றல் வழங்கும் பொருட்டு வோல்டா ஆற்றின்மீது நீர்மின் நிலையம் கட்டுவதற்கு கானா அரசாங்கம் 350 லட்சம் பவுண்டும், அமெரிக்க ஐக்கிய நாடுகள் 132 லட்சம் பவுண்டும், பிரிட்டன் 50 லட்சம்

பவுண்டும், ''சர்வதேசப் புனர்நிர்மாண, அபிவிருத்தி பாங்கு'' 168 லட்சம் பவுண்டும் நிதிவசதி செய்யும்.[9]

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ''சர்வதேச அபிவிருத்தி நிர்வாக நிலையம்'', எவையேனும் தனியார் முதலீடுகள் பயனுள்ளவைதாமா என்று தெரிந்து கொள்வதற்காக அமெரிக்கத் தனியார் கம்பெனிகளுடன் சேர்ந்து ஆராய்ச்சி நடத்துவதில் 50 சதவிகிதம் செலவை ஏற்றுக் கொள்ள உரிமை பெற்றிருக்கிறது. விவசாய ''உபரி'' விளைவுகளின் சப்ளைக்கு விலையாக விமெரிக்க அரசாங்கத்துக்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணியில் 25 சதவிகிதம்வரை தனியார் கம்பெனிகளுக்குக் கடனாகக் கொடுக்கப்படலாம்.

ஏகாதிபத்திய ''உதவியின்'' இன்னொரு முக்கிய நோக்கம், விடுதலை அடைந்த நாடுகளில் உள்நாட்டு மூலதன வளர்ச்சிக்கு ஊக்கம் அளிப்பதும் அன்னிய மூலதனத்துடன் அதன் தொடர்பை விரிவுபடுத்துவதும் ஆகும். இதற்காகப் பலவித உபாயங்கள் கையாளப்படுகின்றன. பிராங்கு புழங்கும் மண்டலத்தைச் சேர்ந்த அரசுகளுக்கும் பிரான்சின் சார்பு நிலைப் பிரதேசங்களுக்கும் பிரான்சின் ''பொருளாதார ஒத்துழைப்பு மைய நிதியால்'' 1962 முதல் 1964 வரை வழங்கப்பட்ட 120 கோடி பிராங்குகளில் 40.8 சதவிகிதம் தனியார் துறைக்கும், 40 சதவிகிதம் தனியார்-அரசுக் கூட்டு மூலதனத்தால் நிறுவப்படும் தொழில் நிலையங்களுக்கும் கொடுக்கப்பட்டது.[10]

அமெரிக்க ஐக்கிய நாடுகள் இந்தியாவுக்கு ''உதவி'' அளிக்கும் தன் எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றும் போது இந்தியத் தனியார் தொழில் முயற்சியின் வளர்ச்சிக்கு ஆதரவு தரும் போக்கை ஒத்தியைந்த முறையில் கடைப்பிடிக்கிறது. அமெரிக்க ''உதவிப்'' பணத்தைக் கொண்டு நிறுவத் திட்டமிடப்பட்ட இரசாயன உரத் தொழிற்சாலைகள், இந்திய அரசாங்கத்தின் விருப்பத்துக்கு மாறாகத் தனியார் துறையில் கட்டப்பட வேண்டும் என்று அமெரிக்க ஐக்கிய நாடுகள் 1966-1967ல் விடாப்பிடியாகச் சாதித்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ''சர்வதேச அபிவிருத்தி நிர்வாக நிலையம்'' அமெரிக்க, இந்தியக் கம்பெனிகளின் கூட்டு நடவடிக்கைகளுக்கு நிதியுதவி அளிக்கிறது.

முன்னாள் காலனிகளையும் சார்பு நாடுகளையும் நிதித் துறையில் சுரண்டுவதும் ஏகாதிபத்திய ''உதவியின்'' செயல்களில்

ஒன்றுகும். இந்தச் செயலையும் குறைத்து மதிப்பிடுவது கூடாது. ஏகாதிபத்திய வல்லரசுகளுக்குக் கொழுத்த லாபங்கள் சம்பாதிப்பதற்கான நல்ல வாய்ப்புக்களை மொத்தத்தில் அது ஏற்படுத்தித் தருகிறது. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் முதலாளித்துவ வல்லரசுகளுக்கு ஏராளமாகக் கடன் பட்டிருக்கின்றன. இவற்றைத் தீர்ப்பதற்காக இந்நாடுகள் செலுத்தும் தவணைத் தொகைகள் ஏற்கனவே பிரமாண்டமானவை. 1957 முதல் 1967 வரையுள்ள காலத்தில், வளர்ச்சி அடைந்த நாடுகள் பட்டிருக்கும் மொத்தக் கடன் தொகை 4.5 மடங்கு, அதாவது 1,000 கோடியிலிருந்து 4,500 கோடி டாலராக அதிகரித்தது.[11] வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் ரொக்கக் கடன்களையும் பற்றுக் கடன்களையும் அவற்றுக்கான வட்டியையும் திருப்பிக் கொடுப்பதற்காகச் செலுத்திய தொகைகள் அறுபதுக்களில் இடைவிடாமல் அதிகரித்தன. 1961ல் இவை 200 கோடி டாலராக இருந்தன. 1962லும் 1963லும் 220 கோடியாகவும்; 1964ல் 290 கோடியாகவும், 1965ல் 310 கோடியாகவும் அதிகரித்தன. லாபங்கள், வட்டிகள், ஆதாயப் பங்குகள் ஆகியவற்றுக்காகச் செலுத்தப்படும் தொகை விஷயமும் இத்தகையதே.[12]

''சர்வதேசப் புனர்நிர்மாண, அபிவிருத்தி பாங்கின்'' முன்னுள் டைரெக்டர் வூட்ஸ் என்பவரின் அறிக்கைப்படி, கடன்களின் தவணைத் தீர்வு, வட்டிகள், ஆதாயப் பங்குகள் ஆகியவற்றுக்காகச் செலுத்தப்படும் எல்லாத் தொகைகளையும் கூட்டினுல், வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளிலிருந்து வெளியே பெருகும் மூலதனம் ஆண்டுக்கு 600 கோடி டாலரை ஏற்கனவே எட்டிவிட்டது. இந்த நாடுகளுக்கு வரும் வெளி மூலதனத்தின் மொத்தத் தொகையில் இது பாதி ஆகும். செலுத்துத் தொகைகள் வர வர அதிக விரைவாகப் பெருகிக் கொண்டு போவதால், சில கணக்கீடுகளின்படி, இதே போக்கு தொடர்ந்து நீடிக்குமானுல் இன்னும் 15 ஆண்டுகளில் இந்த ''வெளிப் பெருக்கு'' மூலதனத்தின் உள்வரும் பெருக்குக்குச் சமம் ஆகிவிடும்.

இந்திய அரசாங்கம் 1968, மார்ச்சில் வெளியிட்ட **நாட்டின் பொருளாதார நிலை பற்றிய பார்வையீடு** தந்துள்ள விவரங்களின்படி, வெளிநாட்டு ''உதவிக்'' கடன்களின் தவணைத் தீர்வுகளுக்காக இந்தியா செலுத்திய தொகைகள்

1964-65ம் நிதியாண்டிலிருந்து 1967-68 நிதியாண்டுக்குள் 40 சதவிகிதம் அதிகரித்தன. மொத்தப் பணத் தொகையைக் குறிப்பிட்டால், இவை 25 கோடி 40 லட்சம் டாலரிலிருந்து 35 கோடி டாலராக அதிகரித்தன. தவிர, 1964-65ம் நிதியாண்டில் இந்தச் செலுத்துத் தொகைகள் சட்டம் நம்பர் 480ன்படி செய்யப்பட்ட சப்ளைகள் உட்பட வெளிநாட்டு ''உதவி'' வகையில் நாட்டுக்குள் வந்த தொகைகளுக்கு 10.7 சதவிகிதமாக இருந்தன. 1967-68லோ, 24.5 சதவிகிதமாக அதிகரித்துவிட்டன.[13]

கடைசியாக ஒரு விஷயத்தை வலியுறுத்துவது அவசியம். ''உதவியின்'' முக்கிய நோக்கங்கள் யாவும் சோஷலிஸத்துக்கும் தேசீய விடுதலைக்கும் எதிரான வர்க்கத் தன்மை உள்ளவை, எனவே அடிப்படையில் ஏகாதிபத்தியம் அனைத்துக்கும் பொதுவான முக்கியத்துவம் கொண்டவை என்பது சரியே. அடிக்கடி இந்த ''உதவி'' கூட்டுக் காலனியாதிக்கத்தின் வடிவங்களில் செயல்படுத்தப்படுகிறது என்பதும் சரியே. ஆயினும், புதுக் காலனியாதிக்க முறையின் கொள்கை அனைத்தையும் போலவே ''உதவியும்'' நடப்பில் ஏதேனும் ஒரு ஸ்தூலமான ஏகாதிபத்திய வல்லரசின் விஸ்தரிப்புக்கு உரிய கருவியாகவே முதன்மையாகப் பயன்படுகிறது. இதுவே அதன் நேரடியான கடமையாக விளங்குகிறது. ''உதவியின்'' அனைத்து ஏகாதிபத்தியப் பொது நோக்கத்தை நிறைவேற்றுவது குறித்த ஏகாதிபத்திய அரசின் நிலையையும் செல்வாக்கையும் வலுப்படுத்திக் கொள்வதற்கான போராட்டத்தின் வடிவிலேயே சாத்தியம் ஆகும். இந்தப் போராட்டத்தில் அதன் ஏகாதிபத்தியப் பங்காளிகளுடைய தனிவகை நலன்களுக்கு ஊறு விளைவது சகஜம். பிரான்சின் ஆளும் கட்சியான புதுக் குடியரசுப் பாதுகாப்புக் கூட்டணியின் தஸ்தாவேஜுப் பணித்துறை இயக்குநர் பெர்ஞர் லா கலோக் பின்வருமாறு கூறினர்: ''மற்ற நாட்டினரின் நன்மைக்காக நாம் செய்யும் முயற்சிகளின் விளைவாக, பொருளாதாரத் துறையில் பிரெஞ்சு இயந்திர சாதனங்கள் தருவிக்கப்படுவது, பிரெஞ்சு நிபுணர்கள் வேலையில் அமர்த்தப்படுவது போன்ற நலன்களும், பண்பாட்டுத் துறையில் பிரெஞ்சு மொழிக்கு முதன்மை தரப்படுவதும் பிரான்சுக்குப் பிரதிபலனுகக் கிடைப்பது எங்களுக்கு நியாயமாகவே தோன்றுகிறது.''[14]

''உதவி'' என்பது கீழ்ப்படிவுள்ள அரசாங்கங்களுக்கு ஊட்டமும் நிலைப்பும் அளிப்பதற்காகவும், அந்நிய மூல தனம் புகுவதற்கு வழி செய்வதற்காகவும், உள்நாட்டுத் தொழிலதிபர்களுடன் சேர்ந்து அவை கலப்புக் கம்பெனிகள் நிறுவ உதவுவதற்காகவும், ஏற்றுமதிக்கு ஊக்கம் அளிப்பதற்காகவும் சந்தைகளைக் கைப்பற்றுவதற்காகவும் பயன் படுத்தப்படுகிறது என்பதைக் காட்டும். விவாதத்துக்கு இடமற்ற விவரங்கள் தரப்படும் போது, முதன்மையாக ஒரு குறித்த வல்லரசுக்கு, அதாவது, உதவி அளிக்கும் (''நன்கொடையாளி'') வல்லரசுக்குக் ''கீழ்ப்படிவுள்ள'' அரசாங்கங்களும், இந்த வல்லரசின் நிதி மூலதனத்துக்குக் கிடைக்கும் சலுகைகளும், வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் உள்நாட்டு வர்த்தகத்தின்மீது இந்த மூலதனத்தின் செல்வாக்கை வலுப்படுத்துவதும், இந்த வல்லரசின் ஏற்றுமதிகள் விஸ்தரிக்கப்படுவதும், இவை போன்ற பிறவுமே குறிக்கப்படுகின்றன.

எனவேதான் ''உதவி'' என்பது, அனைத்து ஏகாதிபத்தியப் பொது நோக்கங்களை நிறைவேற்றும் கருவியாகப் பயன்படும் அதே சமயத்தில் ஏகாதிபத்தியத்திற்கு உள்ளே நிகழும் போராட்டத்தினதும் போட்டியினதும் கருவியாகவும் பயன்படக் கூடும், பயன்படவும் செய்கிறது.

''உதவியின்'' பெரும் பகுதி இரு தரப்பு அடிப்படையில் வழங்கப்படுவது காரணம் இல்லாமல் அல்ல. ''நன்கொடையாளி'' வல்லரசு ''உதவியைத்'' தனக்குச் சாதகமாகப் பயன் படுத்துவதற்கு இதுதான் வழக்கமான நிலைகளில் வகை செய்கிறது. (பக்கம் 109லுள்ள அட்டவணையைப் பார்க்கவும்.)

விடுதலை அடைந்த நாடுகளில் 1964ம் ஆண்டில் இருந்த, முதலாளித்துவ அரசுகளின் பிரதிநிதிகளான சுமார் 90 ஆயிரம் நிபுணர்களில் பத்தில் ஒரு பகுதியினர் மட்டுமே பல் தரப்பு ஒப்பந்தங்களின்படி அனுப்பப்பட்டவர்கள்.

''உதவியின்'' பூகோள ரீதியான வினியோகம் பற்றிய சில விவரங்களும் அதன் தன்மையைக் காட்டுபவை. 1964ல் பிரிட்டனின் இருதரப்பு ''உதவியில்'' 66 சதவிகிதம் காமன் வெல்த் உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்பட்டது. தவிர, பிரிட்டிஷ் காலனிகளும் பாதுகாப்புப் பிரதேசங்களும் அதன் நிதியுதவிகளிலும் ரொக்கக் கடன்களிலும் 21.7 சதவிகிதம்

**1961 முதல் 1965 வரை ஏகாதிபத்திய வல்லரசுகள் இரு தரப்பு ஒப்பந்தங்களின்படியும் சர்வதேச நிறுவனங்கள் வாயிலாகவும் அளித்த ''உதவி'' (லட்சம் டாலர்களில்)[15]**

| | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 |
|---|---|---|---|---|---|
| மொத்த ''உதவித்'' தொகை . . . . | 55350 | 55970 | 56730 | 56570 | 59800 |
| இதில்: | | | | | |
| இருதரப்பு அடிப் படையில் . . . | 46950 | 49630 | 52720 | 51860 | 54490 |
| சர்வதேச நிறு வனங்கள் வாயி லாக . . . . . | 8400 | 6340 | 4010 | 4710 | 5310 |
| இருதரப்பு அடிப் படையில் வழங் கப்பட்ட பணத் தின் பங்கு (சத விகிதத்தில்) . . | 848 | 887 | 930 | 917 | 911 |

பெற்றன. அதே ஆண்டில் பிரான்சு இருதரப்பு அடிப்படையில் தனது அரசு ''உதவியில்'' 90.5 சதவிகிதத்தை முன்னாள் பிரெஞ்சுக் காலனிகளுக்கு அனுப்பியது.[16]

''உதவியைக்'' கூட்டுக் காலனியாதிக்கத் தடத்தில் செலுத்த அண்மை ஆண்டுகளில் செய்யப்பட்டு வரும் வெளிப்படையான முயற்சிக்கு இந்தக் கூற்று சற்றும் முரண்படவில்லை. உதாரணமாக இந்த விஷயத்தில் அமெரிக்க ஆளும் வட்டாரங்களின் கொள்கை நிலைக்கு, அதிகரித்து வரும் நிதித் துறை இடர்ப்பாடுகள் தவிர, ''உதவியை'' ஏகாதிபத்தியங்களுக்குள், சிறப்பாக அமெரிக்க எதிர்ப்புப் போட்டிப் போராட்டத்தின் கருவியாகப் பயன்படுத்தும் வாய்ப்பைக் குறுக்க அவை கொண்டுள்ள ஆர்வமும் காரணம் ஆகும். தனது பொருளாதார, அரசியல், நிதித் துறை வலிமை காரணமாக, இந்தக் கூட்டுக் காலனியாதிக்க நிறுவனங்களில் மேலாதிக்கம் வகிக்கவும் மற்ற ஏகாதிபத்திய வல்லரசுகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும் தன்னால் முடியும் என்று அமெரிக்க ஐக்கிய நாடுகள் கருதுகிறது.

பிரான்சு ஆப்பிரிக்காவைச் சேர்ந்த தனது முன்னுள் ஆட்சிப் பிரதேசங்களில் ஜெர்மன் கூட்டுக் குடியரசின் நட வடிக்கைகளைப் ''பொதுச் சந்தை'' வாயிலாகச் செலுத்த முயலும்போதும் பிரிட்டிஷ் ''காமன்வெல்த் அபிவிருத்திக் கார்ப்பொரேஷன்'' தான் நிறுவிய ஸ்தல ''அபிவிருத்திக் கார்ப்பொரேஷன்களில்'' மற்ற ஏகாதிபத்திய வல்லரசு களின் மூலதனத்தை அனுமதிக்கும்போதும் (உதாரணமாக, 1964ல் தான்ஜனியா, கென்யா, உகாந்தா ஆகிய நாடு களில் நிறுவப்பட்ட இத்தகைய ''கார்ப்பொரேஷன்களில்'' மேற்கு ஜெர்மன் மூலதனமும் சேர்க்கப்பட்டது), ஏகாதி பத்தியப் போட்டி நாடுகளுக்குத் தளை பூட்டும் பொருட்டும், அவற்றின் நடவடிக்கைகளை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வைக்கும் பொருட்டுமே அவ்வாறு செய்கின்றன.

அண்மை ஆண்டுகளில் ''உதவி'' அளிக்கும் நடப்பு முறையில் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளும் போக்குகளும் காணப் படுகின்றன. ''உதவியினது'' வளர்ச்சியின் சாத்தியமான வருங்காலத் திசைகளைச் சுட்டிக்காட்டுபவை என்ற வகையில் இவை அக்கறைக்கு உரியவை. ''உதவியின்'' அளவுகள் ஓரளவு நிலையாகிவிட்டதும் அல்லது பொதுவாகக் குறைந்து விட்டதும் கவனத்தை ஈர்க்கிறது. அதே சமயம், வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் வெளி நிதி வசதிகளுக்கு உரிய ''முறையான'' ஊற்றுக்களை, அதாவது ஏகபோக நிறுவனங் களின் தனியார் முதலீடுகளை அதிக அளவில் சார்ந்திருப்பதன் இன்றியமையாமையைப் புதுக் காலனியாதிக்கவாதிகள் மேலும் மேலும் அழுத்தமாக வலியுறுத்தி வருகிறார்கள். 1968-69ம் நிதியாண்டில், வளர்ச்சி அடைந்து வரும் நாடு களுக்கு இராணுவ, பொருளாதார ''உதவி'' அளிப்பதற் காக அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்கம் காங்கிர ஸிடம் 298 கோடி 10 லட்சம் டாலர் ஒதுக்கும்படி கோரியது. ''உதவித்'' திட்டம் நிலவும் 21 ஆண்டுகளில் இதுவே ஆகக் குறைந்த தொகை. ஆனால் இதைக்கூட அமெரிக்கக் காங்கிரஸ் ஒன்றரை மடங்குக்கும் மேல் குறைத்துவிட்டது.

நிகழ்ச்சிப் போக்கின் திசையைக் காண்பதற்கு ''சர்வ தேசப் புனர்நிர்மாண, அபிவிருத்தி பாங்கின்'' புதிய டைரெக்டர் ராபர்ட் மாக்னமாராவின் அறிக்கையும் தக்க எடுத்துக்காட்டு ஆகும். 1968, ஆகஸ்ட் 6ல், அமெரிக்கக் காங்

கிரஸின் மேற்குறித்த தீர்மானத்துக்குச் சில நாட்களுக்குப் பின், ''அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பிற அரசுகளும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு உதவி அளிக்கும் திட்டத்தைக் குறுக்கிக் கொண்டிருப்பதற்கு எதிர்நிறையாகச் 'சர்வ தேசப் புனர்நிர்மாண, அபிவிருத்தி பாங்கு' இந்நாடுகளுக்குப் பற்றுக் கடன்களைக் கணிசமாக அதிகரிக்கும்''[17] என்று அவர் அறிவித்தார். ''சர்வதேச பாங்கு'' மிக அதிகக் கடுமையான நிதித்துறை, பொருளாதார நிபந்தனைகளின் பேரில் கடன்கள் வழங்குகிறது என்ற ஒரு காரணமே ''எதிர் நிறை'' செயல்படுத்தப்படுவது கடினம் என்பதைக் காட்டப் போதுமானது.

''உதவியின்'' மொத்தத் தொகையில் நிதியுதவிகள், இலவசக் கொடைகள் ஆகியவற்றின் பங்கு குறைந்து கொண்டு வருகிறது. உதாரணமாக, 1962லிருந்து 1964 வரையுள்ள காலப்பகுதியில் பிரான்சினால் வழங்கப்பட்ட ''இலவச உதவி'' 12 சதவிகிதமும் பிரிட்டனால் வழங்கப் பட்டது 18 சதவிகிதமும் குறைந்தன. அமெரிக்க ''உதவி'' வழங்கப்படும் நடப்பிலும் இதே போக்கு காணப்படுகிறது. ''பொருளாதார ஒத்துழைப்பு, அபிவிருத்தி நிறுவனத்தின்'' உறுப்பினவான அரசுகள் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு இருதரப்பு ஒப்பந்தங்களின்படி வழங்கிய மொத்தத் தொகைகளில் நிதியுதவிகளும் அதையொத்த ''உதவியின்'' வடிவங்களும் 1963லும் 1964லும் 70.8 சதவிகிதமாகவும், 1965ல் 65.6 சதவிகிதமாகவும், 1966ல் 63.6 சதவிகிதமாகவும் இருந்தன.[18] இராணுவ ''உதவி'' விஷயத்தில்கூட ''நன் கொடைகளின்'' பங்கு குறைந்து வருகிறது.

ஏகாதிபத்திய ''உதவி'' மொத்தத்தில் குறைவதற்கும், அதில் நன்கொடைகள், நிதியுதவிகளின் பங்கு குறைந்து கொண்டு போவதற்கும் இன்னொரு காரணம், முதலாளித்துவ உலகின் அன்னியச் செலாவணி இடர்ப்பாடுகளும், வியத்நாமிய துர்ச்சாகசச் செயலின் விளைவாக அமெரிக்க ஐக்கிய நாடுகள்மீது சுமந்திருக்கும் மிகப் பெருத்த செலவுகளும் ஆகும்.

இந்த நிலைமைகளில் ஒரு புறம், விடுதலை பெற்ற நாடுகளின் பொருளாதார, சமுதாயப் பரிணாமத்தின்பால் புதுக் காலனியாதிக்கவாதிகளின் கவனம் தீவிரப்படுகிறது. மறு

புறம் பொருளாதார உறவுகளை முதலாளித்துவத்துக்கு அதிக ''முறையான'', அதிக வர்த்தகத் தன்மை கொண்ட அடிப்படையில் மாற்றியமைப்பதில் அவர்கள் ஆர்வம் காட்டுகிருர்கள் (''உதவியினதும்'' அதைவிட அதிகமாக நன்கொடைகள், நிதியுதவிகளுடையவும் ஆழ்ந்த அரசியல் தன்மையை இது பின்னும் ஒரு முறை அழுத்தமாகப் பதிய வைக்கிறது). ஏகாதிபத்திய ஏகபோக நிறுவனங்களின் தனியார் முதலீடுகளின் பெருக்கைத் தீவிரப்படுத்தவும் அவை ஆற்றும் பங்கை அதிகரிக்கவும் அவர்கள் விரும்புகிருர்கள். அவற்ருல் ஏற்படும் சமுதாயப் பாதிப்பையும் அவர்கள் கருத்தில் கொண்டிருக்கிருர்கள்.

எல்லாவற்றுக்கும் சிகரமாக, ''உதவியினுல்'' இதுவரை பெறப்பட்ட பலன்கள் செல்வாக்குள்ள ஏகாதிபத்திய வட்டாரங்களுக்கு உண்டாக்கியிருக்கும் ஏமாற்றமும் ஓரளவு வெளிப்படுகிறது. புதுக் காலனியாதிக்கவாதிகளுக்கு அது எதிர்பார்த்த பொருளாதார, அரசியல் அனுகூலங்களைத் தரவில்லை. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் எந்தச் சமூகச் சக்திகளைப் புதுக் காலனியாதிக்க முறை இலக்காகக் கொண்டிருக்கிறதோ, அவற்றுக்குத் தேவையான அளவு ஆதரவுக்கு அது வகை செய்யவில்லை.

''உதவி'' புதுக் காலனியாதிக்கத் தன்மை கொண்டிருப்பதையும் பொருட்படுத்தாமல் அனேக தேசீய அரசாங்கங்கள், சந்தேகத்துக்கு இடமின்றி தேசபக்தி கொண்ட அரசாங்கங்கள்கூட, அதைப் பெறுவதில் அக்கறை காட்டுவது ஏன்? இந்தக் கேள்வி இப்போது எழக் கூடும்.

இதற்கு விளக்கம் பெறுவதற்கு இந்த நாடுகளின் பொருளாதார நிலைமையையும் ''உதவியிலேயே'' உள்ள ஓரளவு முரண்பாட்டையும் ''ஒரே வகைத் திட்ட அமைப்பு இன்மையையும்'' ஆராய்ந்து பார்க்க வேண்டும். முன்னர் அடிமைப்பட்டிருந்த நாடுகள்காலனியாட்சிநடந்த முற்காலத்திலிருந்து பொருளாதாரத் துறையில் மிகவும் பிற்பட்ட நிலையையும் ஏழ்மையையும் மூலதனக் குவிவுக்கான ஊற்றுக்கண்களின் வரட்சியையுமே மரபுரிமையாகப் பெற்றிருந்தன. எனவே, குறிப்பிடத்தக்கப் பொருளாதார அபிவிருத்தி பெறுவதற்கு வெளிநாடுகளிலிருந்து நிதிவசதிகள் ஓரளவாவது கிடைப்பது இவற்றுக்குத் தவிர்க்க இயலாத தேவையாய்

இருந்தது. மறு புறம் ''உதவியின்'' சில குறித்த அம்சங்கள் உற்பத்திச் சக்திகளின் ஓரளவு வளர்ச்சியைச் சாத்தியமாக்கக் கூடும். ''உதவியின்'' இந்த அம்சங்களையே தங்கள் நாடுகளின் நலன்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் அதன் புதுக் காலனியாதிக்கவாதப் போக்குகளை வெற்றிகரமாக எதிர்த்துத் தடுக்கவும் தங்களால் முடியும் என்று ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் அரசாங்கங்கள் எண்ணுகின்றன. (இந்த எண்ணம் சரியானதா இல்லையா என்பது வேறு விஷயம்.) இவ்வாறு ''உதவிப்'' பிரச்சினையே பல சந்தர்ப்பங்களில் தேசபக்தச் சக்திகளுக்கும் ஏகாதிபத்தியச் சக்திகளுக்கும் இடையே போராட்டம் நிகழும் களம் ஆகி வருகிறது.

அரசு ''உதவியை'' மிகப் பெரிய அளவுகளில் வழங்கும் நடப்பு போருக்குப் பிந்தைய பத்தாண்டுகளில் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு ஏகாதிபத்திய மூலதன ஏற்றுமதியின் முக்கியச் சிறப்பு இயல்பாக இருந்து வந்தது. **ஆயினும், ஏகபோக நிறுவனங்களின் தனியார் முதலீடுகளும் முன்னாள் காலனிகளையும் அரைக் காலனிகளையும் அடிமைப்படுத்துவதற்கும் சுரண்டுவதற்கும் ஏற்ற, புதுக் காலனியாதிக்க முறையின் மிக முக்கியமான, மாற்ற முடியாத கருவியாகப் பயன்பட்டு வருகின்றன.** ஏகாதிபத்தியத்தின் வருங்காலத் திட்டங்களில் இவற்றுக்குச் சிறப்பான இடம் கொடுக்கப்படுகிறது. முதலாளித்துவ நாடுகளிலிருந்து ''மூன்றுவது உலகின்'' பிரதேசங்களுக்கு மூலதனங்களின் இயக்கம் பற்றிய புள்ளிவிவரங்கள் கீழே தரப்படுகின்றன.

''பொருளாதார ஒத்துழைப்பு, அபிவிருத்தி நிறுவனத்தின் தகவல் அறிக்கையில்'' தரப்பட்டுள்ள விவரங்களின்படி, மூலதன ஏற்றுமதி செய்யும் பிரதான நாடுகளான அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரான்சு, பிரிட்டன், ஜெர்மன் கூட்டுக் குடியரசு, ஜப்பான் ஆகியவற்றிலிருந்து ''மூன்றுவது உலகின்'' நாடுகளுக்கு 1960 முதல் 1965 வரை அனுப்பப்பட்ட 4,355 கோடி 60 லட்சம் டாலர்களில், 3,202 கோடி 10 லட்சம் டாலர்கள், அதாவது 73.5 சதவிகிதம் அரசுகளிடமிருந்து வந்தன; 1,153 கோடி 50 லட்சம் டாலர்கள், அதாவது 26.5 சதவிகிதம் தனியார் முதலீடுகளின் வடிவில் வந்தன.

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு
வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளின்
அரசு, தனியார் ஊற்றுக்கண்களிலிருந்து
1961-65 ஆண்டுகளில் வந்த நிகர மூலதனப் பெருக்கு
(லட்சம் டாலர்களில்)[19]

| | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 |
|---|---|---|---|---|---|
| மொத்தம் . . . . | 70570 | 65630 | 70800 | 71950 | 81520 |
| அரசு நிதிகள் . . . | 46950 | 49630 | 52720 | 51860 | 54490 |
| தனியார் நிதிகள் . . | 23620 | 16000 | 18080 | 20090 | 27030 |
| மூலதன ஏற்றுமதியின் மொத்தத் தொகையில் அரசு நிதிகளின் பங்கு (சத விகிதத்தில்) . . . | 66.5 | 75.6 | 74.4 | 72.0 | 68.8 |
| மூலதன ஏற்றுமதியின் மொத்தத் தொகையில் தனியார் நிதிகளின் பங்கு (சத விகிதத்தில்) . . . | 33.5 | 24.4 | 25.6 | 28.0 | 31.2 |

ஏகபோக நிறுவனங்களின் தனியார் மூலதன ஏற்றுமதியைத் தூண்டி ஊக்கத் தங்கள் நாடுகளிலும் விடுதலையடைந்த நாடுகளிலும் ஏகாதிபத்திய அரசாங்கங்கள் அண்மை ஆண்டுகளில் சிறப்பாகத் தீவிர முயற்சி செய்து வருகின்றன. இந்த நடவடிக்கைகள், மெதுவாகவும் நிலையின்றியும் தான் என்றாலும், ஓரளவு பயன் விளைத்து வருவதாகக் காண்கிறது. என்னவாயினும், வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு மொத்த மூலதன ஏற்றுமதியில் தனியார் முதலீடுகளின் பங்கு அதிகரித்து வரும் போக்கு காணப்படுவதாகப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. இதற்கு ஒரு காரணம் நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி ஏகாதிபத்திய அரசாங்கங்கள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள். இவ்வளவே முக்கியமான இன்னொரு காரணம் அநேக முதலாளித்துவ நாடுகள் அரசு ''உதவித்'' தொகைகளைக் குறைத்துவிட்டது ஆகும்.

ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்குச் செய்யப்பட்ட நிகர மூலதன ஏற்றுமதி யின் மொத்த அதிகரிப்பில் 1963ம் ஆண்டில் தனியார் முதலீடுகள் 40.2 சதவிகிதம் இருந்தன.* 1964லோ இந்த அதி கரிப்பு முழுவதும் தனியார் முதலீடுகளின் வடிவிலேயே இருந் தது. அரசு மூலதன ஏற்றுமதியில் ஏற்பட்ட ஓரளவு குறை வை இவை ஈடுகட்டின. 1965ம் ஆண்டில் மூலதன ஏற்றுமதி விருத்தியில் தனியார் முதலீடுகளின் பங்கு 72.5 சதவிகித மாக இருந்தது.[20]

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் நேரடியான அமெரிக்கத் தனியார் முதலீடுகள் 1961 முதல் 1965 வரையுள்ள காலப்பகுதியில் 1,160 கோடி டாலர் களிலிருந்து 1,490 கோடி டாலர்களாக, அதாவது 30 சத விகிதம் அதிகரித்தன. ஆப்பிரிக்காவில் (ஐக்கிய அரேபியக் குடியரசு நீங்கலாக) 1950 முதல் 1964 வரையுள்ள ஆண்டு களில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நேரடியான தனியார் முதலீடுகள் தொகை அளவில் பெருத்தவையாக இல்லா விடினும் அநேகமாக எட்டு மடங்கு அதிகரித்தன.[21]

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் 1965ல் ஜெர்மன் கூட்டுக் குடியரசின் நீண்டகாலத் தனியார் முதலீடுகள், 1963ம் ஆண்டின் தரத்துடன் ஒப்பிடும்போது இரு மடங்குக் கும் மேல் அதிகரித்தன.[22] 1961 முதல் 1965 வரையுள்ள ஆண்டுகளில் ஆப்பிரிக்காவில் ஜெர்மன் கூட்டுக் குடியரசின் நேரடியான முதலீடுகள் 17 கோடி மார்க்குகளிலிருந்து 44 கோடி 93 லட்சம் மார்க்குகளாக, அதாவது மூன்று மடங் குக்கும் மேல், அதிகரித்தன.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க எல்லைகளுக்குள் ஏகபோகங்களது தனியார் மூலதனப் பெருக்கின் பூகோளரீதி யில் பெரிதும் சமமற்ற வினியோகம் இந்த மொத்தப் புள்ளி விவரங்களின் பின் மறைந்திருக்கிறது. சில நாடுகளிலும் பிர தேசங்களிலும் மூலதன வெளியேற்றம், ஏகபோக நிறுவனங் களின் சொத்துக்கள் தேசீய உடைமை ஆக்கப்படுதல் ஆகிய வற்றின் விளைவாக அன்னியத் தனியார் முதலீடுகளின்

---

* சர்வதேச நிறுவனங்கள் மூலமாகக் கிடைத்த பணத் தொகைகள் நீங்கலாக.

மொத்தத் தொகை ஒரே மட்டத்தில் நிலைத்து நின்றுவிடுவதும் அல்லது குறைந்துகூடப் போய்விடுவதும், வேறு சில நாடுகளிலும் பிரதேசங்களிலும் இந்த முதலீடுகளின் வரத்து வெள்ளமாகப் பெருகுவதும்—''மூன்றும் உலகில்'' தனியார் ஏகாதிபத்திய முதலீடுகளின் இயக்கம் இத்தகைய ஏற்றத் தாழ்வுகளுடன் காட்சி அளிக்கிறது. தேசீய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி உயர்ந்த மட்டத்தை எட்டிவிட்ட பிரதேசங்களையும் புரட்சி அதிர்ச்சிகள் ஏற்படும் தறுவாயில் உள்ள பிரதேசங்களையும் ஏகபோக நிறுவனங்களின் தனியார் மூலதனம் வழக்கமாகத் தவிர்க்கிறது. ''நிலையான'', ஏகாதிபத்தியத்தின் செல்வாக்குக்கு உட்பட்ட அரசாங்கங்கள் கொண்ட நாடுகளே அதை ஈர்க்கின்றன. ஏனெனில் இவற்றில் மிகமிக லாபகரமான, ஓரளவு கட்டுப்பாடு அற்ற நடவடிக்கைகள் நடத்தலாம் என்று அது நம்புகிறது.

எடுத்துக்காட்டாக, தென்கிழக்கு ஆசியாவில் அமெரிக்கத் தனியார் முதலீடுகளில் 60 சதவிகிதம் பிலிப்பைனில் ஒருமுனைப்படுத்தப்பட்டுள்ளது. 1950முதல் 1965வரையுள்ள 15 ஆண்டுகளில் இந்த முதலீடுகள் 3.5 மடங்கு, அதாவது, 14 கோடி 90 லட்சம் டாலர்களிலிருந்து 52 கோடி 90 லட்சம் டாலர்களாக அதிகரித்தன.[23] தைவானில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தனியார் முதலீடுகள் 1960 முதல் 1967 ஜூலை வரை உள்ள காலப்பகுதியில் 10 கோடி 80 லட்சம் டாலர்கள் அதிகரித்தன.[24] ஆப்பிரிக்கக் கண்டத்தில், தென் ஆப்பிரிக்காவை விட்டுவிட்டால், அமெரிக்கத் தனியார் முதலீடுகளுக்கு ''ஈர்ப்பு மையமாக'' விளங்குவது லைபீரியா. அதே போல, வெளிநாடுகளில் பிரான்சின் தனியார் முதலீடுகளுக்குப் பிரதானக் களமாக விளங்குபவை தற்போது ''ஆப்பிரிக்க-மலாகாசியப் பொது நிறுவனத்தில்'' சேர்ந்துள்ள முன்னாள் பிரெஞ்சுக் காலனிகளே.

ஏகபோக நிறுவனங்கள் கனியம் வெட்டி எடுக்கும் தொழிலிலும் வர்த்தகத்திலும் முன்போலவே பெருந் தொகைகளை முதலீடு செய்து வருகின்றன. ஆயினும், முன்னாள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் தயாரிப்புத் தொழிலின் பல்வேறு பிரிவுகளில் ஏகபோக நிறுவனங்களின் தனியார் முதலீடுகள் அதிகரித்திருப்பதே அண்மையாண்டுகளுக்குத் தனிச் சிறப்பான நிகழ்ச்சி. எடுத்துக்காட்டாக, 1965ல்

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகபோக நிறுவனங்கள் லத்தீன் அமெரிக்க நாடுகளில் முதலீடு செய்த 73 கோடி 20 லட்சம் டாலர்களில் 10 கோடி 10 லட்சம் டாலர்கள் கனியம் வெட்டி எடுக்கும் தொழிலிலும், 26 கோடி டாலர்கள் பெட்ரோலியத் தொழிலிலும், 37 கோடி 10 லட்சம் டாலர்கள், அல்லது 50 சதவிகிதத்துக்கும் மேல் தயாரிப்புத் தொழில் துறையிலும் முதலீடு செய்யப்பட்டன.[25]

பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நாடுகளில் முதலீடுகள் செய்வது ஏகாதிபத்திய ஏகபோக நிறுவனங்களுக்கு மிகக் கொழுத்த லாபங்கள் தரும் தலையூற்றாக முன் போன்றே விளங்கி வருகிறது. இவை சம்பந்தமான புள்ளி விவரங்களை அவை ஒன்று மறைக்கின்றன அல்லது குறைத்துக் காட்டுகின்றன. ஆயினும் மிகப் பெரிய பிரிட்டிஷ் கம்பெனிகள் பற்றி ஆங்கிலச் செய்தித்தாள் டைம்ஸ் வெளியிட்டுள்ள விவரங்கள் இந்த லாபங்கள் குறித்து ஓரளவு அனுமானிக்க உதவுகின்றன. இந்த விவரங்களின்படி, பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நாடுகளைச் சுரண்டுவதன் அடிப்படையில் தொழில் நடத்தும் ஏகபோக நிறுவனங்களான ''பிரிட்டிஷ் பெட்ரோலியம்'',''ஷெல் ஆயில்'', ''இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ்'', ''யூனிலெவர்'' ஆகியவை 1966ல் பெற்ற நிகர லாபங்கள் (பவுண்டுக் கணக்கில்) வருமாறு:[26]

''பிரிட்டிஷ் பெட்ரோலியம்''—24 கோடி 20 லட்சம், அல்லது மூலதனத்தில் 20 சதவிகிதம்; ''ஷெல் ஆயில்''—20 கோடி 50 லட்சம், அல்லது மூலதனத்தில் 14 சதவிகிதம்; ''இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ்'' 10 கோடி 20 லட்சம், அல்லது மூலதனத்தில் 8.5 சதவிகிதம்; ''யூனிலெவர்'' 5 கோடி 70 லட்சம், அல்லது மூலதனத்தில் 11.5 சதவிகிதம்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகபோக நிறுவனங்கள் லத்தீன் அமெரிக்க நாடுகளில் தங்கள் நேரடியான முதலீடுகளிலிருந்து 1965ல் 117 கோடி டாலர், அதாவது மூலதனத்தில் கிட்டத்தட்ட 13 சதவிகிதம் லாபம் சம்பாதித்தன.[27]

1948 முதல் 1960 வரை இந்தியாவில் அன்னிய ஏகபோக நிறுவனங்களுக்குக் கிடைத்த வெளியேற்றக் கூடிய லாபங்கள் மட்டும் ஆண்டுக்கு 26 கோடி 10 லட்சம் ரூபாய், அதாவது நாட்டுக்குள் இதே காலத்தில் வந்த தனியார்

மூலதனத்தின் ஆண்டுச் சராசரித் தொகையைவிட (20 கோடி 80 லட்சம் ரூபாய்) அதிகம் என்கிறார் பிரபல இந்தியப் பொருளியல் அறிஞர் கே. குரியன்.[28]

அனேக சந்தர்ப்பங்களில், முன்னாள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் தொழில் நடத்தும் ஏகாதிபத்தியக் கம்பெனிகள் இன்னும் எவ்வளவோ அதிக லாபம் சம்பாதிக்கின்றன. இந்த லாபம் சில வேளைகளில் பல பத்து சதவிகிதமாக உள்ளது. உதாரணமாக, மேல் வோல்டாவிலும் ஆப்பிரிக்கக் கண்டத்தில் பிரான்சின் மற்ற முன்னாள் ஆட்சிப் பிரதேசங்களிலும் தொழில் நடத்தும் அனேக பிரெஞ்சுக் கம்பெனிகள் ஆண்டுதோறும் முதலீடுகளின் பேரில் நூறு சதவிகித லாபம் சம்பாதிக்கின்றன. மேற்கு ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றில் பொருளாதாரத்தின் முக்கியத் துறைகள் ''அனேகமாகத் தனிப்பட பிரெஞ்சுக்காரர்களின் கைகளிலேயே இருக்கின்றன'' என்கிறார் மேற்கு ஜெர்மானியக் கட்டுரையாளர் கார்ல் எர்த்மன். மேலும் அவர் சந்தேகத்துக்கு இடமின்றிக் கூறுவதாவது: ''பிரான்சுக்கு இவற்றால் கிடைக்கும் நலன்களை எல்லாம் ஒருபோதும் கணக்கிடமுடியாது. ஆனால் பிரான்ஸ் தனது தேசிய வருவாயின் 1.88 சதவிகிதத்தை வளர்ச்சிக்கு உதவுவதற்காக ஒதுக்குவதன் காரணத்தை இவ்வாறு மட்டுமே (அதாவது பேரளவான லாபங்களுக்காக என்றே— க.பு.) விளக்க முடியும்.''

**இந்த நாடுகளுடன் ஏகாதிபத்திய அரசுகளின் வர்த்தகம் புதுக் காலனியாதிக்க முறையின் பொருளாதார ஆயுதங்களில் மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது.** ஏகாதிபத்திய அரசுகளுக்கும் பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நாடுகளுக்கும் இடையே காலனியாட்சிக் காலத்திலிருந்து தொடர்ச்சியாக நிலவி வந்துள்ள வர்த்தக உறவுகளின் நிலைமை, தன்மை, இவற்றின் காரணமாகவும், விடுதலை அடைந்துள்ள நாடுகளின் தேசியப் பொருளாதாரத்துக்கு இந்த உறவுகளின் முக்கியத்துவம் காரணமாகவுமே இத்தகைய விசைக் கருவியைப் புதுக் காலனியாதிக்க நோக்கங்களுக்குப் பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் ஏற்றுமதியிலும் இறக்குமதியிலும் ஏகாதிபத்திய வல்லரசுகள் தொடர்ந்து ஆதிக்கம் வகித்து வருகின்றன. அறுபதுக்களின் மத்தியில்

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் இறக்குமதி செய்யப் பட்ட இயந்திரங்கள், தொழில் துறைச் சாதனங்களில் 90 சதவிகிதமும், வேறு தயாரிப்புத் தொழில் சாமான்களில் 80 சதவிகிதமும், உணவுப் பொருள்களில் அனேகமாக 60 சதவிகிதமும், கச்சாப் பொருள்களில் 50 சதவிகிதத்திற்கு மேலும் ஏகாதிபத்திய நாடுகளிலிருந்தே வந்தன. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் ஏற்றுமதி வர்த்தகத்திலும் இந்த அரசுகளே ஆதிக்க நிலைமை பெற்றுள்ளன.

**வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின்**
**ஏற்றுமதி வர்த்தகத்தில்**
**வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளின் பங்கு**[29]

| | 1955 | | 1960 | | 1966 | |
|---|---|---|---|---|---|---|
| | நூறு கோடி டாலர் | சதவிகிதம் | நூறு கோடி டாலர் | சதவிகிதம் | நூறு கோடி டாலர் | சதவிகிதம் |
| வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் மொத்த ஏற்றுமதி அதில்: | 22.86 | 100 | 25.81 | 100 | 35.72 | 100 |
| வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கு . . . | 17.11 | 74.9 | 19.78 | 76.6 | 27.81 | 76.9 |

முன்னாள் காலனிகள், அரைக் காலனிகளின் ஏற்றுமதி ஒரே விவசாயப் பொருள் அடங்கியது, பல்வேறு பொருள்கள் அடங்கியதல்ல என்ற நிலைமைகளில் ஏகாதிபத்தியவாதிகள் இவற்றின் முக்கிய ஏற்றுமதிச் சரக்கின் வாங்கும் அளவைக் குறைத்தோ, அதன் விலையைத் தாழ்த்தியோ இந்நாடுகள் மீது ஆழ்ந்த அரசியல், பொருளாதார நிர்ப்பந்தம் ஏற்படுத்த முடியும்.

க்யூபாவை மண்டியிடச் செய்யும் பொருட்டு அமெரிக்க ஐக்கிய நாடுகள் உடன்படிக்கைப்படி தீர்மானிக்கப்பட்ட அளவு க்யூபாச் சர்க்கரையை வாங்க மறுத்தபோது இவ்

வாறே செய்தது. ஆனல் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆளும் வட்டாரங்களுடைய சூழ்ச்சிகள் பலிக்காது போயின. சோவியத் யூனியனும் பிற சோஷலிஸ நாடுகளும் க்யூபாச் சர்க்கரையைப் பெரும் அளவுகளில் வாங்கத் தொடங்கின. கானவில் க்வாமே ந்க்ருமாவின் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடும் நோக்கத்துடன் அன்னிய ஏகபோக நிறுவனங்கள் தொடர்ச்சியாகப் பல ஆண்டுகள்வரை கோக்கோ விதைகளின் விலைகளை ''வீழ்த்தும் விளையாட்டு'' ஆடி வந்தன. விளைவாக 1965ல் கோக்கோ விலைகள் நெருக்கடி ஆண்டுகளான 1930-40 மட்டத்துக்குச் சரிந்துவிட்டன. 1954-55ம் பொருளாதார ஆண்டில் 210 ஆயிரம் டன் கோக்கோ விற்றதால் கானவுக்கு 8 கோடி 55 லட்சம் பவுண்டுகள் கிடைத்தன. 1964-65லோ இதற்கு அனேகமாக மும்மடங்கு விளைச்சலின், அதாவது 590 ஆயிரம் டன் கோக்கோவின் விலை 7 கோடி 70 லட்சம் பவுண்டுகளாக மட்டுமே இருந்தது.

முன்னள் காலனிகளுடனும் சார்பு நாடுகளுடனும் வர்த்தகத்தால் ஏகாதிபத்தியத்துக்குப் பலநூறு கோடிக் கணக்கில் லாபம் கிடைக்கிறது. இந்த நோக்கத்துடன் விலைக் ''கத்தரிப்பு''எனப்படுவது விரிவாகக் கையாளப்படுகிறது. இன்றளவும் முன்னள் காலனிகளும் சார்பு நாடுகளுமே முக்கியமாக ஏற்றுமதி செய்யும் கச்சாப் பொருள்களின் விலைகளுக்கும் ஏகாதிபத்திய வல்லரசுகள் சப்ளை செய்யும் இயந்திரத் தொழில் சாமான்களின் விலைகளுக்கும் இடையே உள்ள அகழ்மேலும் மேலும் அகன்று கொண்டு போவதை இது குறிக்கிறது. இந்த நிகழ்முறை புறநிலைப் போக்குகளுடன் தொடர்பு கொண்டது என்பது உண்மையே. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியால் உண்டான இந்தப் போக்குகள், தற்கால விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியால் மட்டுமீறித் தீவிரம் ஆக்கப்பட்டுள்ளன. எனவே, இயந்திரத் தொழில் சாமான்களின் அடக்க விலையை உருவாக்குவதில் கச்சாப் பொருள்களதும் துணைப்பொருள்களதும் பங்கு வெகுவாகக் குறைந்து வருகிறது.

ஆனல் அதே சமயம் இந்தக் ''கத்தரிப்பை'' ஏற்படுத்தி விரிவாக்குவதில் ஏகபோக நிறுவனங்களின் கொள்கையும் பெருத்த பங்கு ஆற்றுகிறது. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளை இறக்குமதி, ஏற்றுமதி, இரண்டு துறைகளிலும்

சூறையாட அவற்றுக்கு வாய்ப்பு அளிக்கும் செயற்கையான விலைகளை நிர்ணயிப்பதே இந்தக் கொள்கையின் நோக்கம்.

விடுதலை அடைந்த நாடுகளுக்கு ஏகாதிபத்திய வல்லரசுகளால் ஏற்றுமதி செய்யப்படும் இயந்திரத் தொழில் சாமான்களின் விலைகள் 1960—1966ல் மீண்டும் 7 சதவிகிதம் உயர்ந்தன. இந்த நாடுகளின் கச்சாப் பொருள்களுடைய விலைகளோ அதிகரிக்கவில்லை. ஆனால் அதே சமயம், முதலாளித்துவ நாடுகளால் ஏற்றுமதி செய்யப்பட்ட கச்சாப் பொருள்களின் விலைகள் 13 சதவிகிதம் அதிகரித்தன என்பது குறிப்பிடத்தக்கது. விளைவாக, வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் மேலும் பெருத்த நஷ்டங்களுக்கு உள்ளாயின.

ஐக்கிய நாடுகள் சங்கப் புள்ளிவிவரங்களின்படி 1966ல் இயந்திரத் தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகள் ஏற்றுமதி செய்த சரக்குகளின் விலைகள் அவை இறக்குமதி செய்த பொருள்களின் விலைகளுடன் ஒப்புநோக்கில் 104க்கு (1958ம் ஆண்டு=100) சமமாக, அதாவது முந்திய ஆண்டுகள் போலவே இந்நாடுகளுக்குச் சாதகமாக இருந்தன. மாறாக, வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் நிலைமை முன்னிலும் சீர்கெட்டது.[30]

**1961 முதல் 1966 வரை வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் ஏற்றுமதி, இறக்குமதி விலைகளின் போக்கு (1960ம் ஆண்டு=100)[31]**

| | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதி விலைகள் . . | 97 | 95 | 97 | 99 | 91 | 100 |
| இறக்குமதி விலைகள் . . | 99 | 98 | 99 | 100 | 101 | 103 |
| ஏற்றுமதி, இறக்குமதி விலைகளின் ஒப்பு விகிதம் . . . . . . | 98 | 97 | 98 | 99 | 90 | 97 |

ஐ. நா. வர்த்தக, அபிவிருத்தி மகாநாட்டுப் புள்ளி விவரங்களின்படி, 1961 முதல் 1966 வரை, பிரதிகூலமான ஏற்றுமதி, இறக்குமதி விலைகளின் ஒப்புவிகிதம் காரணமாக, வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு ஆண்டுதோறும்

ஏற்பட்ட சராசரி நஷ்டம் 220 கோடி டாலர்கள், அதாவது, வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ அரசுகளிடமிருந்தும் சர்வ தேச நிதி நிறுவனங்களிடமிருந்தும் அவற்றுக்குக் கிடைத்த மொத்த ''உதவித்'' தொகையில் 38 சதவிகிதம் ஆகும்.[32]

இந்த எல்லா மாறுதல்களின் விளைவாகவும், விடுதலை அடைந்த நாடுகள் முன்போன்ற அதே அளவு இயந்திரத் தொழில் சரக்குகளை வாங்குவதற்கு முன்னைவிட ஒன்றரை, இரண்டு மடங்கு அதிகக் கச்சாப் பொருள்களை ஏற்றுமதி செய்ய வேண்டியிருக்கிறது. எடுத்துக்காட்டாக, காப்பி, கோக்கோ, வாழைப்பழங்கள், இவற்றின் விலைகள் குறைந்து விட்டதனால் மட்டுமே ஐவரி கோஸ்ட் நாட்டுக்கு ஏற்பட்ட நஷ்டம் 100 கோடி புது பிராங்குகள் ஆகும். தவிரவும், பொருளாதார வளர்ச்சியின் பொருட்டுத் தனக்குத் தேவைப் பட்ட இறக்குமதிச் சரக்குகளின் விலை உயர்வால் இதே சமயம் அதற்கு இன்னும் 20 கோடி பிராங்குகள் நஷ்டம் உண்டாயிற்று. ஐம்பதுக்களின் மத்தியில் ஒரு ''ஜீப்'' வாங்கு வதற்குப் 14 மூட்டைகள் காப்பி விற்பது போதுமானதாக இருந்தது. அறுபதுக்களின் மத்தியிலோ, இதற்காக 39 மூட்டைகள் தேவைப்பட்டன.

வர்த்தகத் துறையில் முன்னாள் காலனிகளையும் அரைக் காலனிகளையும் சுரண்டுவதற்காகக் காமன்வெல்த், ஸ்டர்லிங் பிரதேசம், பிராங்குப் பிரதேசம், ''பொதுச் சந்தை'' ஆகியவற்றின் முதற்சலுகை முறையும் வர்த்தக-நிதியாதார அமைப்பு முழுவதும் விரிவாகக் கையாளப்படுகின்றன. ''உதவி'' என்பதும் இவ்வகையில் செயல்படுகிறது. ''உதவி'' பெறும் நாடுகள் இவ்விதம் தரப்படும் தொகைகளை, சம் பந்தப்பட்ட ஏகாதிபத்திய அரசின் சந்தையில் மட்டுமே சரக்குகளாக வசூலித்துக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை, வேறு பல நிபந்தனைகளோடு கூடவே விதிக்கப்படுகிறது என்பது தெரிந்த விஷயம். இதன் விளைவாக, வளர்ச்சிதி அடைந்து வரும் நாடுகள் தங்களுக்குத் துலக்கமாகப் பிரதி கூலமான நிபந்தனைகளின்பேரில் சரக்குகள் வாங்குவதால் அடிக்கடி பெருந் தொகைகள் உபரியாகச் செலுத்த நேர் கிறது. உதாரணமாக, அமெரிக்க ''உதவித்'' திட்டத்தின்படி 1965ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சரக்குகள் வாங்கப் பாக்கிஸ்தான் உலகச் சந்தை விலைகளுடன் ஒப்புநோக்கில்

13.5 சதவிகிதம் அதிக விலைகள் செலுத்த நேர்ந்தது என்று வளர்ச்சி குறைந்த நாடுகள் பற்றிய பொருளாதாரக் கொள்கை என்னும் தமது நூலில் குறிப்பிடுகிறுர் சிக்காகோ பல்கலைக்கழகப் பேராசிரியர் எச். ஜீ. ஜான்ஸன்.[33]

ஏகாதிபத்திய வல்லரசுகளது கொள்கையின் விளைவாக, வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் வெளிநாட்டு வர்த்தகத் துறையில் மொத்தத்தில் ஆண்டுதோறும் 1,400 கோடி முதல் 1,600 கோடி டாலர்கள் வரை நஷ்டப்படுவதாகச் சில கணக்கீடுகளால் தெரிய வருகிறது. ஐ. நா. வர்த்தக, அபி விருத்தி மகாநாட்டின் டில்லிக் கூட்டம் மீண்டும் காட்டியது போல, ஏகாதிபத்தியவாதிகள் முன்னுள் காலனிகள், சார்பு நாடுகளுடன் தங்கள் வர்த்தக உறவுகளில் எவ்வகையான சாரரீதியான மாற்றங்களும் செய்ய மறுக்கிறுர்கள் என் பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

புதுக் காலனியாதிக்க முறையின் பல பொருளாதார வடிவங்களும் நெம்புகோல்களும், இந்த நோக்கத்திற்கு ஏற்பத் ''தகவமைக்க'' ஏகாதிபத்தியவாதிகள் முயன்று வரும் பிற சாதனங்களும் ஒரு சில, அல்லது அனேகமாக எல்லா ஏகாதிபத்திய அரசுகளும் கூட்டாகப் பங்காற்றுவதன் அடிப் படையிலேயே தோன்றிச் செயல்படுகின்றன என்பதை நாம் ஏற்கனவே கண்டோம். ''ஐரோப்பியப் பொருளாதாரக் கழகம்'' —''பொதுச் சந்தை''—இந்த வரிசையில் சந்தே கம் இன்றிச் சிறப்பான இடம் பெற்றிருக்கிறது. இதற்குக் காரணம், இது அரசியல்-பொருளாதாரச் செயல்கள் ஆற்றும் நிறுவனம் என்பது மட்டுமே அல்ல. பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம், ஹாலண்டு, லக்ஸம்பர்க் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஏகபோக நிறுவனங்களின் தேசீய, ''ஐரோப்பிய'' நலன்களுக்காகவும், சில சந்தர்ப்பங்களில் அமெரிக்க எதிர்ப்புக் காரணங்களாலும்தோற்றுவிக்கப்பட்ட, இந்தத் ''தேச வரம்புகள் கடந்த'' அரசு-ஏகபோகக் கூட்டு ஸ்தாபனம் வெளிப்படையான புதுக் காலனியாதிக்க நோக்கங்கள் கொண்டது.

''ஐரோப்பியப் பொருளாதாரக் கழகத்தில்'' ''இணைத் துக் கொள்ளப்பட்டிருக்கின்றன'' 18 ஆப்பிரிக்க நாடுகள் (மலாகாசியக் குடியரசு, சாத், காபோன், மேல் வோல்டா, தோகோ, ஸோமாலி, காங்கோ (பிராஸவீல்), மத்திய

ஆப்பிரிக்கக் குடியரசு, காமெரூன், செனெகால், டாகமியா, நைஜர், மாரிட்டானியா, காங்கோ (கின்ஷாஸா), ஐவரி கோஸ்ட், மாலி, ருவாண்டா, புருண்டி). இவை தவிர, வேறு சில ஆப்பிரிக்க நாடுகள் ''ஐரோப்பியப் பொருளாதாரக் கழகத்துடன்'' தனிவகை ஒப்பந்தங்களைச் செய்து கொண்டிருக்கின்றன.

அனேக ஐரோப்பிய அரசுகளின் ஏகபோகங்கள், உலக முதலாளித்துவ அமைப்பில் தங்கள் நிலைகளை மேலும் வலுவாக்கிக் கொள்ளும் பொருட்டும், பிற ஏகாதிபத்திய டிரஸ்டுகளுடன் போராட்டத்தில் இந்தக் ''கழகத்தின்'' உதவியால் ஆப்பிரிக்கக் கண்டத்தின் கணிசமான பகுதியில் வேரூன்றவும், ஆப்பிரிக்க நாடுகளின் வளங்களை மேற்கொண்டும் பயன்படுத்தவும், அவற்றின் சந்தைகள்மீது ஆதிக்கம் செலுத்தவும் விரும்புகின்றன. ''பொதுச் சந்தை'' நிறுவப்படுவதற்கு முன் நடந்த ராஜதந்திரப் போராட்டத்தின்போது பிரான்ஸின் முன்னாள் முதலமைச்சரும் ஐரோப்பிய ''ஒருங்கிணைப்புக்கு'' அடிகோலியவர்களில் ஒருவரும் ஆன ராபேர் ஷூமான், ''பிரான்ஸ் தன் ஆப்பிரிக்கக் காலனிகளை ஐரோப்பாவுக்கு மரபுச் சொத்தாகத் தரும்''[34] என்று கூறித் தமது ஐரோப்பியக் கூட்டாளிகளுக்கு ஆசை காட்டியதை இங்கே நினைவுபடுத்தலாம். ''ஐரோப்பியப் பொருளாதாரக் கழகத்தில்'' ஆப்பிரிக்க நாடுகளை ''இணைத்துக் கொண்டதன்'' வாயிலாக ஐரோப்பிய ஏகாதிபத்திய வல்லரசுகள் காலனியாட்சியின் பழைய வடிவங்களின் இடத்தில், ஆப்பிரிக்கக் கண்டத்தின் பொது மக்களுக்கு அவ்வளவாகத் தெரியாததும் அவ்வளவாக வெறுப்பு ஊட்டாததுமான கூட்டுக் காலனியாதிக்கத்தின் புதிய வடிவத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்த விதமாக ஐரோப்பிய அரசுகளின் ''அறுவர் குழு'' தன்னுடன் ''இணைக்கப்பட்ட'' நாடுகளின் பொருளாதார, அரசியல் வளர்ச்சியைத் தனக்கு ஏற்ற தடத்தில் செலுத்தவும் முயல்கிறது.

''இணைக்கப்படுவது'' பற்றிய ஒப்பந்தம் 1963, ஜூலையில் யாஉந்தா (காமெரூன்) நகரில் அதிகாரபூர்வமாகக் கையொப்பம் ஆயிற்று. ஒப்பந்தத்தில் பின்வரும் நிபந்தனைகளும் அடங்கியிருந்தன: ''பொதுச் சந்தை'' உறுப்பு நாடுகளின் சந்தைகளில் அயன மண்டலச் சரக்குகளின் கொள்

முதலில் ''இணைத்துக் கொள்ளப்பட்ட'' ஆப்பிரிக்க நாடுகளுக்குக் குறித்த அனுகூலங்கள் (''முதற்சலுகைகள்'') கிடைக்கும். 1964 முதல் 1969 வரையுள்ள ஆண்டுகளில் அவற்றுக்கு ''ஐரோப்பியப் பொருளாதாரக் கழகத்தின்'' நிதியிலிருந்து 73 கோடி டாலர்கள் கடன்களாகத் தரப்படும். ஒப்பந்தப்படி இவற்றுக்குப் ''பதிலீடாக'' ''ஐரோப்பியப் பொருளாதாரக் கழகத்தின்'' உறுப்பு நாடுகளின் சரக்குகள் ''இணைத்துக் கொள்ளப்பட்ட'' நாடுகளின் சந்தைகளில் விற்பனையாகச் சலுகைகள் அளிக்கப்பட்டன. இந்தச் சரக்குகளின் இறக்குமதி அளவு வரையறுப்புகள் நீக்கப்பட்டன. இவற்றின்மீது சுங்கத் தீர்வைகளும் குறைக்கவோ அகற்றவோ பட்டன.

முதல் பார்வைக்குக் கவர்ச்சியாகத் தோன்றும் ''இணைக்கப்படுவது'' குறித்த நிபந்தனைகள், ''ஐரோப்பியப் பொருளாதாரக் கழகத்துடன்'' இணைந்த ஆப்பிரிக்க நாடுகளில் மேற்கு ஐரோப்பிய ஏகபோகங்களின் பொருளாதார, அரசியல் நுழைவை உண்மையில் எளிதாக்குகின்றன. ஐரோப்பாவின் வளர்ச்சி அடைந்த இயந்திரத் தொழில் அரசுகளும், பொருளாதாரத் துறையில் பெரிதும் பின்தங்கிய ஆப்பிரிக்க நாடுகளும் கணிசமாகத் தனித்து ஒதுங்கிய ஒரே கூட்டு அமைப்பில் ஒன்றுசேர்வதே செயலளவில் ''இணைவு'' என்பதன் உண்மையான அர்த்தம் ஆகும். இம்மாதிரிக் கூட்டு அமைப்பில் ஐரோப்பிய நாடுகள் இயந்திரத் தொழில் சாமான்கள் சப்ளை செய்பவையாகவும், பரஸ்பரப் பொருளாதாரத் தொடர்புகளின் வளர்ச்சிப் போக்கை நிர்ணயிப்பவையாகவும் செயலாற்றும் என்பதையும், விவசாய விளை பொருள்களும் கனியக் கச்சாப் பொருள்களும் உற்பத்தி செய்து இயந்திரத் தொழில் நாடுகளுக்குச் சப்ளை செய்வதும் அவற்றின் தேவைகளுக்கு ஏற்பச் செயல்படுவதுமே ஆப்பிரிக்க நாடுகளின் விதி ஆகிவிடும் என்பதையும் புரிந்து கொள்வது கஷ்டமல்ல.

ஆப்பிரிக்க நாடுகளின் ஏற்றுமதிகளுக்கு ஸ்திரமானதாகவும் விலைகளில் சாதகமானதாகவும் தோன்றும் சந்தையை ''அறுவர் குழு'' நாடுகளில் அவற்றின் இயந்திரத் தொழில் சாமான்களுக்குத் தடையற்ற அனுமதி அளிப்பதற்கு மாற்றாக ஏற்படுத்தித் தருவது என்பதே ''இணைக்கப்

படுவதின்'' அடிப்படை. ''இணைக்கப்பட்ட'' நாடுகள் ஏகாதிபத்திய அரசுகளது பொருளாதாரத்திற்குத் தேவையான விவசாய-கச்சாப் பொருள்கள் உற்பத்தி செய்யும் துணை நிலங்களாக நிரந்தரமாக விளங்கி வருவதற்கு ஏற்றவாறு அவற்றின் தேசீயப் பொருளாதாரத்தைத் தனித் துறைகளில் செலுத்த இந்த அடிப்படையே உதவுகிறது. இந்த நாடுகள் பொருளாதார விடுதலை பெறுவதற்கு இது தடையாக இருக்கிறது. மேலும் யாஉந்தா ஒப்பந்தப்படி அதில் கையெழுத்திட்ட நாடுகள் பொருளாதாரத்தின் பின்வரும் முக்கியத் துறைகளில் தங்கள் அரசுரிமையை விட்டுக் கொடுத்துவிட வேண்டும்: வெளிநாட்டு வர்த்தகத்தை இயக்கி நடத்துதல், மூலதனக் குவிவைக் கட்டுப்படுத்தல், முதலீடுகள் செய்வதற்கான துறைகளைத் தெரிந்தெடுத்தல்.

''இணைக்கப்பட்ட'' நாடுகளின் ஒருசில பதனிட்ட விவசாய விளைபொருள்கள் மீது விதிக்கப்படும் பாகுபாட்டுக் காப்புவரிகள் இந்நாடுகளின் இயந்திரத் தொழில் பெருக்கத்துக்குத் தடையாய் இருப்பதாகவும், ''யாஉந்தா ஒப்பந்தம் அமல் செய்யப்பட்டதால் ஆப்பிரிக்க நாடுகள் திருப்தி அடைந்திருப்பதாகக் கூறுவது முற்றிலும் சரியாய் இராது'' என்றும் ''ஆப்பிரிக்க-மலாகாசியப் பொது நிறுவனத்தின்'' பொதுச் செயலாளர் பாலீஞூ கானே, ''இணைக்கப்படுவதின்'' ஐந்து ஆண்டுச் செயல்பாட்டைப் பகுத்தாய்ந்து 1968 ஜூனில் அபிஜான் என்னும் இடத்தில் கூறினார்.[35]

வேறு சொற்களில் கூறினால், ஆப்பிரிக்க நாடுகளுக்குச் சம உரிமை அற்றதும் குறித்த நோக்குக்களில் காலனியாதிக்க முறைக்கு வழக்கமானதுமான உழைப்புப் பிரிவினை தொடர்ந்து நிலவுவதுடன் மேலும் நிரந்தரமாக்கப்படுகிறது. ''ஆப்பிரிக்கப் பொருளாதாரத்தின் வளர்ச்சியற்ற நிலையை மாறாமல் வைத்திருப்பதே 'பொதுச் சந்தையின்' நோக்கம்'' என்று அழுத்திக் கூறியது கினி நாட்டின் ஜனநாயகக் கட்சி வெளியீடான ஹோரோயா செய்தித்தாள்.[36] மேலும், ''இணைக்கப்பட்டுள்ள'' ஒவ்வொரு நாட்டிற்கும் முன்னர் எதிராக இருந்தது முதன்மையாக ஒரே ஒரு ஆட்சித்தலைமை நாட்டின் மூலதனம் மட்டுமே; இப்போதோ, முரண்பாடுகள் இருந்தாலும் ''பொதுச் சந்தையின்'' வரம்புகளுக்குள் ஓரளவு ஒன்றிணைந்த அனேக மேற்கு ஐரோப்பிய அரசுகளின்

சக்திமிக்க ஏகபோகங்கள் இந்த நாடுகளுக்கு எதிராகச் செயல்படுகின்றன. இது இவற்றுக்கு இன்னும் பிரதிகூல மானது. அன்னிய ஏகபோகங்களின் சக்திகளது இத்தகைய ஒருங்கமைப்பு, ''கூட்டுப்'' புதுக் காலனியாதிக்க முறையின் செயல்பாடு ஆகியவற்றின் நிலைமைகளில், சார்பு நிலைக்கு எதிராகவும், பொருளாதாரப் பின்தங்கிய நிலைமையைப் போக்குவதற்காகவும், பல்கிளைப் பொருளாதாரத்தையும் தேசீய இயந்திரத் தொழில் துறையையும் நிறுவுவதற்காக வும் போராடுவது ''இணைக்கப்பட்ட'' நாடுகளுக்கு இன்னும் அதிகச் சிக்கலுள்ளது ஆகிறது.

''இணைக்கப்பட்டுள்ள'' ஆப்பிரிக்க அரசுகள் உள்நாட்டில் பொருளாதாரச் செயல்பாட்டைத் தூண்டி ஊக்குவதற்கு மிக ஏற்ற கருவியான காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உரிமையையும் கணிசமாக இழந்துவிட்டன. அதே சமயம், ''பொதுச் சந்தையின்'' தலைமை உறுப்புக்களது முடிவுகளைச் சார்ந்திருப்பது காரணமாகவும், ''பொதுச் சந்தை'' உறுப்பின அல்லாத நாடுகளிலிருந்து இவற்றை விலக்கி வைக்கும் உயர்ந்த சுங்கத் தடைகள் காரணமாகவும், வெளிநாட்டுப் பொருளாதார உறவுகள் விஷயத்தில் சமயோசிதமாக நடந்து கொள்ளத் தேவையான சுதந்திரமும் இவற்றுக்கு இல்லை.

ஆப்பிரிக்க நாடுகளுக்கு இடையிலேயே வர்த்தகம் வளர்ச்சி அடைவதற்கும்''இணைக்கப்படுவது''இடைஞ்சலாக இருக்கிறது. இதற்கு இந்த எடுத்துக்காட்டு குறிப்பிடத்தக்கது. நைஜீரியாவிலும் கானாவிலும் தயாரிக்கப்படும் சிகரெட்டுகள்மீது, அவற்றுக்கு அண்டையில் உள்ள''இணைக்கப்பட்ட'' நாடுகளில், ''பொதுச் சந்தை'' நாடுகளிலிருந்து வரும் சிகரெட்டுகளைக் காட்டிலும் நான்கு மடங்கு அதிக வரி விதிக்கப்படுகிறது. தவிரவும், ஆப்பிரிக்காவின் பாதி நாடுகள் ''ஐரோப்பியப் பொருளாதாரக் கழகத்துடன்'' ''இணைந்திருப்பது'' ஆப்பிரிக்க நாடுகளுக்கிடையே நிலவும் சச்சரவுகளைத் தீவிரப் படுத்தவும், புதிய சச்சரவுகளைச் செயற்கையாக மூட்டி விடவும், ''பொதுச் சந்தையுடன்'' சேர்ந்த நாடுகளைப் பிற ஆப்பிரிக்க நாடுகளுக்கு எதிர்நிறுத்தவும் ஏகாதிபத்தியவாதிகளுக்கு வாய்ப்பு அளிக்கிறது. புதுக் காலனியாதிக்கத்துக்கு எதிராக இந்த நாடுகள் ஒன்றித்துச் செயல் புரிவதற்கும் இது

இடைஞ்சலாய் இருக்கிறது. ஒரு விஷயத்தைக் கவனத்தில் வைத்துக் கொள்வது அவசியம். ''இணைக்கப்பட்ட'' நாடுகள் ஏற்றுமதி செய்யும் அயன மண்டலச் சரக்குக்களுக்குப் ''பொதுச் சந்தை'' நாடுகளில் சுங்கச் சலுகைகள் அளிக்கப் படுவதோடு கூடவே, மற்ற ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து வரும் சரக்குக்கள் மேல் ''வெளித்'' தீர்வைகள் எனப்படுபவை விதிக்கப்பட வேண்டும் (உதாரணமாக, வாழைப்பழங்கள் மேல் 20 சதவிகிதம், காப்பி மீது சுமார் 10 சதவிகிதம், தாவரக் கொழுப்பு மீதும் எண்ணெய் மீதும் 11 சதவிகிதம் முதலியன) என யாஉந்தா ஒப்பந்தத்தில் நிபந்தனைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. சோஷலிஸ நாடுகளுடன் ஆப்பிரிக்க நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு வளர்வதற்கும் ''இணைக்கப்படுவது'' முட்டுக்கட்டை போடுகிறது.

''இணைக்கப்படுவதை'' உயிர்ப்பித்த ஏகாதிபத்திய வாதிகள், அதன் மூலம் இளம் அரசுகளின் வளர்ச்சித் திசை மீது நிர்ணயகரமான பாதிப்பு விளைக்கவும், அவற்றில் முதலாளித் துவ உறவுகள் வெற்றி பெற உதவவும் விரும்புகிறார்கள். மலாகாசியக் குடியரசின் வெளிநாட்டு விவகார அரசமைச்சர் ரபெமனன்ஸாரா ஒரு முறை இவ்விஷயமாகப் பின்வருமாறு ஒப்புக் கொண்டார்; '' 'ஐரோப்பியப் பொருளாதாரக் கழகத்தில்' வெளி நாடுகள் இணைக்கப்பட்டிருப்பது அரசியல் செயல் என்பதை முற்றிலும் அப்பட்டமாகச் சொல்லி விடுவோம். பொருளாதார இயந்திரத்தின் செயல்முறை அம்சங்களால் இந்த ஆழ்ந்த உண்மையை மறைப்பது வீணாகும், அபாயமுள்ளதாகும்.''[37]

மெய்யாகவே ''பொதுச் சந்தை'' என்பது ''கூட்டுக்'' காலனியாதிக்க முறையின் அரசியல் ஆயுதம் ஆகும். இதன் அரசியல் செயல்பாடு ஒரு புறம் புதுக் காலனியாதிக்க முறையின் பொருளாதாரக் குறிக்கோள்களை அடைவதை நோக்கமாகக் கொண்டது. மறுபுறம், ''இணைக்கப்பட்ட'' நாடுகளை மேற்கு நாடுகளுக்கு ஆதரவான நிலைகளில் வைத்திருப்பதை (அல்லது அவற்றை இந்த நிலைக்குக் கவர்ந்து இழுப்பதை) அது நோக்கமாகக் கொண்டிருக்கிறது. ''இணைக்கப்பட்ட'' நாடுகளில் உள்ள பழைமைவிரும்பிகளான சமுதாய, அரசியல் சக்திகளுக்கு மறைமுகமாகவாவது உதவுவதும் இதன் நோக்கம் ஆகும்.

## புதுக் காலனியாதிக்க முறையின் முக்கிய அரண்

ஐஸன்ஹோவர் குடியரசுத் தலைவராக இருந்த காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உதவி வெளி விவகார அமைச்சராகவும் தகவல் நிலைய இயக்குநராகவும் பணி ஆற்றிய ஜே. அல்லன் தமது பொது உரை ஒன்றில் ஒளிவு மறைவின்றிக் கருத்து வெளியிட்டார். வெளிநாட்டுக் கொள்கை இலாகாவைச் சேர்ந்த தமது சக ஊழியர்கள் எத்தகைய கனவுகளும் விழைவுகளும் கொண்டிருக்கிறார்கள் என்று கூட்டத்தினருக்கு அவர் அறிவித்தார். காலனியாட்சிக்கு எதிராகப் போராடும் மக்களின் பிரச்சினைகள் எதிர்ப்பட்டதும் அவர்கள் ''மிகவும் வேடிக்கையாக'' அடிக்கடி இந்த மாதிரிச் சொல்வார்களாம்: ''குளோரோபார்மில் நனைத்த ஒரு பிரமாண்டமான பஞ்சுப் பற்றையை எடுத்து இந்தக் குடியானவர்களில் முக்கால்வாசிப் பெயரை மறுபடி உறக்கத்தில் ஆழ்த்தும் நிலைமையில் நாம் இல்லாதது மிகவும் மோசம், இல்லையா? உலகின் வளர்ச்சி அடைந்த பகுதி அதிக ஒழுங்கான வழியில் அவர்களுக்கு உதவ முடியும் வகையில் அவர்கள் கொஞ்சங் கொஞ்சமாக விழிப்படையும்படிச் செய்ய வேண்டும். இந்தத் திடீர்ப் புரட்சிகளைச் சமாளிப்பது மட்டு மீறிக் கடினமானது. இவற்றின்போது ஒவ்வொருவனும் வரலாற்று எஞ்சினில் ஏறிக்கொண்டு 20ம் நூற்றாண்டுடன் இணைந்து கொள்ள விரும்புகிறான்.''[1]

ஆயினும் ஜே. அல்லன் முடிவுவரை ஒளிவு மறைவின்றிக் கருத்து வெளியிடவில்லை என்பதைச் சொல்லிவிட வேண்டும். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கையை இயக்கி நடத்துபவர்கள் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களை ''உறக்கத்தில் ஆழ்த்துவது'' பற்றிக் கனவு காண்

பதுடன்நின்றுவிடுவதே இல்லை. அவர்கள்ஊக்கத்துடன் செயல் புரிகிறார்கள். காலனியாதிக்க முறையைப் புதுமைப்படுத்த வும், அதை முழுதும் அழிந்துவிடாமல் காக்கவும் ''நிதானப் போக்கையும்'' சமரசத்தன்மை கொண்ட சீர்திருத்தவாதத் தையும் தேசிய விடுதலை இயக்கத்தின்மீது சுமத்தவும் அவர் கள் எல்லாச் சாதனங்களையும் கையாண்டு படு முயற்சி செய்து வருகிறார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகாதிபத்தியம் புதுக் காலனியாதிக்க முறையின் முக்கிய அரணாகவும் அதைப் பரப்புவதாகவும் விளங்குகிறது. ''உலகு பரந்த சுரண்டும் கருவி, அரசியல் போலீஸ், விடுதலை இயக்கத்தின் சமரசப் படுத்த முடியாத எதிரி என்ற வகையில் அமெரிக்க ஏகாதிபத் தியத்தின் சொரூபத்தைக் கடந்த பத்தாண்டுகளின் நிகழ்ச்சி கள் முன்னிலும் பெருத்த வன்மையுடன் அம்பலமாக்கிவிட் டன'' என்று 1969, ஜூன் 17ல் மாஸ்கோவில் கூடிய கம்யூ னிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மகாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ''அடிப்படை தஸ்தாவேஜில்'' வலியுறுத்தப்பட்டிருக்கிறது.[2]

அமெரிக்க ஐக்கிய நாடுகள் ''மூன்றும் உலகு'' முழுவதி லும் பரந்த அளவில் ஏகபோகங்களின் புதுக் காலனியாதிக்கக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது. மற்ற ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு இவ்வாறு செய்ய இயலாது.

புதுக் காலனியாதிக்க முறையின் போர்த்தந்திரத்தைச் சேர்ந்த மிக முக்கிய அம்சங்கள் ஆயினும் சரி, அல்லது அதனால் கையாளப்படும் அரசியல், பொருளாதார, கொள்கை வாத வழி துறைகள் ஆயினும் சரி, எல்லாவற்றிலும் எங்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளது ஏகாதிபத்தியத்தின் தலைமைப் பாத்திரம் தெளிவாகப் புலப்படுகிறது. முதன்மையாக இந்த நிலைமை புதுக் காலனியாதிக்கவாதிகளின் பிரதானக் கொள் கைப் போக்கில் நிலவுகிறது. விடுதலை அடைந்த நாடுகள் முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையை ஏற்கும்படி கட்டாயப் படுத்துவதே இந்தக் கொள்கைப் போக்கின் சாராம்சம். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆளும் வட்டாரங்களால் தயாரிக்கப்பட்டு, பிடிவாதமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் உலக வியாபகமான போர்த்தந்திரத்தின் ஓர் அம்சமே இந்தக் கொள்கைப் போக்கு. முன்னாள் காலனிகளையும் அரைக்

காலனிகளையும் உலக முதலாளித்துவ அமைப்பு மண்டலத்துக்குள் நிறுத்திக் கொள்வதும், புது வகையான சமத்துவமின்மை, சார்பு நிலை ஆகியவற்றின் அடிப்படையில் அவற்றை உலக முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் ''ஒதுக்குப்புற'' நிலைமையில் வைத்திருப்பதும் இதன் நோக்கம் ஆகும்.

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் தேசீய, அதிகார வர்க்க பூர்ஷ்வாக்களிடையே உள்ள, ஏகாதிபத்தியத்துக்கு இணங்கும் பிற்போக்கு வட்டாரங்களுடன் கூட்டுச் சேரும் போக்கைத் தொடங்கி வைத்ததும் பரப்பி வருவதும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகாதிபத்தியமே ஆகும். புதுக் காலனியாதிக்கவாதிகளின் எந்த பிரதானக் கொள்கைப் போக்கு மேலே குறிக்கப்பட்டுள்ளதோ, சமுதாயத் துறையில் அதன் பிரதிபலிப்பே இந்தப் போக்கு.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் முதலாளித்துவ உறவுகளை விரிவுபடுத்துவது, ''நடுத்தர வர்க்கம்'' எண்ணிக்கையில் பெருக உதவுவது, பூர்ஷ்வா அரசியல் அமைப்புக்களும் அரசாங்க அமைப்புக்களும் நிலைபெறச் செய்வது ஆகியவற்றுக்கு இட்டுச் செல்லக்கூடிய ''சீர்திருத்தங்கள்'' இந்நாடுகளில் ஏகாதிபத்தியத்தால் பரப்பவும் ஆதரிக்கவும் பட வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதில், சிறப்பாக அண்மை ஆண்டுகளில், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆளும் வட்டாரங்கள் முதன்மை வகிக்கின்றன. உதாரணமாக, நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருப்பது போல, அமெரிக்க அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட ''முன்னேற்றத்திற்கான ஐக்கியம்'' என்னும் அபகீர்த்தி வாய்ந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று இத்தகையதே. ''மூன்றுவது உலகில்'' ஏகாதிபத்தியத்தின் மிக விரிவாகப் பரவிய ஸ்தாபனங்களில் இது ஒன்று.

விடுதலை அடைந்த நாடுகள் ''சுதந்திர'', தனியார் தொழில்முயற்சிப் பாதையை மேற்கொள்ளும்படிச் செய்வதற்காக, அரசு, ஏகபோகங்கள் இரண்டினதும் வலிமை மிக்க அரசியல், பொருளாதார, கொள்கைவாத விசைக் கருவிகளைக் கொண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகள் மிகத் தீவிரமாக முயன்று வருகிறது.

விடுதலை அடைந்த நாடுகளின் உள்நாட்டு மூலதனத்

துக்கு ஆதரவளிப்பதற்கான விசேஷ நடவடிக்கைகளால் இந்தக் கொள்கைக்கு வலுவூட்டப்படுகிறது. ''நிதியுதவியும்'' இந்த நோக்கத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது. தனியார் தொழில் முயற்சிகளுக்கு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ ஆதரவளிக்கும் ஷரத்துக்கள் (நிறுவப்படும் நிலையங்களின் தேர்வு முதலியன) ''உதவி'' வழங்குவதற்கான நிபந்தனைகளில் அடிக்கடி சேர்க்கப்படுகின்றன. இந்த நாடுகளில் தனியார் தொழில்முயற்சித் திட்டங்களுக்கு நிதி வசதி செய்வதற்காக, 1965ல் மட்டுமே ''சர்வதேச அபிவிருத்தி நிர்வாக நிலையத்தின்'' வாயிலாக 10 கோடி டாலர்கள் ஒதுக்கப்பட்டன. இவை தவிர, தனியார் தொழில் நிறுவனங்களுக்குப் பற்றுக் கடன்கள் வழங்குவதற்காக உள்நாட்டு பாங்குகளுக்கு 4 கோடி 65 லட்சம் டாலர்கள் தரப்பட்டன.[3] 1968 வது நிதியாண்டில், ஆசிய நாடுகளில் உள்நாட்டுச் செலாவணியில் வழங்கப்பட்ட அமெரிக்கக் கடன்களில் சுமார் 90 சதவிகிதம் உள்நாட்டுத் தனியார் கம்பெனிகளுக்குக் கொடுக்கப்பட்டது.[4]

புதுக் காலனியாதிக்க முறையின் அமைப்பிலும் கொள்கையிலும் பொருளாதாரத் துறைக்கு உள்ள முக்கியத்துவத்தை அமெரிக்க ஆளும் வட்டாரங்கள் சரியாக மதிப்பிட்டு, புதுக் காலனியாதிக்க நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அரசுக்கு உள்ள பொருளாதார நெம்புகோல்களை ஏகாதிபத்திய வல்லரசுகள் விரிவாகக் கையாள்வதைத் தொடங்கிவைத்தன. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு ''உதவி'' அளிப்பது என்ற புதுக் காலனியாதிக்க முறையின் மிக முக்கிய ஆயுதத்தை முதன்முதல் கையாண்டது அமெரிக்க ஏகாதிபத்தியமே. இந்த நாடுகளின் சமூக வளர்ச்சி மீது செல்வாக்கு செலுத்துவதுடன் சம்பந்தப்பட்ட, புதுக் காலனியாதிக்க முறையின் போர்த்தந்திரக் குறிக்கோள்களை நிறைவேற்றுவது இதன் வர்க்கரீதியான பிரதானச் செயல் ஆகும்.

முன்னாள் காலனிகள், அரைக் காலனிகளுடன் மேற்கொள்ள வேண்டிய பொருளாதார உறவுகளையும் அவற்றுக்கு நிதி ''உதவியும்'' தொழில்நுட்ப ''உதவியும்'' அளிப்பதையும் பற்றி ஆராய்ந்து திட்டங்கள் வகுப்பதற்கான விசேஷ அரசாங்க அலுவலகங்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தான் முதன்முதலாக ஏற்படுத்தப்பட்டன. அமெரிக்க ஐக்கிய

நாடுகளைப் பின்பற்றி அனேகமாக எல்லா ஏகாதிபத்திய வல்லரசுகளுமே வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு ''உதவி'' அளிப்பது என்ற ஆயுதத்தைக் கையாளத் தொடங்கி விட்டன. ஆயினும் ''மூன்றுவது உலகுக்கு'' அளிக்கப்படும் ஏகாதிபத்திய ''உதவியில்'' தலையான பங்கு இப்போதுங்கூட அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கே உரியது. 1961 முதல் 1965 வரையுள்ள ஆண்டுகளில் இந்த ''உதவித்'' தொகை 1,651 கோடி டாலர்களாக இருந்தது. ''அபிவிருத்தி உதவிக் கமிட்டி'', ''பொருளாதார ஒத்துழைப்பு, அபிவிருத்தி நிறுவனம்'' ஆகியவற்றில் அங்கம் வகிக்கும் ஏகாதிபத்திய வல்லரசுகளால் இருதரப்பு அடிப்படையிலும் சர்வதேச நிறுவனங்கள் வாயிலாகவும் வழங்கப்பட்ட மொத்தத் தொகையில் இது 54 சதவிகிதம் ஆகும்.

**''பொருளாதார ஒத்துழைப்பு, அபிவிருத்தி நிறுவனத்தில்'' அங்கம் வகிக்கும் பிரதான ஏகாதிபத்திய வல்லரசுகள் இருதரப்பு அடிப்படையிலும் சர்வதேச நிறுவனங்கள் வாயிலாகவும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு 1961 முதல் 1965 வரை அளித்த ''உதவி''**

*(லட்சம் டாலர்களில்)*[5]

| | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 |
|---|---|---|---|---|---|
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் . . . . | 30690 | 32890 | 34110 | 32720 | 34690 |
| பிரிட்டன் . . . . . | 4360 | 4000 | 3860 | 4710 | 4550 |
| பிரான்ஸ் . . . . . | 9480 | 9880 | 8620 | 8290 | 7640 |
| ஜெர்மன் கூட்டுக் குடியரசு . . . . . | 5580 | 4210 | 3830 | 3990 | 3850 |
| ஜப்பான் . . . . . . | 430 | 380 | 1070 | 1160 | 1340 |

480ம் நம்பர் சட்டத்தின்படி ''உபரி'' உணவுப்பொருள்களைச் சப்ளை செய்வது என்ற தனிப்பட்ட வகை ''உதவியை'' அமெரிக்க ஏகாதிபத்தியம்தான் எல்லாவிதத்திலும் பயன்படுத்துகிறது. இது சிறப்பான துலக்கத்துடன் வெளிப்

படும் அரசியல் தன்மை கொண்டது. சிறப்பாக இரா ணுவத் துறையில் ''தொழில்நுட்ப உதவி'' எனப்படுவதை அளிக்கும் நாடுகளிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் முக்கிய மான இடத்தை வகிக்கிறது.

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் ஏகபோகங்களின் தனியார் மூலதனம் புக வழி செய்யும் ''துரப்பணச் சக்தி யாக'' வேறு எந்த ஏகாதிபத்திய வல்லரசையும்விட அதிக மாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் செயல்படுகிறது. முன்னுள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் அன்னிய முதலீடு களுக்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தவும் ஏகபோகங் கள் தடையின்றிச் செயல்பட வசதி செய்யவும் அமெரிக்க ஏகாதிபத்தியம் பாடுபடுகிறது. வெளிநாட்டுக் கம்பெனிகள் செயல்பட''உத்தரவாதங்களும்''அவற்றின் முதலீடுகளுக்குப் ''பாதுகாப்பும்'' அளிப்பது பற்றிய விசேஷ ஒப்பந்தங் களை வேறு எந்த ஏகாதிபத்திய அரசைக் காட்டிலும் பல மடங்கு அதிகமாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் செய்து கொண்டிருக்கிறது. முன்னுள் காலனிகளிலும் அரைக்காலனி களிலும் செய்யப்படும் தனியார் முதலீடுகளின் ஆகப் பெரிய தொகை அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்தே வருகிறது. 1965-1966ல் இது 285 கோடி 18 லட்சம் டாலர்களுக்குச் சமமாய் இருந்தது.[6]

ஏற்கனவே கூறப்பட்டதுபோல, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆளும் வட்டாரங்கள் விடுதலை அடைந்த நாடு களில் அமெரிக்க, உள்நாட்டு மூலதனங்களிடையே தொடர் பை வலுவாக்கி விரிவுபடுத்தத் தீவிரமாக முயல்கின்றன உள்நாட்டுத் தொழிலதிபர்களைக் கூட்டு சேர்த்துக் கொண்டு இந்த நாடுகளில் கலப்புத் தொழிலகங்களையும் கம்பெனி களையும் நிறுவும்படி அமெரிக்கத் தொழிலதிபர்களைப் பல் வேறு தூண்டுகோல்களின் உதவியால் அவை ஊக்கப்படுத்து கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இரு பூர்ஷ்வா அர சியல் கட்சிகளான குடியரசுக் கட்சியாலும் ஜனநாயகக் கட்சி யாலும், பழமைவிரும்பிகள், மிதவாதிகள் இருவகை அரசிய லாளர்களாலும் இந்தக் கொள்கைப் போக்கு முழுமையாக ஆதரிக்கப்படுகிறது. உதாரணமாக எட்வார்டு கென்னடி **பத்தாண்டுக்கான முடிவுகள்** என்னும் தம் நூலில், வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் தங்கள் சொந்தப் பெயர்களுடன்

இன்றி உள்நாட்டுக் கிளைகளின் வர்த்தகக் குறிகளுடன் செயல்படுமாறு அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தொழிலதிபர்களை வேண்டிக் கொள்கிறார். ''அமெரிக்கத் தொழிலதிபர்கள் செயலாற்றும் நாட்டுடன் தம்மை நெருக்கமாக ஒன்று படுத்தக் கூடிய எந்த முறையும் அவர்கள் அங்கு நிலவுவதை உத்தரவாதப்படுத்தும், அவர்களுடைய சுபிட்சத்தை அதிக மாக்கும்'' என்று அவர் எழுதுகிறார்.[7]

எடுத்துக்காட்டாக, மலேசியாவில் 1966ம் ஆண்டில் அமெரிக்க மூலதனத்தைக் கொண்டு 70க்கு மேற்பட்ட கம்பெனிகள் நிறுவப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை கலப்புக் கம்பெனிகள்.[8]

''கூட்டுக் காலனியாதிக்கத்தின்'' முக்கிய இராணுவ-அரசியல் அமைப்புக்களான நாட்டோ, ''பசிபிக் மாகடல் பாதுகாப்பு உடன்படிக்கை ஸ்தாபனம்'', ஸீஏட்டோ முதலிய ஆக்கிரமிப்புக் கூட்டணிகளில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதி கள் எதார்த்தத்தில் ஆதிக்க நிலையில் உள்ளனர்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகாதிபத்தியம் ''அமெ ரிக்க அரசுகளின் ஸ்தாபனத்திலும்'' ஆதிக்கம் வகிக்கிறது. ''மூன்றாவது உலகின்'' முக்கியப் பிரதேசங்களில் ஒன்றாக வும் புதுக் காலனியாதிக்கக் கொள்கையைச் செயல்படுத்து வதற்குரிய இலக்காகவும் விளங்கும் லத்தீன் அமெரிக்கக் கண்டத்தின் நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்த இந்த ஸ்தா பனத்தை அது பயன்படுத்துகிறது. அதே சமயம், ஏகாதிபத் தியத்தின் செல்வாக்குக்கு உட்பட்டவையும் வெளிப்படை யாகவோ மறைமுகமாகவோ கம்யூனிஸ எதிர்ப்பு முத்திரை யைத் தாங்கியவையுமான பிரதேசக் கூட்டணிகளின் அமைப் பாளியாக ''மூன்றாவது உலகின்'' மற்றப் பிரதேசங்களிலும் செயலாற்ற அது முயல்கிறது. எடுத்துக்காட்டாக, ஆசியா வில் சில பிரதேசக் கூட்டணிகளை (''தென்கிழக்கு ஆசிய அரசு களின் சங்கம்'', ''ஆசிய-பசிபிக் கவுன்சில்'') அமைப்பதில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகாதிபத்தியம் திரை மறை வில்தான் என்றாலும் ஊக்கத்துடன் பங்காற்றியது. பிரதேச ஒத்துழைப்புடன் சம்பந்தப்பட்ட இந்த நிலப்பரப்பின் மக் களுடைய உண்மை நலன்களுக்கு மிக வேறான தங்கள் சொந்த நலன்களுக்காக இவற்றைப் பயன்படுத்த அது திட்டமிட்டது.

அமெரிக்க ஏகாதிபத்தியம், விசேஷமாக ஐம்பதுக்கள்

முதல், தேசீய விடுதலே இயக்கத்தை இராணுவ பலத்தால் நசுக்கும் முதன்மைச் சக்தி ஆகிவிட்டது. அமெரிக்க ஏகாதிபத்தியம் கொரியாவில் ஆக்கிரமிப்பு நடத்தியது. தைவானில் சியாங் காய்-ஷேக் கும்பலுக்குத் தன் ஆயுதங்களின் துணையால் பாதுகாப்பு அளித்தது. 1957லும் 1958லும் மேற்கு ஆசியாவில் இராணுவத் தலேயீடு செய்தது. டொமினிக்கன் குடியரசுக்கு எதிராகத் தன் கடற்படைத் துருப்புக்களேயும் பாரஷூட் துருப்புக்களேயும் ஏவியது. வியத்நாமிய மக்களுக்கு எதிராகக் கொடிய ஆக்கிரமிப்புப் போரை மூட்டிவிட்டது. அமெரிக்கத் துருப்புக்கள் லாஓஸ் நாட்டின் தேசபக்தச் சக்திகளுக்கு எதிராகப் போர் நடவடிக்கைகள் நடத்தி வருகின்றன. கம்போடியாவின் நிலப்பரப்புக்குள் அவை பல முறை பலாத்காரமாக நுழைந்திருக்கின்றன. அரேபிய நாடுகள் மீது இஸ்ரேலின் படையெடுப்புக்கு அமெரிக்க ஐக்கிய நாடுகள் மறைமுகத் தூண்டுதல் அளித்தது.

''மூன்ருவது உலகின்'' அனேகமாக எல்லாப் பிரதேசங்களிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இராணுவ தளங்கள் பரவலாக அமைந்திருக்கின்றன. பதிற்றுக் கணக்கான நாடுகளிலும் பிரதேசங்களிலும் வியாபித்திருக்கிறது இவற்றின் சங்கிலிப் பின்னல். ஆசியாவில் தைவான், தென் கொரியா, பிலிப்பைன், தாய்லாந்து, தெற்கு வியத்நாம், ஜப்பான், ரியூக்கோ தீவுக்கூட்டம், துருக்கி, பாக்கிஸ்தான், சவுதி அரேபியா ஆகியவற்றிலும்; மாகடல் தீவுக் கூட்டங்களில் ஹவாய், மார்ஷல், கேரலேன்ஸ், மாரியாஞஸ் தீவுக்கூட்டங்கள், குவாம் தீவு ஆகியவற்றிலும்; ஆப்பிரிக்காவில் லேபீரியா, எதியோபியா ஆகியவற்றிலும்; லத்தீன் அமெரிக்காவில் பானமா கால்வாய்ப் பிரதேசம், குவான்டஞமோ (க்யூபா), புயெர்ட்டோ-ரிக்கோ, பெர்முடாத் தீவுக் கூட்டம், பார்படோஸ், ஜமைக்கா முதலியவற்றிலும் அமெரிக்க இராணுவ தளங்கள் உள்ளன. முன்னுள் காலனிகளேயும் அரைக் காலனிகளேயும் அடுத்த கடல்களிலும் மாகடல்களிலும் அமெரிக்காவின் ஆருவது, ஏழாவது கடற்படைகளின் போர்க்கப்பல் அணிகள் பாராக் கொடுக்கின்றன.

இந்தப் படை வலிமை அனைத்தும் அமெரிக்க ஏகபோகங்களின் நிலேயைக் ''காவல் காக்கிறது''. விடுதலே அடைந்த நாடுகளே நிர்ப்பந்திக்கும் கருவியாகவும் இது பணியாற்று

கிறது. க்யூபாவும் மெக்ஸிக்கோவும் ஹைட்டியும் நீங்கலாக எல்லா லத்தீன் அமெரிக்க அரசுகளுடனும், பாக்கிஸ்தான், துருக்கி, ஈரான், டியூனீஷியா, லைபீரியா ஆகியவற்றுடனும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் இருதரப்பு இராணுவ ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருக்கிறது.

முன்னாள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் கொள்கைவாதத் துறையில் ஊடுருவுவதிலும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தலைமை தாங்குகிறது. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் விரிவாக நடத்தி வரும் பிரசார இயக்கத்துக்கு மற்ற ஏகாதிபத்திய வல்லரசுகளின் முயற்சிகள் எவ்வகையிலும் ஈடாகவே முடியாது. தற்கால ஏகாதிபத்தியத்தின் மிகப் பெரிய பிரசாரக் கேந்திரமான ''அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தகவல் நிலையம்'' அதனால் நிறுவப்பட்டுள்ளது. 1967ல் அதன் ஆண்டுச் செலவு 16 கோடி 95 லட்சம் டாலர்கள். இந்த ஸ்தாபனம் கிட்டத்தட்ட 110 நாடுகளில், முதன்மையாக ''மூன்றும் உலகின்'' பிரதேசங்களில் செயலாற்றுகிறது. இதற்கு 128 கேந்திரங்கள் (அவற்றில் சுமார் 60 ஆப்பிரிக்கக் கண்டத்தில்) உள்ளன. ஏறக்குறைய 90 செய்தித்தாள்களையும் சஞ்சிகைகளையும் இது வெளியிடுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வெளி விவகார இலாக்கா ஆலோசனையாளரான ஆர். எல்டர் கொடுத்துள்ள புள்ளிவிவரங்களின்படி ''அமெரிக்கத் தகவல் நிலையத்தின்'' அலுவலகங்களில் சுமார் 12 ஆயிரம் பெயர் வேலை செய்கிறார்கள். இவர்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மட்டுமே பணியாற்றுபவர்களின் எண்ணிக்கை 3,250 ஆகும்.[9]

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு இந்த ஸ்தாபனம், புத்தகங்களையும் சிற்றேடுகளையும் கட்டுரைகளையும் பெரு வெள்ளமாக அனுப்பி, தன் நூலகங்கள், தகவல் நிலையங்கள் வாயிலாக இவற்றை அங்கு பரப்புகிறது. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் உள்ள ''சிறந்தோர் குழாம்'' எனப்படும் அறிவுஜீவிகளையும் மாணவர்களையும் இத்தகைய நூல்கள், பிரசுரங்களால் வசப்படுத்துவது அதன் நோக்கம். ஆண்டுதோறும் இந்த ஸ்தாபனம் பலவிதப் பிரசார வெளியீடுகளின் 300 கோடிப் பிரதிகள்வரை அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு வெளியே வினியோகம் செய்கிறது.

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் மக்களது அதிக விரிவான வட்டாரங்களையும் ''அமெரிக்கத் தகவல் நிலையம்'' கவனிக்காது விட்டுவிடுவதில்லை. இந்த நாடுகளில் எழுத்தறிவுத் தரம் மிகவும் குறைவானது ஆகையால், வானொலி, டெலிவிஷன், திரைப்படம், பல்வேறு பொருட்காட்சிகள் ஆகியவற்றின் உதவியால் பிரசாரம் செய்வதில் ''தகவல் நிலையம்'' முனைந்து பாடுபடுகிறது. ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் 200 திரைப்படத் தியேட்டர்களையும் 8 ஆயிரம் புரோஜெக்டர்களையும் ''அமெரிக்கத் தகவல் நிலையம்'' வாடகைக்குப் பிடித்திருக்கிறது. அதன் ஆர்டர்களின்படி முழுநீளத் திரைப்படங்களும் டுடே (''இன்று'') என்னும் மாதாந்தரச் செய்திப்படங்களும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தயாரிக்கப்பட்டு வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. 70க்கு மேற்பட்ட நாடுகளில் டெலிவிஷன் நிகழ்ச்சிகள் ''அமெரிக்கத் தகவல் நிலையத்தால்'' நடத்தப்படுகின்றன. அதே ஆர். எல்டர் கொடுத்துள்ள விவரங்களின்படி, அபூர்வ பாஷைகளும் இனப் பேச்சுமொழிகளும் உள்பட அனேகமாக 38 மொழிகளில் ஒலி பரப்புகிறது ''அமெரிக்கத் தகவல் நிலையத்தின்'' ''அமெரிக்காவின் குரல்'' என்னும் வானொலி நிலையம். 60க்கு மேற்பட்ட மொழிகளில் செய்யப்படும் விசேஷ நிகழ்ச்சி ஒலிப்பதிவுகள் இந்தக் கணக்கில் சேர்க்கப்படவில்லை.[10]

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் தன் கொள்கை வாதத்தைப் புகுத்துவதற்கு ஏற்ற மிக நுட்பமான கருவியை முதன் முதலாக நிருமித்தது அமெரிக்க ஏகாதிபத்தியமே ஆகும். ''அமைதிப் படைப்பிரிவு'' எனப்படுவது இந்தக் கருவி. மற்ற ஏகாதிபத்திய வல்லரசுகள் இதைப் பின்பற்றி நிறுவிய ஸ்தாபனங்கள் எல்லாவற்றினதும் மொத்தப் பணியாளர் தொகையைக் காட்டிலும் இதன் ஊழியர்களது எண்ணிக்கை இன்றுவரை அதிகமாக இருக்கிறது. இதன் அணிகளின் வலைப் பின்னலும் எல்லாவற்றிலும் விரிவானது. அவை வளர்ச்சி அடைந்து வரும் 61 நாடுகளில் செயலாற்றுகின்றன.

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் நடத்தும் பிரசார இயக்கத்தின் வடிவங்கள் விஷயத்தில் மட்டுமின்றி உள்ளடக்கத்தின் விஷயத்திலும்கூட அமெரிக்கக் கொள்கைவாதி

கள் தனிப்பட்ட லாகவத்தையும் வளைவு சுளுவையும் காட்டுகிறார்கள். புதுக் காலனியாதிக்கக் கொள்கையின் நோக்கங்களுக்கே ஏற்ற பல்வகையான ''நவீனச்'' சித்தாந்தங்கள், போதனைகளின் புதுப்புனைவாளர்களாகவும் ''முன்னோடிகளாகவும்'' அவர்கள் செயல்படுகிறார்கள். இந்தச் சித்தாந்தங்களையும் போதனைகளையும் அவர்கள் ஜனநாயகச் சொற்றொடர்களின் ''கவர்ச்சியான'' திரையால் மூடுகிறார்கள். கொள்கைவாத உருமறைப்பையும் வாய்வீச்சையும் விரிவாக, உவப்புடன் கையாள்கிறார்கள்.

விடுதலை அடைந்த நாடுகளின் பொருளாதாரத்தில் அரசினர் துறைக்கு ஏகாதிபத்தியவாதிகள் அடிக்கடி ஆதரவளிப்பது அமெரிக்க மூலதனத்தின் செயல்பாட்டுடன் முக்கியமாகத் தொடர்புள்ளது ஆகும். ஏற்கனவே கூறப்பட்டது போல, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்கம் இந்தியாவிலும் இந்தோனேசியாவிலும் பாக்கிஸ்தானிலும் அனேக ஆப்பிரிக்க நாடுகளிலும் அரசினர் தொழில் நிலையங்கள் நிறுவுவதற்கு நிதியுதவி அளிக்க இசைந்தது. சிலி நாட்டில், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகபோகங்கள் அக்கறை கொண்டுள்ள சில தொழில் நிலையங்களில் அரசு பங்கெடுத்துக் கொண்டது, சிலவற்றின்மீது ஆதிக்கம் கூடச் செலுத்தியது. ஆயினும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்கம் சிலி அரசாங்கத்துக்குத் தொடர்ந்து ''உதவி'' அளித்து வந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முன்னாள் தற்காப்பு அமைச்சரும், தற்போது ''சர்வதேசப் புனர்நிர்மாண, அபிவிருத்தி பாங்கின்'' தலைவரும் ஆன ஆர். மாக்னமாரா, ஐ. நா. பொருளாதார, சமுதாயக் கவுன்சிலில் 1968 டிசெம்பர் மாதம் உரையாற்றுகையில், ''சர்வதேச பாங்கு'' வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் ''அரசினர் அபிவிருத்தி பாங்குகளுக்கு நிதி வசதி அளிக்க இப்போது தயாராயிருக்கிறது'' எனக் கூறினார்.

முன்னாள் காலனிகள், அரைக் காலனிகளில் இயந்திரத் தொழில் துறை வளர்ச்சியின் நிலைமையும் இவ்வாறானதே. இந்தத் துறையில் தோன்றி விரிவடைந்து வரும் தயாரிப்புத் தொழில் கிளைகளில் ஆதிக்க நிலைகளைக் கைப்பற்ற ஏகபோகங்கள் முயற்சி செய்கின்றன. இங்கு கொடுக்கப்பட்டுள்ள பட்டியல் இதைக் காட்டுகிறது.

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நேரடியான தனியார் முதலீடுகளின் தொழிற்கிளை வாரியான வினியோகம் (லட்சம் டாலர்களில்)[11]

| | 1962 | | | | | 1963 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | கனியம் எடுத்தல், வார்ப்புத் தொழில் | பெட்ரோலியத் தொழில் | தயாரிப்புத் தொழில் | பிற தொழிற் கிளைகள் | மொத்தம் | கனியம் எடுத்தல், வார்ப்புத் தொழில் | பெட்ரோலியத் தொழில் | தயாரிப்புத் தொழில் | பிற தொழிற் கிளைகள் |
| லத்தீன் அமெரிக்கா . . . . | 84720 | 10990 | 31590 | 18930 | 23210 | 86570 | 10930 | 30940 | 21030 | 23670 |
| ஆப்பிரிக்கா . . | 12460 | 3070 | 6270 | 1410 | 1710 | 14330 | 3510 | 7010 | 1760 | 2050 |
| ஆசியா (மாகடல் தீவுகள் நீங்கலாக) . . . . | 24950 | 290 | 17610 | 3480 | 3570 | 27840 | 310 | 19250 | 4200 | 4080 |

| | 1964 | | | | | 1966 (பூர்வாங்கப் புள்ளிவிவரங்கள்) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | சுரங்கம் எடுத்தல், வார்ப்புத் தொழில் | பெட்ரோலியத் தொழில் | தயாரிப்புத் தொழில் | பிற தொழிற் துறைகள் | மொத்தம் | சுரங்கம் எடுத்தல், வார்ப்புத் தொழில் | பெட்ரோலியத் தொழில் | தயாரிப்புத் தொழில் | பிற தொழிற் துறைகள் |
| லத்தீன் அமெரிக்கா | 89320 | 10980 | 31420 | 23420 | 23520 | 98540 | 11170 | 29590 | 30770 | 27010 |
| ஆப்பிரிக்கா . . | 16290 | 3560 | 8300 | 2250 | 2180 | 20780 | 3690 | 11080 | 3310 | 2700 |
| ஆசியா (மாகடல் தீவுகள் நீங்கலாக) . . . | 30620 | 340 | 20140 | 5350 | 4790 | 38910 | 390 | 24670 | 7940 | 5900 |

உலகு பரந்த ஏகாதிபத்தியப் போர்த்தந்திரத்திற்கு முன்னுள் காலனி, அரைக் காலனிப் பிரதேசங்களின் முக்கியத்துவம் ஒரு புறம் மிகுந்து கொண்டு போயிற்று. மறு புறம், தன்னந்தனியே தேசீய விடுதலை இயக்கத்தை எதிர்த்து நிற்கவும் புதுக் காலனியாதிக்க உறவுகளைப் பரப்பவும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் செய்த முயற்சிகள் பலிக்காது போயின. இந்தக் காரணங்களால் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆளும் வட்டாரங்கள் தேசீய விடுதலைச் சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் ஏகாதிபத்திய வல்லரசுகளை ஒன்றுபடுத்தவும் அவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும் தீவிர முயற்சி செய்யத் தலைப்பட்டன. தேசீய விடுதலை இயக்கப் பிரதேசத்தில் ஏகாதிபத்திய வல்லரசுகளின் அரசியல், பொருளாதார, கொள்கைவாதச் செயல்களை ஒருங்கிசைவிக்க அமெரிக்க அரசாங்கம் பல முறை பிடிவாதமாக முயன்றது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரவணைப்பிலும் முக்கியமாக அதன் நலன்களுக்காகவுமே இத்தகைய ஒருங்கிசைவைச் செய்ய அது முயன்றது என்பது கூறுமலே விளங்கும். நாட்டோ, பிற ஏகாதிபத்தியக் கூட்டணிகள், ஸ்தாபனங்கள் ஆகியவற்றுக்குள்ளும், மற்ற ஏகாதிபத்திய வல்லரசுகளின் தலைவர்களுடன் அமெரிக்கத் தலைவர்களுடைய பேச்சுவார்த்தைகளின் போதும், இந்த வல்லரசுகளின் தலைநகர்களுக்கு வாஷிங்டனின் தனிப்பட்ட தூதர்களை அனுப்பியும் இவ்வகை முயற்சிகள் செய்யப்பட்டன.

முன்னுள் காலனிகள், அரைக் காலனிகளின் பிரதேசத்தை இலக்காகக் கொண்டு ஏகாதிபத்திய வல்லரசுகள் செய்து வரும் பொருளாதார நடவடிக்கைகளிலும், சிறப்பாக ''உதவியை'' ''சர்வதேசீயமயம் ஆக்கும்'' விஷயத்தில், கூட்டுக் காலனியாதிக்க முறையை அமெரிக்க ஐக்கிய நாடுகள் தூண்டி ஊக்கி வருகிறது. 1960ல் ''பொருளாதார ஒத்துழைப்பு, அபிவிருத்தி நிறுவனம்'' ஏற்பட்டது, இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் துருக்கிக்கும் இந்தோனேசியாவுக்கும் ''உதவி'' அளிப்பதற்கான ''கழகங்கள்'' அமைக்கப்பட்டது முதலிய செயல்கள் இந்தத் தூண்டுதலின் விளைவுகளே. ''முன்னேற்றத்திற்கான ஐக்கியத்தின்'' செயல்திட்டத்தில் சர்வதேச நிதி நிறுவனங்களும் ஐரோப்பிய வல்லரசுகளும்

ஜப்பானும் பங்கு கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை ''நினைவூட்டுவதே'' போதுமானது.

முடிவாக இன்னொரு விஷயத்தையும் சுட்டிக் காட்டலாம். வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு இருதரப்பு ஒப்பந்தங்களின்பேரில் வழங்கப்படும் ''உதவியை'' தற்போதைய அளவில் நிலைப்படுத்தவும் குறைக்கவுங்கூட ஒரு சில ஏகாதிபத்திய வல்லரசுகள் அண்மையில் மேற்கொண்டிருக்கும் போக்கு முதன்முதலில் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலேயே காணப்பட்டது. வேறு சில ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு இது சைகைக் குறிப்பாக அமைந்தது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் காலனியாதிக்க முறையின் பிரதானக் காவலனாகப் பணியாற்றுவதற்கு முதலாளித்துவ உலகில் அதன் தற்போதைய நிலையே காரணம். போர்க் காலத்திலும் போருக்குப் பிந்தைய ஆண்டுகளிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் நவீன முதலாளித்துவத்தின் தலைமை வல்லரசாக மாறியது. முதலாளித்துவத்தின் பொருளாதார, நிதியாதார, இராணுவ வலிமையின் மிகப் பெரும் பகுதி அதன் கரங்களில் குவிந்தது. உலகப் பிற்போக்கின் மையமும் அதையே இடமாக்கிக் கொண்டது. விளைவாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்குச் சாதகமாக முதலாளித்துவ உலகம் அம்சரீதியில் ''மறுபங்கீடு'' செய்யப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகபோகங்கள் முதலாளித்துவ நாடுகளதும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுடையவும் தலைமைப் பாத்திரத்திற்கு, உலக ஆதிக்கத்துக்கு உரிமை கொண்டாடுகின்றன. ''அமெரிக்க ஐக்கிய நாடுகள் தானே நிறுவப்பட்ட உலகப் போலீஸ் படையாக இருக்க வேண்டுமா?''—நாட்டோவில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நிரந்தரப் பிரதிநிதி ஹார்லான் கிளீவ்லாண்ட் **விறலுடன் இணைந்துள்ள பொறுப்புக்கள்** என்னும் தமது நூலில் இந்தக் கேள்வியை எழுப்புகிறார். பின்பு தாமே—சில விளக்கக் குறிப்புகளோடு—''வேண்டும்'' என்று விடை அளிக்கிறார்.[12]

காலனியாதிக்க விஸ்தரிப்புக்கு அமெரிக்க ஐக்கிய நாடுகள் செய்யும் முயற்சிகள் உலக ஆதிக்கத்துக்கும் ''உலகை'' மறுபங்கிடுவதற்கும் அது எடுத்து வரும் பிரயாசைகளின் அம்சங்களே ஆகும். பொருளாதார வளர்ச்சி குன்றிய நாடுகளில் அமெரிக்கத் தனியார் முதலீடுகளின் மொத்தத்

### ''மூன்ருவது உலகின்'' நாடுகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நேரடியான தனியார் முதலீடுகள்[13] (லட்சம் டாலர்களில்)*

| பிரதேசங்கள் | 1950 | 1955 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 (பூர்வாங்கப் புள்ளி விவரங்கள்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்தம் . . . | 57330 | 84410 | 116030 | 118670 | 121950 | 128810 | 136910 | 148780 | 158230 |
| லத்தீன் அமெரிக்கா . . . . | 44450 | 62330 | 83870 | 83260 | 84240 | 86620 | 88940 | 93910 | 98540 |
| ஆப்பிரிக்கா . . | 2870 | 5820 | 9250 | 10640 | 12710 | 14260 | 16850 | 19180 | 20780 |
| ஆசியா (மாகடல் தீவுகள் நீங்கலாக) . . . . | 10010 | 16260 | 22910 | 24770 | 25000 | 27930 | 31120 | 35690 | 38910 |

*சர்வதேசத் தன்மை கொண்ட தொழில் நிலையங்கள் நீங்கலாக.

தொகை 1950 முதல் 1966 வரையுள்ள ஆண்டு களில் பல மடங்குகள் அதிகரித்தது. 1966ல் இது 1,700 கோடி டாலர்களுக்கும் மேல் போய்விட்டது. (பக்கம் 144லுள்ள அட்டவணையைப் பார்க்கவும்.)

இந்தத் தொகையுடன் 4,000 கோடி டாலர்களுக்கும் அதிகமாக வழங்கப்பட்ட அரசுக் கடன்கள், பற்றுக் கடன் களின் தொகையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இரா ணுவ ''உதவி'' என்ற வகையில் அளிக்கப்பட்ட பல நூறு கோடி டாலர் ''நன்கொடைகளையும்'' வேறு வைப்புத் தொகைகளையும் பற்றியோ, கூறவே வேண்டாம்.[14]

இந்த முதலீடுகளால் அமெரிக்க ஏகபோகங்களுக்கு மிகப் பெருத்த ஆதாயங்கள் கிடைக்கின்றன. (பக்கம் 146லுள்ள அட்டவணையைப் பார்க்கவும்.)

''உதவி'' நிர்வாகத்தின் மிக முதிர்ந்த தலைமைப் பணி யினரில் ஒருவரான ஜே. கப்ளான் தந்துள்ள விவரங்களின் படி வெனிஸூவேலாவிலும் அண்மைக் கிழக்கு நாடுகளிலும் பெட்ரோலியத் தொழிலில் செய்யப்பட்டுள்ள முதலீடு களிலிருந்து மட்டுமே அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ஆண்டு தோறும் 150 கோடி டாலர்கள் ஆதாயமாகக் கிடைக் கின்றன. இந்தத் தொகை முதலீட்டுத் தொகையின் 25 சத விகிதம் ஆகும். ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் தயாரிப்புத் தொழில் துறையில் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து கிடைக்கும் ஆதாயம் 10 சதவிகிதம் ஆகும்.[15]

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தைவான் மீது இரா ணுவ, அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டிவிட்டார்கள். ஜப்பானுக்குச் சொந்தமான பசிபிக் மாகடல் தீவுகளைக் கைப் பற்றி அவற்றை அமெரிக்க இராணுவத் தளங்களாகவும் அணுவாயுதப் பயிற்சிக் களங்களாகவும் அவர்கள் மாற்றி விட்டார்கள். இவற்றோடு கூடவே தென் கொரியாவிலும் தெற்கு வியத்நாமிலும் வேறு அவர்கள் வேரூன்றிவிட்டார் கள். முன்னைய ''மாபெரும்'' காலனி வல்லரசுகளை நெருக்கித் தள்ளிவிட்டு, தென்கிழக்கு ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் அண்மைக் கிழக்கிலும் மேற்கு ஆசியாவிலும் சமீபகாலம் வரை இந்த வல்லரசுகளின் ''மரபுச் சொத்தாக'' இருந்த பிரதேசங்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் பெருத்த செல் வாக்கு பெற்றுவிட்டது. அமெரிக்க ஏகபோகங்கள் தங்கள்

**வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் நேரடியான முதலீடுகளால் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகபோகங்கள் பெற்ற ஆதாயங்கள் (லட்சம் டாலர்களில்)[16]**

| பிரதேசங்கள் | 1950 | 1955 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 (பூர்வாங்கப் புள்ளி விவரங்கள்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| லத்தீன் அமெரிக்கா . . | 5130 | 6710 | 6410 | 7300 | 7610 | 8010 | 8950 | 8690 | 9620 |
| ஆப்பிரிக்கா . . | 350 | 710 | —170 | —30 | 340 | 1230 | 3010 | 3270 | 3380 |
| ஆசியா (மாகடல் தீவுகள் நீங்கலாக) . | 2970 | 5510 | 8530 | 9150 | 10170 | 10170 | 9830 | 10390 | 10100 |
| மொத்தம் . . | 8450 | 12930 | 14770 | 16420 | 18120 | 19410 | 21790 | 22350 | 23100 |

ஆதிக்க விஸ்தரிப்பைத் தீவிரப்படுத்தி, இந்தியாவிலும் பாக்கிஸ்தானிலும் நைஜீரியாவிலும் கானுவிலும் பிரிட்டனின் நிலைகள்மீதும், மேற்கு ஆப்பிரிக்க நாடுகளிலும் ஆப்பிரிக்காவிலுள்ள மற்ற பிரெஞ்சுக் காலனிகளிலும் பிரான்ஸின் நிலைகள்மீதும், காங்கோ (கின்ஷாஸா)வில் பெல்ஜியத்தின் நிலைகள்மீதும், இந்தோனேசியாவில் ஹாலந்தின் நிலைகள்மீதும் இவ்வாறே பிறவற்றின்மீதும் இரு மடங்கு ஆற்றலுடன் தாக்கு நடத்தி வருகின்றன. ''காலனி வல்லரசுகள் சில வேளைகளில் அதிகக் கடுமையும் சில வேளைகளில் குறைந்த கடுமையும் உள்ள நிலைமைகளில் தங்கள் அரசு உரிமையை உள்நாட்டு அரசாங்கங்களிடம் எங்கெல்லாம் ஒப்படைத்தனவோ, அங்கெல்லாம் வாஷிங்டனின் நிர்ப்பந்தம் நேரடியாகவோ மறைமுகமாகவோ உணரப்பட்டது'' என்று 1964 ஜூலையில் கூறினார் ஜெனரல் டி கால்.[17]

''மூன்றாவது உலகின்'' பிரதேசத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளது ஆதிக்க விஸ்தரிப்புக்கு உரிய தனிச்சிறப்பு என்னவென்றால், தேசீய விடுதலை இயக்கம் பெரு வன்மையுடன் எழுச்சி அடைந்திருக்கும் காலத்தில், காலனியாட்சிப் பேரரசுகள் தகர்ந்து சிதறி வரும் காலத்தில், முதலாளித்துவ அமைப்பு, சோஷலிஸ அமைப்பு என்ற இரண்டு உலக அமைப்புக்களுக்கிடையே போராட்டம் மும்முரமாக நடைபெறும் காலத்தில் அது தொடங்கியிருப்பதுதான். இந்த மெய்விவரத்தை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கவனத்தில் கொண்டு, இதை எல்லா வகையிலும் பயன்படுத்தி வருகிறார்கள். மற்றக் காலனியாட்சி வல்லரசுகளின் நிலைகளைத் தாக்கி, அவற்றின் பரம்பரை ஆதிக்கப் பிரதேசங்களில் அவற்றுக்கு ''மாற்றாகத்'' தாங்கள் அமர்கையில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ''சுதந்திர உலகம்'' அனைத்தின் நலன்களையும் பாதுகாக்கவே இவ்வாறு செய்வதாகப் பறைசாற்றுகிறார்கள்.

முன்னாள் காலனி நாடுகளின் அரசியல், சமுதாய, பொருளாதாரத் திசைத்திருப்பம் இரு உலக அமைப்புக்களின் போட்டியினது வருங்கால வாய்ப்புக்களுக்கு அளவு கடந்த முக்கியத்துவம் உள்ளது என்பதை அமெரிக்க ஆளும் வட்டாரத்தினர் விடாப்பிடியாக வலியுறுத்தி வருகிறார்கள். ஏகாதிபத்தியம் அனைத்தின் சார்பாகவும் செயல்பட அவர்

கள் உரிமை கொண்டாடுகிறார்கள். தங்கள் சொந்த ஆதிக்க விஸ்தரிப்பே அவர்களுடைய முதன்மையான நோக்கம் என்பதைக் கூறவே வேண்டியதில்லை. அதே சமயம், தேசீய விடுதலை இயக்கத்துக்கும் ஜனநாயக, சோஷலிஸச் சக்தி களுக்கும் எதிரான உலகு பரந்த போராட்டத்தையும் அவர்கள் கருத்தில் கொள்கிறார்கள்.

ஏகாதிபத்தியத்தின் நிலைகளைக் காக்கும் தலைமைச் சக்தி ஆகிவிட்ட அமெரிக்க ஐக்கிய நாடுகள் அதன் முன்னாள் காலனிகள், அரைக்காலனிகளின் பரப்பு எல்லைகளுக்குள்ளும் இதே பாத்திரத்தை ஏற்றுச் செயல்படுகிறது. காலனி யாதிக்க முறையின் தலைமை ஆதரவாளியாகவும் ஆசிய, ஆப் பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் விடுதலைக்கும் சமுதாய முன்னேற்றத்துக்கும் பிரதான எதிராளியாகவும் அது செய லாற்றுகிறது.

யாவற்றிலும் வலிமை மிக்க ஏகாதிபத்திய வல்லரசு என்ற முறையில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் தேசீய விடுதலை இயக்கத்தை ஒடுக்கும் போலீஸ் படையாகப் பணியாற்ற முயல்கிறது. தனது இராணுவ விறல் காரணமாக, ஆயுதந் தாங்கிய புரட்சி எதிர்ப்பை ஏற்றுமதி செய்யும் வாய்ப்புக் கள் அதற்கு மற்ற ஏகாதிபத்திய வல்லரசுகளைவிட அதிகமாக இருக்கின்றன.

அமெரிக்க ஏகாதிபத்தியம் யாவற்றிலும் செல்வ வளமும் பொருளாதார வளமும் மிக்கது ஆகையால், மற்றக் காலனியாதிக்க வல்லரசுகளிடம் உள்ளவற்றைவிட அதிக வன்மை கொண்ட பொருளாதார விசைக் கருவிகளை—புதுக் காலனியாதிக்கக் கொள்கையைக் கடைப்பிடிப்பதற்கு மிக அவசியமான விசைக் கருவிகளை—அது பெற்றிருக்கிறது. பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நாடுகளுக்கு ''உதவி'' எனப்படுவதை வழங்கும் பிரதான வல்லரசு அமெரிக்க ஐக்கிய நாடுகளே என்பது ஏற்கனவே குறிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க ஏகபோகங்கள் விடுதலை அடைந்த நாடுகளை நிதித் துறை அடிமைச் சங்கிலிகளால் பிணைக்க முயல்கின்றன.

இன்னொரு விஷயமும் கவனிக்கத்தக்கது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் காலனியாட்சிக்கு உட்பட்டிருந்த உலகின் பெரும் பகுதியுடன் நேரடியான தொடர்பு கொண்டிருக்க வில்லை. இந்த நாடுகள் விடுதலை பெற்று, தங்களைச் சூறை

யாடுவதற்கான பொருளாதாரத் தன்மை அற்ற வடிவங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டதன் விளைவாக ஐரோப்பிய ஆட்சித் தலைமை நாடுகளுக்கு ஏற்பட்டவை போன்ற நேரடியான பொருளாதார இழப்புகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குப் பெரும்பாலும் ஏற்படுவதில்லை. காலனிகளிலிருந்து கிடைத்து வரும்''கப்பங்கள்''ஓரளவு குறைவதை ஏற்றுக் கொள்வதும், விடுதலை பெற்ற நாடுகள் அளவறுத்த வரம்புகளுக்குள் பொருளாதார வளர்ச்சி பெறுவதற்கு இசைவதும் அமெரிக்க ஏகபோகங்களுக்கு ஒப்புநோக்கில் எளிது.

காலனிகளைச் சூறையாடுவதிலும் சுரண்டுவதிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் மிக வளமான அனுபவம் பெற்றிருக்கிறது. 18ம் நூற்றுண்டின் அமெரிக்கப் புரட்சி மரபுகள் பற்றி அமெரிக்கப் பத்திரிகைப் பிரசாரகர்கள் என்னதான் பெருத்த ஆரவாரம் செய்தாலும், அமெரிக்க ஐக்கிய நாடுகள் காலனியாட்சியால் ''கறைப்படவில்லை'' என்ற புனைகதையை அவர்கள் எவ்வளவுதான் பறை சாற்றினுலும் வரலாறு அமெரிக்க ஏகபோகங்களுக்கு எதிராகவே சான்று கூறுகிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சி காலனியாதிக்க விஸ்தரிப்புடனும், உலகின் கிழக்கு, மேற்கு அரைக் கோளங்களைச் சேர்ந்த பதிற்றுக் கணக்கான நாடுகளைச் சூறையாடியதுடனும் துணிக்க முடியாதபடித் தொடர்பு கொண்டது. மறைமுகச் சுரண்டல், அடிமைப்படுத்தல் ஆகியவற்றின் அஸ்திவாரத்தின்மீது அமெரிக்க ஏகபோகங்களால் நிறுவப்பட்ட ''மறைவான'' சாம்ராஜ்யத்தை — இதைப் பற்றி ஜவாஹர்லால் நேரு எழுதியுள்ளார்—விட்டுவிட்டாலுங்கூட, மற்ற ''முதிய'' காலனியாட்சி வல்லரசுகள் போலவே பழைய வகைக் காலனிகளையும் அது பெற்றிருக்கிறது. 1945ல் இக்காலனிகள் 3 லட்சம் சதுரக் கிலோ மீட்டர்கள் நிலப்பரப்பும் சுமார் 2 கோடி 20 லட்சம் மக்கள் தொகையும் கொண்டிருந்தது.* இப்போதும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களில் 29 லட்சம் மக்கள் வசிக்கிறுர்கள். ''காலனியாட்சிக் கொள்

* அல்ஜீரியாவும் ஹவாய்த் தீவுகளும் நீங்கலாக.

கையின் கறை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கரங்க ளிலிருந்து நீக்கப்படவில்லை'' என்று எட்வார்டு கென்னடி **பத்தாண்டுக்கான முடிவுகள்** என்னும் தமது நூலில் கூறு கிருர்.[18]

தனது சக்தி போதாது இருந்ததன் காரணமாக அமெரிக்க முதலாளித்துவத்தால் நெடுங்காலத்திற்குத் தலைமைக் காலனியாட்சி நாடுகளுடன் போட்டியிட முடியவில்லை ஆனுலும் பிரிட்டனுடன் தன்னைப் பிணைத்திருந்த அடிமைத் தளைகளை அறுத்து எறிந்ததும் எறியாததுமாக அது காலனிகளைக் கைப்பற்றும் பாதையில் அடி வைத்துவிட்டது.

1801ம் ஆண்டிலேயே அமெரிக்க ஐக்கிய நாடுகள் வட ஆப்பிரிக்க அரசான ட்ரிப்போலிக்கு எதிராகப் போர் தொடுத்து, சமத்துவம் அற்ற வர்த்தக உடன்படிக்கையை அதன்மேல் சுமத்தியது. இதற்கு நான்கு ஆண்டுகளுக்குப் பின் அமெரிக்கப் போர்க் கப்பல்கள் டியூனீஷியாவுக்கு எதிராகச் செலுத்தப்பட்டன. பத்து ஆண்டுகளுக்குப்பிறகோ அல்ஜீரியா அமெரிக்க பலாத்காரத்துக்கு இரை ஆயிற்று. அடிமைப் படுத்தும் வர்த்தக உடன்படிக்கையில் கையொப்பமிட்ட அல்ஜீரிய அரசன் உமர், தான் ''இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும்படி அமெரிக்க பீரங்கி முனையில் கட்டாயப் படுத்தப்பட்டதாக'' முறையான சான்றிதழ் தருமாறு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பிரதிநிதி டபிள்யூ. ஷெய்லரிடம் வேண்டினுன். இத்தகைய சான்றிதழ் அவனுக்கு அளிக்கப் பட்டது என்று அமெரிக்க வரலாற்று ஆசிரியர்கள் ரைட், மாக்ளியோட் என்பவர்கள் எழுதுகிருர்கள்.

19ம் நூற்ருண்டு முழுவதிலும் அமெரிக்க ஐக்கிய நாடு கள் ஆப்பிரிக்காவில் ஆதிக்க விஸ்தரிப்புக் கொள்கையைக் கடைப்பிடித்தது. அங்கே சாதகமான அரசியல், பொருளா தார நிலைகளைக் கைப்பற்றுவதும் ஆப்பிரிக்க மக்களை அடிமைப்படுத்துவதும் இதன் நோக்கமாக இருந்தது. இந்தக் கொள்கை ஆயுத பலத்தால் ஆப்பிரிக்காவைப் பகிர்ந்து கொள்வதில் போய் முடியாததற்குக் காரணம் ஐரோப்பியக் காலனியாட்சி வேட்டை விலங்குகள் அந்தக் காலத்தில், அது வும் உலகின் இந்தப் பிரதேசத்தில் அதிக வலிமை பெற்றிருந் ததுதான். ஆனுல் இரண்டாவது உலக யுத்தத்தின்போது வட ஆப்பிரிக்காவில் தனது துருப்புக்கள் இறக்கப்பட்டதை

யும் ஆப்பிரிக்கக் காலனிகளுடன் ஐரோப்பிய ஆட்சித் தலைமைநாடுகளின் தொடர்பு பலவீனமுற்று இருந்ததையும் பயன்படுத்திக் கொண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகள் அந்தக் கண்டத்தில் தன் பொருளாதார, அரசியல், இராணுவ ஆதிக்கத்தை விஸ்தரித்துக் கொண்டது.

லத்தீன் அமெரிக்கக் கண்டத்தின் மக்களைச் சுரண்டுவது அமெரிக்க ஐக்கிய நாட்டு ஏகாதிபத்தியத்தின் உயர்வுக்கு முக்கியமான தலையூற்றுக்களில் ஒன்று ஆகியது. லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் அமெரிக்க ஏகபோகங்களுக்கும் இடையே உறவுகளை நிர்ணயிக்கும் ''தலைமை நடுவர்களாக'' அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கடற்படைத் துருப்புக்கள் எத்தனை எத்தனையோ தடவைகள் செயலாற்றின. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கடற் காலாட்படைப் பிரிவுத் தலைவர் ஜெனரல் ஸ்மெட்லி பட்லர் தமது நினைவுக் குறிப்புக்களில் பின்வருமாறு ஒளிவு மறைவின்றிப் பெருமை அடித்துக் கொள்கிறார்: ''1903ம் ஆண்டில் ஹோண்டூராஸ் நாட்டை 'அமெரிக்கன் ஃப்ரூட் கம்பெனிக்கு' 'மிகவும் ஏற்றதாகச்' செய்வதற்கு நான் உதவினேன். மெக்ஸிக்கோவையும், சிறப்பாகத் தம்பிக்கோவையும் அமெரிக்கப் பெட்ரோலிய நிறுவனங்களுக்கு அபாயமற்ற இடம் ஆக்குவதற்கு 1914ல் நான் உதவி செய்தேன். 'நேஷனல் ஸிட்டி பாங்க்' ஆட்கள் வருவாய்கள் திரட்டுவதற்கு அருமையான இடங்களாக ஹைட்டியையும் க்யூபாவையும் பண்படுத்துவதற்கு நான் ஒத்தாசை செய்தேன். 'பாங்கிங் ஹவுஸ் ஆஃப் பிரவுன் பிரதர்ஸின்' செல்வாக்குக்கு ஏற்ற வகையில் நிக்கராகுவாவைச் சீர்படுத்த 1909 முதல் 1912வரை நான் உதவினேன். 1916ல் அமெரிக்கச் சர்க்கரைத் தொழில் நிறுவனங்களின் பொருட்டு நான் டொமினிக்கன் குடியரசுக்கு ஒளி கொண்டுவந்தேன்.''[19] பிரபல அமெரிக்கப் பத்திரிகை எழுத்தாளர் ஸுல்ஸ்பர்கர் இந்தக் காலப் பகுதியைப் ''பண்பாடற்ற, கொடூரமான ஏகாதிபத்திய யுகம்'' எனக் குறிக்கிறார்.[20] அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஏகபோக முதலாளித்துவக் காலகட்டத்திலேயே முதலாவது போரை மூட்டியது என்பதையும் நினைவு வைத்துக் கொள்ள வேண்டும். காலனியாட்சிப் பிரதேசங்களின் மறுபங்கீட்டுக்காக ஸ்பெயினுக்கு எதிராக அமெரிக்க ஐக்கிய நாடுகள் நிகழ்த்திய போர் இது.

1904ம் ஆண்டில் குடியரசுத் தலைவர் தியோடோர் ரூஸ்வெல்ட், அபகீர்த்தி பெற்ற ''மன்ரோ'' கொள்கைக்கு விளக்கம் தருகையில் அது ''மேற்கு கோளார்த்தத்தின் விவகாரங்களில் மற்றவர்கள் குறுக்கிடுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் தலையீடுசெய்ய அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு உரிமை அளிக்கிறது'' எனக் கூறியதாக நியூயார்க் டைம்ஸ் செய்தித்தாள் தெரிவிக்கிறது. இதனுலேயே, ''அமெரிக்க ஐக்கிய நாடுகள் மேற்கு அரைக்கோளத்தில் சர்வதேசப் போலீஸின் பாத்திரத்தை ஏற்றுக் கொண்டது'' என்று ஹார்வர்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் ஏ. மே என்பவர் ஃபாரின் அஃபயர்ஸ் என்னும் சஞ்சிகையில் எழுதினுர்.[21]

இந்தப் பேராசிரியர் மேற்கு கோளார்த்தத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஒவ்வொரு தலையீட்டுக்கும் ''மனிதாபிமானக் காரணங்கள் காட்டி'' நியாயம் கற்பிக்க முயன்ருர். ஆயினும் அவர் வேறு வழியின்றிப் பின்வருமாறு ஒப்புக்கொள்ள நேர்ந்தது: ''அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்கத்தைப் பற்றி ஓரளவு ஆதாரத்துடன் உண்மையாகவே பின்வருமாறு சொல்ல முடியும்: மேற்கு கோளார்த்தத்தின் வரைபடத்தில், 'இங்கே இந்த நாடு நல்ல காரியம் செய்தது' என்று சுட்டிக் காட்டிக் கூறக்கூடிய ஓர் இடம் கூட இல்லை.''[22]

முடிவாக, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சி ''உள் காலனியை''—முதன்மையாக லட்சக்கணக்கான நீக்ரோக்களை—கொடுமையாகச் சுரண்டுவதுடன் தனிப்பிரிக்க முடியாதபடி இணைந்திருக்கிறது. நீக்ரோக்கள் அடிமை வியாபாரிகளால் கொண்டுவரப்பட்டார்கள். இந்த அடிமை வியாபாரிகள் அடித்த கொள்ளை லாபங்களும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மூலதனக் குவிவுக்குப் பயன்பட்டன என்பதையும் போகிற போக்கில் கூறிவிட வேண்டும். அமெரிக்கக் காலனியாதிக்கம், ''சமுதாய இயல் நோக்கில் சொல்வதானுல், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு உள்ளேயே இருக்கிறது'' என்று அதே ஸுல்ஸ்பர்கர் கூறி, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ''காலனியாதிக்க நீக்கம் செய்வதன்'' அவசியத்தை வலியுறுத்துவது காரணத்துடனேதான்.[23]

காலனியாதிக்கக் கொள்கையின் கவர்ச்சியாக மூடுதிரையிட்ட வழிகளைக் கையாள்வதில் அமெரிக்க ஏகாதிபத்

தியம் தேர்ந்தது. ஆனால், அதன் ஆதரவாளர்கள் சொல்லு வதுபோல, வளர்ச்சி குறைந்த நாடுகளின் மக்களோடு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உறவுகள் ''ஜனநாயகத் தன்மையோ'' ''மனிதாபிமானமோ'' கொண்டவை என்று இதற்கு அர்த்தம் அல்ல என்பது கூறாமலே விளங்கும். அமெ ரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அவசியம் என்றும் சாத்தி யம் என்றும் கருதிய சந்தர்ப்பங்களில், உதாரணமாக பிலிப்பைனில், அவர்கள் ''வழக்கமான'' முறைகளைக் கையாண்டு ''வழக்கமான'' மனிதத்தன்மையற்ற விதத் தில் செயல் புரிந்தார்கள். விஷயம் வேறு. அனேக வரலாற்றுச் சூழ்நிலைகள் காரணமாக, முதன்மையாக உலக ஏகாதிபத்தியச் சூறையாட்ட அரங்கில் ஒப்புநோக்கில் தாம தித்துப் பிரவேசித்த காரணத்தால், ஐரோப்பிய வல்லரசு கள் ஏற்படுத்திக் கொண்டது போன்ற காலனியாட்சிப் பேர ரசை நிறுவ அமெரிக்க ஐக்கிய நாடுகளால் முடியவில்லை. உலக நிலப்பரப்பு ஏற்கனவே பங்கிடப்பட்டுவிட்டிருந் தது. கீழை நாடுகளின் கச்சாப் பொருள் வளங்களுக்கும் சந்தைகளுக்கும் செல்லும் பாதைகளைக் காலனிப் பேரரசு களின் எல்லைகள் தடை செய்துவிட்டிருந்தன. அதே சமயம், வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளை அடிப்படுத்துவதற்கு வேண்டிய அதிகச் சக்தியுள்ள விசைக் கருவிகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளிடம் இருந்தன. எனவேதான் அமெரிக்க ஏகாதி பத்தியவாதிகள் ஆதிக்கம் செலுத்துவதற்குரிய அதிக வெளிப் படையான, பண்பாடற்ற முறைகளோடு கூடவே, பெயரள வில் அரசியல் விடுதலை பெற்றுள்ள நாடுகளை அடிமைப் படுத்தவும் சுரண்டவும் அதிக ஒளிவு மறைவான, பண்பட்ட உபாயங்களையும் விரிவாகக் கையாண்டார்கள். இத்தகைய முறைகள் முதன்மையாக லத்தீன் அமெரிக்காவில் கை யாளப்பட்டன. லத்தீன் அமெரிக்கா, அமெரிக்க ஐக்கிய நாடு களின் காலனியாதிக்கக் கொள்கைக்குரிய உபாயங்களைத் தயாரிப்பதற்கேற்ற உண்மையான சோதனைக் கூடமாகப் பயன்பட்டது. விடுதலை அடைந்த நாடுகள் விஷயத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கொள்கையை, இந்நாடுகளை ''லத்தீன் அமெரிக்கா ஆக்குதல்'' என்று பிரபல ஆங்கிலக் கட்டுரையாளர் டி. மெண்டோ வருணிப்பது தற்செயலாக அல்ல.

காலனியாதிக்க முறையின் புதிய வடிவங்களுக்கு உள்ளுற இயல்பான பாசாங்கும் வாய்வீச்சுப் பிரசார உருமறைப்பும் எப்போதுமே அமெரிக்கக் காலனியாதிக்கக் கொள்கையின் சிறப்பு அம்சங்களாக விளங்கின. இதற்கு எடுத்துக்காட்டான உதாரணம் ஒன்றைப் பார்ப்போம். 1906ம் ஆண்டில் க்யூபாவுக்கு ஆக்கிரமிப்புத் துருப்புக்களை அனுப்பிவிட்டுத் தியோடோர் ரூஸ்வெல்ட் அதே சமயம் பின் வருமாறு கூறினார்: ''நமது நோக்கம் க்யூபா மக்களின் விடுதலையைக் குறுக்குவதற்காகத் தலையிடுவது அல்ல. அவர்கள் தங்கள் விடுதலையைப் பாதுகாக்க உதவும் பொருட்டும்... வருங்காலத்தில் நம் தரப்பிலிருந்து தலையீடு செய்வதற்குச் சிறிதும் தேவை ஏற்படாத விதத்தில் அவர்கள் தங்கள் விவகாரங்களை ஒழுங்குபடுத்த உதவும் பொருட்டும் தலையிடுவதே நமது நோக்கம். இதை க்யூபா மக்கள் புரிந்து கொள்ளும்படி செய்ய நாம் முயல வேண்டும்.''[24] அமெரிக்க ஐக்கிய நாடுகளால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களைக் குறிப்பதற்குக் ''காலனி'' என்ற சொல்லே அரசாங்க அகராதியில் இருக்கவில்லை. அமெரிக்க ஏகபோகங்களின் ஆதிக்க விஸ்தரிப்பு எப்போதுமே போலி ஜனநாயகப் பொய்யுடை அணியப்பட்டு காலனியாதிக்க எதிர்ப்பு வாய்வீச்சுக்களால் அலங்கரிக்கப்பட்டது.

காலனியாட்சி வல்லரசுகள் தங்கள் சாம்ராஜ்யங்களின் எல்லைகளில் நிறுவியிருந்த தடைவேலிகளை உடைத்துத் தகர்ப்பதில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகபோகங்கள் ஜீவாதார அக்கறை கொண்டிருந்தன. எனவே அவை ''திறந்த கதவுகள்'' கொள்கையைப் பிரேரித்தன. அடிமைப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டத்தைத் தங்கள் நலன்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தவும் காலனியாட்சி எதிர்ப்பு என்ற கோஷத்தின் மறைவில் காலனியாதிக்க விஸ்தரிப்பைச் செயல்படுத்தவும் அவை முயன்றன.

சிறப்பாகத் தற்கால நிலைமைகளில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் இந்தச் செயல்தந்திரத்தை விரிவாகக் கையாளுகிறார்கள். தங்கள் நாடுபிடிக்கும் முயற்சிகளைக் காலனியாட்சி எதிர்ப்பு என்ற திரையால் அவர்கள் மறைக்கின்றனர். லத்தீன் அமெரிக்க மக்களுக்கு நன்கு தெரிந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வேட்டை விலங்குச் சொரூபம் ஆசியா

விலும் ஆப்பிரிக்காவிலும் மக்களுக்கு அவ்வளவாகத் தெரியாது என்ற விஷயத்தை அவர்கள் எல்லா விதத்திலும் பயன் படுத்திக் கொண்டார்கள்.

நாம் ஏற்கனவே கூறியதுபோல அமெரிக்க ஐக்கிய நாடுகளின் காலனியாட்சிப் பிரதேசங்கள் ஒப்புநோக்கில் சிறியவையாக இருந்தன; தனது கொள்கையில் சமயத்துக்கு ஏற்றபடி தந்திரமாக நடந்து கொள்ளவும் சுற்று வழிகளைத் தேடிக் காணவும் அதற்குப் பெருத்த சுதந்திரம் இருந்தது. ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளுடன் தனது உறவுகளில் ''தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள வழக்கமானவற்றுக்குச் சற்று மாறுன வழிகளை அமெரிக்க ஐக்கிய நாடுகள் கடைப்பிடிப்பதற்கு எதுவும் குறுக்கிடவில்லை'' என்று எழுதியது ஃபாரின் அஃபயர்ஸ் சஞ்சிகை.[25]

விடுதலையின் பொருட்டும் சமுதாய முன்னேற்றத்துக்காகவும் காலனியாட்சிக்கு எதிராகப் போராடி வரும் மக்கள் விஷயத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளது கொள்கையின் விசேஷ அம்சங்கள் காலனியாதிக்க வல்லரசு என்ற முறையில் அதன் சிறப்பியல்புகளாலேயே வரையறுக்கப்படுகின்றன. ஏகாதிபத்திய வல்லரசாக இருக்கும் காரணத்தால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் தேசீய விடுதலை இயக்கத்தின் பால் ஆழ்ந்த பகை கொண்டது. தவிரவும் நாட்டோவின் போக்கை நிர்ணயிக்கும் அமெரிக்க ஆளும் வட்டாரங்கள் இந்த ஆக்கிரமிப்புக் கூட்டணியை வலுப்படுத்துவதில் பெரிதும் அக்கறை கொண்டிருக்கின்றன. இந்தக் கூட்டணியில் அங்கம் வகிப்பவையோ, அனேகமாக எல்லாமே முன்னுள் காலனியாட்சி வல்லரசுகள். ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் பிற ஏகாதிபத்திய வல்லரசுகளுடன் உறவுகளை ஏற்படுத்தும்போது அமெரிக்க ஐக்கிய நாடுகள் தனது ஆதிக்க விஸ்தரிப்பின் நலன்களை, ஏகாதிபத்தியங்களுக்குள் நிலவும் முரண்பாடுகளை, அமெரிக்க ஏகபோகங்களுக்குச் செயற்களம் சீர்படுத்துவதை மட்டுமே வழிகாட்டியாகக் கொள்வதில்லை, கொள்ளவும் முடியாது. சோஷலிஸ அமைப்புக்கு எதிரான உலகு பரந்த அணிவகுப்பில், தேசீய விடுதலை இயக்கத்தை எதிர்த்துப் போராடுவதில் இந்த வல்லரசுகள் தன் கூட்டாளிகளாக விளங்குகின்றன என்பதை அது கவனத்தில் வைத்துக் கொள்கிறது. காலனி

யாதிக்கக் கொள்கை பற்றிய பிரச்சினைகளில் பிரபல அமெரிக்க நிபுணரான ஆர். எமெர்ஸன் என்பவர் இவ்விஷய மாக **ஃபாரின் அஃபயர்ஸ்** சஞ்சிகையில் ஒரு கட்டுரை எழுதி யிருக்கிறார். காலனியாட்சி வல்லரசுகள் ''அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முக்கியக் கூட்டாளிகளாக'' விளங்குவதும், ''இந்த வல்லரசுகள் சேர்ந்துள்ள **நாட்டோ**, அமெரிக்க ஐக்கிய நாடுகளால் அமைக்கப்பட்ட கூட்டணியின் அடிப்படையாக இருப்பதும்'' ''மூன்றாவது உலகில்'' அமெரிக்கக் கொள்கை மீது செலுத்தும் பெருத்த செல்வாக்கை அவர் இந்தக் கட்டுரையில் வலியுறுத்தியிருக்கிறார்.[26]

ஆகவே, எங்கே ஏகாதிபத்தியம் அனைத்தின் விதியும் நிர்ணயிக்கப்படுகிறதோ, அல்லது ''அட்லாண்டிக் ஒருமைப் பாடு'' (அதாவது **நாட்டோ** அரசுகளின் ஏகாதிபத்திய உடன்பாடு) பற்றிய பிரச்சினை தீவிரமாக எழுகிறதோ அங்கே அமெரிக்க ஐக்கிய நாடுகள் வழக்கமாகக் காலனியாட்சி வல் லரசுகளுடன் ஒரே முன்னணியாகச் சேர்ந்து செயல்படுகிறது. உதாரணமாக, சூயெஸ் கால்வாயைத் தேசீய உடைமை ஆக்கும் பிரச்சினையில் அமெரிக்கா இவ்வாறே நடந்து கொண் டது. ''கால்வாய் உபயோகிப்போர் சங்கம்'' என்ற காலனி யாதிக்கக் கூட்டமைப்பை எகிப்திய மக்கள்மீது சுமத்து வதற்கு, பிரிட்டனுடனும் பிரான்சுடனும் சேர்ந்து அது முயன்றது. கோவாவில் போர்த்துகீசியக் காலனியாட்சியாளர் களின் ஆதிக்கத்தை அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆதரித்தது. இந்தியா தன் நாட்டுப் பிரதேசத்திலிருந்து போர்த்துகீசி யர்களை விரட்டியபோது இந்தியா ''ஆக்கிரமிப்பாளி'' என்று பிரகடனம் செய்தது. போர்த்துகலுக்குத் தன் காலனி யாட்சிப் பேரரசை நிலையாக வைத்திருக்கவும், அங்கோலா, மொஸாம்பிக்,''போர்த்துகீசிய''கினி (பிஸாவூ) ஆகியவற்றின் மக்களுக்கு எதிராக இரத்தக் களரி நடத்தவும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் உண்மையில் உதவி செய்கிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பிரிட்டனுடன் கூட் டாக அரேபிய நாடுகளில் தலையீட்டுக்கு ஏற்பாடு செய்தார் கள். இளம் காங்கோக் குடியரசுக்கு எதிராக பெல்ஜியத் தின் பகைச் செயல்களும் அமெரிக்க ஆதரவைப் பெற்றன. தெற்கு ரொடீசிய இனவெறியர்கள் விஷயத்தில் பிரிட்டன் கடைப்பிடித்து வந்த மறைமுக ஆதரவுக் கொள்கையை

அமெரிக்க ஐக்கிய நாடுகள் நன்ருகப் புரிந்து கொண்டு ஒத்து நடந்தது. தென்னுப்பிரிக்காவில் இனவெறியர்களின் காலனி யாதிக்க ஆட்சி முறைக்கு எதிராக வன்மையுள்ள நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படுவதைத் தடுக்க அமெரிக்க ஐக்கிய நாடுகள் எல்லா வகையிலும் முயற்சி எடுத்து வருகிறது.

இன்னெரு விஷயத்தையும் குறிப்பிடாமல் விட முடி யாது. எவையேனும் ஏகாதிபத்திய வல்லரசுகளின் காலனி யாதிக்கக் கொள்கையை வெவ்வேறு கட்டங்களில் ஆதரிக் கும் அதே சமயத்தில், இக் கொள்கையின் விளைவாக ஆட்சித் தலைமை நாடுகளுக்கு எதிர்ப்பட்ட பொருளாதார, இரா ணுவ இடர்ப்பாடுகளையும் அவற்றின் உள் முரண்பாடுகள் தீவிரம் அடைவதையும் இந்த வல்லரசுகளைத் தமது செல் வாக்குக்கு அடிப்படுத்தும் நோக்கத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ள அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வழக்கமாக முயன்ருர்கள்.

மறு புறம், பிரிட்டனும் பிரான்சும் ஹாலந்தும் மற்ற நாடுகளும் அவற்றின் ஆட்சிக்குட்பட்டிருந்த பிரதேசங் களிலிருந்து விரட்டப்பட்டுவிட்டதால் ஏற்பட்டுள்ள ‘‘வெற் றிடங்கள்’’ அமெரிக்க மூலதனம் நுழைவதற்கு அதிகப்படி ‘‘வாய்ப்புக்களை’’ அளிக்கும் என்று அமெரிக்க ஏகபோகங்கள் நம்புகின்றன. இந்தக் காரணங்களால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் தங்கள் போட்டியாளிகள் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளிலிருந்து நெட்டித் தள்ளப்பட உதவுகிறது. அதோடு உலகின் இந்தப் பகுதிகளில் தன் சொந்த நிலைகளை உறுதிப்படுத்திக் கொள்ள அது முயல்கிறது.

இவ்வாருக, போருக்குப் பிந்திய ஆண்டுகளில் ‘‘மூன்ரு வது உலகு’’ சம்பந்தமாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் கடைப்பிடிக்கும் கொள்கை எப்போதுமே இரட்டை நோக்கம் கொண்டிருந்தது. முற்போக்குள்ள தேசியச் சக்திகளைத் தாக்கும் அதே சமயத்தில் தன் போட்டிக்காரக் காலனி யாதிக்கவாதிகளை நெருக்கித் தள்ளிவிடுவதே இந்த நோக்கம். உதாரணமாக, இந்தோனேசியாவுக்கும் ஹாலந்துக்கும், ஈரானுக்கும் பிரிட்டனுக்கும் இடையே ‘‘நடுவர்’’ என்ற வகையில் செயல்பட்டபோது அமெரிக்கா இந்த நோக்கத் தையே ஈடேற்றிக் கொள்ள முயன்றது. ஆங்கில-ஈரானியக் கம்பெனிகள் தேசிய உடைமை ஆக்கப்பட்டது சம்பந்தமான

தகராறில் அமெரிக்க ஐக்கிய நாடுகளது மத்தியஸ்தத்தின் பயனுக ஏற்பட்ட ஒப்பந்தம் ஈரானின் தேசீய நலன்களுக்கு மிகுந்த கேடு உண்டாக்கியதோடு பிரிட்டனின் நிலையையும் பலவீனப்படுத்தியது. மாறுக அமெரிக்க மூலதனமோ, புதிதாக நிறுவப்பட்ட கூட்டு நிதி நிறுவனத்தில் 40 சதவிகிதம் பங்குகளை வாங்கிக் கொண்டு ஈரானியப் பெட்ரோலியத்தின் மீது ஆதிக்கத்துக்கு வழி செய்து கொண்டது.

வியத்நாமிய மக்களுக்கு எதிராக ''ஆபாச யுத்தத்தைத்'' தொடர்ந்து நடத்தும்படி பிரான்சை அமெரிக்கா எல்லா வகையிலும் தூண்டி ஊக்கியது. வாஷிங்டன் போஸ்ட் செய்தித்தாளில் எம். சைல்ட்ஸ் என்பவர் எழுதியுள்ள கட்டுரையின்படி ''அமெரிக்க ஐக்கிய நாடுகள் வியத்நாமில் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்காக பிரெஞ்சுக் கஜானுவில் அந்தக் காலத்தில் ஆண்டுதோறும் சுமார் 80 கோடி டாலர்களைச் செலுத்தி வந்தது.''[27] அதே சமயம் ங்கோ தின் தியம் கும்பலோடு அது தொடர்பு கொண்டு அக் கும்பல் வலுவடைய உதவி வந்தது. விளைவாக, பாதி வியத்நாம் விடுதலை பெறவில்லை, அதே சமயம் பிரான்ஸ் அந்த நாட்டிலிருந்து எதார்த்தத்தில் வெளியேற்றப்பட்டுவிட்டது. லாஓஸிலும் பிரான்சின் நிலைகள் ஆடிப்போயின. அங்கேயும் பிரான்சிற்கு ''மாற்றுக'' வந்து சேர்ந்தார்கள் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள்.

எகிப்தில் பிரிட்டிஷ்-பிரெஞ்சு துர்ச்சாகச நடவடிக்கை ஆயத்தம் செய்யப்படுவதை அமெரிக்க ஐக்கிய நாடுகள் அறிந்திருந்தது, அதற்கு நடை முறையில் உற்சாகம் அளித்தது. ஆனுல் இந்த நடவடிக்கை தோல்வியில் முடிந்ததும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ''டல்லஸ்-ஐஸன்ஹோவர் கொள்கையைப்'' பிரேரிக்க அதை வாய்ப்பாகப் பயன் படுத்திக்கொண்டது. இந்தக் கொள்கை அண்மை, மத்தியக் கிழக்கு நாடுகளின் மக்களது தேசீய விடுதலைப் போராட்டத்துக்கு மட்டுமே எதிரானது அல்ல, இந்தப் பிரதேசத்தில் பிரிட்டனதும் பிரான்சினதும் நிலைகளுக்கும் எதிரானது.

அல்ஜீரிய விடுதலைப் போர் வீரர்களுக்கு எதிராக பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் படுகொலைப் போருக்குப் பணமும் ஆயுதங்களும் கொடுத்து எல்லா வகையிலும் உதவினுர்கள் அமெரிக்க ஆளும் வட்டாரத்தினர். இப்போரின் மூலம்

பிரான்ஸ், அல்ஜீரியா, இரண்டுமே பலவீனம் அடையும் என்று அவர்கள் காரணத்துடனேயே நம்பினர்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இராணுவ உதவியைப் பெறும் முக்கிய நாடாக விளங்கியது பிரான்ஸ். அல்ஜீரியாவில் பிரெஞ்சுத் துருப்புக்கள் உபயோகித்த ஆயுத சாதனங்களில் பெரும் பகுதி அமெரிக்காவிலிருந்தே வந்தது. அமெரிக்கச் செய்தித்தாள் நியூயார்க் டைம்ஸ் வெளியிட்ட தகவலின்படி, பிரான்சுக்கு அளிக்கப்படும் உதவி அல்ஜீரியாவில் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த அதற்கு ஒத்தாசை செய்கிற தாகையால் இந்த உதவியை நிறுத்துமாறு மொராக்கோ அரசர் தமது விசேஷச் செய்தியில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவரை வேண்டிக் கொண்டார்.[28]

அல்ஜீரியாவில் போர் நீடித்து நடப்பதற்கு எல்லா வகையிலும் உதவி வந்த அதே சமயத்தில், அல்ஜீரியத் தேசீய வாதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தவும், அந்நாட்டில் அமெரிக்க ஏகபோகங்கள் விரிவாக உட்புக முன்னேற்பாடுகள் செய்யவும், வட ஆப்பிரிக்கா முழுவதிலும் அவற்றின் நிலைகளைப் பலப்படுத்தவும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் முயற்சிகள் செய்தது.

போர்த்துகல் தன் ஆட்சிக்குட்பட்ட ஆப்பிரிக்கப் பிரதேசங்களில் இராணுவ நடவடிக்கைகள் நடத்தும் பொருட்டு அமெரிக்க ஐக்கிய நாடுகள் அதற்கு ஆயுதங்கள் வழங்கி வருகிறது. அதே சமயம், அங்கோலாவின் தேசீயவாதிகளில் ஒரு பகுதியினருடன் அது தொடர்பு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. காங்கோ (கின்ஷாஸா)விலும் அது இதே போக்கைக் கடைப்பிடித்தது. காங்கோ தேசபக்தர்களுக்கு எதிரான பெல்ஜியத்தின் செயல்களுக்கு ஒத்துழைப்பு அளித்த அதே சமயத்தில், தன் பெல்ஜியக் கூட்டாளிகளின் செல்வாக்கைக் குலைக்கும் நோக்கத்துடனும் காங்கோவில் அமெரிக்க ஏகபோகங்கள் ஆழமாக வேரூன்ற உதவும் நோக்கத்துடனும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் விடாப்பிடியான முயற்சிகள் செய்து வந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நிதி வசதிகளுடன் காங்கோ (கின்ஷாஸா)வுக்கு உதவுவதற்கான ஐ.நா. ஸ்தாபனத்தின் திட்டம் செயல்படத் தொடங்கிவிட்டது என்ற செய்திபற்றிய விமர்சனக் குறிப்பில் **வால் ஸ்ட்ரீட் ஜர்னல்** பத்திரிகை 1961 அக்டோபர் இதழில் பின்வரு

மாறு எழுதியது: ''பெல்ஜியத்தின் இந்தக் காலனிக்குப் பண்டங்கள் சப்ளை செய்வதற்கு பெல்ஜிய ஏகபோகங்கள் பெற்றுள்ள வாய்ப்புக்களைக் குலைக்க இது உதவும் என்று அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் நம்புகிருர்கள்.''[29]

அமெரிக்க ஐக்கிய நாடுகள் தன் காலனியாதிக்கக் கொள்கையின் குறிக்கோள்களது இரட்டைத் தன்மையை வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் உள்ள சில வட்டாரங்களை ஏமாற்றும் பொருட்டுப் பயன்படுத்த முயல்கிறது (சில வேளைகளில் அதன் இம்முயற்சி பலித்தும் விடுகிறது). மற்ற ஏகாதிபத்திய வேட்டை விலங்குகளை நெருக்கித் தள்ளத் தான் செய்யும் பிரயத்தனங்களைக் காலனியாதிக்க எதிர்ப் பாக அது காட்டிக் கொள்கிறது.

போருக்குப் பிந்திய காலப்பகுதியில் ''மூன்ருவது உலகைச்'' சேர்ந்த பிரதேசங்களில் அமெரிக்க ஏகாதிபத்தியத் தின் கொள்கைப் போக்கு வெளித் தோற்றத்தில் பல தடவை கள் மாறியிருக்கிறது. ஆனுல் அதன் முக்கிய உள்ளடக்கம், அதன் மையமான காலனியாதிக்கக் குறிக்கோள்கள் மாருமல் அப்படியே இருந்து வருகின்றன. ஐம்பதுக்களில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் காலனியாதிக்க முறையின் தலைமைக் காவலர்கள் என்ற பொறுப்பை முடிவாக ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

இந்தக் காலப் பகுதியில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அயல் நாட்டுக் கொள்கை, வெளிநாட்டு அமைச்சர் பதவி யில் இருந்த ஜான் ஃபோஸ்டர் டல்லஸின் துர்க்குறி மிக்க தோரணையால் குறிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க ஏகபோக மூலதனத்தின் எந்த வட்டாரங்களுக்கு அவர் பிரதிநிதியாக இருந்தாரோ அவை சர்வதேச உறவுகளில் இராணுவ பலாத் காரத்தையும் போலீஸ் முறைகளையும் ஆதரித்தன. ''மூன்ரும் உலகில்'' அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொள்கையிலும் இந்தப் போக்கு பொருத்தமான விதத்தில் வெளிப்பட்டது. இங்கும் இராணுவ முறைகளுக்கு முதன்மை தரப்பட்டது.

எதார்த்தத்தில், ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் பிரச்சினைகளை அந்தக் காலத்தில் அமெரிக்க ஐக் கிய நாடுகளின் ஆளும் வட்டாரங்கள், அந்நாடுகளில் நடந்து வந்த சமுதாய, பொருளாதார நிகழ்முறைகளை விசேஷமாகக்

கவனத்தில் எடுத்துக் கொள்ளாமலே ஆராய்ந்து வந்தன. ''கம்யூனிஸத்துடன்'' உலகு பரந்த, அதிலும் ஆயுதப் போரின் வருங்கால நோக்கங்கள், வாய்ப்புக்களின் எல்லைகளுக் குள்ளேயே அவை இந்தப் பிரச்சினைகளைப் பரிசீலனை செய்தன. இந்நாடுகள் இத்தகைய போர் நிகழக்கூடிய களங்களில் ஒன்று என்ற வகையிலேயே அவற்றின் அக்கறைக்கு இலக் காயின. தேசீய விடுதலை இயக்கத்தின் பாதையை மரபு வழி வந்த பலாத்கார முறைகளாலேயே தடுக்க அமெரிக்க ஏகாதி பத்தியம் முதலில் முயன்றது. முன்னாள் காலனிகள்மீது இராணுவ-அரசியல் ஆதிக்கத்தை முடிந்தவரை வலுக்குறை யாத விதத்தில் நிலையாக வைத்திருக்கும் ஆர்வத்தினால் தூண்டப்பட்டது இந்தக் கொள்கை. அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் 1950 முதல் 1953 வரை கொரிய மக்களுக்கு எதிரா கப் போர் நடத்தினார்கள். 1954ல், தியன்-பியன்-ஃபூ என்னும் இடத்தில் பிரான்ஸ் தோல்வி அடைந்தபின் வியத்நாமில் ஒன்றுசேர்ந்து இராணுவத் தலையீடு செய்ய பிரிட்டனை இணங்க வைக்க அவர்கள் முயன்றார்கள். அதே ஆண்டில் அவர்கள் குவாட்டமாலா மீது படையெடுக்க ஆயத்தம் செய்தார்கள். இந்த விஷயத்தை அமெரிக்க வட்டாரங்களே பிற்பாடு வெளிப்படையாக ஒப்புக் கொண்டன.[30] 1957ல் ஸிரியாவுக்கு எதிராகத் தலையிட ஆயத்தங்கள் செய்யப்பட்டன; இந்தோ னேசியாவில் கலகம் திட்டமிட்டு மூட்டிவிடப்பட்டது. 1958ம் ஆண்டுக் கோடையில் ஈராக்கில் நடந்த புரட்சிக்கு எதிர் நடவடிக்கையாக அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கடற் காலாட்படைப் பிரிவுகள் லெபனானில் இறக்கப்பட்டன. சில மாதங்களுக்குப் பின் அமெரிக்க ஐக்கிய நாடுகள் தைவான் பிரதேசத்தில் இராணுவ ஆர்ப்பாட்டம் நடத்திக் கெடுபிடி நிலைமையை உருவாக்கின.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்கம் காலனிகளி லும் சார்பு நாடுகளிலும் விடுதலை இயக்கத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட வெகுவாக விரும்பிற்று. அதேபோ தில் தனது அட்லாண்டிக் கூட்டாளி நாடுகளுக்கு (விடுதலை அடைந்த நாடுகளில் அமெரிக்க நுழைவு காரணமாக இவற் றின் நலன்கள் கடுமையாகக் குறுக்கப்பட்டன) ''மட்டு மீறி'' எரிச்சலூட்டவும் அது விரும்பவில்லை. எனவே அது அடிமைப்பட்ட, சிறப்பாக ஆப்பிரிக்க நாடுகளுக்கு ''அவசர

மாக'' விடுதலை வழங்குவதை எதிர்த்தது. ''உரிய காலத்துக்கு முந்திய சுதந்திரத்தின் அபாயம்'' குறித்து அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை இலாக்காத் தலைவர்கள் இடைவிடாது எச்சரித்த வண்ணமாக இருந்தார்கள். அமெரிக்க வெளிநாட்டு விவகார உதவி அமைச்சர் பய்ரோவுட் 1953ல் இந்தக் கருத்தை எல்லா விதங்களிலும் முன்வைத்தார். 1957 அக்டோபரில் இதே கருத்து வெளிநாட்டு விவகார உதவி அமைச்சர் பால்மரால் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது. ''காலனி அந்தஸ்திலிருந்து விடுதலை அந்தஸ்துக்கு ஒழுங்கான முறைப்படி மாறுவது'' என்ற டல்லஸின் சூத்திரத்தை நினைவுபடுத்திவிட்டுப் பால்மர் பின்வருமாறு கூறினார்: ''முடிவாகப் பார்க்கும்போது உரிய தருணத்துக்கு முந்திய விடுதலை சுதந்திர அந்தஸ்து வழங்க முற்றிலும் மறுப்பதை ஒப்பவே ஆப்பிரிக்காவுக்கும் ஆப்பிரிக்கர்களுக்கும் அபாயமுள்ளதாக இருக்கக் கூடும்.''[31]

விடுதலை அடைந்த நாடுகளை உருவாகிக் கொண்டிருந்த ஆக்கிரமிப்பு இராணுவ அரசியல் கூட்டணிகளில் சேர்க்க டல்லஸின் இலாக்கா கடும் பிரயாசை எடுத்துக் கொண்டது. ஸீஏட்டோ, ஸென்டோ கூட்டணிகள் அமைக்கப்பட்டன. ''வடகிழக்கு ஆசிய நாடுகளின் உடன்படிக்கை ஸ்தாபனம்'', ''மத்தியதரைக் கடல் உடன்படிக்கை'' ஆகியவற்றுக்கான திட்டங்களையும், சியாங் காய்-ஷேக் கும்பல், ஸிங்-மின் ரீ கும்பல், பிலிப்பைன், மலாயா முதலியவற்றின் இராணுவக் கூட்டணி அமைக்கும் யோசனையையும் பற்றி நீண்ட காலம் ஆரவாரமாயிருந்தது. நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடித்த விடுதலை அடைந்த நாடுகள் வெளிப்படையான பகிஷ்காரத்துக்கும் அநாகரிகத் தாக்குதல்களுக்கும் இலக்காயின. நடுநிலைமையை ''நியாய விரோதமானது'', ''ஒழுக்கக் கேடானது'' என்று கூற அமெரிக்கத் தலைவர்கள் கூசவில்லை. இந்தியாவையும் மற்ற நடுநிலைமை நாடுகளையும் அவர்கள் ஒளிவு மறைவு இன்றித் திட்டினார்கள்.

பொருளாதார வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு அமெரிக்காவின் ''உதவியும்'' அவற்றை ஆக்கிரமிப்புக் கூட்டணிகளில் கட்டாயப்படுத்திச் சேர்ப்பதையும் ஆயுதச் சேமிப்புப் போட்டியை முடுக்கிவிடுவதையும் இராணுவமயமாக்குவதையும் இராணுவவாதிகள் கும்பல்களையும் தூண்டிவிடுவதையும்

நோக்கமாகக் கொண்டிருந்தது. ஐம்பதுக்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகளது ''உதவியின்'' 80-90 சதவிகிதம் நேரடியாக இராணுவ நோக்கங்களுக்காகவே வழங்கப்பட்டது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ''உதவியில்''' மிகச் சிறு பகுதியே அதிகாரபூர்வமாகப் பொருளாதார நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்டது. இதுவும் கடும் வட்டிகளைக் கருதியே கொடுக்கப்பட்டது. அடிமைப்படுத்தும் வேறு நிபந்தனைகளும் இதற்காக விதிக்கப்பட்டன. பெரும்பாலும் அது உற்பத்தித் தொடர்பற்ற நிலையங்களின் கட்டுமானத்திற்காகவே அளிக்கப்பட்டது. பொருளாதார வளர்ச்சி குன்றிய நாடுகளில் அரசினர் துறையின் வளர்ச்சிக்கு எதிராகப் போராடுவதற்கான கருவியாக அது அடிக்கடி பயன்படுத்தப்பட்டது.

ஆயுத பலத்தைக் காட்டி வெளிப்படையாக ஆர்ப்பாட்டம் செய்தல், ஒளிவு மறைவற்ற கம்யூனிஸ எதிர்ப்பு, பனிப் போரின் யுத்த கோஷங்கள், முன்னுள் காலனிகள், அரைக் காலனிகளின் அரசியல், பொருளாதார நிலைமைகளில் அடிப்படை மாற்றங்கள் ஏற்படுவதற்கு எதிராகச் செயல்படுதல் —இவை எல்லாம் இந்த நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நோக்கங்கள் அம்பலமாகக் காரணமாயின. தேசிய விடுதலை இயக்கம் நிகழும் பிரதேசத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆதாரமாகக் கொள்ளக்கூடிய சமுதாய, அரசியல் அடித்தளம் இந்தக் காரணங்களால் மிகமிகக் குறுகிவிட்டது. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளால் சுமத்தப்பட்ட கொள்கைப் போக்கின் அடிப்படையில் அவர்களுடன் ஒத்துழைக்க இசைந்த சக்திகள், காலனியாட்சியாளர்களுக்குத் தொண்டாற்றிய குழுக்களிலிருந்து எதார்த்தத்தில் வேறுபடவில்லை. அமெரிக்க ராஜதந்திரிகளில் பிரமுகரான செஸ்டர் பௌல்ஸ், 1960 நவம்பரில் **யுனைட்டெட் ஸ்டேட்ஸ் நியூஸ் அண்டு வர்ல்டு ரிப்போர்ட்** என்னும் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு ஒப்புக் கொண்டார்: ''மிக மிகப் பல சந்தர்ப்பங்களில், மிக மிகப் பல பிரதேசங்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் நிச்சயமாக வாழ்வு தீர்ந்துவிட்ட பழைய அமைப்புக்களுக்கு ஆதரவு அளித்தது. காலாவதியாகி விட்ட, தாக்குதலுக்கு உள்ளாகக் கூடிய அரசியல் நிலைமைகளைப் புரட்சிப் புயலுக்கு முன்னே மாருமல் பதனப்படுத்தி வைக்க நாம் முயன்ரேம்.''[32]

டல்லஸின் கொள்கை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆளும் வட்டாரங்களுக்குப் படு தோல்வி ஏற்படுத்தியது. சோஷலிஸ அமைப்பு உலக அரங்கில் சக்திமிக்க காரணி ஆகி, ஏகாதிபத்தியத்தின் இராணுவ இயந்திரத்தை மேலும் மேலும் அதிகமாகப் பிணித்து வந்த காலப்பகுதியில், தேசீய விடுதலை இயக்கம் முன்கண்டிராத அளவு எழுச்சியும் வீச்சும் பெற்றுவிட்ட காலப்பகுதியில் இந்தக் கொள்கை விரும்பிய பயனை விளைக்கவில்லை, விளைத்திருக்க முடியவும் முடியாது. சர்வதேச நிகழ்ச்சிப்போக்கு டல்லஸின் கொள்கை எவ்வளவு கவைக்குதவாதது என்பதை வர வர அதிகத் துலக்கமாகக் காட்டியது. மிகப் பெரும்பான்மையான இளம் அரசுகள் ஏகாதிபத்தியவாதிகளின் கோரிக்கைகளை நிராகரித்துவிட்டு நடுநிலைமைக் கொள்கையை மேற்கொண்டு ஏகாதிபத்திய விரோதப் போக்கைக் கடைப்பிடித்தன. பண்பற்ற நிர்ப்பந்தமும் அச்சுறுத்தல்களும் அடிக்கடி எதிரான பயனையே விளைத்தன. உதாரணமாக, எகிப்தைப் பணிய வைப்பதற்காக இராணுவ, பொருளாதார, ராஜ தந்திரச் சாதனங்களைக் கையாண்டு செய்யப்பட்ட முயற்சி களின் விளைவாக எகிப்தில் தேசீய விடுதலை இயக்கம் மேலும் தீவிரமே ஆயிற்று, மற்ற அரேபிய நாடுகளிலும் விடுதலைப் போராட்டம் முன்னிலும் ஏற்றம் அடைந்தது.

அதே சமயம் காலனியாதிக்கச் சார்புள்ள மக்கள் விரோதக் கைக்கூலி அரசாங்கங்கள் இடைவிடாது நிலை தடு மாறி வந்தன. இந்த அரசாங்கங்கள் ஏகாதிபத்திய இராணுவக் கூட்டணிகளில் சேர்ந்து கொண்டதோ, இவற்றுக்கு ஏகாதிபத்தியம் எல்லா வகையிலும் உதவி அளித்ததோ, எதுவுமே இந்த நிகழ்முறையைத் தடுத்து நிறுத்த முடிய வில்லை. 1958, ஜூலையில் நடந்த புரட்சி ஈராக்கில் நூரி ஸயீது-பெய்ஸல் அரசாங்கத்தைத் துடைத்து ஒழித்து விட்டது. தென் கொரியாவில் இரத்த வெறி கொண்ட ஸிங்-மின் ரீ கும்பல் 1960 ஜூனில் தூக்கி எறியப்பட்டுவிட்டது. இதே தென் கொரியாவில்தான், ஆங்கிலச் செய்தித்தாள் டைம்ஸின் சொற்படி, ''ஆசிய ஜனநாயகத்தின் காட்சி அரங்கை நிறுவப்போவதாகத் திருவாளர் டல்லஸ் 1953ல் வாக்களித் திருந்தார்.''[33]

மக்களுக்கிடையே அதிருப்தி, வெகுஜன இயக்கம்

ஆகியவை காரணமாக லாஓஸில் பூன்-ஊம் அரசாங்கமும் துருக்கியில் மெந்தெரெஸ் அரசாங்கமும் தெற்கு வியத்நாமில் ங்கோ தின் தியம் அரசாங்கமும் இவ்வாறே பிறவும் மேலும் மேலும் சீர்குலைந்து வந்தன. டல்லஸின் கொள்கை எவற்றைத் தொடர்ந்து இலக்காகக் கொண்டிருந்ததோ, பழங்காலத்தைச் சேர்ந்த அந்தச் சலுகை பெற்ற சமுதாயச் சக்திகளின் நிலைகள் குலைந்தன. நாளுக்கு நாள் அதிகரிக்கும் செயலூக்கத்துடன் அரசியல் அரங்கில் பிரவேசித்தது தேசீய பூர்ஷ்வா வர்க்கம். தனக்கே உரிய அரசியல், பொருளாதாரக் குறிக்கோள்கள் கொண்ட புதிய சுரண்டும் வர்க்கம் இது. விடுதலை அடைந்த நாடுகளின் வாழ்வில் பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகள் மேலும் மேலும் அதிக முக்கியத்துவம் பெறலாயின. இந்த நிலைமைகளில், ''இராணுவ பலத்தால் தேக்கி நிறுத்துதல்'', ''இரும்பு முட்டியைக் காட்டி அச்சுறுத்துதல்'' என்ற கொள்கை நிகழ்ச்சிகளிலிருந்து பின் தங்கிவிட்டது. அது பழைய மோஸ்தராக, தற்காலத்துக்குப் பொருந்தாததாகத் தோற்றம் அளித்தது. முன்னாள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் எதார்த்தத் தேவை காரணமாக நிறுவப்பட்ட அரசினர் துறை வளர்ந்து விரிவடைந்தது. அதிகார பூர்வமான அமெரிக்க வட்டாரங்கள் அதற்கு எதிராக வெளிப்படையாகச் செயல்பட்டது, விடுதலை அடைந்த நாடுகளின் மக்களின் கண்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகளது கொள்கையைச் சந்தேகத்திற்கு உள்ளாக்க மட்டுமே செய்தது.

காலனியாதிக்க ஒடுக்குமுறை அமைப்பை அதிகத்திலும் அதிகமாகப் பாதுகாக்க முயல்வது, தேசீய விடுதலை இயக்கத்தை முரட்டுத்தனமாக நசுக்குவது, ஏகாதிபத்தியத்தின் முன்னாள் காலனியாட்சிப் பரப்புக்குட்பட்ட பிரதேசங்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மேலாதிக்கத்தை நயப்பாங்கின்றி நிலைநாட்டுவது—இதுவே டல்லஸின் கொள்கை. இந்தக் கொள்கை செல்லாக் காசு ஆகிவிட்டதனால் தான் ''புதிய நிலைகள்'' எனப்பட்ட கொள்கைப்போக்கு முன்வைக்கப்பட்டது. ஜே. கென்னடி குடியரசுத் தலைவர் ஆனது முதல் இது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்கத்தால் அதிகார பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

''புதிய நிலைகள்'' கொள்கையைப் பிரேரித்தவர்கள்

பின்வரும் வாதத்தை அடிப்படையாகக் கொண்டார்கள்: அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கொள்கை செயல்தந்திர நோக்கங்கள் மட்டுமே கொண்டிருந்தால் போதாது. முதன்மையாகப் போர்த்தந்திர நோக்கங்களேயும் கருத்தில் கொண்டே அது வகுக்கப்பட வேண்டும். விடுதலே அடைந்த நாடுகள் ஏகாதிபத்திய எல்லே வட்டத்துக்கு வெளியே போகவிடாமல் தடுக்க முயல்வதும் இந்த நாடுகளில் பூர்ஷ்வாச் சமூக உறவுகள் பரவி வேரூன்றச் செய்யப் புரிவதும் இந்தப் போர்த்தந்திர நோக்கங்கள் ஆகும். கென்னடியும் அவரைச் சூழ்ந்திருந்தவர்களும் இந்த நோக்கங்களேக் கருத்தில் கொண்டார்கள். முன்னுள் காலனிகள், சார்பு நாடுகளில் தவிர்க்க முடியாதபடி நிகழும் பொருளாதார வளர்ச்சியும் புதிய அரசியல், சமுதாயக் குழுக்களின் ஏற்றமும் கடந்தகாலச் சக்திகளின் அஸ்திவாரத்தையே ஊடறுக்கின்றன என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள். எனவே, அமெரிக்க ஐக்கிய நாடுகள் இந்தச் சக்திகளோடு ஒட்டிக் கொண்டிருப்பதை நிறுத்த வேண்டும் என்றும், ''வளர்ச்சி குன்றிய நாடுகளில் பழைய அமைப்பின் பாதுகாவலனுகத்''. தோற்றம் அளிப்பதை விட வேண்டும் என்றும் அவர்கள் கோரினுர்கள்.

''காலனியாதிக்கத்திலிருந்து விடுதலேக்கு ஒழுங்கான முறையில் மாறுதல் நிகழ்வதற்கு'' வகை செய்வதன் பொருட்டு அமெரிக்க ஐக்கிய நாடுகள் ''தேசீயப் புரட்சிகளின் தலேமையைத் தன் கைகளில் எடுத்துக் கொள்ள'' வேண்டும் என்றும், ''சீர்திருத்தவாத மாற்றங்களின் வீசு காற்றுடன்'' ஒன்ருகிவிட வேண்டும் என்றும் குறித்த சீர்திருத்தங்கள் நிகழ்வதை ஆதரிக்கவும், மேலும், அவற்றைத் தொடங்கி வைக்காவிட்டாலும் பரப்புவதில் ஈடுபடவும் வேண்டும் என்றும் ''புதிய' நிலேகள்'' செயல்திட்டம் பிரகடனம் செய்தது.

''புதிய நிலேகள்'' செயல்திட்டத்தில் பிரசார நோக்கத்துடன் திணிக்கப்பட்டுள்ள சொற்ருெடர்களே நீக்கிவிட்டுப் பார்த்தால் அதன் கருத்து பின்வருவதே என்பது தெளிவாகிறது: தேசீய விடுதலே இயக்கத்தைத் தன் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ள வேண்டும். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகபோகங்களுடைய நலன்களுக்குப் பொருத்தமான ''நிதானப் போக்கு'', ''ஒழுங்கான முறை அமைப்பு'' என்ற வரம்புகளுக்குள் இந்த இயக்கத்தைக் குறுக்கிவிட வேண்டும்.

விடுதலை அடைந்த நாடுகளில் நிகழ்ச்சிகளின் ''அலையைத் திருப்ப'' வேண்டும்.*

இங்கே குறிப்பிடப்படுவது இந்நாடுகளில் சீர்திருத்த வாத மாற்றங்களுக்கு ஆதரவு அளிப்பதுதான். புரட்சி எழுச்சியைத் ''தகர்ப்பதும்'', அங்கே முதலாளித்துவ உறவுகள் வளர்ச்சி அடையவும் பூர்ஷ்வாக் குழுக்கள் வலுப்பெறவும் தூண்டுதல் அளிப்பதும் இந்த மாற்றங்களின் நோக்கமாக இருக்க வேண்டும். இவ்வாறு வலுப்பெறும் பூர்ஷ்வாக் குழுக்கள் அளவுகளிலும் வடிவங்களிலும் அமெரிக்க ஏகபோகங்களின் தலைமை நிலைகளுக்கு அபாயம் விளைக்காதவையாக இருக்க வேண்டும் என்பது கூறுமலே விளங்கும். மேலும், விடுதலை அடைந்த நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சியைப் புகுத்தும் பிரதானச் சமுதாயச் சக்தியான தேசீய பூர்ஷ்வா வர்க்கத்துடன் உடன்பாடு பெறப்பட வேண்டும். தேவைப் பட்டால் இதற்காகப் பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் ஓரளவு விட்டுக்கொடுத்து, ''தேசீயவாதத் துடன்'' புரிவு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில், கென்னடி கோஷ்டியினரின் கருத்துப்படி ''தேசீயவாதமே'' ''மூன்றுவது உலகில்'' பிரதானக் கம்யூனிஸ எதிர்ப்புச் சக்தி. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முன்னுள் வெளிநாட்டு விவகார அமைச்சர் டீன் ரஸ்க், **யூனைட்டெட் ஸ்டேட்ஸ் நியூஸ் அண்டு வர்ல்டு ரிப்போர்ட்** சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில், தேசீயவாத இயக்கங்களுடன் ''சமரசம் செய்து கொள்வது'' இன்றியமையாதது என அமெரிக்க ஐக்கிய நாடுகள் கருதுவதாகக் கூறினுர்.[34]

''புதிய நிலைகள்'' கொள்கைவாதிகளின் கருத்துப்படி இந்தச் சக்திகளுடன் சமரசம் செய்து கொள்வதால் விடுதலை அடைந்த நாடுகளில் அமெரிக்கச் செல்வாக்கை நிலை நிறுத்தவும் வலுப்படுத்தவும் வசதி ஏற்படும். இந்தச் செல்வாக்கின் சமுதாய அடித்தளம் விரிவடையும். வெளிப்படையான கைப்பாவைகளின் நிலைமை எவ்வளவு ஸ்திரமற்றது என்பதோ கண்கூடாகத் தெரிந்துவிட்டது. இவற்றின் விதி

---

* ''அலையைத் திருப்ப வேண்டும்''—இந்தத் தலைப் புடனேயே ஜே. கென்னடியின் உரைகள், சொற்பொழிவுகளின் திரட்டு 1962ல் வெளியிடப்பட்டது.

யுடன் அபாயகரமாகப் பிணைந்திருப்பதிலிருந்து அமெரிக்கச் செல்வாக்கு இந்தச் சமரசத்தின் துணையால் விடுபெற முடியும். அதே சமயம் இந்த நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சிப்போக்குக்குச் சாராம்சத்தில் ஆதரவளிப்பதற்கும் இது இடந்தரும்.

முடிவாக, அமெரிக்காவுக்கு ஆதரவான நிலைகளை மேற்கொள்ளத் தயாராயிருக்கும் பூர்ஷ்வா - சீர்திருத்தவாத அரசாங்கங்களை ஊக்கப்படுத்துவதும் இந்தக் கொள்கையின் நோக்கம் ஆகும்.

டல்லஸ் ஆயுத பலத்தையே முக்கியமாக நம்பியிருந்தார். ''புதிய நிலைகள்'' கொள்கையை வகுத்தவர்கள் இதை நிராகரித்துவிடவில்லை என்றாலும், பொருளாதார நெம்புகோல்களையே முதன்மையாகக் கையாண்டார்கள். உலக முதலாளித்துவம் அனைத்தின் வலிமையையும் முன்னாள் காலனிகள், அரைக் காலனிகளில் தமது நிலைகளையும் ஆதாரமாகக்கொண்டு, நவீன விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியின் விளைவுகளைக் கைப்பற்றுவதன் வாயிலாகவும் இந்நாடுகளில் உள்நாட்டு முதலாளித்துவத்தின் உள் பலவீனத்தையும் ''பின்தங்கிய நிலையையும்'' சாதகமாகப் பயன்படுத்துவதன் மூலமும் ஏகாதிபத்திய ஏகபோகங்கள் ''மூன்றாவது உலகின்'' மீது தங்கள் ஆதிக்கத்தை நினைவுக்கு எட்டும் காலம்வரை நிலையாக வைத்திருக்க முடியும் என்பது இந்தக் கொள்கைவாதிகளின் நம்பிக்கை.

விடுதலை அடைந்த நாடுகளை இராணுவக் கூட்டணிகளில் சேர்ப்பதற்காகச் செய்யப்பட்ட முயற்சிகள் பெரும்பாலும் பலிக்காது போயின என்பதைக் கென்னடி நிர்வாகம் கருத்தில் கொண்டது. எனவே, மிகப் பெரும்பான்மையான முன்னாள் காலனிகளும் அரைக் காலனிகளும் மேற்கொண்ட நடுநிலைமைக் கொள்கைபால் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அதிகாரபூர்வமான போக்கை அது மாற்றிவிட்டது.

அமெரிக்க ''உதவி'' அளிக்கப்படும் நடைமுறையிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. முன்னாள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் முதலாளித்துவ உறவுகளின் வளர்ச்சியை ஊக்கத்துடன் விரைவுபடுத்தும் சாதனமாக அதைப் பயன்படுத்தும் கோட்பாடு செயல்படத் தொடங்கியிருக்கிறது. பொருளாதார அபிவிருத்திக்கும்

முதலாளித்துவ வடிவங்கள் பரவுவதற்கும் பூர்ஷ்வாக் குழுக்களும் பூர்ஷ்வா ஆதரவாளர் குழுக்களும் வலுப்படுவதற்கும் உதவக் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனை ''முன்னேற்றத்திற்கான ஐக்கியத்தின்'' விஷயத்தில் போலவே மற்றச் சந்தர்ப்பங்களிலும் ''உதவி'' பெறும் நாடுகள்மீது அடிக்கடி விதிக்கப்படுகிறது. இந்த நாடுகளில் அரசினர் துறை நிறுவப்படுவதற்கு முன்பு திட்டவட்டமான எதிர்ப்பு காட்டப்பட்டு வந்தது. இப்போதோ இவ்விஷயத்திலும் கொள்கைப் போக்கு மாற்றிக் கொள்ளப்பட்டிருக்கிறது. தவிரவும் இந்தத் துறையில் தொழில் முயற்சிகளுக்கும், பொருளாதாரத் திட்ட வகுப்புக் கொள்கையை கடைப்பிடிப்பதற்கும், தயாரிப்புத் தொழிற்கிளைகள் உள்பட இயந்திரத் தொழில் நிலையங்கள் கட்டுவதற்கும் நிதியுதவி அளிக்க ஆயத்தமாய் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. பொருளாதார வளர்ச்சியின் தேவைகளுக்காக அளிக்கப்படும் தொகைகளின் ஒப்புவிகிதம் ''உதவித்'' திட்டங்களில் கணிசமாக அதிகரித்துள்ளது.

அரசு ''உதவியின்'' பங்கை விரிவுபடுத்தி, துடியாகச் செயல்படுத்தும் போக்கைக் கடைப்பிடித்த அதே சமயத்தில் கென்னடி நிர்வாகம் அமெரிக்கத் தனியார் முயற்சிகளை தீவிரமாக விஸ்தரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் ஊக்கத்துடன் செயல்படுத்தியது. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள்மீது சமுதாய-பொருளாதாரச் செல்வாக்கு செலுத்துவதற்கான தங்கள் திட்டங்களில் இந்த விஸ்தரிப்புக்குப் ''புதிய நிலைகள்'' போர்த்தந்திர நிபுணர்கள் அடிப்படை முக்கியத்துவம் அளித்தார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கையில் கென்னடி நிர்வாகம் புகுத்திய எல்லா மாறுதல்களும் முந்திய ஆண்டுகளில் அது கொண்டிருந்த உள்ளடக்கத்துடன் தொடர்பு முறிந்ததைக் குறிக்கவில்லை என்பதில் விவாதத்துக்கே இடமில்லை. சரியாகச் சொன்னால் இந்த மாறுதல்கள், பிரபல அமெரிக்க விமர்சகர் ஜே. ரெஸ்டனின் சொற்களில் ''முக்கியமாக அழுத்தத்திலும் தரத்திலும் செய்யப்பட்ட மாறுதல்கள்'' மட்டுமே.[35] இந்த அர்த்தத்தில் அவை கணிசமான அளவு பழைய போக்கில் புதிய நிலைகளாக விளங்கின. இந்தப் போக்கைக் கடைப்பிடிக்கும்

முறைகளையே முதன்மையாக அவை சீர்படுத்தின. இந்த முறைகளை நவீனமாக்கி, அதிக நெளிவு சுளுவும் செயல் வன்மையும் கொண்டவையாகச் செய்வதே அவற்றின் நோக்கம். வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் ஏகாதிபத்தியத்தை, சிறப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருக்கும் நிலைமையையும் அவற்றின் சமத்துவமற்ற நிலைமையையும் மாருமல் வைத்திருப்பதே ''புதிய நிலைகள்'' கொள்கைக்கும் அடிப்படையாக விளங்குகிறது. இந்தச் சார்பு நிலையின் தரத்திலும் வடிவங்களிலும் முடிந்தவரை நவீனத்தன்மையை அவை புகுத்தின என்பதுதான் வித்தியாசம். உண்மையில், உலகத்திலும் விடுதலை அடைந்த நாடுகளிலுமே மாறி வரும் சூழ்நிலைக்கு ஏற்ப முறைகளைச் செப்பம் செய்து கொள்வதுதான் அதற்குப் பொருள்.

இத்தகைய அடிப்படையிலிருந்து, தேசீய பூர்ஷ்வாக்களுடன் சமரசம் செய்து கொள்வது (கென்னடி கோஷ்டியினர் ''தேசீயவாதத்துடன்'' சமரசம் செய்து கொள்வதாகச் சொன்னபோது தேசீய பூர்ஷ்வாக்களையும் குறித்த குட்டி பூர்ஷ்வாக் குழுக்களையுமே கருத்தில் கொண்டிருந்தார்கள்), முன்னாள் காலனிகளிலும் சார்பு நாடுகளிலும் முதலாளித்துவ நபர்களை முக்கியப் பொருளாதாரப் பதவிகளிலும் சிறப்பாக அரசியல் பதவிகளிலும் அமர்த்துவது என்ற போக்கு இயல்பாகவே தோன்றியது.

விடுதலை அடைந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவு அளிப்பதாகப் பிரகடனம் செய்தபோது ''புதிய நிலைகள்'' கொள்கையின் போர்த்தந்திர நிபுணர்கள் கருத்தில் கொண்டிருந்தது, முன்னாள் காலனிகளையும் அரைக் காலனிகளையும் முதலாளித்துவ உலகுடன் உறுதியாகப் பிணைப்பதும், அதே சமயம் அவற்றைச் சமத்துவமற்ற, சார்பு நிலைமையிலிருந்து விடுவிக்க முடியாததுமான வளர்ச்சியே. ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் ''பின்தங்கிய'' முதலாளித்துவப் பிரதேசங்களாகவும் தேசீய பூர்ஷ்வா வர்க்கம் ஏகாதிபத்திய வல்லரசுகளுடைய ஏகபோக மூலதனத்தின் கீழ்நிலைக் கூட்டாளியாகவும் பணியாற்ற வேண்டும் என்பதே இந்தப் போர்த்தந்திர நிபுணர்களின் நீண்டகாலத் திட்டத்தின் குறிக்கோள்.

இதே சமயத்தில் கென்னடி கோஷ்டியினர் டல்லஸிட மிருந்து மரபுரிமையாகக் கிடைத்த எல்லா முறைகளையும் நிராகரித்துவிடவில்லை. தாங்களே உரக்கப் பறை சாற்றிய கோட்பாடுகளுக்கு நேர் எதிராக அவர்கள் மிக அடிக்கடி செயல்படுகிறார்கள். இந்த அர்த்தத்தில் குறிப்பிடத் தக்கது புரட்சிகர க்யூபாவுக்கு எதிராக நடந்த ஆயுதமேந்திய தலை யீடு ஆகும். உண்மையில் இதுவே வெளிநாட்டுக் கொள்கைத் துறையில் கென்னடி நிர்வாகம் மேற்கொண்ட முதலாவது பெரிய செயல். வெளிப்படையாகப் பிற்போக்குள்ள சில அரசாங்கங்களை, உதாரணமாகத் தெற்கு வியத்நாமிலும், அநேக லத்தீன் அமெரிக்க நாடுகளிலும், சவுதி அரேபியாவி லும், இத்தகைய பிறவற்றிலும் கென்னடி அரசாங்கம் தொடர்ந்து அரவணைத்துப் பேணியது. தவிரவும் அது அச் சுறுத்தலையும் இராணுவ ஆர்ப்பாட்டத்தையும் ஆயுதந் தாங்கிய நேர்முகத் தலையீட்டையுங்கூடக் கையாண்டது.

கென்னடி நிர்வாகம் விசேஷ நோக்கங்களுக்காக ''கொரில்லா எதிர்ப்புத்'' துருப்புக்களை அணிதிரட்டுவதற்கு அடிகோலியது. இவை ''கம்யூனிஸ ஆக்கிரமிப்புக்கு'' எதிராகப் போராடும் பொருட்டு திரட்டப்பட்டிருப்பதாக வெளிக்குக் கூறப்பட்டாலும் உண்மையில் மக்களின் தேசீய விடுதலைப் போராட்டச் செயல்களை ஒடுக்குவதே இவற்றின் நோக்கம்.

முன்னாள் காலனிகளையும் அரைக் காலனிகளையும் ஆக் கிரமிப்புக் கூட்டணிகளில் சேர்க்கும் பொருட்டும் காலனி யாதிக்கச் சார்புள்ள புதிய கூட்டணிகளை நிறுவும் பொருட்டும் வன்முறைகள் கையாளப்படுவதும் முழுமையாக விட்டுவிடப் படவில்லை. விடுதலை அடைந்த நாடுகளை நிர்ப்பந்திப்பதற்கு ''உதவியைக்'' கருவியாகப் பயன்படுத்துவதும் நிற்கவில்லை. உதாரணமாக, ''முன்னேற்றத்திற்கான ஐக்கியத்தின்'' வாயி லாக லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை கள் க்யூபாவின் பாலும் ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட க்யூபா விரோதக் கொள்கையின்பாலும் அந்த நாடுகள் கொண்டிருந்த போக்கைப் பொறுத்து அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டன. ''உதவி'' விஷயமாக இவ்வாறு அச்சுறுத்தலுக்கு ஆளானவை இந்தோ னேசியா, இந்தியா, இலங்கை, பாக்கிஸ்தான், கானா ஆகிய வையும் பிற நாடுகளுங்கூடத்தான்.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள்பால் கென்னடி நிர்வாகத்தின் போக்கு, டல்லஸ் காலத்தில் நிலவிய மிகமிகக் கட்டிதட்டிய எண்ணங்களிலும் காலாவதியாக விட்ட வரட்டுச் சூத்திரங்களிலுமிருந்து விடுபட்டிருந்தது. அதிகத் தேர்ச்சியும் திறமையும் ஊக்கமும் கொண்டவர்களால் அது திட்டமிட்டுக் கடைப்பிடிக்கப்பட்டது. இந்தக் காரணங்களால் இந்தப் போக்கு முழுதும் பயன் அளிக்காமல் இருந்துவிடவில்லை. அம்சரீதியான சில வெற்றிகள் அதற்குக் கிடைக்கத்தான் செய்தன. ஆனால் அவை முற்றிலும் செயல்தந்திர இயல்பு கொண்டவை. கென்னடி கோஷ்டியினர் அடைய விரும்பியவையோ, எவ்வளவோ அதிகத் துணிகரமான குறிக்கோள்கள். ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் புரட்சி நிகழ்முறைக்குக் ''கடிவாளம் பூட்டுவதும்'' சமூக வளர்ச்சியின் அடிப்படைப் போக்கை மாற்றுவதும் அந்தக் குறிக்கோள்கள். இவற்றை நிறைவேற்றுவதில்தான் கென்னடி நிர்வாகம் முழுத் தோல்வி அடைந்தது. இது புரியக் கூடியதே. வரலாற்றின் போக்கைத் தேக்கி நிறுத்தும் முயற்சியும் தேசீய விடுதலை இயக்கப் பிரதேசத்தில் புரட்சியின் வளர்ச்சியைத் தாம் விரும்பும் பாதையில் செலுத்த அல்லது எதிர்த் திசையில் திருப்பிவிடக்கூடப் போடப்பட்ட திட்டமுமே முழுக்க முழுக்க வெறுங்கனவுகள். வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் விஷயத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளை ''உத்வேகம் ஊட்டும்'' ''வழிகாட்டிஇயக்கும்'' சக்தியாகப் பாத்திரம் வகிக்கச் செய்வது, அமெரிக்கக் கொள்கையின் உள்ளடக்கத்தை அடியோடு மாற்றாமல் அம்சரீதியான சீர்திருத்தங்களும் இசைவு அமைப்புக்களும் மட்டும் செய்ததன்மூலம் இந்தப் பிரதேசத்தில் அதன் தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பது என்ற முயற்சி சற்றும் பலிக்கக் கூடியதாக இல்லை.

குடியரசுத் தலைவர் கென்னடி கொலை செய்யப்பட்ட பிறகு ஆட்சிக்கு வந்த லிண்டன் ஜான்ஸன் அரசாங்கம், ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் சம்பந்தமாக அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கொள்கைப் போக்கில் தானும் முக்கியமான மாறுதல்கள் செய்தது. **கிறிஸ்டியன் ஸயன்ஸ் மானிட்டர்** என்ற அமெரிக்கச் செய்தித்தாளின் கூற்றுப்படி, அது ''போருக்குப் பிந்திய அமெரிக்கக் கொள்

கையின் கடுமையான கோட்பாட்டு அடிப்படைக்குத் திரும்பிவிட்டது.''[36] ''புதிய நிலைகள்'' கொள்கையின் முரண்பாடுகள் தீவிரம் அடைந்ததும் அதன் குறைபாடுகள் வெளிப்பட்டதுமே இந்த மாறுதல்களுக்கு முக்கியக் காரணங்கள். இந்தக் கொள்கை எதிர்பார்த்த பயன்களை நிச்சயமாக அளிக்கவில்லை.

மறுபுறம், விடுதலை அடைந்த நாடுகளது வளர்ச்சியில் பெருத்த இடர்ப்பாடுகள் எதிர்ப்படுவதை அவற்றினுடைய சுதந்திர வாழ்வின் அனுபவம் காட்டியது. இந்த இடர்ப்பாடுகள் முதன்மையாகக் காலனியாட்சியின் விளைவுகளுடன் தொடர்புள்ளவை. இன்னொரு விஷயமும் தெளிவாயிற்று. இளம் அரசுகள், முக்கியமாக ஆப்பிரிக்க அரசுகள் ஏகாதிபத்திய வல்லரசுகளைச் சார்ந்திருப்பதற்கானஆழ்ந்த சமுதாய -பொருளாதார அடிப்படைகளை அகற்றுவதும் அவற்றின் சமூக வளர்ச்சித் திசையை முடிவாகத் தீர்மானிப்பதும் கடினமானது, பல சந்தர்ப்பங்களில் அதற்கு நீண்டகாலம் பிடிக்கும் என்பதே அந்த விஷயம். தவிர, விடுதலை அடைந்த நாடுகளில் சமுதாய முரண்பாடுகள் மேலும் தீவிரம் அடைந்துள்ளன. சில பூர்ஷ்வா வட்டாரங்கள் தங்கள் பொதுமக்களுக்கு எதிராக ஆதரவு தேடியும் பொருளாதார ''உதவி'' பெறும் ஆசை காரணமாகவும் ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து கொள்ளும் திசையில் திரும்பத் தொடங்கியிருக்கின்றன.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கண்டிப்பான கொள்கையின் ஆதரவாளர்கள் இவை எல்லாவற்றிலிருந்தும் பின்வரும் முடிவு செய்தார்கள்: ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் விஷயத்தில் முன்னிலும் விரிவாக வலிமையைக் கையாள்வதும் காட்டுவதும் உருவாகியுள்ள நிலைமைகளில்தேவைப்படுகின்றன.கென்னடியின்''மிதவாத'' முறைகள் வேண்டிய பயன் விளைக்கவில்லை ஆதலால் இவ்வாறு செய்வது இன்னும் அவசியம் ஆகிறது.

ஜான்ஸனது கொள்கையின் ''கடுமையான அடிப்படைகள்'' முதன்மையாக லத்தீன் அமெரிக்காவில் தெரிய வந்தன. 1964 ஜனவரியில் பானமா கால்வாய்ப் பிரதேசத்தில் பானமா தேசபக்தர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது, 1965ல் டொமினிக்கன் குடியரசில் ஆயுதந்தாங்கிய தலையீடு, பிரேஸிலிலும்

ஆர்ஜென்டீனுவிலும் வேறு சில லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் ''கொரில்லா'' அரசாங்கங்களுக்கு வெளிப்படையான ஆதரவு ஆகியவற்றில் வெளிப்பட்டன இவை.

அண்மைக் கிழக்கு நாடுகளிலும் ஆப்பிரிக்காவிலும் இவை போதிய தெளிவுடன் காட்டப்பட்டன. ஐக்கிய அரேபியக் குடியரசு மீதும் ஸிரியா மீதும் நிர்ப்பந்தம் வலுப்பட்டது. அவற்றுக்கு ''உதவி'' நிறுத்தப்பட்டது. யெமன் குடியரசுக்கு எதிராக மறைமுக நாச நடவடிக்கைகள் மும்முரமாயின. ஜான்ஸன் நிர்வாகம் இஸ்ரேலுடன் தனது இராணுவ ஒத்துழைப்பை வெளிப்படையாகவே காட்டிக் கொண்டது. இது மட்டும் அல்ல, அண்மைக் கிழக்கில் ஏற்பட்ட நெருக்கடியின் எல்லாக் கட்டங்களிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் எதார்த்தத்தில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களுடன் இணக்கமாகச் செயல்பட்டது.

கானுவில் இராணுவத்தால் விளைக்கப்பட்ட அரசாங்க மாற்றத்திலும், உலகச் செய்தித்தாள்களின் கூற்றுப்படி, அமெரிக்க ஏகாதிபத்திய வட்டாரங்கள் பங்கு கொண்டன. இனவெறி அரசாங்கங்கள் விஷயத்தில் கென்னடி நிர்வாகம் ஐரோப்பியக் காலனியாட்சியாளர்களிடமிருந்து தனித்து ஒதுங்கவும் ஆப்பிரிக்க மக்களின் உணர்ச்சிகளுக்கு ஆதரவு காட்டவும் முயன்று வந்தது. ஜான்ஸன் அரசாங்கமோ, இனவெறிக்கு அதிகாரபூர்வமான கண்டனம் தெரிவிக்கக் கிடைக்கும் சந்தர்ப்பம் எதையும் நழுவவிடாமல், அதே சமயம் தென்னுப்பிரிக்க, ரொடீசிய இனவெறியர்களுக்கு எதார்த்தத்தில் உதவும் போக்கைக் கடைப்பிடித்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் தென்னுப்பிரிக்காவுக்கு எதிராகத் தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதை எதிர்த்தது. அந்த நாட்டில் அமெரிக்க முதலீடுகளைக் குறுக்கவும் அதனுடன் வேறுவகைத் தொடர்புகளைத் தளர்த்தவும் அது இணங்க மறுத்துவிட்டது.

அச்சுறுத்திக் கோருதல், விடுதலை இயக்கத்துக்கு எதிராக இராணுவ பலாத்காரம் ஆகிய முறைகளை மேற்கொள்ள அமெரிக்க நிர்வாகம் அதிகரிக்கும் அளவில் ஆயத்தமாய் இருப்பது எல்லாவற்றையும் விடத் துலக்கமாக ஆசியாவில் தான் வெளிப்பட்டது. இந்தோசீன மக்களுக்கு எதிராக இரத்த வெள்ளம் பெருக்கும் ஆக்கிரமிப்பு இங்குதான் தொ

டங்கப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கிட்டத்தட்ட ஆறு லட்சம் துருப்புக்கள் அடங்கிய சைனியம் இந்த ஆக்கிர மிப்பில் ஈடுபட்டிருக்கிறது. தெற்கு வியத்நாமியத் தேசபக்தர் களுக்கும், மக்கள் அனைவருக்குமே எதிராக அழிவு விளைக்கும் போர் நிகழ்த்துவதோடு நில்லாமல் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் வியத்நாமிய ஜனநாயகக் குடியரசுமீதும் தாக்கு நடத்தினார்கள். அதன் பிரதேசத்தை மிருகத்தனமான விமானத் தாக்குகளுக்கு அவர்கள் உள்ளாக்கினார்கள். குற்றத் தன்மை கொண்ட இந்தப் போரின் விஸ்தரிப்பு மும்முரமாக நடந்து கொண்டிருக்கையில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்கம் ''ஆசியக் கொள்கை'' அல்லது ''ஜான்ஸன் கொள் கை'' எனப்படுவதை முன்வைத்தது. உலகின் இந்தப் பகுதி யில் தலைமை வல்லரசாகப் பங்காற்றும் உரிமை தனக்கு உண்டு என்று இதில் அமெரிக்க அரசாங்கம் பகிரங்கமாகப் பிரகடனம் செய்தது. ஆசியாவில் நிகழ்ச்சிகளின் போக்கைக் ''கட்டுப்படுத்தி இயக்கவும்'' ஆசிய நாடுகளின் வளர்ச்சித் திசைபற்றிக் கட்டளையிடவும் தனக்கு உள்ள ஆர்வத்தை அது அப்பட்டமாக வெளியிட்டது.

அதே சமயம், ஜான்ஸன் நிர்வாகம் ''புதிய நிலைகள்'' கொள்கையின் பல முக்கிய அம்சங்களை வைத்துக் கொண் டிருக்கிறது. இணக்கமுள்ள பூர்ஷ்வாச் சக்திகளுடன் சமரசம் செய்து கொள்வதன் வாயிலாக விடுதலை பெற்ற நாடுகளில் ''ஸ்திரத்தன்மை'' ஏற்படுத்தும் போக்கை அடிப்படையிலும் முக்கியமானவற்றிலும் அது விட்டுவிடவே இல்லை. அதுமட்டும் அல்ல, அமெரிக்க ஐக்கிய நாடுகள் வலிமையைக் காட்டியதன் நோக்கம் தேசீய விடுதலைச் சக்திகளுக்குப் ''பாடம் கற்பிப்பதும்'' விடுதலை பெற்ற நாடுகளில் இணக்கமுள்ள குழுக்களுக்கு உற்சாகமூட்டிச் சமரசத்துக்குத் தூண்டுவதும் ஊசலாடும் நபர்களை அமெரிக்காவுக்குச் சாதகமான போக்கை மேற்கொள்ளச் செய்வதும் ஆகும்.

இவ்வாறு, ''மூன்றாவது உலகின்'' விஷயத்தில் ஜான் ஸன் அரசாங்கம் கடைப்பிடித்த போக்கு தனிவகைப்பட்ட அரசியல் கலப்பினமாக விளங்கிற்று. ''புதிய நிலைகள்'' கொள்கையின் முக்கிய நோக்கங்களையும், கணிசமான அளவு இந்த நோக்கங்களின் வெற்றிக்காகவே ஒரு காலத்தில் மேற் கொள்ளப்பட்ட வன்முறைகளையும் போர்த்தன்மை கொண்ட

கம்யூனிஸ எதிர்ப்பு முறைகளையும் ஒன்றுசேர்ப்பதற்கான முயற்சி இது. இந்த முறைகளோ, பெரும் அளவு டல்லஸின் காலத்துக்கு இட்டுச் செல்கின்றன.

ஜான்ஸன் அரசாங்கத்தின் கொள்கை முன்னுள் காலனி, அரைக் காலனி நாடுகளின் பிரதேசத்தில் படு தோல்வி அடைந்தது என்பது தெரிந்த சேதி.

கிடைத்த பயன்களின் அர்த்தத்திலும், சிறப்பாக இந்தப் பிரதேசத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தற்கால, வருங்காலச் செல்வாக்கின் நோக்கிலும் ஜான்ஸன் அரசாங்கத்தின் கொள்கை ''புதிய நிலைகள்'' கொள்கையிலிருந்து ஓரடி பின்செல்வதாகவே முடிந்தது.

ஆயுத வீச்சு ஆர்ப்பாட்டமும் விடுதலை அடைந்த நாடுகளின்மீது முரட்டுத்தனமான நிர்ப்பந்தமும் ஒரு சில இடங்களில் குறித்த பயன் விளைத்தன என்பது உண்மையே. ''கடுமையான'' கொள்கைப் போக்கு ஒரு சில ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் முற்போக்குச் சக்திகளுக்குத் தாற்காலிகத் தோல்வி ஏற்படுத்தியது. தேசபக்தர்கள் முகாமைச் சேர்ந்த, நிலையுறுதியற்ற சில நபர்களின் போராடும் சித்தத் திடம் தளர்ந்துவிட்டது. ஊசலாட்டமோ அல்லது சரண்புகும் மனப்பான்மையோ கொண்ட பகுதியினரின் இணக்கம் செய்து கொள்ளும் போக்கு பலப்பட்டது. ஆயினும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளை அமெரிக்காவுக்குச் சாதகமாகத் திருப்பி, அவற்றை ''நிதானமான'' பூர்ஷ்வா-சீர்திருத்தவாத முறையில் மாற்றி அமைக்கும் திட்டங்களை (''கென்னடி சகாப்தத்திலேயே'' பிரமாண்டமான புறநிலை, அகநிலை இடர்ப்பாடுகளை எதிர்ப்பட்டன இந்தத் திட்டங்கள்) ஜான்ஸன் அரசாங்கம் மொத்தத்தில் முன்னிலும் அதிகச் சந்தேகத்துக்கு உள்ளாக்கிவிட்டது.

அமெரிக்க ஆளும் வட்டாரங்கள் வெறிகொண்ட கம்யூனிஸ எதிர்ப்பு நிலைகளுக்குச் சறுக்கிச் சென்றது, **நியூயார்க் டைம்ஸ்** செய்தித்தாள் குறித்ததுபோல, தீவிரத் தேசபக்தச் சக்திகள் செயல்படும் போதெல்லாம் ''கிலி பிடித்த முறையில்'' பலத்தைக் காட்டுவது,[37] ஆயுதப் பிரயோகம் செய்ய ஆயத்தமாவது—இவை எல்லாம், விடுதலை அடைந்த நாடுகளில் முதலாளித்துவ அமைப்புக்கு ''ஒழுங்கான முறையில்'' மாற்றம் நிகழ்வதன் ஆதரவாளர்களின் நிலைமையைச் சிக்கல்

ஆக்காமல் இருக்க முடியவில்லை. உண்மையில், ஜான்ஸன் நிர்வாகத்தின் ''கடுமையான'' கொள்கையின் விளைவாக, வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் காலனியாதிக்க எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு வெடிமருந்து இன்னும் அதிகமாகக் கெட்டிக்கப்பட்டது. நிதானமான சீர்திருத்தவாத, சமரசவாத முறையில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற் கான சமுதாய அடித்தளம் மேலும் குறுகியது. இந்நாடு களில் புதிய புரட்சி முளைகள் கிளம்புவதற்கேற்ற விதைகளை இந்தக் கொள்கை தெளித்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் ''பீரங்கிக் கப்பல் ராஜதந்திர முறைகளைக்'' கைவிடத் தயா ராய் இருக்கிறது, சுதந்திர வளர்ச்சி பெற விடுதலை பெற்று வரும் நாடுகளுக்கு உள்ள உரிமையை மதிக்கிறது என்ற எண்ணத்தைக் ''கென்னடி கோஷ்டியினர்'' இளம் தேசீய அரசுகளின் மக்களுடைய உள்ளங்களில் அரும்பாடுபட்டு ஏற்படுத்தியிருந்தனர்; ஜான்ஸனின் கொள்கை இதைக் கடுமையாகத் தாக்கிக் குலைத்துவிட்டது.

அதிகப்படியான இடர்ப்பாடுகள், சிறப்பாக லத்தீன் அமெரிக்க நாடுகளில், இராணுவக் கும்பல்களும் சலுகை பெற்ற பிற்போக்குள்ள குழுக்களும் ஆட்சிக்கு வந்ததன் தொடர்பாக ஏற்பட்டன. ஜான்ஸன் அரசாங்கம் கடைப் பிடித்த ''பயன்வழிவாதக்'' கொள்கை காரணமாக, ''சக்தி யுள்ள அரசாங்கங்களை'' ஆதாரமாகக் கொள்ள அதற்கு இருந்த ஆர்வம் காரணமாக இராணுவச் சிலவர் ஆட்சிக் குழுக்களின் நிலைகள் இயல்பாகவே வலுப்பட்டன. ''கம்யூ னிஸ அபாயம்'' என்ற பூச்சாண்டியைச் சாமர்த்தியமாகவும் கூச்சம் இன்றியும் பயன்படுத்தி அவை மிக மிக எளிய பூர்ஷ் வாச் சீர்திருத்தங்கள் உள்பட எல்லா வகைச் சீர்திருத்தங் களுக்கும் தங்கள் எதிர்ப்பைப் பலப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு பெற்றன.

வியத்நாமில் அபகீர்த்தி நிறைந்த துர்ச்சாகசச் செயல், அதன் காலனியாதிக்கத் தன்மை, அமெரிக்க இராணுவத் தினரின் மிருகத்தனமான நடவடிக்கைகள், அவற்றின் மூலம் வெளிப்பட்ட, ''ஆசியாக்காரர்களுடைய'' உயிர்கள், துன் பங்கள் குறித்த இனவெறி அகந்தை நிறைந்த அலட்சியப் பான்மை—இவை எல்லாம் முன்னுள் காலனிகளிலும் சார்பு நாடுகளிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மதிப்பு முன் எப்

போதையும்விட மோசமாக வீழ்ச்சி அடையக் காரணம் ஆயின. விளைவாக, பிரமாண்டமான அமெரிக்க எதிர்ப்பு இயக்க அலை எழுந்து பரவியது. சமரசப்போக்குள்ள வட்டாரங்களும் இவ்வியக்கத்தில் ஈர்க்கப்பட்டன. அதே சமயம், வியத்நாமில் யுத்தத்தின் போக்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சர்வ வல்லமை பற்றிய கட்டுக்கதையை அம்பலப்படுத்திவிட்டது. தற்கால நிலைமைகளில் மக்களது விடுதலைப் போராட்டத்தின் பெரு விறல் எத்தகையது என்பதை இது இன்னும் ஒரு முறை காட்டிவிட்டது.

இந்தப் பெருந் தோல்விகள் எல்லாம் ஜான்ஸன் அரசியல் அரங்கை விட்டு வெளியேற நேர்ந்ததற்குப் பெரிதும் காரணமாயின. வெள்ளை மாளிகையில் குடியரசுத் தலைவராக ரிச்சார்டு நிக்ஸன் பிரவேசித்ததும், வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் சம்பந்தமான கொள்கையில் மாறுதல்கள் செய்யப்பட வேண்டும் என வற்புறுத்தும் குரல்கள் மீண்டும் உரக்க ஒலிக்கின்றன.

''மூன்றுவது உலகில்'' அமெரிக்காவின் கொள்கையைத் திருத்துவது தம் நோக்கம் என்று புதிய குடியரசுத் தலைவர் பதவி ஏற்றதுமே அறிவித்துவிட்டார். உதாரணமாக, 1969, மார்ச் 4ந் தேதி பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் பேசுகையில், ''லத்தீன் அமெரிக்கா விஷயத்தில் நமது கொள்கை சில அம்சங்களில் மாற்றப்படுவது அவசியம்'' என்று அவர் கூறினர். இத்தகைய மாற்றங்களுக்கு முன்னேற்பாடாக மேற்குக் கோளார்த்த நாடுகளில் ''நிலவரம் அறியும்'' பயணம் செய்யும்படி நியூயார்க் கவர்னர் என். ராக்ஃபெலரை நிக்ஸன் அரசாங்கம் அனுப்பியது.

ஆனல் எத்தகைய திருத்தங்கள் செய்வது என்பதே விஷயத்தின் சாராம்சமாக விளங்கியது. விடுதலை அடைந்த நாடுகள்மீது புதுக் காலனியாதிக்க நுகத்தைச் சுமத்தும் முயற்சிகள் தோல்வி அடைவது ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட விஷயம். இந்த முயற்சிகளைக் கைவிட்டுவிட்டு, ''மூன்றுவது உலகு'' பற்றிய அமெரிக்கக் கொள்கையை எதார்த்தப் பாதையில் செலுத்துவதுதான் இந்தக் கொள்கையை நெருக்கடியிலிருந்து கரையேற்றுவதற்கான ஒரே வழி. உண்மையிலோ, புதுக் காலனியாதிக்கக் கொள்கைப் போக்கை அதிகத் தந்திரமாகச் செயல்படுத்துவதற்கு வகை செய்யும்

திருத்தங்களை மட்டுமே ஏற்க அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் போர்த் தன்மை கொண்ட செல்வாக்குள்ள வட்டாரங்கள் விரும்புகின்றன என்பதை அமெரிக்கப் பத்திரிகைகளில் வெளியான சில தகவல்களும், பிரபல அரசியலாளர்கள், கொள்கை வாதிகள் அனேகரின் கூற்றுக்களும் தெளிவாகக் காட்டுகின்றன. உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆசிய விவகாரங்களில் தனது ''நேரடியான ஈடுபாட்டைக்'' குறைத்துக் கொள்ள வேண்டும், தனது ''ஆசியச் சுமையை'' லேசாக்கிக் கொள்ள வேண்டும் என்று இந்த வட்டாரங்களின் பிரதிநிதிகள் கோருகிறார்கள். ஆனால் இந்தச் ''சுமை'' ''ஆசியர்களுடையவே'' தோள்கள்மீது சுமத்தப்பட வேண்டும் என்றும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன்கள் ஆசியர்கள் கைகளாலேயே பாதுகாக்கப்படுமாறு வகை செய்ய வேண்டும் என்றும் இவர்கள் வற்புறுத்துகிறார்கள். வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு அளிக்கப்படும் ''உதவி'' அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடைய வெளிநாட்டுக் கொள்கையின் நோக்கங்களை இன்னும் அதிகமாகச் சார்ந்திருக்கும் வகையில் இதன் வடிவங்களை அடியோடு மாற்றும்படி இதே வட்டாரங்கள் கோரின.

நிக்ஸன் நிர்வாகம் இந்த வழியையே பின்பற்றியது என்பதை மெய் விவரங்கள் விரைவிலேயே காட்டிவிட்டன. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் விஷயத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கொள்கையினது **புதுக் காலனியாதிக்க, செல்வாக்கு விஸ்தரிப்பு அடிப்படைகளையும் நோக்கங்களையும் அப்படியே வைத்துக் கொண்டு அதைச் செயல்படுத்துவதற்கான ஸ்தூல** முறைகள் சிலவற்றில் மாறுதல்கள் செய்வதே இந்த வழி.

புதிய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கைக் கருதுகோள் ''நிக்ஸன் கோட்பாடு'' என்ற பெயரைத் தாமதமின்றிப் பெற்றுவிட்டது. இதன் அடிப்படைக் கருத்துக்களை அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உலகச் சுற்றுப்பயணத்தில் தம்முடன் வந்த நிருபர்கள் முன் குவாம் தீவில்* 1969, ஜூலையில் பேசும்போது விவரித்தார். 1970, பிப்ரவரி மாதம்

* இந்தக் காரணத்தால் இது ''குவாம் கோட்பாடு'' என்றும் அழைக்கப்படுகிறது.

அமெரிக்கக் காங்கிரஸுக்கு நிக்ஸன் அனுப்பிய வெளிநாட்டுக் கொள்கைச் செய்தியில் இந்தக் கருதுகோள் ஓரளவு முழுமையான வடிவம் பெற்றது.[38]

புதிய ''கோட்பாட்டின்'' அடிப்படை அர்த்தம் இந்தச் செய்தியில் சாராம்சத்தில் பின்வரும் சொற்களில் வரையறுக்கப்பட்டிருக்கிறது: ''நமது கூட்டாளி நாடுகளதும் நட்பு நாடுகளதும் தற்காப்பிலும் வளர்ச்சியிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் பங்கு கொள்ளும். ஆனால் உலகின் சுதந்திர நாடுகளின் தற்காப்புக்கான எல்லாத் திட்டங்களையும் எல்லாச் செயல்திட்டங்களையும் உருவாக்கவும், எல்லா முடிவுகளையும் நிறைவேற்றவும், முழு அளவில் தற்காப்புப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவும் அமெரிக்காவால் முடியாது, அது அவ்வாறு செய்யவும் செய்யாது. உதவி எதார்த்தத்தில் தேவைப்படும்போதும் அது நமது நலன்களுக்குச் சாதகமாக இருக்கும் சந்தர்ப்பங்களிலும் மட்டுமே நாம் உதவி செய்வோம்''. புதிதாகப் பக்குவமாக்கப்பட்ட இந்தக் ''கோட்பாட்டின்'' சிறப்புத் தன்மை என்ன என்றால் கூட்டாளி நாடுகளுடன் சேர்ந்து ''கூட்டுச் செயல்'' புரிவதற்கு இதில் விசேஷ முக்கியத்துவம் தரப்பட்டிருப்பதே. இந்த நாடுகள் விஷயத்தில் ''புதிய அணுகுமுறை'' பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. இதன்படி, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கு இன்றியமையாத நிபந்தனையாக இந்நாடுகள் தங்கள் சொந்த வளங்களையும் வாய்ப்புக்களையும் அணி திரட்ட வேண்டும்,''சுயஉதவிக்கு'' வகை செய்து கொள்ள வேண்டும்.

வேறு வார்த்தைகளில் சொன்னால், ''புதிய அணுகுமுறையின்''—மொத்தத்தில் ''குவாம் கோட்பாட்டின்''—சாராம்சம் இதுதான்: சர்வதேச அரசியல் போலீஸ் படைக்கு உரிய செயல்களை அமல்படுத்தும் சுமையைத் தன் கூட்டாளிகளுடனும் வாடிக்கைக்கார நாடுகளுடனும் ''பகிர்ந்து கொள்ளவும்'', அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆக்கிரமிப்புத் தன்மையும் செல்வாக்கு விஸ்தரிப்பும் புதுக் காலனியாதிக்க நோக்கமும் கொண்ட கொள்கையின் விளைவாக ஏற்படும் இராணுவத் தகராறுகளிலும் தலையீடுகளிலும் அவற்றை ஈடுபடுத்தவும் அமெரிக்க ஏகாதிபத்தியம் முயல்கிறது. சிறப்பாக முன்னாள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் புரட்சிகர விடுதலை இயக்கத்தைப் ''போலீஸ்'' முறைகளால்

அடக்கி ஒடுக்கும் நோக்கத்தை—அது நிறைவேற முடியாதது என்று வெளிப்படையாகத் தெரிந்த போதிலும்—அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் சிறிதும் விட்டுக் கொடுக்கவில்லை. இந்த நோக்கத்தைக் கணிசமான அளவு மற்றவர்களைக் கொண்டு நிறைவேற்றிக் கொள்ளவே அவர்கள் விரும்புகிறார்கள். மேலும் இது உலகின் ஏதேனும் ஒரு பிரதேசத்தில் நிலவும் ''விசேஷச்'' சூழ்நிலைகள் காரணமாகத் தேவைப்படும் தாற்காலிகக் கொள்கை அல்ல. கோட்பாட்டு முக்கியத்துவம் உள்ளதும் நீடித்த காலம் அமுலாக்கப்படப் போவதுமான செயல்திட்டக் குறிக்கோளாகும் இது.

''குவாம் கோட்பாடு'' அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையை அடிப்படையில் மறுபரிசீலனை செய்வதையோ அதன் செல்திசையில் மாற்றம் ஏற்படுத்துவதையோ குறிக்கவில்லை என்பதை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வெளிநாட்டு அமைச்சரகத் தலைவர்கள் தாங்களே வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆசியாவில் உள்ள சில அமெரிக்கக் கையாட்களுக்கு இவ்விஷயமாக உண்டான அச்சத்தைப் போக்குவதற்கு அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் ரோஜர்ஸ், 1970, ஜூலையில் ஸீஏட்டோ கூட்டணியின் கூட்டத்தில் முயன்றார். அவர் இதில் பின்வருமாறு கூறினார்: ''நிக்ஸன் கோட்பாடு குவாமில் அறிவிக்கப்பட்ட படியும், இன்றுவரை அமலாக்கப்பட்டு வரும் முறையிலும், வருங்காலத்தில் அமலாக்கப்படப் போகும் முறையிலும் ஒரு நோக்கத்தை மட்டுமே கொண்டிருக்கிறது. சில பிரதேசங்களில் எங்கள் இராணுவம் நிலவுவதை எதார்த்த நிலைமைகள் அனுமதிக்கும் அளவுக்குக் குறைத்துக் கொள்வதே இந்த நோக்கம். உறுதியின்மையைக் காட்டுவதாகவோ, நாங்கள் செய்து கொண்டுள்ள உடன்படிக்கைக்கு ஏற்ப எங்கள் பொறுப்புக்களை நாங்கள் நிறைவேற்ற மாட்டோம் என்பதைக் காட்டுவதாகவோ இது எவ்விதத்திலும் அர்த்தப்படாது.''

இந்தக் கோட்பாடு பிரகடனம் செய்யப்பட்டு வெகு காலம் ஆகிவிடவில்லை. எனினும் ''குவாம் கோட்பாடு'' வெளிப்படையான ஏகாதிபத்தியத் தன்மை கொண்டது, ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள் உள்ளிட்ட எல்லா மக்களதும் சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் விடுதலைக்கும் சுயாட்சிக்கும் முற்றிலும் பகையானது என்ற மதிப்பீடு

சரியானதே என்று இந்தக் குறுகிய காலமே தெளிவாகக் காட்டிவிட்டது.

வியத்நாமில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் துயர்தரும் அனுபவத்தின் விளைவாகவே ''நிக்ஸன் கோட்பாடு'' முன் வைக்கப்பட்டது என்பதில் சந்தேகம் இல்லை. அதே சமயம், இந்தக் கோட்பாட்டின் உண்மையான ஏகாதிபத்திய, புதுக் காலனியாதிக்கத் தன்மை வியத்நாமிலும், இந்தோசீனம் முழுவதிலும் மிக மிகத் துலக்கமாக வெளிப்பட்டது. அமெரிக்க அரசாங்கம் கடைப்பிடித்து வரும் ''வியத்நாமியமய மாக்கல்'' எனப்படும் கொள்கை தெற்கு வியத்நாமில் இந்தப் புதிய ''கோட்பாட்டின்'' ஸ்தூல வெளியீடாக விளங்குகிறது.

நிக்ஸன் அரசாங்கம் வியத்நாமின் வீர, தேசபக்தச் சக்திகளுக்கு எதிராகக் குற்றத் தன்மை கொண்ட இரத்தக் களரியைத் தொடர்ந்து நடத்தும் போக்கைக் கைவிடவில்லை. தெற்கு வியத்நாமிய மக்கள்மீது தியேவு-கீ கும்பலின் கைப் பாவை அரசாங்கத்தைச் சுமத்துவதை அது விட்டுவிடவில்லை. அதே சமயம், வியத்நாமில் போர் நடத்தும் பாரத்தை அமெரிக்க ராணுவத்தின் செயல்முறை ஆதரவுடன் சைகோன் கைப்பாவைகளது சைனியத்தின் பொறுப்பில் ஒப் படைத்துவிட்டு,வியத்நாமிலிருந்துஅமெரிக்கத் துருப்புக்களைக் கொஞ்சங்கொஞ்சமாக வாபஸ் பெறும் ''உறுதியான தீர் மானத்தை'' அது பிரகடனம் செய்கிறது.இந்த ஒரு விஷயத்தில் தான் அது ஜான்ஸன் அரசாங்கத்திலிருந்து வேறுபடுகிறது. இந்த நோக்கத்துடன் சைகோன் இராணுவத்தின் எண்ணிக் கையை அதிகமாக்கவும், அதற்கு நவீன ஆயுத முஸ்தீப்பு செய்யவும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பரபரப்புடன் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். கைப்பாவை அரசாங் கத்துக்கு நிதியுதவியும் பிற உதவிகளும் அவர்கள் அளித்து வருகிறார்கள்.

வியத்நாமிலிருந்து அமெரிக்கத் துருப்புக்களை ''வாபஸ் பெறுவதைப்'' பொறுத்தவரை, இது முக்கியமாகச் செயல் படுத்தப்படும் விதம் இந்நாட்டில் அமெரிக்க இராணுவம் ''நிலவுவதை'' தன்மையிலோ அளவிலோ இன்றுவரை பாதிக்கவில்லை. ''வியத்நாமியமயமாக்குவது'' தொடங்கி ஓர் ஆண்டுக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் 4 லட்சத்து 35 ஆயிரத்

துக்கும் மேல் அமெரிக்கத் துருப்புக்கள் இன்றளவும் தெற்கு வியத்நாமில் இருந்து வருகின்றன.

இது மட்டும் அல்ல. ''அவசியம் ஏற்பட்டால்'' வாபஸ் பெறப்பட்ட அமெரிக்கத் துருப்புக்கள் வியத்நாமுக்குத் திருப்பி அனுப்பப்படலாம் என்று குடியரசுத் தலைவர் நிக்ஸனும் அமெரிக்கத் தற்காப்பு அமைச்சர் லேயர்டும் பல முறை கூறிவிட்டார்கள். ''அமெரிக்கத் துருப்புக்களின் இடத்தில் நமது துருப்புக்களை அமர்த்தும் பிரச்சினை ஓர் ஆண்டில் தீர்க்கப்பட முடியாது. இதற்குப் பல ஆண்டுகள் தேவைப்படும்'' என்று சுற்றி வளைக்காமல் அப்பட்டமாகச் சொல்லிவிட்டார் சைகோன் ''குடியரசுத் தலைவர்'' ங்குயேன் வான் தியேவு. உண்மை என்னவென்றால், ''அமெரிக்கப் பையன்களை வீட்டுக்குத்'' திருப்பி அனுப்புவது பற்றிய ஆரவாரம் 1972ல் நடக்கப் போகிற குடியரசுத் தலைவர் தேர்தல் மீது பிரசாரப் பாதிப்பு விளைப்பதைக் கூடுமான அளவு குறைக்க வேண்டும் என்பதிலேயே அமெரிக்கத் தலைவர்கள் தற்சமயம் கவலை கொண்டிருக்கிறார்கள்.

வியத்நாமோடு கூடவே மற்ற இந்தோசீன நாடுகளும் எதார்த்தத்தில் ''நிக்ஸன் கோட்பாட்டின்'' ஒரு வகைப் பயிற்சிக் களங்கள் ஆகிவிட்டன. இந்தப் பிரதேசத்தில் ஆக்கிரமிப்புப் போர்ப் பாதையில் நிக்ஸன் அரசாங்கம் தனக்கு முந்திய அரசாங்கத்தைக் காட்டிலும் உண்மையில் முன்னே சென்றுவிட்டது. லாஓஸில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இராணுவத் தலையீடு மேலும் தீவிரம் அடைவது நடப்பில் ''வியத்நாமியமயமாக்குவதன்'' அங்கமாகவே விளங்கியது. இத்துடன் நில்லாமல் அமெரிக்க அரசாங்கம் வியத்நாமில் ''அமெரிக்கத் துருப்புக்களின் உயிர்களைக் காப்பது'' என்ற பொய்ச் சாக்கில் நடுநிலைமை நாடான கம்போடியாவிலும் பாதகப் போர் நெருப்பைப் பரப்பியது. அமெரிக்கத் துருப்புக்கள் கம்போடியாவுக்குள் பலாத்காரமாகப் புகுந்தன. இவ்வாறு அமெரிக்க ஆக்கிரமிப்பு இந்தோசீனத் தீபகற்பம் முழுவதிலும் வியாபித்து, அபாயம் நிறைந்த புதிய கட்டத்தில் பிரவேசித்துவிட்டது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நாடு பிடிக்கும் காலனியாதிக்கச் சூழ்ச்சிகள் இன்னும் ஒரு முறை அம்பலமாயின. மக்கள்மீது தன் சித்தத்தை வலுக்கட்டாயமாகச் சுமத்த அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்யும்

முயற்சிகள் சமாதானத்துக்கு எத்தகைய அபாயம் விளைக்கின்றன என்பது மீண்டும் ஒரு முறை வெளியாயிற்று.

உலக மக்களின் சீற்றம் வெடித்துப் பரவியது. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலேயே எதிர்ப்பு இயக்கம் முன் கண்டிராத அளவு விரிவாகவும் ஆவேசத்துடனும் நடந்தது. நிக்ஸன் அரசாங்கத்தின் கொள்கைபால் அதிருப்தி அமெரிக்க ஆளும் வட்டாரத்தின் ஒரு பகுதியினரிடையிலுங்கூடக் காணப்படலாயிற்று. இந்தக் காரணங்களால் வாஷிங்டன் கம்போடியாவிலிருந்து படைகளை அகற்றும்படி நிர்ப்பந்திக்கப் பட்டது. ஆயினும் இந்நாட்டுக்கு எதிராக அமெரிக்க ஆக்கிரமிப்பு தொடர்ந்து நடந்து வருகிறது. அமெரிக்க விமானங்கள் கம்போடியப் பிரதேசத்தின்மீது குண்டுகளை வீசி தேசபக்தப் படைப் பிரிவுகளைத் தாக்குவதோடு நில்லாமல் அமைதியான குடி மக்களுக்கும் சாவு விளைத்து வருகின்றன. அமெரிக்காவுக்கு வால்பிடிக்கும் நாடுகளின் படைகள் தரைப் போர் நடவடிக்கைகளை நடத்தி வருகின்றன. புதிய சைகோன்—பாங்காக்—ப்னோம்-பென் இராணுவக் கூட்டணி அமைக்க ஏற்பாடுகள் நடக்கின்றன. பணமும் ஆயுதங்களும் உட்பட எல்லா வகையிலும் அமெரிக்க உதவி இந்தக் கூட்டணிக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகபோகங்களுடைய நலன்களின் பொருட்டு ''ஆசியர்களை ஆசியர்களுக்கு எதிராகப் போரிட'' வைப்பது நிக்ஸன் கோட்பாட்டின் புதுக் காலனியாதிக்கச் சாராம்சம் ஆகும். இது நடைமுறையில் மேற்கண்டவாறு வெளிப்படுகிறது.

1970, ஜூலையில், சோவியத் யூனியனின் சுப்ரீம் சோவியத் இந்தோசீனத்தில் அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்பு பற்றி ஓர் அறிக்கையைஅங்கீகரித்தது, இவ்வறிக்கையில் முழு ஆதாரத்துடன் பின்வருமாறு கூறப் பட்டது: ''அமெரிக்கத் துருப்புக்களின் இழப்பைக் குறைக்கும் நோக்கத்துடன் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தற்போதைய அரசாங்கம் ஆசிய மக்களுக்கு எதிரான ஆக்கிரமிப்புப் போர் நடவடிக்கைகளின் சுமையை ஆசிய மக்கள் மீதே சுமத்த விடாப்பிடியாக முயல்கிறது. கைக்கூலிக்கு ஆட்படும் அதிகாரவர்க்கத்தினர், இராணுவத்தினர், கையாட்கள் ஆகியோரைக் கொண்டு தன் குற்றத்தன்மையுள்ள திட்டங்களைச் செயல்படுத்த எத்தனிக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின்

'குவாம் கோட்பாடு' எனப்படுவது இந்தக் குறிக்கோள் களுக்கே உதவுகிறது. 'ஆசியர்களை ஆசியர்களுக்கு எதிராகப் போரிட' வைப்பதே இதன் நோக்கம்.''[39]

இஸ்ரேல் விஷயத்தில் புதிய அரசாங்கத்தின் போக்கு, மேற்கு ஆசியாவில் ''நிக்ஸன் கோட்பாடு'' செயல்படுத்தப் படுவதற்கு ''ஆதர்சமாகத்'' திகழ்கிறது என்று அமெரிக்கப் பத்திரிகைகள் ஏற்கனவே பல முறை குறிப்பிட்டுவிட்டன. அரேபியக் கிழக்கில் அதிகச் ''சமநிறையான கொள்கை யைக்'' கடைப்பிடிப்பதாகவும், இஸ்ரேல், அரேபிய நாடு கள், இரு தரப்பாருடையவும் ஜீவாதார நலன்களைக் கருத் தில் கொள்வதாகவும் நிக்ஸன் வெள்ளை மாளிகையில் அடி வைத்த நாள் முதலாகவே குடியரசுக் கட்சி உண்மையில் வாக்களித்தது. இந்தப் பிரதேசத்தில் உள்ள எல்லா நாடு களுடனும் ''ஒத்துழைப்பை'' விரிவுபடுத்தவும் மேற்கு ஆசியப் பூசலைச் சமாதானமாகத் தீர்த்து வைக்கவும் உள்ள விருப் பம் அமெரிக்கக் காங்கிரஸிற்குக் குடியரசுத் தலைவர் நிக்ஸன் அனுப்பிய வெளிநாட்டுக் கொள்கைச் செய்தியிலும் உறுதிப் படுத்தப்பட்டிருந்தது. ஆனால் நடப்பிலோ அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆளும் வட்டாரங்கள் இஸ்ரேலுக்கு எல்லா வகை யான உதவிகளையும் தொடர்ந்து அளித்து வருகின்றன. கைப்பற்றப்பட்ட அரேபிய நிலப்பரப்பைக் கட்டாயமாக இணைத்துக் கொள்வதற்கும் புதிய இராணுவ துர்ச்சாகசச் செயல்களை மேற்கொள்வதற்கும் அவை இஸ்ரேலைத் தூண்டி ஊக்கி வருகின்றன. ''ஃபான்டம்'', ''ஸ்கைஹாக்'' வகை விமானங்களையும் தாக்குவதற்கான பிற போர்த் தளவாடங் களையும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் இஸ்ரேலுக்கு இடை விடாது சப்ளை செய்து வருவது இந்த விஷயத்துக்குச் சான்று பகர்கிறது. அரேபிய மக்களின் விடுதலை இயக்கத்தை இஸ்ரே லியக் கடைக்கோடித் தேசீயவாதிகளின் கைகளால் தாக்கவும், மேற்கு ஆசியாவில் தனக்கு ஆதிக்க நிலையை ஏற்படுத்திக் கொள்ளவும், சிறப்பாக அதன் பெருத்த பெட்ரோலிய வளங்களைச் சூறையாடும் வாய்ப்பைப் பெறவும் அமெரிக்க ஏகாதிபத்தியம் முன்போலவே முயன்று வருகிறது.

அரேபிய நாடுகளில் முற்போக்கு அரசாங்கங்களை ஏதேனும் ''அறுவை'' முறையின் உதவியால் கவிழ்க்கும் எண்ணத்தை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆளும் வட்டா

ரங்கள் இன்றளவும் கைவிடவில்லை. அமெரிக்க அரசியல் ஆராய்ச்சிக் கல்லூரியால் அண்மையில் வெளியிடப்பட்ட **அரேபியக் கிழக்கில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நலன்கள்** என்னும் நூலில், ''ஜுன் மாதப் போருக்கு இட்டுவந்த ஓரளவு அதே கொள்கையை'' அமெரிக்க ஐக்கிய நாடுகள் மேற்கொண்டும் கடைப்பிடிக்கும் என்பது நிச்சயம் என்ற நம்பிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

நிக்ஸன் அரசாங்கம் ஆப்பிரிக்கக் கண்டத்தின்பால் மேலும் மேலும் அதிக அக்கறை காட்டி வருகிறது. தனக்கு முந்திய அரசாங்கங்களின் ஆப்பிரிக்கா பற்றிய கொள்கை ''பயன்பாடற்றதாக'' இருந்தது என்றும் அது ஆழ்ந்து மறு பரிசீலனை செய்யப்படுவது அவசியம் என்றும் நிக்ஸன் அரசாங்கம் கருதுகிறது.

காங்கிரஸிற்கு அனுப்பிய வெளிநாட்டுக் கொள்கை பற்றிய மேற்குறித்த செய்தியில் நிக்ஸன் ஆப்பிரிக்கா சம்பந்தமான அமெரிக்கக் கொள்கையைப் பகுத்தாய்ந்து பின்வருமாறு கூறினார்: ''காலனியாட்சிக்குப் பிந்தைய ஆப்பிரிக்கா விஷயத்தில் எத்தகைய போக்குகளைக் கடைப்பிடிக்க வேண்டும், அதன் சிறப்பான பிரச்சினைகள் யாவை என்பது பற்றிய தெளிவான எண்ணம் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்ற பத்தாண்டுக் காலத்தில் இருக்கவே இல்லை.... நமது கொள்கையின் அடிப்படையாக விளங்கக் கூடிய பொருத்தமான கருத்தோட்டம் எதுவும் இல்லாமையால், நாம் தாற்காலிக நெருக்கடிகள் பால் அவற்றின் மூலகாரணங்கள் விஷயத்தில் செலுத்தியதைவிட அதிகக் கவனம் செலுத்தும் போக்கு கொண்டிருந்தோம்''.

1970ம் ஆண்டுத் தொடக்கத்தில் அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் ரோஜர்ஸ் பத்து ஆப்பிரிக்க நாடுகளுக்குப் பயணம் செய்தார். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ''புதிய'' ஆப்பிரிக்கக் கொள்கைக்காகத் தற்போதைய குடியரசுக் கட்சி அரசாங்கம் செய்து வரும் தேட்டத்தையே இந்தப் பயணத்தின் விளைவுகள் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். ''70க்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் ஆப்பிரிக்காவும்'' என்ற தலைப்புடன் அவர் வெளியிட்ட அறிக்கையும் குடியரசுத் தலைவர் நிக்ஸனின் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய செய்தியும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆப்பிரிக்கக்

கொள்கையில் திருத்தம் எந்த முக்கியத் திசைகளில் செய்யப் படுகிறது என்பதை மதிப்பிட உதவுகின்றன. ஆப்பிரிக்கக் கண்டத்தில் அமெரிக்கா ''நிலவுவதை'' அவ்வளவாக உறுத் தாதபடியும் அவ்வளவு நச்சரிப்பாக இல்லாதபடியும் செய்ய வும் இந்தக் கண்டத்தில் தன் நோக்கங்களை முதன்மையாகப் பிறத்தியார் மூலம் நிறைவேற்றிக் கொள்ளவுமே நிக்ஸன் அரசாங்கம் முயல்கிறது. எதார்த்தத்தில் இதன் அர்த்தம் ''குவாம் கோட்பாட்டை'' ஆப்பிரிக்காவுக்கு ஏற்ற வகையில் ஸ்தூலப்படுத்துவதே ஆகும்.

ஆப்பிரிக்கக் கண்டத்தில்அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சாதகமான அரசியல், சமூக-பொருளாதார அமைப்பை நிலைபெறச் செய்யும் நோக்கத்துடன் விரிவான யுக்திகளைக் கையாள வாய்ப்புக்கள் ஏற்படுத்துவதே புதிய போக்கின் அடிப்படை ஆகும். புதுக் காலனியாதிக்க வகைப்பட்ட முத லாளித்துவ உறவுகளைப் ''பொறுக்கி எடுத்த'' சில ''முக்கிய'' ஆப்பிரிக்க நாடுகளில் நிலைநாட்ட ஊக்கத்துடன் உதவத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த விதமாக ஆப்பிரிக்காவில் ஆதார நிலைகளையும் நம்பகமான கூட்டாளிகளையும் பெற லாம் என்று அமெரிக்கப் போர்த்தந்திர நிபுணர்கள் நம்பு கிறார்கள். இவர்களின் உதவியால் ஆப்பிரிக்கக் கண்டத்தில் ''வேரூன்றிவிடலாம்'' என்பது அந்நிபுணர்களின் நினைப்பு. முதலாளித்துவம் அற்ற பாதையைத் தெரிந்தெடுத்துக் கொண்ட ஆப்பிரிக்க நாடுகளின் முற்போக்குள்ள கட்டற்ற வளர்ச்சியைப் பின்னோக்கித் திருப்பிவிடலாம் என்றும் அவர் கள் நம்புகிறார்கள். இளம் ஆப்பிரிக்க அரசுகளுக்கு ரோஜர்ஸ் தமது அறிக்கையில் கூறியுள்ள முக்கிய யோசனைகளில் ஒன்று அமெரிக்கத் தனியார் முதலீடுகள் எல்லா வகையிலும் அதி கரிக்கும்படி எல்லா மதகுகளையும் திறந்துவிட வேண்டும் என்பதாகும். ஆப்பிரிக்க அரசுகள் இந்த யோசனையை ஏற்றுக் கொள்ள இசைந்தால் இம்மாதிரி நடவடிக்கை எத்தகைய தீய விளைவுகளை ஏற்படுத்த முடியும் என்பது தெளிவு.

ரோஜர்ஸின் அறிக்கையில் ராஜதந்திர முகஸ்துதி ஏராளமாகக் கையாளப்பட்டிருக்கிறது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒத்துழைப்பையும் சமத்துவத்தையும் அடிப் படையாகக் கொண்ட உறவுகளை ஆப்பிரிக்க மக்களுடன் ஏற்படுத்த முயல்கிறது என்று இதனால் ஆப்பிரிக்கர்கள் நம்பு

வது சந்தேகந்தான். அமெரிக்க ஏகாதிபத்தியப் பசப்பை ஆப்பிரிக்க மக்கள் எப்படிக் கருதுகிருர்கள் என்பதை நைஜீரியாவின் அரசாங்கச் செய்தித்தாள் **மார்னிங் போஸ்ட்** ஒளிவு மறைவின்றி வெளியிட்டது. ''ஆப்பிரிக்காவைச் சூறையாடுவது மட்டுமே எவர்களுடைய நோக்கமோ, அவர்களுடைய கோட்பாடுகளும் கருத்தோட்டங்களும் எங்களுக்குப் பொருந்த மாட்டா'' என்று அந்தப் பத்திரிகை எழுதியது.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுக் கட்சி அரசாங்கம் லத்தீன் அமெரிக்கா விஷயத்திலும் ''புதிய'' கொள்கைப் போக்கைப் பிரகடனம் செய்தது. எதிர்பார்த்தபடியே இந்தச் சந்தர்ப்பத்திலும் அமெரிக்க அரசியல் விமர்சகர்கள் புதிய ''கோட்பாடு'' பற்றிப் பேசத் தொடங்கினுர்கள். இதுதான் ''நிக்ஸன்-ராக்ஃபெலர் கோட்பாடு''. அனைத்து அமெரிக்கப் பத்திரிகைக் கழகத்தில் 1969, அக்டோபர் முடிவில் நிக்ஸன் ஆற்றிய உரையில் இதன் மையக் கருத்து அடங்கியிருந்தது. குடியரசுத் தலைவரின் அதிகாரபூர்வமான பிரதிநிதியாக லத்தீன் அமெரிக்காவில் சுற்றுப் பயணம் செய்த பின்பு என். ராக்ஃபெலர் விடுத்த அறிக்கையில் இது அதிக விவரமாக வெளியிடப்பட்டது.

பொருளாதார, வர்த்தகத் தொடர்புகளின் துறையில் லத்தீன் அமெரிக்க நாடுகளின் சில கோரிக்கைகளுக்கு இணங்கவும் ஓரளவு விட்டுக் கொடுக்க இசையவும் தான் ஆயத்தமாய் இருப்பதாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் அறிவித்தது. ஆனுல் இவ்வாறு விட்டுக் கொடுப்பதன் தன்மை எத்தகையது என்ருல், லத்தீன் அமெரிக்காவில் வட அமெரிக்க ஏகபோகங்களின் பிரதான நலன்களையும் நிலைகளையும் அது சிறிதும் பாதிக்காது என்பதே. மேலும் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் பல காகிதத்தில்தான் இருக்குமே தவிர, நிறைவேற்றப்படவே மாட்டா.

லத்தீன் அமெரிக்க நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் ''உதவி'' அல்ல, தனியார் அன்னிய முதலீடுகளே மையப் பங்கு ஆற்ற வேண்டும் என்று வாஷிங்டன் சந்தேகத்திற்கு இடமின்றி உணர்த்திவிட்டது. ராக்ஃபெலர் இந்தக் கருத்துக்குத் தமது அறிக்கையில் ஸ்தூல வடிவம் அளித்திருக்கிருர். வெளிநாடுகளில் முதலீடுகள் செய்யும் தனியார்

நிறுவனங்களின் கார்ப்பொரேஷன் என்ற பெயரால் பெரு ஏகபோக நிறுவனம் ஒன்றை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நிறுவ வேண்டும் என்று அவர் யோசனை தெரிவிக்கிருர். தனியார் முதலீடுகளேச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடிப் பயன் படுத்தி, அரசாங்க ''உதவியையும்'' தன் நலன்களுக்காகக் கையாள்வதன் வாயிலாக இந்தக் கார்ப்பொரேஷன் லத்தீன் அமெரிக்க நாடுகளில் வட அமெரிக்கத் தொழிலகங்கள் மேற் கொண்டு உட்புகுவதற்கும் இந்நாடுகள் அமெரிக்க ஏகாதி பத்தியத்தால் சுரண்டப்படுவதற்கும் மிக மிகச் சாதகமான நிலைமைகளே ஏற்படுத்த முடியும் என்பது ராக்ஃபெலரின் கருத்து.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ''புதிய'' கொள்கையின் இராணுவ, அரசியல் அம்சங்கள் ராக்ஃபெலரின் யோசனை களில் மிக மிகத் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டிருக் கின்றன. தங்கள் நாடுகளில் ''அபாய'' நிலைமைகள் ஏற்பட் டால் லத்தீன் அமெரிக்க அரசாங்கங்கள் பெரும் பங்கு பொறுப்பைத் தாங்களே ஏற்க ஆயத்தமாக இருக்கும் விதத் தில் இந்த அரசாங்கங்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று அறிக்கையில் மிக நேரடியாகக் கூறப்பட்டிருக்கிறது. இதோடு ''அபாயம்'' என்ற குறிச்சொல் ''கம்யூனிஸ ஊடுரு வல்'', ''மறைமுக அழிவு நடவடிக்கை'' ஆகியவை ஏற்படும் அபாயம் என்று விளக்கப்பட்டிருக்கிறது. லத்தீன் அமெரிக்க மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலைப் போராட்டத்தை இத்தகைய அபாயம் என்று அர்த்தப்படுத்த முயற்சி செய்யப்பட்டிருக்கிறது.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் ''பாதுகாப்புச் சக்தி களை'', அதாவது ஒடுக்குமுறைக்கான அரசாங்க இயந்திரத் தை வலுப்படுத்துவது பிரதானக் கடமை என்று ராக்ஃபெல ரது அறிக்கையின் இந்தப் பகுதி கூறுகிறது. இந்த ஒடுக்கு முறைச் சக்திகளுக்குப் பயிற்சியும் சாதன வசதிகளும் அளிப் பதற்காக அதிகப்படி ''உதவி'' வழங்கத் தயாராயிருப் பதாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் தெரிவிக்கிறது. நிலையான அனைத்து அமெரிக்க இராணுவம் என்ற பெயரால் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகாதிபத்தியத்துக்குத் தொண்டாற்றும் ஒரு வகைப் போலீஸ் படையை அமைக்க வாஷிங்டன் போர்த்தந்திர நிபுணர்கள் வகுத்த திட்டங்களை லத்தீன்

அமெரிக்க நாடுகள் தங்கள் வடக்கு அண்டை நாட்டின் தீவிர நிர்ப்பந்தத்தையும் பொருட்படுத்தாமல் நிராகரித்துவிட்டன என்று நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இந்த நோக்கத்தைச் சுற்றுவழியில் நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சி இப்போது ராக்ஃபெலரின் அறிக்கையில் செய்யப்பட்டிருக்கிறது. மேற்குக் கோளார்த்தத்தின் பாதுகாப்புக் கவுன்சில் நிறுவும் யோசனை அதில் முன்வைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கவுன்சில் லத்தீன் அமெரிக்க மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைமையில் ஒருங்கிணைக்கும் உறுப்பாக விளங்கும் என்று கூறத் தேவையில்லை.

இவ்வாறாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுக் கட்சி அரசாங்கம் லத்தீன் அமெரிக்க நாடுகள் விஷயத்தில் பிரகடனம் செய்துள்ள ''புதிய'' கொள்கை துலக்கமாக வெளிப்படும் புதுக் காலனியாதிக்கத் தன்மை கொண்டிருக்கிறது. லத்தீன் அமெரிக்காவில் சமுதாய, அரசியல் புரட்சி வெடித்துக்கிளம்பும் நிலை மேலும் மேலும் பக்குவம் அடைந்து வருகிறது. இந்தக் கண்டத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளதும் அதற்குக் குற்றேவல் செய்யும் மக்கள் விரோதச் சர்வாதிகார அரசாங்கங்களதும் நிலைகளுக்கு இதனால் அபாயம் நேர்ந்திருக்கிறது. இத்தகைய வெடியதிர்ச்சி ஏற்படாதவாறு தடுப்பதும் முதன்மையாக அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் பெருகி வரும் ''லத்தீன் அமெரிக்கத் தேசீயவாத'' வெள்ளத்துக்கு அணை கோலுவதுமே மேற்கண்ட ''புதிய'' கொள்கையின் நோக்கம். லத்தீன் அமெரிக்காவில் வட அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொருளாதார, அரசியல், போர்த்தந்திர நிலைகளைப் பாதுகாப்பது, ஏகாதிபத்திய விரோத விடுதலைச் சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் உள்நாட்டுப் பிற்போக்குச் சக்திகளை மேலும் ஆழ்ந்த முறையில் ஈடுபடுத்துவது, இந்த நடவடிக்கைகளின் பொறுப்பில் பெரும் பங்கை அவற்றின்மேல் சுமத்துவது—இதுவே ''புதிய'' கொள்கையின் செயல்தந்திரப் போக்கு. விட்டுக்கொடுப்பது பற்றியும் ''உதவி'' பற்றியும் அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளின் நோக்கமும் முடிவில் இதுவே. லத்தீன் அமெரிக்காவின் செல்வ வளங்கள் சுரண்டப்படுவதால் வரும் லாபங்களில் தங்கள் பங்கு அதிகரிக்கும்

என்ற நம்பிக்கையைப் பெரும் பூர்ஷ்வாக்களுக்கும் நிலப்பிர புக்களின் சிறு குழுவுக்கும் இந்த வாக்குறுதிகள் உண்டாக்கு கின்றன.

லத்தீன் அமெரிக்க நாடுகள் விஷயத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ''புதிய'' கொள்கைக்கும் அபகீர்த்தி பெற்ற ''குவாம் கோட்பாட்டுக்கும்'' உள்ள கண்கூடான தொடர்பைக் கவனிக்காமல் இருக்க முடியாது. சமுதாய, அரசியல் மோதல்களுக்கு ''வியத்நாமியத் தன்மை அளிக் கும்'' கருத்தின் லத்தீன் அமெரிக்க வடிவமே இந்தக் கொள் கை என்று லத்தீன் அமெரிக்காவின் முற்போக்குள்ள தேச பக்தச் சக்திகள் நியாயமாகவே எண்ணுகின்றன. 1969, நவம் பரில் நடந்த லத்தீன் அமெரிக்காவின் 12 கம்யூனிஸ்ட் கட்சி களின் மகாநாடு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆளும் அரசாங்கத்தினுல் முன்வைக்கப்பட்டுள்ள கொள்கைப் போக் கின் அபாயகரமான புதுக் காலனியாதிக்கச் சூழ்ச்சிகளை வலியுறுத்தியது. ''ஏகாதிபத்தியத்துக்கும் வட அமெரிக்க ஏகபோகங்களின் புனிதமான தனியார் முதலீடுகளுக்கும் மிகச் சாதகமான வகையில் லத்தீன் அமெரிக்கர்கள் ஒருவரை ஒருவர் கொன்று தீர்க்க வேண்டும்'' என்பதே இந்தப் போக் கின் நோக்கம் என்று தமது செய்தியில் கம்யூனிஸ்ட் கட்சிகள் அறிவித்தன.

முன்னுள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் தன் கொள்கையைக் கடைப்பிடிக்கும் வடிவங்களில் மாறுதல் கள் செய்து, ''உபரிப் பொறுப்புக்களின்'' சுமையை இறக்கி விட்டு, முந்திய அரசாங்கத்தின் ''தவறுகளையும்'' ''தப்புக் கணக்குகளையும்'' திருத்துவதன் மூலம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் புதுக் காலனியாதிக்கக் கொள்கையின் பயன் பாட்டை அதிகமாக்கக் குடியரசுக் கட்சி அரசாங்கம் முயல் கிறது. இந்த முயற்சி பலிக்கும் என்று அது நம்புகிறது.

உண்மையிலோ, வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கொள்கைக்கு மேலும் மேலும் அதிகமாக எதிர்ப்படும் இடர்ப்பாடுகள் யாரேனும் அமெரிக் கக் குடியரசுத் தலைவருடையவோ அவரது ஆலோசனை யாளர்களுடையவோ அகநிலைக் குறைபாடுகள், அல்லது தவறு களை அவ்வளவாகச் சார்ந்தவை அல்ல. அவை புறநிலைக் காரணங்களால் ஏற்படுபவை. அமெரிக்கப் புதுக் காலனி

யாதிக்கத்திலும் மொத்தத்தில் புதுக் காலனியாதிக்கம் முழுவதிலுமே உள்ள ஆழ்ந்த முரண்பாடுகளின் விளைவாகத் தோன்றுகின்றன இந்த இடர்ப்பாடுகள். செயல்தந்திர உபாயங்களாலும், பகுதித் திருத்தங்களாலும், கொள்கையின் உள்ளடக்கத்தில் கோட்பாட்டு ரீதியான மாற்றங்கள் செய்யாமல் அதைக் கடைப்பிடிக்கும் வடிவங்களைச் சீர்படுத்துவதாலும் இவற்றைக் களைவது இயலாது.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள் சோவியத் யூனியனதும் பிற சோதர சோஷலிஸ அரசுகளதும் ஆதரவுடன் முழுமையான தேசீய, சமுதாய விடுதலையின் பொருட்டுப் புதுக் காலனியாதிக்க முறையின் எல்லா வித வடிவங்களுக்கும் எதிராகப் போராட்டத்தை மேலும் மேலும் தீவிரப்படுத்தி வருகிறார்கள். இது நிர்ணயகரமான முக்கியத்துவம் உள்ளது ஆகும். ''புதுக் காலனியாதிக்க முறை காலனியாட்சி முறையைவிடக் குறைந்த அபாயம் உள்ளது அல்ல என்பதை இந்நாடுகளின் மக்கள் படிப்படியாகப் புரிந்து கொண்டு வருகிறார்கள்'' என்று கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மகாநாட்டில் ஆற்றிய உரையில் அழுத்திக் கூறினார் லெ. இ. பிரேழ்னெவ்.[40] புதுக் காலனியாதிக்கத்தின் முக்கிய அரணான அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகாதிபத்தியம் புதிய தோல்விகள் அடையும் என்பதை இந்தப் புரிவு முன்னறிவிக்கிறது.

* * *

புதுக் காலனியாதிக்க முறையின் போர்த்தந்திரத்தையும், அது கையாளும் ஆயுதங்களையும் பற்றிய பகுத்தாய்வு ஒரே முடிவுக்குத்தான் நிச்சயமாக இட்டுச் செல்கிறது. அதாவது இது ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் எதார்த்தமான, மிக அபாயகரமான பகைவன் என்பதே. புதுக் காலனியாதிக்க முறை தனது நோக்கங்களைக் கம்யூனிஸ எதிர்ப்பு, ஜனநாயகச் சொற்றொடர்கள் என்ற புகைத் திரையால் மறைக்கிறது; அடிப்படுத்துவதற்குரிய சக்திமிக்க அரசியல் ஆயுதங்களையும் சிறப்பாகப் பொருளாதார ஆயுதங்களையும் அது வைத்துக் கொண்டிருக்கிறது; விடுதலை அடைந்த நாடுகளிலுள்ள சொத்துள்ள வட்டாரங்களின் வர்க்கத் தன்னலத்தைப் பயன்படுத்திக் கொள்ள

அது முயல்கிறது; இவ்வாறு அது முன்னாள் காலனிகள், அரைக் காலனிகளின் மக்களுக்குப் பேராபத்தாக விளங்கு கிறது.

அதே சமயம், புதுக் காலனியாதிக்க முறை ஆழ்ந்த முரண்பாடுகளாலும் குறைபாடுகளாலும் உள்ளூற அரிக்கப் படுகிறது என்பதை அண்மைக் கால அனுபவம் காட்டுகிறது. மக்களின் விறல்மிக்க தேசீய, சமுதாய விடுதலைச் சக்திகள் அதற்கு எதிர்நிற்கின்றன.

விடுதலை அடைந்த நாடுகளில் முதலாளித்துவ உறவு கள் வளர்ந்து வெற்றி பெறுவதையே புதுக் காலனியாதிக்க முறை நம்பியிருக்கிறது. அதே சமயம், முதலாளித்துவ உலகின் தலைமைக் கேந்திரங்களைக் கணிசமான அளவிலோ முழுமையாகவோகூடச் சார்ந்திருக்கும் ''பின்தங்கிய'', ''பலவீனமான'' முதலாளித்துவம் இந்த நாடுகளில் நிலை பெற வேண்டும் என்ற தனது வற்புறுத்தல் காரணமாக இத்தகைய வளர்ச்சிக்குப் பெருத்த தடைகளை அது தானே ஏற்படுத்துகிறது.

''நடுத்தர வர்க்கத்தையும்'' உள்நாட்டு பூர்ஷ்வா வர்க்கத்தையும் பொருளாதார, அரசியல் துறைகளில் வலுப்படுத்துவதும், தேசீய விடுதலைப் போராட்டப் பிரதே சங்களில் இவற்றைத் தலைமைக் ''கூட்டாளிச்'' சக்தியாக மாற்றுவதும் புதுக் காலனியாதிக்க முறையின் நோக்கம். ஆனாலும் நாம் சற்று முன் குறித்தவற்றின் விளைவாக, இந்தச் சமுதாயக் குழுக்கள் குறுகிய வரம்புகளுக்குள்ளே மட்டுமே வலுப் பெற வேண்டும் என்று அது திட்டமிடுகிறது. ஆனால் இதெல்லாம் புதுக் காலனியாதிக்க முறையின் முக்கியத் திட் டங்களையே புறநிலையாக, தனிவகைப்பட்ட வளைதடி போலத் தாக்குகிறது. விடுதலை அடைந்த நாடுகளில் முதலாளித்துவ உறவுகளின் வளர்ச்சி வாய்ப்புக்களை இது சிக்கல்படுத்து கிறது. மொத்தத்தில் உள்நாட்டு முதலாளித்துவத்தை முதலாளித்துவ விரோதச் சக்திகளின் தாக்குதல்களால் அதிகமாகப் பாதிக்கப்படுமாறு செய்கிறது.

மறு புறம், ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் உற்பத்திச் சக்திகளின் அதிகரிப்பைக் குறித்த வரையறைகளுக்குள் தேக்கி நிறுத்துவதையும் இந்த நிகழ் முறைமீது ஏகாதிபத்திய ஏகபோகங்களின் கட்டுப்பாட்டை

நிலையாக வைத்திருப்பதையும் நோக்கமாகக் கொண்டு அங்கே முதலாளித்துவத்தின் வரையறுத்த வளர்ச்சி ஏற்படச் செய்யும் கொள்கைகூட, புதுக் காலனியாதிக்க முறையின் முடிவான குறிக்கோள்களுக்கு ஆபத்தை உள்ளடக்கியிருக்கிறது. பொருளாதார, சமூக உறவுகளின் துறையில் புதுக் காலனியாதிக்க முறையின் அடிப்படையான முரண்பாடுகள் இங்கே பிரதிபலிக்கின்றன. இந்த அர்த்தத்தில், பழைய காலனியாட்சி முறைக்கு நிகராக, அதைவிட அதிக அளவில் கூட, புதுக் காலனியாதிக்கம் தனது நிலைமறுப்பின் குறித்த அம்சத்தைத் தன்னுள் கொண்டிருக்கிறது.

விடுதலை அடைந்த நாடுகளில் உற்பத்திச் சக்திகள், குறுகிய வரம்புகளுக்குள்தான் என்றாலும், வளர்வதற்கு உணர்வு பூர்வமாகவும், தவிர தன்வசம் இன்றியும் ஓரளவு ஊக்கமளிப்பதன் வாயிலாகப் புதுக் காலனியாதிக்க முறை தனக்கு எதிரான போராட்டத்துக்கு வேண்டிய பொருளாதார, சமுதாய முதனிலைகள் மேலும் வலுப்பெறவும், தனக்கு எதிர்த் தரப்பில் உள்ள சமூகச் சக்திகளின் (தேசீய பூர்ஷ்வா வர்க்கம்) அல்லது தன்னைக் குழிதோண்டிப் புதைக்கக் கூடிய சமூகச் சக்திகளின் (தொழிலாளி வர்க்கம்) நிலைகள் முன்னிலும் உறுதியாகவும் உதவுகிறது.

தேசீய பூர்ஷ்வா வர்க்கத்தின் செல்வாக்குள்ள வட்டாரங்களைத் தம்முடன் இணங்கவும் ஒத்துழைக்கவும் செய்வது என்ற ஏகாதிபத்தியவாதிகளின்கொள்கைப்போக்கு பெருத்த இடர்களை எதிர்ப்படுகிறது. விடுதலை அடைந்த நாடுகளின் உள்நாட்டு முதலாளித்துவத்தின் நலன்களுக்கும் சர்வதேச ஏகாதிபத்திய ஏகபோகங்களின் விழைவுகளுக்கும் இடையே நிலவும் புறநிலையான முரண்பாடே இந்த இடர்களின் ஆழ்ந்த அடிப்படை ஆகும். புதுக் காலனியாதிக்க முறைக்கும் தேசீய பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் இடையே பெருத்த மோதல்கள் பொருளாதாரத் துறையிலும் சரி, அரசியல் துறையிலும் சரி, நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

தேசீய விடுதலை இயக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் ஏகாதிபத்திய வல்லரசுகளின் ஒத்துழைப்பைப் புதுக் காலனியாதிக்க முறை நோக்கமாகக் கொண்டிருப்பதும் அதன் பல நடவடிக்கைகளும் வடிவங்களும் கூட்டு அடிப்படை வாய்ந்திருப்பதும் உண்மையே. ஆயினும் ஏகாதிபத்

தியங்களின் பரஸ்பரப் போட்டி புதுக் காலனியாதிக்க முறை யின்இந்தப் போக்குக்கு எதிராகச் செயல்படுகிறது. ''காலனித் தின்பண்டத்திற்காக'' ஏகாதிபத்தியவாதிகளுக்கிடையே ''போர்'' கணப்போதும் ஓயாமல் நடந்து கொண்டிருக் கிறது. ஏகபோகங்களின் காலனியாதிக்க விஸ்தரிப்பு நிகழக் கூடிய நிலப்பரப்பு வெகுவாகக் குறுகி வருவதனுல் இந்தப் ''போர்'' மேலும் தீவிரம் அடைந்து கொண்டு போகிறது.

தவிர, புதுக் காலனியாதிக்க முறையே ஏகாதிபத்தியங் களின் பரஸ்பர முரண்பாடுகள் தீவிரமடையக் காரணமா கிறது. முன்பெல்லாம், ஒப்பு வலிமை ஓர் ஆட்சித் தலைமை நாட்டுக்குப் பாதகமாக மாறி, மற்ற ஏகாதிபத்திய வல்லரசு களைவிட அது ஒப்புநோக்கில் பலவீனம் அடைந்துவிட்டாலுங் கூட, தன் காலனிப் பேரரசின் எல்லைகளுக்குள் அது தனி யாதிக்கம் செலுத்தவும் காலனியாதிக்க ஏகபோகத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் முடிந்தது. இப்போதோ, புதுக் காலனியாதிக்க முறையின் வரம்புகளுக்குள் முதலாளித்துவ வளர்ச்சியில் நிலவும் ஏற்றத்தாழ்வு ஏகாதிபத்திய வல்லரசு களின் காலனியாதிக்கக் கொள்கையில், ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் அவற்றின் நிலைகளில் (அடிக் கடி முன்னிலிருந்து வேறுன வடிவங்களில்தான் என்றுலும்) அதிகப் பிரத்தியட்சமாகவும் நேரடியாகவும் பிரதிபலிக் கிறது. இத்தகைய நிலைமைகளில் புதுக் காலனியாதிக்க முறை ''மூன்றுவது உலகில்'' செல்வாக்கு மண்டலங்களை மறுபங் கீடு செய்யும் கருவியாகப் பயன்படுகிறது. முக்கியமாக அமெ ரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் இரண்டாவது உலக யுத்தக் காலத்தில் தம் காலனிகளை இழந்த பிற வல்லரசுகளுக்கும் அது இவ்வாறு பணியாற்றுகிறது. ஆனுல் அவற்றுக்கு மட்டுமே அல்ல என்பது கூறுமலே விளங்கும்.

அண்மை ஆண்டுகளின் அனுபவத்தையும் போக்குக்களை யும் பற்றிக் கூறுவதானுல், தேசீய விடுதலை இயக்கப் பிரதே சத்தில் ஏகாதிபத்திய வல்லரசுகளது செயலில் ஒருங்கிணைப்பு வலுப்படுவதற்குப் பதிலாக பலவீனமே அடைந்து கொண்டு போகிறது என்று குறிப்பிடுவதே சரியாயிருக்கும். இதற்கு ஒரு காரணம் ஏகாதிபத்தியங்களின் பரஸ்பர முரண் பாடு கூர்மை அடைந்திருப்பதாகும். அதோடுகூட, இன்னெரு

விஷயமும் இதற்கு ஓரளவு காரணம் ஆகும்: இந்த நாடுகளின் சமுதாய-பொருளாதார வளர்ச்சிப் போக்கை நிர்ணயிப் பதற்கான போராட்டம் நீண்டகாலம் நடக்கும் என்பது தெளிவாகி வருவதாலும், விடுதலை அடைந்த சில நாடுகளில் முற்போக்குச் சக்திகளுக்கு இடர்ப்பாடுகள் எதிர்ப்படுவதா லும், சொந்த லாபங்கள் பெறும் நோக்கம் ஒவ்வொரு வல்லரசுக்கும் மேலும் மேலும் அதிக முக்கியத்துவம் உள்ள தாகிவருகிறது. காலனியாதிக்கப் பிரச்சினையில் தொலைதூர இலக்குக் கொள்கையைச் செயல்படுத்தும் முயற்சிக்கும் இவ்வாறே இடர்ப்பாடுகள் எதிர்ப்படுகின்றன. ஏகாதிபத் தியத்தின் வருங்காலத் திட்டங்கள், அதன் மொத்த நலன்கள் ஆகியவற்றுக்கும், அவற்றுடன் சிறிதும் ஒன்றுபடாத தனித்தனி ஏகபோகங்களின் ஸ்தூலமான நலன்களுக்கும் இடையே உள்ள முரண்பாடே இந்த இடர்ப்பாடுகளுக்குக் காரணம்.

அரிக்கும் இந்த உள் முரண்பாடுகள் வரலாற்று நோக் கில் புதுக் காலனியாதிக்க முறையின் வருங்காலத்தை நிர் ணயிப்பதற்கு எவ்வளவுதான் முக்கியமானவை என்றாலும், விறல்மிக்க தேசீய, சமுதாய விடுதலைச் சக்திகள் அதற்கு எதிர்நிற்பதே இவ்விஷயத்தில் நிர்ணயகரமான காரணியாக விளங்குகிறது. முதன்முதலாக இச்சக்திகள், ஆசிய, ஆப் பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் பொதுமக்கள் திரள் களும், தேசீய விடுதலைப் போராட்டப் பிரதேசத்தில் உள்ள கம்யூனிஸ்ட், எல்லாப் புரட்சிகர, முற்போக்குக் கட்சிகளும் ஸ்தாபனங்களும், காலனியாட்சி அமைப்பு தகர்ந்ததன் விளை வாக உருவான அல்லது போராடி விடுதலை பெற்ற தேசீய அரசுகளுமே ஆகும்.

ஒரு புறம் ஏகாதிபத்தியத்துக்கும் மறு புறம் ''மூன்றா வது உலகின்'' அரசுகள், ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெ ரிக்க நாடுகளின் பொதுமக்கள் திரள்கள் ஆகியவற்றுக்கும் இடையே முரண்பாடுகள் கூர்மைப்படுவதற்குப் புதுக் காலனி யாதிக்க முறை வழி வகுக்கிறது.

காலனியாட்சி அமைப்புக்கள் ஒழிக்கப்பட்டுவிட்ட நிலைமைகளில் செயல்படும் புதுக் காலனியாதிக்க முறையின் சிறப்பியல்புகளே அதற்கு எதிரான போராட்டத்தில் பொது ஜன அபிப்பிராயத்தின் தேசபக்தி எழுச்சியையும் மக்கள்

திரளின் சமுதாய ஆற்றலையும் விரிவாகப் பயன்படுத்தவும் அரசு அதிகார ஆயுதங்களை ஆதாரமாகக் கொள்ளவும் வாய்ப்பு அளிக்கிறது. இந்த விசைக் கருவிகளின் செயல்திறன் விடுதலை அடைந்த நாடுகளில் நிலவும் சமூக அமைப்பையும் அரசின் தன்மையையும் அதிகாரத்தில் இருக்கும் சக்திகளின் வர்க்க இயல்பையும் இந்த அரசுகள் கடைப்பிடிக்கும் கொள் கையையும் பொறுத்திருக்கிறது என்பதைக் கூறத் தேவை யில்லை.

புதுக் காலனியாதிக்க முறையின் வாய்ப்புக்கள் விடுதலை அடைந்த நாடுகள் முதலாளித்துவ அமைப்பைச் சேர்ந்திருப் பதுடனும் இந்நாடுகளில் முதலாளித்துவ உறவுகள் பரவி யிருப்பதுடனும் தொடர்பு கொண்டிருக்கின்றன. இதைக் கருத்தில் கொண்டால் அதை எதிர்த்துப் போராடுவதற் கேற்ற மிகச் சரியான திசை தானே தென்படும். ஆழ்ந்த சமூக மாற்றங்கள் நிகழ்த்துவதும், உலக முதலாளித்துவ அமைப்புடன் உறவைத் துணித்துக் கொள்வதும் சோஷ லிஸத்தை நோக்கி முன்னேறுவதுமே இந்தத் திசை என் பதை உள்நாட்டு முற்போக்கு வட்டாரங்கள் நன்கு புரிந்து கொண்டிருக்கின்றன.

எந்த முன்னாள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் சோஷலிஸப் புரட்சி வெற்றி அடைந்ததோ அவற்றில் புதுக் காலனியாதிக்க முறை புக முடியவில்லை என்று வரலாற்றின் அனுபவம் காட்டிவிட்டது. முதலாளித்துவம் அற்ற வளர்ச்சிப் பாதையை மேற்கொண்ட நாடுகளிலும் புதுக் காலனி யாதிக்க முறையின் வாய்ப்புக்கள் குறுகிவிட்டன. ஆயினும் அவற்றில் புதுக் காலனியாதிக்க அபாயம் மிக மிக எதார்த்த மான முக்கியத்துவம் கொண்டிருக்கிறது. இதை எதிர்த்துப் போராடுவது ஜீவாதார மகத்துவம் உள்ளதாக விளங்கு கிறது. இந்த நாடுகளது சமுதாய முன்னேற்றத்தின் வாய்ப் புக்கள் எந்த நிகழ்ச்சிகளைச் சார்ந்துள்ளனவோ அவையே இந்தப் போராட்டத்தின் வெற்றியை நிர்ணயிக்கும். சமு தாய நிகழ்முறை, தேசீய அரசு, இவற்றின் தலைமையில் முன்னணிப் புரட்சிக் கட்சி நிலவுவது, எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளும் ஒற்றுமையாக ஒருங்கு சேர்வது, சமூக வாழ்வு ஜனநாயக முறைப்படி அமைக்கப்படுவது, வெகு ஜனங்களின் அரசியல் செயல்பாட்டுக்கு ஊக்கம் அளிப்

பது, உறுதியான ஏகாதிபத்திய எதிர்ப்புள்ள வெளிநாட்டுக் கொள்கை; சோஷலிஸ நாடுகளுடன் நெருங்கிய நட்புறவையும் எல்லா விதத் தொடர்புகளேயும் விரிவுபடுத்துவது— இவையே அந்த நிகழ்ச்சிகள்.

அதே சமயம் புதுக் காலனியாதிக்க முறையை எதிர்ப்பதில் தேசீய பூர்ஷ்வா வர்க்கத்தைப் புறக்கணிப்பது தவருகும். தேசீய பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையே முரண்பாடுகள் நிலவுகின்றபடியால், தேசீய பூர்ஷ்வா வர்க்கத்தின் செல்வாக்குள்ள வட்டாரங்கள் புதுக் காலனியாதிக்க முறைக்குஎதிராகச் செயல்பட வல்லவையே. ஆனுல் பூர்ஷ்வா வர்க்கம் நடத்தக் கூடிய போராட்டத்தின் வரம்புகள் குறுகியவை, அது வைத்துக் கொள்ள இயலும் லட்சியங்களும் எதார்த்தத்தில் அளவறுத்தவை என்பது உண்மைதான்.

புதுக் காலனியாதிக்க முறைக்கு எதிராகச் செயல்படும் விறல் மிக்க காரணி உலக சோஷலிஸ அமைப்பே ஆகும். புதுக் காலனியாதிக்க முறையின் கொள்கையினது எல்லா, அல்லது அனேகமாக எல்லா முக்கியப் போக்குக்களுக்கும் இது பொருந்தும். உலக சோஷலிஸ அமைப்பின் இந்தப் பணி அடுத்து வரும் ஆண்டுகளில் இடைவிடாது அதிகரிக்கும் என்பதில் சந்தேகமே இல்லே.

விடுதலே அடைந்த நாடுகளுக்கும் சோஷலிஸ அரசுகளுக்கும் இடையே தொடர்புகள் ஆண்டுக்கு ஆண்டு மேலும் விரிவடைகின்றன, துடியாகச் செயல்படுத்தப்படுகின்றன. அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டுத் துறைகளின் எல்லாப் புதிய கிளேகளிலும் அவை செயல்பட்டு வருகின்றன. உதாரணமாக 1960 முதல் 1968 வரையுள்ள ஆண்டுகளில் விடுதலேயடைந்த சுமார் 40 நாடுகள் சோவியத் யூனியனுடன் ராஜதந்திர உறவுகள் ஏற்படுத்திக் கொண்டன. 25க்கும் மேற்பட்ட நாடுகள் பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் செய்து கொண்டன. 1969ல் சோவியத் யூனியன் 38 ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க அரசுகளுடன் பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருந்தது. இந்த ஒப்பந்தங்களின்படி வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு சோவியத் யூனியன் வழங்கிய பொருளாதார, தொழில்நுட்ப உதவியின் மொத்தப்

பரிமாணம் 3.2 மடங்கு அதிகரித்து 550 கோடி ரூபிள்கள் மதிப்பை எட்டிவிட்டது. உலகின் இந்தப் பகுதியைச் சேர்ந்த 32 நாடுகள் சோவியத் பற்றுக் கடன்கள் பெறுகின்றன.

முன்பு அடிமைப்பட்டிருந்த மக்களுடன் சோவியத் யூனியனின் ஏகாதிபத்திய விரோத, சர்வதேசீயத் தன்மை கொண்ட ஒத்தியைந்த ஒருமைப்பாட்டின் முக்கிய வெளிப் பாடுகளாக இந்த விவரங்கள் விளங்குகின்றன. அதோடு கூடவே, காலனியாட்சி முறையையும் புதுக் காலனியாதிக்க முறையையும் வன்மையாக எதிர்ப்பதற்கு சோவியத் யூனிய னுடன் நெருக்கமான நட்பு உறவின் முழு முக்கியத்துவத்தை யும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் மக்களும் அரசாங் கங்களும் மேலும் மேலும் அதிகமாகப் புரிந்து கொண்டு வருவதையும் இவை காட்டுகின்றன.

''சோஷலிஸத்தினது மாபெரும் வெற்றியின் ஐம்பது ஆண்டுகள்'' என்ற அறிக்கையில் லெ. இ. பிரேழ்னெவ் பின்வருமாறு கூறினர்: ''காலனியாட்சியிலிருந்து விடுதலை அடைந்த நாடுகள் சோவியத் யூனியன் தங்களுடைய உள மார்ந்த, தன்னலமற்ற நண்பன் என்பதைக் காண்கின்றன. சோவியத் யூனியனின் கொள்கையும் நமது சோஷலிஸ வல் லரசு நிலவுவதுமேகூட, ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப் பிலிருந்து தங்களுடைய சுதந்திரத்தை அரண் செய்வதில் உதவும் முக்கியக் காரணி என்பதை அவை நன்ருக அறிந் திருக்கின்றன.''[41] புதுக் காலனியாதிக்க முறைக்கு எதிரான போராட்டத்தில் வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடு களின் பாட்டாளி மக்கள் முக்கியப் பங்கு ஆற்றுகிருர்கள். ''சொந்த'' அரசாங்கங்களுடைய ஏகாதிபத்தியக் கொள் கையை அவர்கள் எதிர்க்கிருர்கள். ஒடுக்கப்படும் மக்களுடன் தங்கள் ஒருமைப்பாட்டைப் பல்வேறு வடிவங்களில் அவர் கள் காட்டுகிருர்கள்.

சோஷலிஸ அரசுகளுடனும் சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்துடனும் தேசீய விடுதலைச் சக்திகளின் கூட்டணி, புதுக் காலனியாதிக்க முறைக்கு எதிரான போராட்டத்தில் வெற்றிக்கு இன்றியமையாத முன் நிபந்தனையாகும்.

விடுதலை அடைந்த நாடுகளுக்கிடையே உறவுகள் விரிவ டைவதும் ஏகாதிபத்திய எதிர்ப்பில் அவற்றின் நெருக்கமான ஒற்றுமையும் ஒத்துழைப்பும் புதுக் காலனியாதிக்க முறைக்கு

எதிரான போராட்டத்தின் போக்கின்மீதும் வருங்காலத்தின் மீதும் செல்வாக்கு செலுத்த வல்லவை என்பதையும் குறிப்பிடுவது அவசியம்.

புதுக் காலனியாதிக்க முறை வரலாற்றுப் போக்கைப் பின்னோக்கித் திருப்பவும் தேசீய அடிமைத் தனத்தின் எல்லா வடிவங்களையும் ஒழிக்கும் நிகழ்முறையை எதிர்த்துத் தடுக்கவும் முயல்கிறது. சில வேளைகளில் குறித்த சிறு வெற்றிகள் பெற அதற்கு வாய்க்கலாம். ஆனால் முழு வெற்றி அடைய அதனால் முடியாது என்பது திண்ணம். சந்தேகமின்றி, புதுக் காலனியாதிக்க முறை, பின்வாங்கி அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் காலனியாட்சி முறையே ஆகும். ஆனாலும், புதுக் காலனியாதிக்க முறை வரலாற்று நோக்கில் வருங்கால வாய்ப்பு அற்றது என்ற காரணத்தினாலேயே அதன் இறுதித் தோல்வி தானாகவே நேர்ந்துவிடும் என்று எண்ணுவது பேதைமை. புதுக் காலனியாதிக்க முறை சமுதாய-வரலாற்று அர்த்தத்தில் எவ்வளவுதான் அழுகியதாய் இருந்தாலும், ஏகாதிபத்தியத்தின் இந்தப் ''பழம்'' தானாகவே ''உதிர்ந்து'' விடாது. அதை ''அடித்து வீழ்த்த'' வேண்டும். உலகில் உள்ள தேசீய, சமுதாய விடுதலைச் சக்திகள் அனைத்தும் சேர்ந்து நடத்தும் போராட்டத்தின் விளைவாகவே, தேசீய ஒடுக்கு முறையினதும் சுரண்டலினதும் இந்தப் புதிய வடிவத்தை ஒழிக்க முடியும்.

## குறிப்புக்கள்

''புதுக் காலனியாதிக்க முறை—அதன் தன்மையும் அது தோன்றுவதற்கு உரிய வரலாற்று நிலைமைகளும் காரணிகளும்''

[1] R. Emerson. Colonialism Yesterday and Today. *New Nations in a Divided World [ஆர். எமெர்ஸன். ''காலனியாதிக்க முறை நேற்றும் இன்றும்.'' பிரிவுபட்ட உலகின் புதிய தேசங்கள்], பதிப்பாசிரியர் கே. லண்டன், நியூயார்க்—லண்டன், 1963, பக்கம் 17.*

[2] W. Laqueur. Neocolonialism — the Soviet Concept. *New Nations in a Divided World [டபிள்யூ. லாக்கேர். ''புதுக் காலனியாதிக்க முறை. சோவியத் கருத்து.'' பிரிவுபட்ட உலகின் புதிய தேசங்கள்], பக்கம் 36.*

[3] *Times [டைம்ஸ்], 1964, மார்ச் 21.*

[4] *Foreign Affairs [ஃபாரின் அஃபயர்ஸ்], 1965, ஏப்ரல்-ஜூன், பக்கம் 410.*

[5] R. Dumont et B. Rosier. *Nous allons à la famine.* Paris, Seuil *[ஆர். த்யூமோன், பி. ரொஸியே. நாம் பஞ்சத்தை நோக்கிச் செல்கிறோம். பாரிஸ், ஸேய்], 1966, பக்கம் 12.*

[6] *United Nations Conference on Trade and Development.* «Mobilization of Internal Resources by Developing Countries» *[ஐக்கிய நாடுகள் சங்க வர்த்தக, அபிவிருத்தி மகாநாடு. ''வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளால் உள்நாட்டு வளங்கள் திரட்டி ஈடுபடுத்தப்படுதல்''], ஐக்கிய நாடுகள் சங்க வர்த்தக, அபிவிருத்தி மகாநாட்டினுடைய* TD/B/C *அலுவலகத்தின் குறிப்பு. 3/28, 1967, ஜனவரி 26.*

[7] A. Kamark. *The Economics of African Development [ஏ. கமார்க். ஆப்பிரிக்க வளர்ச்சியின் பொருளாதாரம்], நியூயார்க், பிரேகர், 1967, பக்கம் 21.*

[8] M. Diop. *Classes et idéologies de classe au Sénégal*. Editions du Comité Central [*எம். தியோப். ஸெனெகாலில் வர்க்கங்களும் வர்க்கக் கொள்கைவாதமும். மத்தியக் கமிட்டிப் பதிப்பகம்*], *1964, பக்கம் 65.*

[9] K. Kurian. *Impact of Foreign Capital on Indian Economy* [*கே. குரியன். இந்தியப் பொருளாதாரத்தின்மீது அன்னிய மூலதனத்தின் பாதிப்பு*], *புது டில்லி, பீப்புள்ஸ் பப்ளிஷிங் ஹவுஸ், 1966, பக்கங்கள் 86, 249.*

[10] *В. И. Ленин*. Полн. собр. соч. [*வி. இ. லெனின். முழு நூல்திரட்டு*], *தொகுதி 27, பக்கம் 383.*

[11] „Программа Коммунистической партии Советского Союза" [*சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சிச் செயல்திட்டம்*], *மாஸ்கோ, 1965, பக்கம் 46.*

''புதுக் காலனியாதிக்க முறையின்
பொருளாதார, சமுதாயப்
போர்த்தந்திரம்''

[1] «The Scope and Distribution of US Military and Economic Assistance Programs. Report to President of the USA from the Commitee to Strengthen the Security of the Free World» [*''அமெரிக்க ஐக்கிய நாடுகளினது இராணுவ, பொருளாதார உதவித் திட்டங்களின் வீச்சும் வினியோகமும். சுதந்திர உலகின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான கமிட்டி அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவருக்குச் சமர்ப்பித்த அறிக்கை''*], *1963, மார்ச் 20.*

[2] «La politique de coopération avec les pays en voie de développement». Rapport de la Comission d'Etude instituée par le décret du 12 mars 1963, remis au Gouvernement le 18 juillet 1963 [*''வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுடன் ஒத்துழைப்பு பற்றிய கொள்கை.'' 1963, மார்ச் 12ந் தேதி அரசாணைப்படி நிறுவப்பட்ட செயல் கமிஷன் 1963, ஜூலை 18ந் தேதி அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்த அறிக்கை*], *பக்கங்கள் 46-47.*

[3] The Department of State Bulletin [*த டிபார்ட்மென்ட் ஆஃப் ஸ்டேட் புலெட்டின்*], *1964, நவம்பர் 9, பக்கம் 676.*

4 «La politique de coopération avec les pays en voie de développement». Rapport de la Comission d'Etude instituée par le décret du 12 mars 1963, remis au Gouvernement le 18 juillet 1963, பக்கம் 27. *В. Фетов.* Стратегия неоколониализма. „Мировая экономика и международные отношения" *[வி. ஃபேத்தவ். ''புதுக் காலனியாதிக்கப் போர்த்தந்திரம்''. உலகப் பொருளாதாரமும் சர்வதேச உறவுகளும்], மாஸ்கோ, 1965, இதழ் 3, பக்கம் 10ன்படி மேற்கோள் காட்டப்படுகிறது.*

5 *Africa Report [ஆஃப்ரிக்கா ரிப்போர்ட்], 1964, டிசம்பர், பக்கம் 12.*

6 *Problèmes économiques [பொருளாதாரப் பிரச்சினைகள்], இதழ் 887, 1964, பக்கங்கள் 4-6.*

7 Vernon Mckay. *Africa in World Politics.* N. Y., Harper and Row, *[வெர்னன் மாக்கே. உலக அரசியலில் ஆப்பிரிக்கா, நியூயார்க், ஹார்ப்பர் அண்டு ரோ], 1963, பக்கம் 282.*

8 *The Eastern Economist [த ஈஸ்டர்ன் எக்கானமிஸ்ட்], 1964, நவம்பர், பக்கம் 993; New Age [நியூ ஏஜ்], 1966, மே 29, பக்கம் 12.*

9 *Е. Табров.* Экономические методы английского неоколониализма. „Мировая экономика и международные отношения" *[யெ. தப்ரோவ். ''பிரிட்டிஷ் புதுக் காலனியாதிக்கத்தின் பொருளாதார உபாயங்கள்.'' உலகப் பொருளாதாரமும் சர்வதேச உறவுகளும்], மாஸ்கோ, 1968, இதழ் 2, பக்கம் 43ஐப் பார்க்கவும்.*

10 *Figaro [ஃபிகாரோ], 1966, அக்டோபர் 18-19.*

11 Amin S. *Le développement du capitalisme en Cote d'Ivoire [எஸ். அமேன். ஐவரி கோஸ்டில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி], பாரிஸ், 1967, பக்கங்கள் 90-92ஐப் பார்க்கவும்.*

12 *Monde [மோந்த்], 1966, ஜனவரி 4—5.*

[13] Dwivedy S. and Bhargava G. *Political Corruption in India* [எஸ். த்விவேதி, ஐ. பார்கவா. இந்தியாவில் அரசியல் ஊழல்], புது டில்லி, பாப்புலர் புக்ஸ் ஸெர்விஸஸ், 1967, பக்கங்கள் 29-32.

[14] *N.Y. Herald Tribune* [நியூயார்க் ஹெரால்டு டிரிப்யூன்], 1965, ஜூன் 17.

''புதுக் காலனியாதிக்க முறையின்
அரசியல், இராணுவ-அரசியல்
ஆயுதங்களும் வடிவங்களும்''

[1] *Fraternité* [ஃபிராத்தர்னித்தே (சோதரத்துவம்)], 1964, பிப்ரவரி, 21.

[2] „Известия" [இஸ்வேஸ்தியா] 1968, மார்ச் 27.

[3] „Известия", 1968, ஏப்ரில் 20.

[4] *U. S. News and World Report* [யு. எஸ். நியூஸ் அண்டு வர்ல்டு ரிப்போர்ட்], 1968, மார்ச் 25, பக்கம் 64.

''புதுக் காலனியாதிக்க முறையின்
பொருளாதார ஆயுதங்களும் வடிவங்களும்''

[1] *The OECD Observer* [பொருளாதார ஒத்துழைப்பு, அபிவிருத்தி நிறுவனப் பார்வையீடு], 1967, பிப்ரவரி, பக்கங்கள் 27-29ல் உள்ளபடி கணக்கிடப்பட்டுள்ளது.

[2] *Development Assistance Efforts and Policies* [அபிவிருத்தி உதவி முயற்சிகளும் கொள்கைகளும்], 1967ம் ஆண்டு பார்வையீடு, பக்கம் 197.

[3] John P. Lovell and C. I. Eugene Kim. «The Military and Political Change in Asia», *Pacific Affairs* [ஜான் பி. லொவேல், ஸி. ஐ. யூஜின் கிம். ''ஆசியாவில் இராணுவ-அரசியல் மாறுதல்'', பஸிஃபிக் அஃபயர்ஸ்], தொகுதி 40, இதழ் 1-2, 1967 வசந்தமும் கோடைகாலமும், பக்கங்கள் 118-119.

[4] *World Perspectives on International Politics* [சர்வதேச அரசியல் குறித்த வருங்கால வாய்ப்புக்கள்], பதிப்பாசிரியர் டபிள்யூ. க்ளெமெண்ட்ஸ் ஜூனியர், போஸ்டன், 1965, பக்கம் 68.

[5] *Journal officiel de la République Française. Débats parlementaires. Sénat* [பிரெஞ்சுக் குடியரசின் அரசாங்க கஜேட். நாடாளுமன்ற விவாதங்கள். செனேட்], 1963, நவம்பர் 6, பக்கம் 2262. *В. Любимова.* „Французский государственно-монополистический капитализм и колониальная политика". „Мировая экономика и международные отношения" [வி. லியுபீமவா. ''பிரெஞ்சு அரசு-ஏகபோக முதலாளித்துவமும் காலனியாதிக்கக் கொள்கையும்.'' உலகப் பொருளாதாரமும் சர்வதேச உறவுகளும்], மாஸ்கோ, 1965, இதழ் 7, பக்கம் 30ன்படி மேற்கோள் காட்டப்படுகிறது.

[6] *Neue Zürcher Zeitung* [நியூ ஜூர்ஹெர் ஸைத்துங்], 1968, ஜனவரி 27.

[7] *Look* [லுக்], 1968, மார்ச் 19, பக்கம் 63.

[8] *Commerce du Liban* [லெபனுன் வர்த்தகம்], 1968, ஜனவரி 27.

[9] *The Economy of Ghana* [கானுவின் பொருளாதாரம்], இயக்குநர்களும் பதிப்பாசிரியர்களும் டபிள்யூ. பர்மிங்ஹாம், ஜே. நியூஸ்டாட், ஈ. என். ஒமாபோயெ. லண்டன், 1966, பக்கங்கள் 396, 397, 402.

[10] *L'Usine nouvelle* [புதுத் தொழிற்சாலை], 1964, இதழ் 48, பக்கம் 157. *В. Панов.* „Помощь" империалистических государств. „Вопросы экономики" [வி. பன்னேவ். ''ஏகாதிபத்திய அரசுகளின் 'உதவி'''. பொருளாதாரப் பிரச்சினைகள்], மாஸ்கோ, 1966, இதழ் 8, பக்கம் 105ன்படி மேற்கோள் காட்டப்படுகிறது.

[11] *N. Y. Times* [நியூயார்க் டைம்ஸ்], 1968, ஏப்ரில் 15.

[12] *ID/7 Supp* I [இயந்திரத் தொழில் அபிவிருத்தி-7, அனுபந்தம் 1], 1967 அக்டோபர் 17, பக்கம் 9; E/4374 [பொருளாதாரம்-4374], மே 26, பக்கங்கள் 18,29; *IBRD, IDA Annual Report* 1965-66 [சர்வதேசப் புனர்நிர்மாண, அபிவிருத்தி பாங்கு, சர்வதேச அபிவிருத்திக் கழகம்], 1965-66ம் ஆண்டு அறிக்கை, வாஷிங்டன், 1966, பக்கம் 33.

[13] *Economic Survey 1967-68* [பொருளாதாரப் பார்வையீடு, 1967-68], இந்திய அரசாங்கம், புது டில்லி, 1968.

[14] *Marchais tropicaux et méditerranées* [அயனமண்டல, மத்திய தரைக் கடல் பிரதேசச் சந்தைகள்], 1967, பிப்ரவரி 25.

[15] *U. N. Statistical Yearbook 1966* [ஐ. நா. புள்ளிவிவர ஆண்டுத் தகவல் நூல், 1966], நியூயார்க், 1967, பக்கம் 681ல் உள்ளபடிக் கணக்கிடப்பட்டுள்ளது.

[16] *Commonwealth Survey* [காமன்வெல்த் பார்வையீடு], தொகுதி 11, 1965, இதழ் 8, பக்கம் 392; *Problèmes économiques* [பொருளாதாரப் பிரச்சினைகள்], 1965, இதழ் 899, பக்கம் 1.

[17] *N. Y. Times* [நியூயார்க் டைம்ஸ்], 1968, ஆகஸ்ட் 7.

[18] *Development Assistance Efforts and Policies* [அபிவிருத்தி உதவி முயற்சிகளும் கொள்கைகளும்], 1967ம் ஆண்டு பார்வையீடு, பக்கங்கள் 76, 184, 185.

[19] *U. N. Statistical Yearbook 1966* [ஐ. நா. புள்ளிவிவர ஆண்டுத் தகவல் நூல், 1966], நியூயார்க், 1967, பக்கம் 686ல் உள்ளபடி கணக்கிடப்பட்டுள்ளது. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்குச் சர்வதேச நிறுவனங்கள் வாயிலாகக் கிடைக்கும் பணத்தொகைகள் அட்டவணையில் குறிக்கப் படவில்லை.

[20] அதே நூல், பக்கம் 685ல் உள்ளபடி கணக்கிடப்பட்டுள்ளது.

[21] *Survey of Current Business* [நடப்புத் தொழில் பார்வையீடு], 1964, ஆகஸ்ட், பக்கங்கள் 10-14; 1965, செப்டெம்பர், பக்கங்கள் 23-25.

[22] *Development Assistance Efforts and Policies* [அபிவிருத்தி உதவி முயற்சிகளும் கொள்கைகளும்], 1966ம் ஆண்டு பார்வையீடு, பக்கங்கள் 153-154.

[23] *Current History* [நடப்பு வரலாறு], 1968, ஜனவரி, பக்கம் 11.

[24] *Neue Zürcher Zeitung* [நியூ ஜூர்ஹெர் ஸைத்துங்], 1968, ஜனவரி 27.

[25] *Washington Daily News* [வாஷிங்டன் டெய்லி நியூஸ்], 1966, ஜூன் 13.

[26] *Times* [*டைம்ஸ்*], *1967*, *செப்டெம்பர் 1*; *П. Датт.* Кризис британского неоколониализма. „Международная жизнь“ [*பால்ம் தத். ''பிரிட்டிஷ் புதுக் காலனியாதிக்க முறையின் நெருக்கடி''.* சர்வதேச வாழ்க்கை], *மாஸ்கோ, 1968, இதழ் 1, பக்கம் 25ல் உள்ளபடி மேற்கோள் காட்டப்படுகிறது.*

[27] *Panorama Economico Latinoamericano* [லத்தீன் அமெரிக்கப் பொருளாதாரத்தின் பரந்த காட்சி], *1967, இதழ் 234, பக்கம் 5.*

[28] K. Kurian. *Impact of Foreign Capital on Indian Economy* [*கே. குரியன்.* இந்தியப் பொருளாதாரத்தின்மீது அன்னிய மூலதனத்தின் பாதிப்பு], *புது டில்லி, பீப்புள்ஸ் பப்ளிஷிங் ஹவுஸ், 1966, பக்கம் 214.*

[29] *Monthly Bulletin of Statistics* [புள்ளிவிவர மாத ஏடு], *ஐக்கிய நாடுகள், நியூயார்க், 1967, நவம்பர்.*

[30] *அதே ஏடு, 1967, ஜூன்.*

[31] Обзор мирового экономического положения, ч. II. Текущие экономические тенденции в 1966 и 1967 г. г. [உலகப் பொருளாதார நிலைமையின் பார்வையீடு, *பகுதி 2, ''1966-67ல் நடப்புப் பொருளாதாரப் போக்குகள்''*], *பொருளாதார, சமுதாயக் கவுன்சில், 1967, ஜூலை 11, பக்கம் 17* (E/4396, add 3).

[32] Обзор положения в области международной торговли и развития в 1967 г. Доклад генерального секретаря ЮНКТАД [1967ல் சர்வதேச வர்த்தக, அபிவிருத்தித் துறையின் நிலைமை பற்றிய பார்வையீடு. *ஐ. நா. வர்த்தக, அபிவிருத்தி மகாநாட்டின் பொதுச் செயலாளர் அறிக்கை*], *பகுதி 1, பக்கம் 34,* (ТД/5, 15. XI 1967).

[33] H. G. Johnson. *Economic Policies Towards Less Developed Countries* [*எச். ஜீ. ஜான்ஸன்.* வளர்ச்சி குறைந்த நாடுகள் பற்றிய பொருளாதாரக் கொள்கைகள்], *வாஷிங்டன், 1967, பக்கம் 83.*

[34] K. Barbé. "Le Marché Commun — instrument de la politique néocolonialiste en Afrique." *Economie et Politique* [*கே. பார்பே. ''பொதுச் சந்தை—ஆப்பிரிக்காவில் புதுக்*

காலனியாதிக்கக் கொள்கையின் கருவி''. பொருளாதாரமும் அரசியலும்], 1., 1964, பக்கம் 13ன்படி மேற்கோள் காட்டப்படுகிறது.

35 *L'Afrique nouvelle* [லா ஆஃப்ரிக் நுவேல் (புதிய ஆப்பிரிக்கா)], 1968, ஜூலை 25-31.

36 *Horoya* [ஹோரோயா], 1965, பிப்ரவரி 10.

37 *Aspects of European Integration. An Anglo-French Symposium* [ஐரோப்பியக் கூட்டிணைவின் அம்சங்கள். பிரிட்டிஷ்-பிரெஞ்சுக் கருத்தரங்கு], PEP. லண்டன், பக்கம் 45.

''புதுக் காலனியாதிக்க முறையின்
முக்கிய அரண்''

1 *The Annals of the American Academy of Political and Social Sciences* [அமெரிக்க அரசியல், சமுதாய விஞ்ஞான அகாதமியின் நிகழ்ச்சித் தொகுப்பு], 1961 ஜூலை, பக்கம் 6.

2 Международное совещание коммунистических и рабочих партий. Документы и материалы. கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மகாநாடு, தஸ்தாவேஜுகளும் விஷயாதாரங்களும்], மாஸ்கோ, 1969, பக்கம் 295.

3 Jacob J. Kaplan. *The Challenge of Foreign Aid. Policies, Problems and Possibilities* [ஜேக்கப் ஜே. கப்ளான். வெளிநாட்டு உதவியின் அறைகூவல். கொள்கைகளும் பிரச்சினைகளும் சாத்தியக்கூறுகளும்], நியூயார்க், வாஷிங்டன், லண்டன், 1968, பக்கம் 306.

4 *Far Eastern Economic Review* [தூரக்கிழக்குப் பொருளாதாரப் பார்வையீடு], 1969, ஜூலை 4, பக்கம் 28.

5 *U. N. Statistical Yearbook 1966* [ஐ. நா. புள்ளிவிவர ஆண்டுத் தகவல் நூல், 1966], நியூயார்க், 1967, பக்கங்களில் 682-683ல் உள்ளபடி கணக்கிடப்பட்டுள்ளது.

6 *Development Assistance Efforts and Policies* [அபிவிருத்தி உதவி முயற்சிகளும் கொள்கைகளும்], 1967ம் ஆண்டு பார்வையீடு, பக்கங்கள் 188-191.

7 Edward M. Kennedy. *Decisions for a Decade. Policies and Programs for the 1970s.* [எட்வார்டு எம். கென்னடி.

பத்தாண்டுக்கான முடிவுகள். 1970க்களுக்குரிய கொள்கைகளும் செயல்திட்டங்களும்], ஜார்ஜ் டி. கென்னனின் முகவுரை. நியூயார்க், 1968, பக்கம் 191.

[8] *Far Eastern Economic Review* [தூரக்கிழக்குப் பொருளாதாரப் பார்வையீடு], 1967, ஜூலை 13, பக்கம் 102.

[9] R. Elder. *The Information Machine. The United States Information Agency and American Foreign Policy. Syracuse* [ஆர். எல்டர். தகவல் இயந்திரம். அமெரிக்கத் தகவல் நிலையமும் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையும், ஸைரக்யூஸ்], நியூயார்க், 1968, பக்கம் 5.

[10] அதே நூல், பக்கம் 6.

[11] *Statistical Abstract of the United States* [அமெரிக்க ஐக்கிய நாடுகளின் புள்ளிவிவரச் சுருக்கம்], 1964, பக்கம் 854; 1965, பக்கம் 858; 1966, பக்கம் 847, 1968, பக்கம் 792.

[12] H. Cleveland. *The obligations of power. American Diplomacy in the Search for Peace* [எச். கிளீவ்லாண்ட். விறலுடன் இணைந்துள்ள பொறுப்புக்கள். சமாதானத் தேட்டத்தில் அமெரிக்க ராஜதந்திரம்], நியூயார்க், ஹார்ப்பர் அண்டு ரோ, 1966, பக்கங்கள் 141, 16.

[13] *Statistical Abstract of the United States* [அமெரிக்க ஐக்கிய நாடுகளின் புள்ளிவிவரச் சுருக்கம்], 1961, பக்கம் 867; 1963, பக்கம் 856; 1965, பக்கம் 858; 1968, பக்கம் 792.

[14] அதே நூல், 1968, பக்கம் 797.

[15] ஜேக்கப் ஜே. கப்ளான், மேற்கோள் காட்டப்பட்ட நூல், பக்கங்கள் 178, 179.

[16] *Statistical Abstract of the United States* 1961, பக்கம் 867; 1965, பக்கம் 858; 1968, பக்கம் 792.

[17] *Monde* [மோந்த்], 1964, ஜூலை 25.

[18] எட்வார்டு எம். கென்னடி, மேற்கோள் காட்டப்பட்ட நூல், பக்கம் 169.

[19] *New York Times* [நியூயார்க் டைம்ஸ்], 1965, ஏப்ரில் 30.

[20] S. L. Sulzberger. *Unfinished Revolution. America and the Third World* [எஸ். எல். ஸுல்ஸ்பர்கர், முடியாப் புரட்சி. அமெரிக்காவும் மூன்றும் உலகும்], நியூயார்க், 1965, பக்கம் 40.

[21] *Foreign Affairs* [ஃபாரின் அஃபயர்ஸ்], 1963, ஜூலை, பக்கம் 758.

[22] அதே சஞ்சிகை, பக்கம் 761.

[23] *New York Times* [நியூயார்க் டைம்ஸ்], 1962, அக்டோபர் 3.

[24] Elting, E. Morison et al. (eds.), *The Letters of Theodore Roosevelt*, Cambridge [எல்டிங் இ. மாரிஸன், மற்றும் பிறர் (பதிப்பாசிரியர்கள்), தியோடோர் ரூஸ்வெல்டின் கடிதங்கள், கேம்பிரிட்ஜ்], 1951-54, தொகுதி 6, பக்கம் 1138. ஃபாரின் அஃபயர்ஸ், 1963, ஜூலை, பக்கம் 763ன்படி மேற்கோள் காட்டப்படுகிறது.

[25] *Foreign Affairs* [ஃபாரின் அஃபயர்ஸ்], 1958, ஜூலை, பக்கங்கள் 645-646.

[26] *Foreign Affairs* [ஃபாரின் அஃபயர்ஸ்], 1962, ஜனவரி, பக்கம் 305.

[27] *Washington Post* [வாஷிங்டன் போஸ்ட்], 1965, ஆகஸ்ட் 24.

[28] *New York Times* [நியூயார்க் டைம்ஸ்], 1960, ஏப்ரில் 22.

[29] *Wall Street Journal* [வால் ஸ்ட்ரீட் ஜர்னல்], 1961, அக்டோபர் 3.

[30] *New York Times* [நியூயார்க் டைம்ஸ்], 1963, ஏப்ரில் 1.

[31] V. Mockay. *Africa in World Politics* [வி. மக்கே. உலக அரசியலில் ஆப்பிரிக்கா], நியூயார்க், 1963, பக்கம் 341.

[32] „Правда“ [பிராவ்தா], 1960, நவம்பர் 15.

[33] *Times* [டைம்ஸ்], 1963, மார்ச் 19.

[34] *U. S. News and World Report* [யு. எஸ். நியூஸ் அண்டு வர்ல்டு ரிப்போர்ட்], 1962, ஜனவரி, பக்கம் 56.

[35] *New York Times* [நியூயார்க் டைம்ஸ்], 1961, ஜூலை 18.

[36] *Christian Science Monitor* [கிறிஸ்டியன் ஸயன்ஸ் மானிட்டர்], 1966, ஜூலை 15.

[37] *New York Times [நியூயார்க் டைம்ஸ்], 1965, ஆகஸ்ட் 21.*

[38] *United States Foreign Policy for the 1970's. A New Strategy for Peace.* Office of the White House Press Secretary [1970 களுக்கான அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கை. புதிய சமாதானப் போர்த்தந்திரம். *வெள்ளை மாளிகைப் பத்திரிகை செக்ரெட்டரி அலுவலகம்], 1970, பிப்ரவரி 18.*

[39] „Правда" *[பிராவ்தா], 1970, ஜூலை 16.*

[40] *Л. И. Брежнев.* За укрепление сплоченности коммунистов, за новый под'ем антиимпериалистической борьбы *[லெ. இ. பிரேழ்னெவ்.* கம்யூனிஸ்டுகளின் ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவதற்காக, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் புதிய ஏற்றத்துக்காக*], மாஸ்கோ, 1969, பக்கம் 29.*

[41] *Л. И. Брежнев.* Пятьдесят лет великих побед социализма *[லெ. இ. பிரேழ்னெவ்.* சோஷலிஸத்தினது மாபெரும் வெற்றியின் ஐம்பது ஆண்டுகள்*], மாஸ்கோ, 1967, பக்கம் 56.*

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

*6, நல்லதம்பி செட்டித் தெரு, சென்னை-2*

ஷோ-ரூம்

*6/30, மவுண்ட் ரோடு, சென்னை-2*

கிளைகள்

*80, மேலக் கோபுர வீதி, மதுரை-1*

*89, ஒப்பனக்கார வீதி, கோயமுத்தூர்-1*

*சிங்காரத்தோப்பு, திருச்சிராப்பள்ளி-8*

*பஸ் நிலையம், தஞ்சாவூர்*

வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப்பற்றியும் தங்கள் கருத்தைஅறிய வும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்த மாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் காத் திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து “Progress Publishers, 21, Zubovsky Boulevard, Moscow, USSR“ என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.